

பெண்மணி
ஏப்ரல் '97
ரூ.10
மாதர் இதழ்
இந்த இதழுடன்
ஃபேர் ப்ளஸ் சாஷேயும்
பரிசுக் கூப்பனும்
இலவசமாக கேட்டு வாங்கவும்

# உங்கள் ஃபேர்னஸ் கிரீமில் ப்ளீச் உள்ளதா ?




"நான் ஃபேர்ப்ளஸ்சை உபயோகிக்கும் வரை எல்லா ஃபேர்னஸ் கிரீமிலும் ப்ளீச் உள்ளது என்று நினைத்திருந்தேன் ஃபேர்ப்ளஸ்சில் உள்ள அரிய மூலிகைகளாலான ஆலோவேரா மற்றும் கேலண்டுலா என் சருமத்தில ஊடுருவி. சென்று ஈரப்பதத்தை அளித்த மென்மையாக்குவதுடன்

கூடுதல் சிகப்பழகை தருகிறது சருமத்தைப் பாதிக்கும் ப்ளீச் ஃபேர்ப்ளஸ்சில் கிடையவே கிடையாது. மேலும் ஃபேர்ப்ளஸ் UV கதிர்களிடமிருந்து உங்கள் சருமத்தை பாதுகாக்கிறது. 6-8 வாரங்களில் அதிக சிகப்பழகுடன் தன்னம்பிக்கையுடன் உங்களைக் காண்பீர்கள்.

HERBAL
Fairness Cream

"ப்ளீச் இல்லாமல் பளிச் !"

மலேஷிய மங்கையர்க்கு அழகூட்டிய ஃபேர் ப்ளஸ்

இப்பொழுது இந்தியாவில்

The International choi... N...

Marketed by: Fairplus Marketing, 14/2, Coats Road, T.Nagar, Madras 600 017. ... 5 940




பிரியமானவர்களுக்கு...

நலம்; நலம்தானே....

தினமும் வெள்ளமென வந்து குவிந்து கொண்டிருக்கும் 'பெண்மணி விழிப்புணர்வு இயக்க' விண்ணப்பங்களில் சத்தியமாக நான் சந்தோஷத்தில் தளும்பிக் கொண்டிருக்கிறேன்.

என் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்புக்கும், நம்பிக்கைக்கும் நன்றி சொல்ல - இந்த ஒரு பிறவி போதாது..எத்தனை விதமானப் பெண்மணிகள்.. எத்தனை விதமான ஆர்வங்கள்..

எட்டாவது வரையே படித்த பெண்மணி - 'உங்களுடன் இணைந்து எனது சகோதரப் பெண்மணிகளுக்கு உதவுவதே என் லட்சியம்'- என்று எழுதியிருப்பதை சொல்வதா?

'எம்.எஸ்ஸி. படித்த பெண்மணி - இந்த இயக்கத்தினால் கிடைக்கும் எல்லாப் பயன்களையும் ...டய விரும்புவதே என் நோக்கம்' - என்று மனசு ...ி எழுதியிருப்பதைச் சொல்வதா?

'எனக்குத்தான் புருஷன் சரியில்லை...அதட்டி ... ஆள் இல்லை..விவரம் தெரியாத வயசில் - ...டியோ என்கிட்ட இருந்து கையெழுத்து ...ட்டு வீட்டை விட்டு விரட்டியடிச்சிட்டார் புருஷன்...இது நடந்து முப்பத்தியஞ்சு ...ுமாறதுடி பெண்ணே..இந்த மாதிரி அன்னிக்கு ...ழுத்துப் போட்டுட்டு செய்ய யாருமே முன் வரல்லே..என் வாழ்க்கை மாதிரி இன்னொரு பொண்ணுக்கு ஏற்பட! வேண்டாம்..அதுக்காகவே நான் இந்த இயக்கத்துல சேர்றேன்...' - இப்படி அறுபது வயது மூதாட்டி, 'பெண்மணி' அலுவலகம் தேடி வந்து அங்கத்தினரான நெகிழ்ச்சியான நிகழ்ச்சியை சொல்வதா.....

இத்தனைக்கும் நடுவில் நிறைய பேருக்கு ஏகப்பட்ட சந்தேகங்கள்...விண்ணப்பப் படிவத்தை ஜெராக்ஸ் செய்து வேறு பிரதி எடுத்து அனுப்பலாமா....நாங்கள் பத்து பேர் சேரப் போகிறோம்...வயது வரம்பு உண்டா? ஜாதி, மதம் உண்டா? மாத வருமானம் ரூ.1000/- க்கு கீழ் இருந்தால் சேரக் கூடாதா...இந்த நூறு ரூபாய் மாதத்துக்கா - வருஷத்துக்கா....இப்படி..

அத்தனை சந்தேகங்களையும் இந்த இதழில் அடுத்து வரும் பக்கங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். சரியா.... படியுங்கள்.. நமக்குள் சந்தேகமே இருக்கக் கூடாது..'ஐயோ, இப்படி அசட்டுத்தனமாய் கேட்கிறோமே..சிரிப்பார்களோ' - என்கிற பயமும் கூடாது..(நிறைய சகோதரிகள் இப்படிப்பட்ட அவஸ்தையுடன் கேள்வி கேட்டிருக்கிறார்கள்) நமக்குள் இந்த தயக்கம் வேண்டாமே..நீங்கள் கேள்வி கேட்பது உங்கள் அம்மாவிடம்... மகளிடம்... சகோதரியிடம்... தோழியிடம்...இதில் எந்தவிதமான கவுரவக் குறைச்சலும் இல்லை...

அடுத்த இதழ் வரும் வரையில்
அன்புடன் விடைபெறும்

அனுராதா ரமணன்
ஆசிரியர்



அட்டையில் : அஞ்சு அரவிந்த்
வண்ணப்படம்: ப்ரவீண்குமார்


நிர்வாக ஆசிரியா : நா. மனோகரன்
ஆசிரியர் : அனுராதா ரமணன்
...யர் : சர்ச்சில் பாண்டியன்
: எஸ். குணா
: ஜேக்கப்ஜோகி

ஆண்டு சந்தா ரூ.100
D.D. அல்லது மணியார்டர் மூலமாக
பெண்மணி பப்ளிகேஷன்ஸ் (பி)
லிமிடெட் என்ற பெயரில் எடுத்து
அனுப்ப வேண்டிய முகவரி:
பெண்மணி பப்ளிகேஷன்ஸ்
(பி) லிமிடெட்
96, காம்தார் நகர்,
மகாலிங்கபுரம்,
சென்னை - 600 034.

# நீங்கள் உங்களை அறிய..

**ஹோ**ட்டலுக்குச் சென்று நண்பர்களுடன் 'லஞ்ச்' சாப்பிடுகிறீர்கள். 'பில்' வரும்போது, மொத்த பில் தொகையை நண்பர்களின் எண்ணிக்கையால் வகுத்து கிட்டத்தட்ட பகிர்ந்து கொடுக்கிறவரா நீங்கள்?

அடுத்த மாதம் உங்கள் சம்பளத்தில் அதிகம் வரப்போகிறது! உயர்வுத் தொகையில் பாதியை செலவுக்கும் மீதியை கட்டாயமாக சேமிக்கவும் முடிவு செய்கிறீர்களா?

புதியதாக ஒரு ஸ்கூட்டர், மொபெட் அல்லது கார் வாங்க திட்டமிடுகிறீர்கள்? ஏற்கெனவே உபயோகிப்பவர்களிடம் பேசிப்பார்த்து, உங்கள் நண்பர்களிடம் ஆலோசனை கேட்டு பின் நீங்களாகவும் கொஞ்சம் யோசித்து முடிவு செய்கிறீர்களா?

கையில் போதிய பணம் இருக்கும்போது, சுதந்திரம், பாதுகாப்பு. தாராள மனப்பான்மை, கண்ட்ரோல் ஆகிய உணர்வுகள் உங்களுக்கு ஏற்படுகிறதா?

*5000* ரூபாய்க்கு நீங்கள் வெகு காலமாக வாங்க விரும்பிய டிசைனர் Out fit விற்கிறது. 'க்ரெடிட் கார்டில்' வாங்கி பளு தெரியாமல் நான்கைந்து மாதங்களில் செலுத்துபவரா நீங்கள்?

உங்கள் பணத்தில் ஒரு சிறிய பகுதியை உங்கள் விருப்பம்போல் செலவழிக்க ஒதுக்கும் வழக்கம் உள்ளவரா நீங்கள்? இதன் மூலம் உங்கள் பொருளாதார நிலைமைக்கு நெருக்கடியும் ஏற்படக்கூடாது! செலவழிப்பதன் மூலம் மனதுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் ஏற்பட வேண்டும்!

'பட்ஜெட்' என்பது உதவி செய்யக் கூடிய ஒரு வரை கோடு. எப்போதாவது இந்த கோட்டை தாண்டுவதில் தப்பில்லை என்று நினைப்பவரா நீங்கள்?

வேலை நிமித்தம் ஒப்பந்தம் ஒன்றை கையெழுத்திட நேரிடுகிறது. ஒப்பந்த படிவத்தில் சில சந்தேகத்துக்குரிய, சிக்க வைக்கக்கூடிய வரிகள் உள்ளன? நீங்கள் கையெழுத்திடுமுன் உங்கள் சட்ட ஆலோசகர் நண்பர் ஒருவரை ஆலோசனைக்காக நாடுவீர்களா?

பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யும்முன், தொடந்து சிலகாலம் நிறுவனங்களின் வளர்ச்சி, அவை தரும் டிவிடண்ட், அவற்றின் நல்ல பெயர் பின்னணி இவற்றையெல்லாம் கவனித்து பின்னரே முடிவு செய்பவரா நீங்கள்?

நீங்கள் பணிபுரியும் நிறுவனம் கொஞ்ச காலமாக நிதிநிலை பற்றாக்குறை காரணமாகவும், வேறு பல வெளிக்காரணங்களுக்காகவும் ஊழியர்களின் சம்பள உயர்விலும் மற்ற ஊக்கத் தொகையிலும் சில கட்டுப்பாடுகளையும், சில சமயத்தில் ஊதிய குறைப்பிலும் ஈடுபட விரும்பி உங்களிடையே வேண்டுகிறது...?

நியாயமான நிறுவன முதலாளிகள் என்றால், அவர்கள் கோரிக்கைகளும் நியாயமானதென்றால் விட்டுக் கொடுக்க தயங்குவதில்லை நீங்கள்?

மேலே சொன்னவையெல்லாம் உங்களுக்குப் பொருந்துகின்றனவா?

நீங்கள் உங்களை 'Mistress Of Your Money' என அழைத்துக் கொள்ளலாம்.


நீங்கள் சம்பாதிக்கும் பணம், உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது.


எங்கிருந்து பணம் வருகிறது, எப்படி செலவாகிறது. புத்திசாலித்தனமாக பணத்தைப் பயன்படுத்துவது எப்படி, எந்த நேரங்களில், ஆலோசனை கேட்பது எல்லாம் தெரிந்து வைத்துள்ள கெட்டிக்கார பெண்(மணி) நீங்கள்!

Asia டி.வியில் Wall street Journal நடத்திய Quiz ப்ரொக்ராமில் பல்வேறு வருமான பிரிவைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர் வெற்றி பெற்றவர்களுடன் ஒத்துபோன விவரங்கள்தான் மேலே சொன்னவை!

நீங்க[illegible] எந்த ரகம்?

[illegible]ப்பு: பார்கவி









## மணிக்கு மட்டுமே செலவு! ஆங்கிலத்தை எளிதில் கற்றுக்கொள்ளுங்கள்!

**நாம் காலத்தையும் பணத்தையும் பெரிதும் மதிக்கிறோம்**

இந்தக் கோர்ஸில் நீங்கள் பெறும் குறைந்தபட்ச பரிசுப்பத்தகங்கள் 6 (கோர்ஸிற்கு மிகவும் பயன்படுபவை)

1. கே.வி.ஆர். இங்கிலீஷ் டிக்ஷ்னரி (ஆங்கிலம்-தமிழில் உச்சரிப்பு-தமிழில் அர்த்தம்)
2. வேர்ட் பவர் (ஆங்கிலச்சொற்களின் அற்புத சக்தி)
3. லெட்டர் ரைட்டிங் ப்ராக்டிஸ் (ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் முறை)
4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷ்னரி
5. வெர்ப்ஸ் டிக்ஷ்னரி (வினைச்சொற்களும் அவற்றின் வடிவங்களும்)
6. சிநோநம்ஸ் & ஆண்டனம்ஸ் டிக்ஷ்னரி ஆங்கிலச்சொற்களும் அவற்றின் நேர் எதிர்ச்சொற்களும்)

**கைமேல் நீங்கள் அடையும் லாபம்**

**ரூ.99/-** விலை மதிப்பற்ற

**இனி வெற்றிகளெல்லாம் உங்களதே எனக்கூறும் 7 வார கோர்ஸை இலவசமாக அடைவதன் வாயிலாக**

ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் வீதம் ஐந்து மாதங்களில் நீங்கள் எளிதில் ஆங்கிலம் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஒரு மணிக்கு கால் ரூபாய் மட்டுமே செலவு. ஆச்சரியப்படுகிறீர்களா ! ஆனால் இது உண்மை. முழுக்கோர்ஸும் 25 புத்தகங்களில் கிடைக்கும். எழுத்து முதல் சொற்களின் உச்சரிப்பு, வாக்கியம் அமைத்தல், இலக்கணம் இங்கிலீஷ் பேசுதல் போன்ற பல நிலைகளை மிகளளிதாக மிகமிகச் குறைந்த செலவில் எந்த வயதினரும் வீட்டிலிருந்தபடியே சுலபமாக இங்கிலீஷைக் கற்றுக்கொள்ளப் பயன்படும் பாப்புலர் இங்கிலீஷ் கோர்ஸ் இதுவே. ஒவ்வொரு மாணவனும் மாணவியும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய கோர்ஸ் இது. முழுக் கோர்ஸின் கட்டணம் ரூ.150/- (மணிக்குக் கால் ரூபாய் வீதம் தினமும் நான்கு மணிநேரம் படிக்க ஒரே ரூபாய். இப்படி 5 மாதங்களுக்கு ஆவது ரூ.150/- மட்டுமே)

**உங்கள் பணத்திற்கு முழு உத்திரவாதம்**

இந்தகோர்ஸ் உங்களுக்கு 100% சதவீதம் திருப்தியை அளிக்கும். உங்களுக்கு இந்தக் கோர்ஸ் முழுதிருப்தியை அளிக்கவில்லை என நீங்கள் கருதினால் இது வந்தடைந்த முப்பது நாட்களுள் இக்கோர்ஸின் புத்தகங்களைத் துண்டு துண்டுகளாகக் கிழித்து, எல்லாத்துண்டுளையும் எங்களுக்குத் திருப்பி அனுப்பினால் உங்கள் பணத்தை நாம் செய்த தபால்ச் செலவைக் கழித்துக் கொண்டு உங்களுக்கு மணியாடர் செய்கிறோம். இது நாங்கள் அளிக்கும் உத்திரவாதம்.

**இவ்வளவு நல்லகோர்ஸ் இருக்க வீண்யோசனை எதற்கு? உடனே கூப் பனைப் பூர்ததி செய்து அனுப்புங்கள்**

**K.V.R INSTITUTE** (Tamil Divisional)
P.B. NO. 1020, 77, Habibullah Road, T. Nagar, MADRAS - 600 017.

எனக்கு கோர்ஸின் எல்லா **25** புத்தகங்ளும் மற்றும் **6** பரிசுப்புத்தகங்களும் (1. இங்கிலீஷ் டிக்ஷ்னரி 2. வேர்ட் பவர் 3. லெட்டர் ரைட்டிங் பிராக்டீஸ் 4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷ்னரி 5. வெர்ப்ஸ் டிக்ஷ்னரி 6. சிநோனம்ஸ் & ஆண்டனம்ஸ் டிக்ஷ்னரி ஆகியவற்றுடன் ரூ.**99**/- விலைமதிப்புள்ள இனி வெற்றிகளெல்லாம் உங்களதே என்றகோர்ஸையும் சேர்த்து) உடனே எனக்கு ரூ.**150**/ க்கு V.P.P. வாயிலாக அனுப்புங்கள். நான் தபால்காரரிடம் பணத்தைச் செலுத்தி அதைப் பெற்றுக்கொள்கிறேன்.

**முக்கிய செய்தி ☞ கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்திக்கொள்வதற்காக உங்கள் முழு விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.**

என் பெயர் : ..............................

என் முகவரி : ..............................

.............................. பின்கோடு ☐☐☐☐☐☐



# குழந்தை தொழிலாளர் - ஒரு கேள்விக்குறியா?

நம் நாட்டில் ஒவ்வொரு வருடமும் நேருஜியின் பிறந்த நாளான நவம்பர் 14 குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுவது எல்லோரும் அறிந்ததே.. அதுபோல் இந்த குழந்தைகள் தினத்தை ஒட்டி குழந்தைத் தொழிலாளர்கள் பற்றியும், அவர்கள் நலன் பற்றியும் ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும் ரொம்ப அலட்டிக் கொள்வார்கள். அதையும் பார்த்திருக்கிறோம்.

ஆனால் அதற்கான காரணம் என்ன? அவைகளைத் தீர்ப்பது எப்படி? என்பது பற்றி யாரும் முடிவு எடுப்பதில்லை! உண்மையில் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகிறார்களா? உருவாக்கப்படுகிறார்களா? அதற்கு முக்கிய காரணம் அவர்களைப் பெற்றவர்களா? இல்லை அவர்கள் வளரும் சமூகமா? குழந்தைத் தொழிலாளர் என்று எண்ணினாலே இந்த மாதிரிக் கேள்விகள் நம் மனதில் உருவாவதைக் தடுக்க முடிவதில்லை.

பொதுவாக குழந்தைத் தொழிலாளர் என்றாலே முதலில் எல்லோர் மனக்கண் முன் தோன்றுவது சிவகாசி தீப்பெட்டி தொழிற்சாலை, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளின் முகம்தான்! ஏன் இதுதவிர வேறு இடங்களில் வேலை செய்யவில்லையா? செய்கிறார்கள். ஆனால் இந்த அளவு கிடையாது என அடித்துக் கூறலாம். எனவே தான் 'குழந்தைத் தொழிலாளர்' என்றாலே 'சிவகாசி' நினைவுக்கு வருவதை யாராலும் தவிர்க்க முடியாது.

இந்தக் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவதற்கு முக்கிய காரணம் அக்குழந்தைகளின் பெற்றோர்களே ஆகும். அவர்கள் அப்படி சிறு குழந்தைகளை வேலை செய்ய அனுப்ப முக்கிய காரணம் என்னவென்று ஆராய்வோமேயானால் அதற்கு கிடைக்கும் விடை, அவர்களின் பொறுப்பில்லாத்தன்மையும், பணப் பற்றாக்குறையும், அளவுக்கு அதிகமான குழந்தைகளைப் பெற்றிருப்பது என்பதும் புரியவரும். (இன்றைய நிலையில் மூன்று குழந்தைகள் என்றால்கூட அதிகம்தானே.) இதனால் குழந்தைகளின் எதிர்காலம் பாழாக்கப்படுவது அவர்களுக்குத் தெரிவதில்லை.

பெற்ற கடமைக்கு குழந்தைகள் அப்பாவுக்கு கு[illegible]கவும், அம்மாவுக்கு குடித்தனத்தை நடத்தவும்



சம்பாதித்துத்தரும் மெஷினாக தள்ளப்படுகிறார்கள்! இதில் அன்பு, ஆசை, பாசம் என்பதெல்லாம் அடிப்பட்டுப் போகிறது. பின்னாளில் இவர்கள் வீட்டின் 'சுமைதாங்கி' யாகவும் ஆகி விடுகிறார்கள்.

வீட்டைவிட்டு வேலைக்கென்று வெளியே வந்த பின் சமூகம் அவர்களை இரு கை விரித்து அணைத்துக் கொள்கிறது. காரணம்? இவர்களால் தொழில் நிறுவனங்களுக்கு அதிக லாபம் ஈட்டித்தர முடிகிறது! ஒரு பெரிய ஆளுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தில் பாதி கொடுத்தாலே போதும் இக்குழந்தைத் தொழிலாளர்களுக்கு! ஆனால் வேலையோ இரு மடங்கு செய்து விடுவார்கள். இதனால் தொழில் நிறுவனங்களுக்கு பணத்துக்குப், பணம் மிச்சம். வேலையும் அதிகம் நடைபெற்று விடுகிறது. மேலும் தொழிலாளர் பிரச்னை வராது தவிர்க்கப்படுகிறது.

இக்குழந்தைகளில் எல்லோருக்கும் படிக்கும் ஆசை இல்லா விட்டாலும், சில குழந்தைகளுக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் அவர்களில் வசதி இன்மையும், படிக்க சந்தர்ப்பமும் இல்லா நிலையில் அவர்களது ஆசை நசுக்கப்பட்டு விடுகிறது. இப்படி படிக்கும் ஆசையை நெஞ்சில் வளர்த்திருக்கும் குழந்தைகளுக்கு படிக்கும் வாய்ப்பை அவர்கள் வேலை செய்யும் தொழிலகமே ஏற்பாடு செய்து கொடுத்தால் என்ன? இது எப்படி சாத்தியம்? என்கிறீர்களா....

அதாவது அவர்கள் வேலை செய்யும் நேரம் காலை ஏழிலிருந்து, மாலை ஐந்து வரை என்றால், அதற்குமேல் இரண்டு மணி நேரமோ, ஒரு மணி நேரமோ இருந்து படிப்பதற்கு உதவி செய்யலாம். அதாவது முதியோர் கல்வித்திட்டம் போல்! இதில் திறமையுள்ள குழந்தைகள் இருந்தால் ஏதாவது தொண்டு நிறுவனங்கள் மூலம் அவர்களின் மேற்படிப்புக்கும் ஏற்பாடு செய்யலாம். இல்லையெனில் ஓரளவு படிப்பறிவோடு அவர்கள் வாழ முடியும் அல்லவா? இதனால் வேலை செய்யும் குழந்தைகளின் படிப்பறிவு பாதிக்கப்படுவதாக யாரும் குற்றம் கூற முடியாது.

மேலும் வேலை செய்வதோடு படிப்பறிவும் கூடும்போது அவர்கள் வேலையை இன்னும் செவ்வனே செய்வார்கள். ஏட்டுப் படிப்பைவிட அனுபவப் படிப்பு சிறந்தது என்பதற்கு எவ்வளவோ எடுத்துக் காட்டுகள் கூற முடியும். ஆனால் அத்தோடு ஏட்டுப் படிப்பு சேரும்போது இன்னும் அதற்கு சிறப்பு சேர்க்க முடியும் அல்லவா?

பெரிய பெரிய தொழில் அதிபர்கள் எல்லாம் பிறப்பிலேயே பணக்காரராய் பிறந்தவர்கள் அல்ல. அதுபோல் படிப்பிலும் சிறந்தவர்கள் அல்ல. ஆனால் தங்கள் அறிவாலும், உழைப்பாலும் முன்னுக்கு வந்தவர்கள் ஆவார்கள். எனவே எந்தத் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்கள் இருந்தாலும் பின்னாளில் நூற்றுக்கு பத்துப் பேராவது பெரிய தொழில் அதிபராய் வரும் வாய்ப்புண்டு.

எனவே குழநதைத் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், அவர்களின் படிப்பறிவு பாதிக்கப்படுவதாகவும் கூறும் அரசியல் சார்ந்த, சாரா சமூக அமைப்புகள் எத்தனை குழந்தைகளைத்தான் தத்தெடுத்து காப்பாற்ற முடியும்! நாட்டில் இருக்கும் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை ஆயிரமா, இரண்டாயிரமா? எண்பதாயிரம் ஒன்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கத்தில் 40 சதவிகிதம் குழந்தைகள் என்று கூறப்படுகிறது. இவர்கள் எல்லோரும் படிப்பறிவு பெற வேண்டும் என்பது வாதத்துக்கு வேண்டுமானால் சரியாகத் தோன்றலாம். நடைமுறைக்கு ஒத்து வராது.

ஏற்கெனவே நம் நாட்டை வேலை இல்லாத் திண்டாட்டம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் குழந்தைத் தொழிலாளர்களும் படித்து, பட்டம் வாங்கிக் கொண்டு வந்தால், வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகள் லிஸ்டில் இவர்கள் பெயரும் எழுதப்படும் அவ்வளவே. படிக்காத வரை எந்த வேலை என்றாலும் செய்யும் மனிதன் நாலு எழுத்து படித்து விட்டால், 'அதற்குத் தகுந்த வேலை கிடைத்தால்தான் செய்வேன், இல்லையென்றால் ஊரையாவது சுற்றுவேனே தவிர, தகுதி இல்லாத வேலையை ஏற்றுக் கொண்டு ஓரிடத்தில் உட்கார மாட்டேன்' என்பான். இது நம் வாழ்வில் காணும் நிதர்சனம்.

எனவே குழந்தைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை மையத்திலேயே அதற்கென்று கொஞ்ச நேரம் கொடுத்து, அவர்களை ஓரளவு படிப்பறிவு மிக்கவர்களாகச் செய்யவேண்டும். சர்க்கார் முதியோர் கல்வித் திட்டத்திற்கு வழங்கும் மானியத் தொகைபோல் இளைய சமுதாயத்தினருக்கும் ஒரு வழி செய்யலாம். இதனால் படிப் பார்வமுள்ள எத்தனையோ ஏழைக் குழந்தைகளின் வாழ்வில் ஒளி ஏற்றலாம்.

மேலும் இதன்மூலம் இளமையில் படிக்காமல் முதியோர் ஆன பின் படிக்க வேண்டிய நிலையை பிற்கால சந்ததியினராவது சந்திக்காமல் இருக்கச் செய்யலாம். ✦

**- அஞ்சலி மாரியப்பன்**





# ‘பெண்மணி விழிப்புணர்வு இயக்கம்’

பெயர் : ..................................................

வயது : ..................................................

மாத வருமானம் : ☐ ரூ. 2000/- க்கு மேல் ☐ ரூ. 5000/- க்கு மேல் ☐ ரூ. 10000/-க்கு மேல்

குடும்ப உறுப்பினர்கள் : ..................................................

: ..................................................

ரத்தப் பிரிவு : ..................................................

கல்வித் தகுதி : ..................................................

சிறப்புத் தகுதி : ..................................................

தற்சமயம் : ☐ வேலை பார்ப்பவர் ☐ குடும்பத் தலைவி ☐ சுய தொழில்

விலாசம் (வீடு) : ..................................................

: ..................................................

விலாசம் (அலுவலகம்) : ..................................................

: ..................................................

தொலைபேசி எண் : ..................................................

வேறு எந்த பெண்கள் சங்கத்திலாவது உறுப்பினரா : ..................................................

தாய்மொழி : ..................................................

பேச, எழுதத் தெரிந்த இதர மொழிகள் : ..................................................

பெண்மணி விழிப்புணர்வு இயக்கத்தில் நீங்கள் சேர விரும்பும் காரணம் : ..................................................

கையொப்பம் : ..................................................

(மணியார்டர், டி.டி.அல்லது காசோலையில் ‘பெண்மணி விழிப்புணர்வு இயக்கம்’ என குறிப்பிடவும்.)

# ‘பெண்மணி’ விழிப்புணர்வு இயக்கம்

‘பெண்மணி விழிப்புணர்வு இயக்கம்’ – பற்றி சென்ற இதழிலேயே தெளிவாகவும், விளக்கமாகவும் கூறியிருந்தாலும், அதைப் படிக்காதவர்களுக்காகவும், புதியவர்களுக்காகவும், படித்து விட்டு சில சந்தேகங்களைக் கேட்ட சகோதரிகளுக்காகவும் இந்த வரிகள்......

முதலில் – மாதா மாதம் நூறா... வருடம் ஒரு முறையா என்று கேட்டவர்களுக்கு – இதோ பதில்:

இது ஆயுள் சந்தாத் தொகை தான்! ஆம். பிரமிப்பாக இருக்கிறதல்லவா? நீங்கள் இந்த இயக்கத்தில் உறுப்பினராவதற்கு மட்டுமே இந்த நூறு ரூபாயைக் கட்டுகிறீர்கள். மற்றவை எல்லாம் உங்களுக்கு இலவசம்தான்!

இரண்டாவது – ஜாதி, மதம் உண்டா?

கிடையவே கிடையாது. எந்த ஜாதியில் பிறந்து, என்ன மொழி பேசினாலும் நாம் அனைவருமே ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள்தான். பெண் இனம். பெற்றெடுக்கும் இனம். பெற்றவற்றை பேணி, பாதுகாத்து, வளர்த்து அந்த வளர்ச்சியை ஒரு ஓரமாக நின்று கண்கலங்கப் பார்த்து ரசிக்கும் இனம். அறிவுசார்ந்த பெண்மணிகள் கூட இதில் விலக்கல்ல. நாம் அனைவருமே உணர்வுகளால் ஆளப்படுபவர்கள்; பல சமயங்களில் நமக்கென்று மனம் விட்டுப் பேசிக் கொள்ளக்கூட ஆளில்லாமல் – நமக்குள்ளேயே நமது ரசனைகளை சிறை வைத்திருப்பவர்கள்....ஆதலால் இங்கே மதப் பாகுபாடு கிடையாது.

மூன்றாவது – எந்த வயதிலிருந்து இதில் உறுப்பினராகலாம் என்று கேட்டிருக்கிறீர்கள்...


பதினெட்டு வயது முடிந்த எந்தப் பெண்ணும் இதில் சேரலாம். இப்படியொரு வயது வரம்பு ஏன் என்று அடுத்த கேள்வியைக் கேட்பவர்களுக்கு: இந்த இயக்கத்தின் மூலமாக எத்தனையோ விவாத மேடை, கருத்தரங்கம். நேருக்கு நேர் முதலியவை நடைபெற இருக்கிறது. அவைகளில் பாதிக்கப்பட்ட பெண்மணிகளின் சீற்றம், ஆவேசம், குமுறல் இத்தனையும் இருக்கலாம்... சிறியவர்கள் இவைகளைக் கேட்டு – தங்களது எதிர்கால வாழ்க்கையில் விரக்தியுறக் கூடாது என்பது எங்களது அபிப்பிராயம்...

ஆனால் – இளைய தலைமுறைகளுக்காகவே பல போட்டிகள் உண்டு...அத்தனையும் – இந்த இயக்கத்தின் உறுப்பினராக இருக்கும் சகோதரியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காகவே....ஆதலால் இது போன்ற சமயங்களில் வயது ஒரு தடையாக இருக்கப் போவதில்லை.

அடுத்தாற்போல – மாதர் சங்கங்கள் – இந்த விழிப்புணர்வு இயக்கத்தில் வகிக்கப்போகும் பங்கு..... மிக முக்கியமானது...

‘பெண்மணி விழிப்புணர்வு இயக்கம்’ – தென் இந்தியாவில் பல நகரங்களிலும் செயல்படப் போவதாலும், இதன் தலைமைச் செயலகம் மட்டும் சென்னையில் இருப்பதாலும் – ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாதர் சங்கங்களிடம் அந்த மாவட்டத்தையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சார்ந்த ‘பெண்மணி விழிப்புணர்வு இயக்கத்தின்’ பொறுப்புக்களை பிரித்து விடப் போகிறது..

அதாவது ஒரே சமயத்தில் – அனுராதா – எல்லா இடங்களிலும் வியாபித்து நிற்க முடியாத காரணத்தினால் – அந்தந்த மாவட்ட மாதர்



சங்கத்தின் தலைவி – அனுராதாவாகச் செயல்படுவார். இதற்காகவே நாங்கள், மாதர் சங்கங்கள், லயன்ஸ், ரோட்டரியின் பெண்மணிகள் நிறைந்த சங்கங்கள் இவைகளின் விவரங்களைக் கேட்டிருந்தோம்.... அவைகளும் வந்த வண்ணமிருக்கின்றன..

‘சித்திரை மாதம் முதல் கிளையை எங்கு துவங்கலாம்? – இந்தக் கேள்வியை மாதர் சங்கங்களிடமே விட்டு விடுகிறேன்... இது வரையில் கடிதத் தொடர்பு இல்லாத சங்கங்கள்கூட – தங்களது சங்கம் பற்றியும், அங்கத்தினர்கள் எத்தனை பேர் என்பது பற்றியும், சங்கத்தின் செயல்பாடு பற்றியும் விரிவாக எழுதி – பெண்மணி விழிப்புணர்வு இயக்கத்தில் இதுவரையில் அங்கத்தினராகாமல் இருந்திருந்தால் உடனே விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்)க்கான காசோலையோ, டிமாண்ட் டிராஃப்டோ இணைத்து, ஏப்ரல் 20 – ஆம் தேதிக்குள் எங்களது அலுவலகத்து விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சங்கத் தலைவி, காரியதரிசி, பொருளாளர், கமிட்டி மெம்பர்கள் – இவர்கள் மட்டுமாவது கண்டிப்பாக – பெண்மணி விழிப்புணர்வு இயக்கத்தில் உறுப்பினராகி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் – பெண்மணியில் வெளிவரும் விண்ணப்பப் படிவத்திலேயே தங்களது பெயர், விலாசத் தகவல்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். கண்டிப்பாக விண்ணப்பப் படிவத்தை ‘ஜெராக்ஸ்’ எடுக்கக் கூடாது. உங்களுக்காக, தனது உயிரைக் கூடத் தரத் தயாராக இருக்கிறாள் பெண்மணி! அவளை வாங்க ரூ.10 கூடவா செலவழிக்கக் கூடாது?

மாதர் சங்கத் தலைவி, உறுப்பினர்கள் – பெண்மணி விழிப்புணர்வு இயக்கத்தின் விண்ணப்பப் படிவங்களைத் தனித் தனியாகப் பூர்த்தி செய்து, நுழைவுக் கட்டணக் காசோலையை மொத்தமாக டி.டி. எடுத்தும் அனுப்பலாம்!

சரி...முதலில் எந்த மாவட்டம்?

அதை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் போகிறாள் பெண்மணி!

– ஆசிரியர்

# கேஸை மிச்சப்படுத்துங்கள்!

குடும்பத் தலைவிகளே...

சமையல் கேஸ் சிலிண்டர் விலை 20% ஏறி விட்டதே! எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று ஒரே மலைப்பாக இருக்கிறதா?

உங்கள் கேஸ் சிலிண்டர் தீரும் நாளை ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு ஒத்திப் போட இதோ சில உபயோகமான குறிப்புகள்...

வீட்டில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஒவ்வொரு கப்பாக காபி கலந்து கொடுப்பது உங்கள் வழக்கமா? கேஸ் சிக்கனத்தை முன்னிட்டு இன்றே இந்த வழக்கத்தை சற்று மாற்றுங்கள். நீங்கள் பீரோவினுள் பாதுகாப்பாக வைத்திருக் கும் பிளாஸ்க்கை வெளியில் எடுத்து மொத்தமாக ஆறு, ஏழு கப் கலந்து ஊற்றி மேஜையில் வைத்து விடுங்கள். அவரவர் தேவையான நேரங்களில் எடுத்துக் குடித்துக் கொள்வார்கள். கேஸூம் பெருமளவு மிச்சப்படும்.

எப்போதும் பருப்பு, காய்கறிகள் எனத் தனித்தனியே வேக வைத்துக் கொண்டிருக்காமல் குக்கரில் கன்டெயினர்களை உபயோகப்படுத்தி சாதம், பருப்பு, காய்கறிகள், கிழங்கு வகைகளை ஒரே நேரத்தில் வேக வைத்து எடுத்துக் கொள்ளுங்கள். நேரமும் வேலையும் மிச்சமாவதுடன் விலை உயர்ந்த கேஸூம் மிச்சமல்லவா?

தினமும் குழம்பு, ரஸம், காய்கறிகள் என்று சமைத்துக் கொண்டிருக்காமல் வாரத்தில் ஒரு நாள் கலந்த சாதம் வைத்துக் கொள்ளுங்கள் தொட்டுக் கொள்ளும் பதார்த்தமாக அவியல் செய்தால் அந்தக் காய்களைக் கூட அரிசி வேக வைக்கும்போதே குக்கரில் சேர்த்து வேகவைத்து விடலாம்.

தற்போது நடுத்தர வகுப்புக் குடும்பத்தினர் உள்பட பெரும்பாலோரிடம் ஃபிரிட்ஜ் வசதி இருக்கிறது. வற்றல் குழம்பு, மிளகுக் குழம்பு, மிளகாய் சட்னி, தக்காளி தொக்கு, கருவேப்பிலை துவையல், கொத்தமல்லி தொக்கு போன்றவற்றைத் தயாரிக்கும்போதே நிறைய தயாரித்து காற்றுப்புகாத பாத்திரங்களில் அல்லது பாட்டில்களில் அடைத்து பிரிட்ஜில் வைத்துக் கொண்டு எடுத்து உபயோகப்படுத்தினால் சமையல் கேஸ் பெருமளவு மிச்சப்படும்.

உங்களில் சிலர் குளிர்சாதனப் பெட்டியில் உள்ள உணவுப்பொருளை அப்படியே நேராக சமையல் பாத்திரங்களில் ஏற்றி அடுப்பில் வைக்கிறீர்கள். இதனால்தான் பெருமளவு எரிபொருள் வீணாக்கப்படுகிறது. சூடுபடுத்துவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாகவே ஃபிரிட்ஜிலிருந்து உணவுப் பொருளை எடுத்து அறையின் வெப்ப நிலைக்கு வருமாறு வெளியே வையுங்கள். பிறகு சூடுபடுத்துங்கள்.

குக்கர் மற்றும் வாணலியை எப்போதும் நன்றாகத் தேய்த்துக் கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். உட்புறங்களில் கரையாத உப்பு படிந்திருந்தால் பாத்திரத்தினுள் உள்ள பொருட்களுக்கு சூடுபாய்வதற்கு சிறிது நேரமாகும். இதனாலும் எரிபொருள் வீணாகிறது.

எளிதில் சூடேறக்கூடிய காப்பர் பாட்டம் வாணலி, தோசைக்கல் போன்றவற்றை உபயோகித்து எரிபொருளை மிச்சப்படுத்துங்கள்.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிட்டால் அடிக்கடி சுடவைத்து பரிமாற வேண்டியதில்லை. அவ்வாறு சேர்ந்து சாப்பிட முடியாத சூழ்நிலை என்றால் சமைத்ததும் சூடாக இருக்கும்போதே உணவுப் பொருளின் சூட்டை அப்படியே தக்க வைத்திருக்கும் தெர்மோகோல் டப்பாக்களிலோ ஹாட்பேக் காஸரோல்களிலோ வைத்துப் பரிமாறுங்கள்.





வாரத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் உங்கள் வீட்டில் மொறுமொறுவென டீப்ஃப்ரை (Deepfry) வறுவலா? உங்கள் சமையல் மெனுவில் டீப்ஃப்ரை வறுவலை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் என மாற்றுங்கள். கேஸ் சிலிண்டர் விலையேற்ற புண்ணியத்தில் உங்கள் உடல் எடையிறக்கம் ஆகட்டுமே!

எல்லாவற்றையும்விட சமையல் கேஸை மிச்சப்படுத்த ஒரு நல்ல வழி இருக்கிறது. சமைத்த உணவைக் காட்டிலும் இயற்கை உணவே உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது என மருத்துவக் குறிப்புகள் கூறுகின்றன அல்லவா? நிறைய சமைத்தால்தானே சமையல் கேஸ் வீணாகும். காரட், பீட்ரூட், வெள்ளரி, வெங்காயம், தக்காளி இவற்றைத் துருவி சாலட் தயார் செய்து. வெஜிடபிள் சாலட் ஃப்ரூட்சாலட் போன்ற இயற்கை உணவு தயாரித்து நிறைய சாப்பிடுங்கள். சமையல் கேஸ்... தீரவே... தீராது!

**- கீதா தெய்வசிகாமணி**





# அலட்சியம் ஆபத்தான விஷயம்!




அலட்சியம் பெரும்பாலான மனிதர்களிடம் இயல்பாக காணப்படும் விஷயம். குறிப்பாக பெண்கள், பொன் சேர்க்க வேண்டும், பொருள் சேர்க்க வேண்டும் என்று சிரத்தை காட்டுவார்களே தவிர அவைகளை பாதுகாக்க வேண்டிய சமாச்சாரத்தில் வெகு அலட்சியம் காட்டுகிறார்கள். வீட்டு மனைவியாய் வாழ்க்கையை கழிப்பவரும், அலுவலகம் செல்லும் பெண்ணாய் வாழ்க்கையை ஓட்டுபவரும், தங்களை, தங்கள் உடைமைகளை பாதுகாப்பதில் கோட்டை விடுகிறார்கள். ஆபத்துகள் நேராமலிருக்க இவர்கள் கையாள வேண்டிய விஷயங்கள் என்னென்ன? என்று சென்னை மத்திய பாகம் இணை கமிஷனர் தி. ராதா கிருஷ்ணனிடம் நாம் கேட்டபோது...

**பெண்கள் தனியாக இருக்கும் நேரங்களில் பலவிதத்தில் ஏமாற்றப்படுகிறார்கள். தனியாக இருக்கும் பெண்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கை என்ன?**

வீட்டை பின்பக்கமும், முன்பக்கமும் பூட்ட வேண்டும். வீட்டின் உட்புறம் பழைய பாணி Crossbar தாழ்பாள் பொருத்துவது பாதுகாப்பானது. முன் கதவுகளுக்கு Magic eye lens பொருத்துவது அவசியம். முன்பின் தெரியாதவர்களைபுதிதாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளக் கூடாது. அப்படி சேர்த்துக் கொள்வதாக இருந்தால் அவர்களை பற்றிய விவரம் தெரிந்து கொள்ள பக்கத்தில் உள்ள காவல் நிலையத்தின் உதவியை நாடுவது நல்லது. கணவர் வெளியூருக்கு செல்ல நேரிட்டால் அதை அக்கம் பக்கத்திலும், பொது இடங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அன்றாட நகைகள் தவிர மற்றவைகளை பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பது நல்லது. நகைகள் அணிந்து ஜன்னல் ஓரத்தில் படுத்து உறங்குவது, ரயில், பஸ்ஸில், பயணம் செய்யும்போது நகைகளுடன் உறங்குவது கூடாது. மதியம் இரண்டிலிருந்து நாலு மணி வரை பெண்கள் அசந்திருக்கும் நேரம். அந்நேரத்தில் கதவை திறந்து போட்டுவிட்டு டி.வியில் ஆழ்ந்திருப்பது கூடாது. அடுக்குமாடி கட்டிடங்களில் வசிப்பவர்கள் ஒற்றுமையாக சேர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது. உதாரணமாக அனைவரும் ஒரே மாதிரியான விசில் வைத்துக் கொள்வது நல்லது. ஆபத்து காலத்தில் அனைவரையும் விழிப்படைய செய்ய இது உதவும். வழக்கமாக வரும் பால்காரர், சலவைத் தொழிலாளி, வேலைக்காரர் வருகிறார்களா அல்லது புதிதாக யாராவது வருகிறார்களா என்று கண்காணிப்பது அவசியம். நேரம் கெட்ட நேரத்தில் புதிதாக வரும் நபர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கதவுகளுக்கு முன் கிரில் கதவுகள் பொருத்த வேண்டும்.

**பெண்களிடம் செயின் பறிப்பதென்பது பல காலமாக நடந்து வரும் விஷயம். அதற்காக பெண்கள் ஒரு தாலிக்கொடிகூட இல்லாமல் வெளியே செல்வதென்பது இயலாத காரியம். இது அவர்கள் உயிருக்கே ஆபத்தாகி விடுகிறது. இதை தடுக்க என்ன வழி?**

பெண்கள் கூடுமானவரை தாலியில் அதிக அளவு தங்கம் அணியாமல் இருப்பது நல்லது. கூட்டமான இடங்களில் முந்தானையால் கழுத்தை மூடிக்கொள்வது சிறந்தது. தனியாக ஒதுக்குப்புறமான இடங்களுக்கு செல்லும்போது முன்னும் பின்னும் பார்த்துச் செல்ல வேண்டும். அப்படியே ஆபத்து நேர்ந்தாலும் தைரியமாக எதிர்த்து போராட வேண்டும்.

**பஸ்ஸில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்கள் சிறிதும் நாகரிகம் இல்லாமல் லூட்டி அடிப்பதும், கூச்சல் போடுவதும் பயணிகளை தொல்லைக்குள்ளாக்குகிறது. இதனை கண்டக்டரும் தடுப்பதில்லை. இந்நிலையில் பயணிகள் செய்ய வேண்டியது என்ன?**

சம்பந்தப்பட்ட பஸ்ஸின் நம்பர், ரூட் போன்ற விவரங்களை எங்களுக்குத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். கூடுமான வரை இது அவர்கள் தெரியாமல் செய்யும் தவறுகள். இதனை சம்பந்தப்பட்ட கல்லூரியும், பெற்றோரும்தான் தலையிட்டு திருத்த வேண்டும். புட்போர்டு பயணம் எத்தனை ஆபத்தானது என்று அவர்களுக்கு உணர்த்த வேண்டும். எங்களுக்கு தகவல் கொடுத்தால் உடன் நடவடிக்கை மேற்கொள்வோம்.

**ராகிங் கல்லூரியில் மட்டும்தான் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அலுவலகம் செல்லும் பெண்கள் தினம் சந்திக்கும் கேலி, குறும்பு, தொல்லைகளை தடுக்க என்ன வழி? இந்நிலையில் நாங்கள் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கை என்ன?**

இதுபோன்ற பிரச்னைகளுக்கு நம்பர் 100-க்கு தகவல் அளிக்கலாம். சம்பந்தப்பட்டவர்களின் அங்க அடையாளங்கள், குறிப்பிட்ட இடம் முதலிய தகவல்களை அளிக்க வேண்டும். நாங்கள் லர்கிங் பீட் (Lurking beat) வைத்து குற்றவாளிகளை கண்டு பிடித்து விடுவோம்.

**அலுவல் முடிந்து தனியாக வரும் பெண்ணிடம் தகராறு செய்து பணம் பிடுங்கும் ஆட்டோக்காரர்களை என்ன செய்வது?**

யாரும் நம்மை எதுவும் செய்து விடமாட்டார்கள் என்ற துணிவில் இவர்கள் தகராறு செய்வது பழக்கமாகிவிட்டது. அதற்கேற்றாற்போல யாரும் எங்களுக்கு தகவல் கொடுப்பதும் இல்லை. தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆட்டோவில் ஏறும் முன் ஆட்டோவின் எண்ணை குறித்து வைத்துக் கொள்வது பலவிதத்திலும் உபயோகமுள்ளதாக இருக்கும் 103 -ல் தகவல் அளித்து ஆட்டோ எண், எங்கிருந்து புறப்பட்டது போன்ற விவரங்கள் அளிக்கப்பட வேண்டும். ஆட்டோக்காரர்களின் தகராறுக்கு பயந்து பெண்கள் தங்கள் மரியாதையை காப்பாற்றிக்கொள்ள கேட்ட தொகையை கொடுத்து விடுவார்கள். அப்படிப்பட்ட தருணத்தில் வீணே அவர்களிடம் தகராறு வைத்துக் கொள்ளாமல் அவர்கள் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு காவல் நிலையத்தில் தகவல் அளிப்பது சிறந்தது.

**கணவருக்கு தெரியாமல் சேமிக்கும் பழக்கம் பெண்களின் வழக்கம். இப்படி சேமித்த பணத்தை எப்படி பாதுகாப்பது?**

சேமிப்பது தவறல்ல. சேமிக்கும் பணத்தை முறைப்படி தபால் நிலையத்திலோ, வங்கியிலோ போட்டு வைப்பதுதான் நல்லது. இதைவிட பாதுகாப்பு வேறு ஏதும் இல்லை. பெண்களுக்கென தனி Scheme கள் நிறைய வட்டியுடன் இருக்கின்றன. அதை அவர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

**வெளியே செல்லும் பெண்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?**

பெண்கள் தங்கள் அழகை வெளிப்படுத்தும் விதத்தில் உடையணிந்து நாகரிகம் என்ற பெயரில் அலங்கோலமாக வெளியே செல்வது தவறு. அளவுக்கு மீறிய சுதந்திரம் பெண்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை இன்றைய பெண்கள் உணர வேண்டும். எதையும் தைரியமாக எதிர்க்கும் துணிவு வர வேண்டும். எந்த வகையான பிரச்னைகளுக்கும் காவல் துறையை அணுக தயங்கக் கூடாது.

**- சந்திப்பு: ரத்னமாலா, ஜமுனா ராணி**




"அரிதரிது மானிடராய் பிறத் தலரிது" என்றனர் நம் முன்னோர். ஆனால் 'ஏன் இத்தகு மானிடப் பிறவி எடுத்தோமோ?' என நொந்து, வெந்து தன் ரத்தத்தைக் கண்ணீராய் சிந்திக் கொண்டு 'நாளை நம் விழுதுகள் நம்மைத் தாங்கும்' என்ற நம்பிக்கைப் பொய்யாகிப் போனதில் ஆதரவற்று நடுவீதிக்கு வந்துவிட்ட உதிரும் சருகுகள் போன்ற முதியோர் ஒருபுறம்; தன் பிறப்பின் அவலம்கூட அறிய இயலாது மனநோயால் பாதிக்கப்பட்டு அதனாலேயே வேர்கள் போன்று தாங்க வேண்டிய பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட அரும்புகள் போன்ற மழலைகள் ஒருபுறம். இவர்களைப் பற்றி நாம் என்றாவது சிந்தித்திருக் கிறோமா? சிந்தித்தாலும் இவர்களுக்காக ஏதாவது செயலாற்ற நினைத்திருக் கிறோமா? அந்த சிந்தனையின் விளைவாக - விழுதுகளால் புறக்கணிக்கப்பட்ட முதியோரை ஆதரவுக்கரம் நீட்டிக் காக்கும் 'விஷ்ராந்தி'யை நடத்தும் திருமதி சாவித்திரி வைத்தி அவர்களின் நினைவும், ஆணி வேரான பெற்றோரால் புறக்கணிக் கப்பட்டு மனநோயால் பாதிக்கப்படு பவர்களுக்கும், மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் (Mentally retorted & mentally ill) உதவும் அமைப்புகளுக்குப் பாலமாய் செயல்பட்டு உதவி வரும் திருமதி ரேவதி மேனன் அவர்களின் நினைவும் ஒருங்கே எழுந்தது.

சமூகப் பிரக்ஞையுடன் செயல்படும் இவர்களிருவரும் சந்தித் தால்.... சமூகத்திற்கு சேவை செய்ய எண்ணும் பலருக்கு இவர்களின் சந்திப்பு புத்துயிர் அளித்து வழிகாட்டுமே என்ற எண்ணத்தின் விளைவே.... இப்பேட்டி.

திருமதி சாவித்திரி வைத்தி: *நான் கிட்டத்தட்ட 35, 40 வருடங்களாக சமூக சேவை அமைப்பில் இருக் கேன். என்னுடைய அனுபவங்கள் எல்லாம் வேற மாதிரி இருக்கும். நீங்க ஒரு* famous film star. very active, very busy lady. *சாதாரணமா உங்கள்* fields - *ல் இருப்பவர்களுக்கு முழு நேரமும் சரியாக இருக்கும். வேறெ திலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள நீங்கள் நினைத்தாலும் முடி யாது..அப்படியிருக்கும்போது உங்க* busy shedule - *க்கு இடையிலும் சமூகத்துக்கு ஏதாவது செய்யணும்னு இறங்கியிருக்கீங்க...*I think *இது ஒரு நாளில் உங்களிடம் ஏற்பட்டிருக்கும் எண்ணமாய் இருக்க முடியாது. அது வும் நீங்க தேர்ந்தெடுத்திருக்கும்* line *ரொம்ப கஷ்டமானது. இப்போ நான் ஈடுபட்டிருக்கும்* line - *ம் கஷ்ட மானதுதான். ஏன்னா இந்த முதியோர்களும் உலகத்திற்கு உதவாத* stage - *க்கு வந்துட்றாங்க. ஏன்னா அவங்களுக்கு வயசாயிடுது. உடல் நலம் பாதிக்கப்பட்டா கவனிக்க ஆளில்லை. கவனிக்க ஆர்வமு மில்லை. நேரமுமில்லை. ஒரு* Unwanted Element *ஆகி விடுகிறார்கள்.*

*அதேபோலத்தான் இந்த மன வளர்ச்சி குன்றியவங்களும் சமூகத்*

# சேவை இவர்களது சுவாசமா?



தால் புறக்கணிக்கப்பட்டு விடுகிறார்கள். அந்த மாதிரியானவர்களுக்கு ஒரு lift கொடுத்து, அவர்களுக்கும் வாழ உரிமை இருக்கிறது என்று நினைத்து அந்த society-க்கு உதவ ஒரு foundation ஏற்படுத்தி நிறைய funds எல்லாம் raise பண்ணி நிறைய செய்கிறீர்கள். So, நம் இருவரும் ஒரே line - ல் இருக்கிறோம். ஆனால் வெவ்வேறு பரிமாணங்களில். உங்களுக்கு இதுபோன்றதொரு எண்ணம் வர என்ன காரணம்? அதை நாங்க தெரிந்து கொள்ளலாமா?

**திருமதி ரேவதி:** சொல்றேம்மா. அதற்கு முன்னால் நீங்கள் வயதில், அனுபவத்தில் எனக்கு ரொம்ப சீனியர். உங்களுக்கு எந்த வயதில் எப்போ இந்த Spark வந்தது. எப்படி தொடங்கி இந்த அமைப்பை நடத்தினீர்கள் என்று சொல்லுங்களேன். நான் இப்போதுதான் தொடங்கி இருக்கிறேன். உங்கள் அனுபவம் எனக்கு நிறைய பயன்படும்னு நினைக்கிறேன்.

**சாவித்திரி வைத்தி:** (சிரித்துவிட்டு) எனக்கு 65 வயதாகிறதம்மா. நான் 16, 17 வயதிலேயே ஒருமாதிரி சமூக சேவையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு விட்டேன். முதன் முதலில், வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருக்கும் பெண்களை ஒன்று திரட்டி 11 லிருந்து 3 மணி வரை அவர்கள் பங்கு கொள்ளக்கூடிய Monday Charity Club என்று தொடங்கினோம். ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற வகையில் ஏதாவது இந்த சமூகத்திற்கு செய்தேயாக வேண்டும் என்ற விதையை அவர்களுக்குள் ஊன்றினேன். தனியாக நின்று யாரும் எதுவும் செய்து விட முடியாது என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். So இப்படி 10, 15 பேர் சேரும்போது அவர்கள் சும்மா பொழுதுபோக்கும் நேரத்தை சமூகத்துக்கு உபயோகமாக செய்ய வைக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது. அதிலிருந்து பின் பலப்பல கிளைகள் தோன்றி அதன் பின்னரே இந்த 'விஷ்ராந்தி' தொடங்கியது.

உங்களுக்கு இந்த எண்ணம் எப்போது வந்தது. சமூக சேவையை எத்தனையோ முறைகளில் செய்ய முடிந்தாலும் குறிப்பிட்ட இந்தத் துறையை நீங்கள் தேர்ந்தெடுக்க ஏதும் காரணம் உண்டா?

**ரேவதி:** நீங்கள் சொன்னது போல் இதுபோன்ற எண்ணங்கள் எல்லாம் திடீர்னு ஏற்படாது. ஒரு நாளில் தோன்றி பின் மறைந்து விடும் எண்ணமில்லை இது. உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் சமூக பிரக்ஞை இருக்க வேண்டும். நம்மால் முடிந்த நல்லதை இந்த Society - க்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது முதலே ஒருவரின் inborn nature தான். அதன் பின் பெற்றோர் அதை வளர்க்க வேண்டும். சமூக பிரக்ஞையுடன் குழந்தைகளை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் பெற்றோர்தான். So எனக்கும் இந்த எண்ணம் திடீர்னு ஏற்பட்டதல்ல. நீங்க இத்தனை வருடங்களாக சமூக சேவை செய்து வருகிறீர்கள். But....நான் இன்னும் தொடங்கவேயில்லை. என்னை ஒரு Social Worker அப்படினு சொல்லவே முடியாது. இப்படி வேணுமானா சொல்லலாம். Iam helping social workers.

நான் இந்த சினிமா துறைக்கு வந்து 13 வருஷமாகிறது. இத்தனை வருஷங்கள்ல நான் எத்தனையோ இடங்களுக்குப் போயிருக்கேன்! எத்தனையோ விதமான மனிதர்களை சந்திச்சிருக்கேன். ஒரு இரண்டு மூணு வருஷமா நான் ஒரு விஷயத்தை notice பண்ணினேன். அதாவது ஏதாவது ஒரு meeting - ல நான் பேசினா அதுக்கு நிறைய பேர் respond பண்ணறாங்க. இப்போ சாதாரணமானவங்க சொன்னா 100 பேர் கேட்டாங்கன்னா எங்களைப் போல film stars சொன்னா 500 பேர் கேக்கறாங்க. So இந்த film star ங்கிற popularity power - ஐ நாம ஏன் நல்ல விதத்தில உபயோகப்படுத்தக் கூடாதுன்னு நினைச்சேன். முதலில் Aids Campaigns, Awareness Campaigns அப்படின்னுதான் தொடங்கினேன். Handicapped அப்படின்னு சொல்லும்போது அவங்களை நாம ஏன் தனி மனிதர்களா ஒதுக்கி வைக்கணும் அப்படின்னு நான் எப்பவும் நினைப்பேன். உதாரணமா பள்ளிக்கூடத்தில நான் 60% மார்க் வாங்கினா என்னை விட அதிகமா மார்க் வாங்குபவர்களுடன் ஒப்பிடும்போது I am handicapped in some way. இப்போ Deaf & dumb அதாவது செவிடு, ஊமை இவங்களுக்காக ஏன் தனியா பள்ளிகள் இருக்கணும்? They Are not different people. நாம படிக்கிற பள்ளியிலேயே அவங்க படிக்கலாமே. அவங்களால அது முடியாதுன்னு நாம ஏன் decide பண்ணனும். அவங்களால முடியாதபோது தனியாக Special Coaching கொடுத்து அவர்களை ஊக்குவிக்கலாமே! ஆனா mentally retorded என்று சொல்லப்படும் மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு Special education தேவைப்படும். அந்த Special educationக்குப் பிறகு எத்தனையோ பேர் intergate ஆகியிருக்காங்க. இந்த மாதிரி குழந்தைங்களைப் பற்றிய சிந்தனை என்னுள் எழுந்தது நான் 'அஞ்சலி' படத்துல நடிச்ச பிறகுதான். அதற்குப் பிறகுதான் அதுமாதிரி குழந்தைகளுடன் பழக ஆரம்பிச்சேன்.

**சாவித்திரி வைத்தி:** நீங்க சொல்றா மாதிரி இந்த மனநலமில்லாத குழந்தைகளை வளர்க்கிறது என்பது பெரிய பொறுப்பு. நான் என் அனுபவத்தில இதுபோல நிறைய பார்த்திருக்கேன். அதுபோன்ற குழந்தையை உடைய தாயின் கண்களில் ஒரு தாபம் தெரியும். "நம்ம குழந்தை இப்படியிருக்கே"ங்கற ஏக்கம் தெரியும். அப்படி இருக்கும்போது ஒரு normal child இதுபோல உள்ள குழந்தைகளை எப்படி treat பண்ணுவாங்களோ?

**ரேவதி:** இல்லையில்லை. I don't think So. குழந்தைகள் எதுவாயிருந்தாலும் சீக்கிரம் ஏற்றுக் கொள்வார்கள். நாமதான் தயங்குவோம். எனக்கு ஒரு friend இருந்தா. அவளுக்கு காது கேட்காது. சின்ன வயசிலிருந்தே அவளுடன் நான் பழகியதால் அவளுடன் எப்படி பேசணும், பழகணும்னு எனக்குத் தெரியும். அதனாலத்தான் சொல்றேன். ஆரம்பத்திலிருந்தே அவங்களை தனி School னு ஒதுக்காம சேர்ந்தே பழகினா அவங்களுக்கும் ஒரு தன்னம்பிக்கை வரும். நமக்கும் அதுபோன்றவர்களுடன் பழகும்போது ஒரு block இருக்காது.

**சாவித்திரி வைத்தி:** ஆமாம். நீங்கள் சொல்வது போல ஒவ்வொரு பள்ளியிலுமே இதுபோன்று உள்ளவர்களுக்கென்று Seats allotment வைத்திருக்கணும். ஆசிரியர்களும் இவர்களைத் தனிப்பட்ட அக்கறையுடன் கவனிக்கணும். எனக்குத் தெரிஞ்சு செங்கல்பட்டுல தேவராஜன் என்பவர் இதுபோன்ற காது கேளாத, பார்வையில்லாத குழந்தைகளுக்காக ஒரு பள்ளி நடத்திகிட்டு வர்றார். அந்த ஸ்கூலுக்கே நான் Silent School - ன்னு பேர் வைச்சிருக்கேன். சைகை மூலம் சொல்லிக் கொடுக்காமல் உதட்டசைவில், Speech theraphy மூலம் சொல்லிக் கொடுப்பார். அந்தக் குழந்தைகள் மிக அழகாக Society - யுடன் கலந்து. பஸ்ஸில் தனியே எங்கு வேண்டுமானாலும் போய் வருகிறார்கள்.

**ரேவதி:** ஆனா உங்க line வேற இல்லையா. முதியோர்களை பராமரிப்பதும் easyயான வேலையில்லையே!


**சாவித்திரி வைத்தி:** Yes. Yes. இவங்க நிலையே வேற. இனி இவங்களால சமுதாயத்துக்கு எந்த பயனும் கிடையாது. அதனாலேயே அவர்களைச் சேர்ந்தவர்களால் உதறப்பட்டவர்கள். அவர்கள் எதிர்பார்ப்பது தன் அமைதியான, சற்றே வசதியான தன் அந்திமகாலத்தை கழிக்க ஒரு இடம். அவ்வளவுதான்.

**ரேவதி:** அதுகூட தர முடியாமல் இவங்க முதியோர் இல்லங்களை நாடி வரக் காரணம் என்னன்னு நினைக்கிறீங்க?

**சாவித்திரி வைத்தி:** உழைத்து உழைத்து பழக்கப்பட்டவங்க ஒரு Stage- ல் அது முடியாமல் போகும்போது கட்டாயமாக ஓய்வுக்கு ஏங்குகிறார்கள். இவர்கள் தங்கள் ஓய்வு காலத்தையும் மற்றவர்களுடன் adjust செய்து கொண்டு கழிக்கணும் என்ற Compromise - க்கு வர மனதளவில் தயாராயில்லை. இரண்டாவது காரணம் உடல் நலம் பாதிக்கப்படுதல். இப்போ இருக்கிற fast life - ல் தம்மை கவனித்துக் கொள்ளவே நேரமில்லாதபோது இதுபோல உள்ளவர்கள் ஒரு சுமையாகிப் போகின்ற அவலம். But one thing இந்த Generation gap என்று சொல்லப்படும் தலைமுறை இடைவெளி தாத்தாவுக்கும் பேரனுக்குமிடையில் ஏற்படுவதேயில்லை. Infact சின்ன குழந்தைகள் தாத்தா பாட்டியிடம் ஆசையாகவே இருக்கிறார்கள். 40, 50 வயதிலுள்ளவர்களுக்கும் அவர்களை பெற்றவர்களுக்குமிடையில்தான் இந்த தலைமுறை இடைவெளி வருது. இவர்களாலும் கவனிக்க முடிவதில்லை; பெண்களும் வேலைக்குச் செல்வதால் அவர்களாலும் முடிவதில்லை. உதவிக்கு ஆள் போட வசதியுமில்லை. வசதியிருந்தால் ஆள் கிடைப்பதில்லை. மொத்தத்தில் Human Values குறைந்து வருகிறது. அதனால்தான் இவ்வளவு இடைவெளி.

**ரேவதி:** நீங்க சொல்றது ரொம்ப சரி. யோசிச்சு பார்க்கும்போது, குழந்தைகளை உருவாக்க நிறைய பேர் இருக்காங்க. ஆனா அதை வளர்க்கிற பொறுப்பை அவங்க ஏத்துக்க தயாராயில்லை. கவர்மெண்ட் பார்த்துக்கட்டும், அநாதை ஆசிரமங்கள் பார்த்துக்கட்டும்னு அவங்க நினைக்கிறதாலதான் தெருவிலேயோ குப்பை தொட்டியிலேயோ குழந்தைகளைப் போட்டுட்டு போறாங்க. சொந்த அக்கா, அண்ணன், அம்மா, அப்பா இப்படி யாராவது mentally illness ஆனால் கூட அவங்களை பார்த்துக்க ஒரு ஹோம் தேவைப்படுது.

**சாவித்திரி வைத்தி:** 40, 50 வருஷத்துக்கு முன்னால் இப்படி இல்லை. கூட்டுக் குடும்பமாக இருந்தது. சின்ன வயதில் திருமணமாகி கணவனை இழந்த பெண் தன் குழந்தைகளோடு அந்த குடும்பத்தில் இருப்பாள்.



அக்காவ்,

தினமும் பருப்பு சேர்த்துதான் சமையல் செய்யணும்னோ, மட்டன் சேர்த்தாத்தான் சாப்பாடு ருசியா இருக்கும்னோ நினைக்காதே.. குழந்தைங்களையும் அப்படியே பழக்காதே.

இன்னிக்கு சாம்பார்னா - நாளைக்கு வற்றல் குழம்பு, அதுக்கு அடுத்த நாள் மோர் குழம்பு, துவையல், பொரிச்சக் குழம்புன்னு மெனு போடு..ஒரு வாரத்துக்கு ஒரு தடவைதான் துவரம் பருப்பு டப்பாவுல கை வைக்கிறதுன்னு வச்சுக்க.. சிக்கனத்துக்கு சிக்கனம். அதே சமயம் துவரம் பருப்பு சேர்க்கறதுனால ஏற்படற முழங்கால், முதுகுவலி, சிறுநீரகக் கோளாறு இவைங்களும் கட்டுப்படும். இதே மாதிரிதான் மட்டனும்.. வாரத்துல ரெண்டு நாள் மட்டன்..ஒரு நாள் சில்லி சிக்கன் இல்லே ஃபிஷ் ஃப்ரை... முட்டை மட்டும் வாரத்துல மூணு நாளுன்னு ஒரு அட்ட வணை போட்டு வச்சுக்க.. அதுதான் உங்க பர்சுக்கும் நல்லது.... பர்சனாலிடிக்கும் நல்லது!

சிஸ்டர் சின்னப்பாப்பா





வயதானவர்கள் இருப்பார்கள். ஆனா இப்போ குப்பையை எடுப்பதற்குக்கூட ஒரு Association. மகாத்மா காந்தி ஒரு தரம் சொன்னது எனக்கு நினைவுக்கு வருது. "உரிமை மட்டும் கொண்டாடுகிறோம். ஆனால் கடமையை மறந்து விடுகிறோம்" என்றார் அவர். அது எத்தனை நிஜம்? Human Values போனதனால Material World ஆகப் போயிடுத்து. நமக்கு சௌகரியமான வாழ்க்கை மேல அபிமானம் வந்ததால Human Values போயிடுத்து. எத்தனையோ பிரசங்கங்கள் கேக்கறோம்; books படிக்கிறோம். முதல்ல நம்மை – Self ஐ Improve பண்ணிக்கணும். என் அம்மா மூன்று வருஷமா கோமாவில கிடக்கறாங்க. அவங்களுக்கு 85 வயசு. நாந்தான் பாத்துக்கறேன். ஏன்னா அது என் கடமை. ஆனா எங்க home – ல நிறைய பேர் தங்கள் அம்மாவையே கொண்டு வந்து விடறாங்க. பாத்துக்க time இல்லம்பாங்க...

**ரேவதி:** நமக்கு சின்ன வயசில நோய் நொடி வந்தா நம்மை பெத்தவங்க பார்த்துக்கிறதில்லையா? அப்ப நம்மை பெத்தவங்களுக்கு நோய் வந்தா நாம பார்த்துக்க வேணாமா? எனக்கு இது ஆச்சரியமாகூட இருக்கும்.

**பெண்மணி:** Sorry. உங்க பேச்சுக்கிடையே குறுக்கிடறதுக்கு மன்னிக்கணும். இங்க என் கருத்து ஒண்ணை சொல்ல விரும்பறேன். ஒரு பக்கம் இதுபோல முதியோர் இல்லங்களும், அநாதை ஆசிரமங்களும், மன நிலை குன்றிய குழந்தைகளை பார்த்துக்கிற ஸ்தாபனங்களும் இருப்பது மகிழ்ச்சியை கொடுத்தாலும் இதுபோல் நிறைய வளர்வது நம் மனசுக்கு சந்தோஷத்தை கொடுக்கலையே! ஒரு வேளை பார்த்துக்க ஆள் இருக்குங்கறதாலேயே அவங்க அப்படி விட்டுடறாங்களோன்னு கூட எனக்குத் தோணுது.

**ரேவதி:** No No...I don't think So. அப்படி விட்டுடறதாலத்தான் இப்படி தொடங்கினாங்க. எத்தனையோ பேர் ரோடுல கிடந்திருக்காங்கம்மா. தன் சொந்த ரத்தமானாலும் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தா அவங்கள அநாதையா விட்டுடுவாங்க. நா பார்த்திருக்கேன். அப்போ அவங்கள அப்படியே விட்டுட முடியுமா?

**பெண்மணி:** அப்ப இந்த Awareness– ஐ எப்படி கொண்டு வர முடியும்னு நீங்க நினைக்கிறீங்க?

**ரேவதி:** கஷ்டம்தான். அவங்களுக்கு 35 வருஷ experience இருக்கு. நான் இப்பத்தான் தொடங்கியிருக்கேன். இந்த துறைக்கு வந்த பின்னால் தன்னால பொறுமை வந்துடும். ஆனா எனக்கு இப்போ கொஞ்சம் எதிர்காலத்தை பத்தின நம்பிக்கை வந்திருக்கு. இப்போ இதுபோல சமூக சேவை செய்ய நிறைய இளைய சமுதாயத்தினர் வந்திருக்காங்க. முன்னெல்லாம் சமூக சேவைனாலே 40 வயசுக்கு மேற்பட்டவங்கதான் செய்வாங்கன்னு இருந்தது. இப்போ அப்படியில்லை. நிலைமை மாறிகிட்டு வருது. போன Generation வரைக்கும் கொஞ்சம் நான், எனதுங்கற சுயநலம் இருந்தது. But இப்போ உள்ள Youngsters நிறைய செய்யணும்னு துடிப்போட இருக்காங்க.

**சாவித்திரி வைத்தி:** இந்த சமூக சேவைங்கற அமைப்பையும் ஒரு தொழில் மாதிரி training எடுத்துகிட்டு செய்யணும். அப்பத்தான் அது Successful ஆக அமையும். நான் இப்போ அப்படித்தான் செய்யறேன். எத்தனையோ பேரன் பேத்திகள் எடுத்த house wifes எங்க விஷ்ராந்தி member ஆக இருக்காங்க. எத்தனையோ வீட்டுக்கும் செய்து விட்டு ஊருக்கும் உழைக்கிறாங்க. But எனக்கென்ன வருத்தம்னா இந்த Magazine, சினிமா இதிலெல்லாம் சில சமயங்கள்ல மாதர் சங்கம்னாலே ஏதோ போட்டோ எடுத்துக்கறதுக்கும் பொழுது போக்கறத்துக்கும் உள்ள இடம் என்பதுபோல Jokes அது இதுன்னு போடறாங்க. இது அப்படி இல்ல. இந்த Social Work – ஐயும் ஒரு தொழில் மாதிரி ஆக்கி அதற்காக Youngsters – ஐ train பண்ணனும்.

**ரேவதி:** அப்புறம் இன்னொன்னு. இந்த பத்திரிகை போன்ற Media – க்கள் சமூக சேவை செய்யறவங்களை ஒரு hero போல Project பண்ணறாங்க. அப்படி ஏன். It is their duty. அதை ஏன் பெரிசு பண்ணனும். ஒரு level – க்கு அப்புறம் அவங்கள Models – ஆக காட்டலாம். So people can follow.

**பெண்மணி:** இல்ல ரேவதி. ஏன் அப்படி செய்யறோம்னா இப்ப நீங்க இருக்கீங்க. நீங்க சுவாபிமான் தொடங்கிய பின்தான் Banyan பற்றியும் Spastic Society பத்தியும் எல்லாருக்கும் தெரிந்தது. ஏன்னா எந்த ஒரு விஷயமும் ஒரு film star சொன்னாத்தானே எடுபடுது. உங்களை expose பண்ணறதின் நோக்கம் நீங்க ஈடுபட்டுக் கொண்டிருக்கும் துறை மக்களைப் போய்ச் சேரணும்னுதான். அதற்கு exposure வேண்டாமா?

**ரேவதி:** அது Correct தான். But என்னைப் பொறுத்தவரை என்னை ஒரு Social Worker ன்னு சொல்லவே முடியாது. Social Worker னா field லே இறங்கி வேலை செய்யறது. நான் அப்படி ஏதும் செய்யல. நான், ரோகிணி, ரஞ்சிதா, காமிலா நாசர் நாலு பேருமா Swabiman foundation ஆரம்பிச்சது எதுக்காகன்னா..... எத்தனையோ Organaisations நான் பார்த்திருக்கேன். உடல் ஊனமுற்றவர்களுக்காகவும், மனநலம் குன்றியவர்களுக்காகவும், மனநலம் பாதிக்கப்பட்டவங்களுக்காகவும் எவ்வளவோ செய்யணும்ங்கற நோக்கத்தோட தொடங்கப்பட்டு போகப்போக வளர வளர அந்த அமைப்பை நடத்த போதிய பணமில்லாமல் மாசத்துக்கு 25 நாள் அந்த பணத்தை தேடி அலையும் முயற்சியில் அவர்களின் முக்கிய நோக்கம் பின்னுக்கு தள்ளப்பட்டு விடுகிறது. அவங்களுக்கு help பண்ணனும் என்பதே சுவாபிமானின் அடிப்படை நோக்கம். நாங்க பணம் கேட்டா கொடுக்க ஆளிருக்காங்க. We have contacts. So, நாங்கள் எங்கள் பிராபல்யத்தை உபயோகப்படுத்தி பணம் வசூலித்து இதுபோன்ற அமைப்புகளுக்குக் கொடுக்கிறோம். நாங்களும் இது போல ஒரு அமைப்பினை தொடங்கியிருக்கலாம். அது பத்தோடு ஒன்று பதினொன்றாகத்தான் அமையும். நாங்கள் புதிதாக் ஒன்றை தொடங்குவதற்கு பதிலாக தொடங்கி வளர முடியாத அமைப்புகளுக்கு help பண்றது சரின்னுபட்டுது.



**மி**யூசிக் அகாடமி மினி ஹாலில் 19-3-97 அன்று மாலை லலித்கலாநிலைய இயக்குனர் திருமதி பிரபா நடராஜனின் நடன மாணவியான செல்வி. அர்ச்சனா வெங்கட்ராமனின் அரங்கேற்றம் திருமதி அனுராதாரமணன் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. அடையார் ஹிந்து சீனியர் பள்ளியின் மாணவியுமான அர்ச்சனாவின் நாட்டிய நிகழ்ச்சிக்கு அப்பள்ளியின் முதல்வர் திரு. வி. வெங்கடாசலம் நேரில் வந்து ரசித்து வெகுவாக பாராட்டி பேசியது, அனைவரையும் நெகிழச் செய்தது.



**சாவித்திரி வைத்தி:** எந்த ஒரு சமூக அமைப்புக்குமே இரண்டு அம்சம் கண்டிப்பாக வேணும். ஒன்று உழைப்பு! இன்னொன்று பணம்.

**பெண்மணி:** நீங்க இதுபோல funds raise பண்ணி கொடுத்த அமைப்புகள் வளர்ந்திருக்கா? அப்படி எத்தனை அமைப்புகளுக்கு கொடுத்திருக்கீங்க?

**ரேவதி:** இல்ல....இப்பவும் வந்து இந்த Concept இங்க ரொம்ப பேருக்கு தெரியல. நாந்தான் Banyan – ஐ நடத்தறேன்னு ரொம்ப் பேர் நினைச்சிட்டிருக்காங்க. கிடையாது. Banyan – ஐ ஆரம்பிச்சு நடத்தறவங்க வந்தனா வைஷ்ணவி. அதை நான் முதலில் Clear பண்ண விரும்பறேன். நாங்க funds கொடுத்து அவங்களுக்கு help பண்ணினோம். எங்க சுவாபிமான் பவுண்டேஷன் ஒருத்தருக்கு ஒரு தரம் பணம் raise பண்ணி கொடுக்கறதோட நின்னுடறதில்லை. ஒரு அளவுக்கு follow up பண்ணி அந்த மாதிரி ஒரு அமைப்பு இருக்குங்கற awareness – ஐ உண்டுபண்ணி அதற்கு Public – ம் Support பண்ற அளவுக்கு அவங்களை வளர்த்து விடறதுதான் எங்க Objective. We go one by one.

இப்போ இதுபோல நிறைய அமைப்புகள் எங்களை அணுகறாங்க. ஆனா நாங்க ஒண்ணொன்னாதான் பார்க்க முடியும். நாங்க அவங்க பணத்தைத் தொடமாட்டோம் என்ற நம்பிக்கையில் ஜனங்கள் பணம் தராங்க. ஒரு விஷயம் நான் Clear பண்ண விரும்பறேன். எங்களுக்குன்னு தனியாக ஒரு அமைப்பு கிடையாது. சமூகப்பணி செய்யணும், நல்லது செய்யணும் என்று நினைக்கிறவங்களை, அவங்க அமைப்பை நேரில் போய்ப் பார்த்து அதைப்பற்றி எல்லாம் விசாரித்து எங்க ஸ்வாபிமான் மூலமாக பணம் raise பண்ணி கொடுக்கிறோம்.

**பெண்மணி:** அந்த மாதிரி அமைப்பை நீங்க தேடிப் போவீங்களா?

**ரேவதி:** முதல்ல அவங்க தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வார்கள். அதற்குப் பிறகு நாங்க அவங்க அமைப்பை பற்றி அவங்க செய்யற பணிகளைப் பற்றி எல்லாம் தெரிஞ்சுக்குவோம். We have to do little bit of research. ஏன்னா நாங்க பொது மக்களுடைய பணத்தைக் கொடுக்கப் போகிறோம். அதனாலே ரொம்பவே ஜாக்கிரதையாகயிருப்போம். இல்லேன்னா கெட்ட பேர் வந்துடுமே. எல்லாரும் ஸ்வாபிமான் Banyan – க்கு பணம் கொடுத்து உதவுறாங்க. அதனாலே இனிமேல் பணம் அவுங்களுக்குத் தேவையில்லை என்று நினைக்கிறார்கள். அப்படிக் கிடையாது. ஒரு அமைப்பு வளர வளர அவங்களுக்கு பணத் தேவையும் வளருது. இப்போ Madam நடத்துற விஷ்ராந்தி கூட நிறைய Members – ஸால் நடக்குது. அப்போ அவர்களுக்கு எவ்வளவு பணத் தேவையிருக்கும். பல பேரை ஆதரிக்கணும்னு சொன்னால் அதற்குப் பணம் தேவையாச்சே. இதை பொது மக்கள் புரிஞ்சுக்கணும்.


**பெண்மணி:** எப்படி புரிய வைக்க முடியும்னு நினைக்கிறீங்க நீங்க.

**ரேவதி:** பிரஸ். பத்திரிகைக்காரங்கதான் புரிய வைக்கணும். அவங்க பங்குதான் மிக முக்கியம். அவங்க சரியான செய்திகளை கரெக்டா கொடுக்கணும். தப்பா எழுதாதீங்க. ரேவதி Banyan – ஐ நடத்தறதாக் போடுறாங்க. இல்லை அது தப்பு. ஒரு சின்ன உதாரணம் சொல்றேன் பாருங்க. ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது அவங்க Banyan – க்கு Land கொடுத்தார்கள். அந்த சமயத்தில் ரேவதி Is involved in Banyan அப்படின்னு சொல்லி Publish ஆனது. அவ்வளவுதான். நான்கு மாதத்திற்கு Funds வரலை. Imagin பண்ணிப் பாருங்க. அவங்க எவ்வளவு Patients பார்க்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய் செலவாகிறது.

**சாவித்திரி வைத்தி:** இந்த சமயத்தில் Banyan, அவங்க பணிகள் இதைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

மீதி அடுத்த இதழில்..





# +2 படித்தவர்களுக்கு நல்ல வேலை.

**+2 வுடன் PENTAGON'S EXECUTIVE SECRETARY COURSE மட்டுமே போதும்!**

உங்களுக்கு தெரியுமா? EXECUTIVE SECRETARY வேலைக்கு சிறந்த மதிப்பு கிடைக்கிறது. இந்த வேலைக்கு நாளுக்கு நாள் தேவை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த வேலைக்கு மற்ற ஆ ஃபீஸ் வேலைகளை விட அதிகமான சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆம், நீங்கள் +2 அல்லது டிகிரி முடித்து இருந்தாலே போதும். நாங்கள் ஆறே மாதங்களில் உங்களை ஒரு திறமை வாய்ந்த EXECUTIVE SECRETARY - யாக உருவாக்குவோம்!.

- வேலைவாய்ப்புப் பிரிவின் உதவியுடன் கோர்ஸ் முடிந்து வெற்றிப் பெற்ற உடனேயே வேலையில் சேருவது நிச்சயம்.
- ஆரம்ப சம்பளம் மாதம் ரூ.2000/- எதிர்ப்பார்க்கலாம். ஒன்றிரண்டு வருடங்கள் அனுபவத்திற்குப் பிறகு ரூ.4000/- வரை கிடைக்க வாய்ப்பு.

இன்றே இப்பொழுதே பதிவு செய்யுங்கள். சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

"என்னுடைய 29-ஆவது வயதில் நான் மாதத்திற்கு ரூ.12,000 சம்பாதிப்பேன் என்று கனவிலும் நினைத்ததில்லை".
-Ms. வீணா இராஜகோபால்.
*Working in a leading multinational bank as Senior Secretary.*

**எங்களிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் பணிபுரியும் சில நிறுவனங்கள்**

*American Express Bank * Britannia *Hotel Chola * ANZ Grindlays Bank *ICIM *ICICI *ITC * Johnson & Johnson * Kotak Mahindra Finance * Park Sheraton Hotel * Quality Inn Aruna * SRF Ltd * Square-D Software *Synergy Finance * Taj Coromandal Hotel * Nestle India * BPL India * Singapore Airlines * Titan * Godrej & Boyce * Citi Bank * Pentafour.

Bring this cutting and avail 10% FEE WAIVER

PENTAGON ACADEMY
(Formerly SABHARI)

EFFICIENT

Chennai : ❐ Mount Road : 1B, Velders St., Near LIC, Ph : 8549069 / 8540733/ 8540920. ❐ Adyar: 41, L.B. Road, Ph : 4917396 ❐ Ambattur OT : 216, M.T.H. Road, Next to SBI, Ph : 6350719. ❐ Anna Nagar : 388B, Poonamallee High Road, Opp. Anna Arch, Ph : 4837919, 4810521. ❐ Kodambakkam: 16, Puliyur 2nd Main Road, Trustpuram, Ph : 4842647 ❐ Tambaram West : 20, Ayyasamy Street, Ph : 2366747. ❐ Thiruvotriyur : 975, T.H. Road, Near Police Station, Kaladipet, Ph: 5964279 ❐ T.Nagar : 49, Motilal Street, Ph : 4342890. ❐ Coimbatore : Singapore Plaza, 5th Floor, 333, Cross Cut Road, Gandhipuram, Ph : 234450. ❐ Tirunelveli : Nellai Plaza, 3rd Floor, 64B, Madurai Road, Ph : 24833. ❐ Trichy : Crystl Plaza, 3rd Floor, 22B, Nandhi Koil Street, Theppakulam. Ph : 706721. ❐ Chidambaram: O.S.Deen Building, 3rd Floor, 176, West Car Street.. **Now at Thiruvotriyur & T.Nagar (Chennai).**


மாணவ மையம்

# உதவித்தொகை கிடைக்குமா?

**பெண்மணிகளே...!**
நீங்கள் அல்லது உங்கள் வாரிசுகள் பத்தாம் வகுப்பு முடித்தபின் என்ன படிக்கலாம், பிளஸ் டூ முடித்த பின் எந்தத் துறையை தேர்ந்தெடுக்கலாம், பட்டப்படிப்புக்குப் பின் என்ன வேலை வாய்ப்புகள் உள்ளன என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமா?
கல்வி, வேலை, உதவித் தொகை, பயிற்சிகள் பற்றிய 'பெண்மணி' வாசகிகளின் கேள்விகளுக்கு - சந்தேகங்களுக்கு பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையத் தலைவி
**டாக்டர் சுசீலா மாரியப்பன்**
அவர்கள் இங்கே பதில் சொல்கிறார்.

**நான் B.Sc. Bio-Chemistry படித்திருக்கிறேன். Bio-Chemistry படித்தால் என்ன வேலை செய்யலாம்? Bio-Chemistry-க்கு இந்தியாவில் வேலை இல்லை என்று கூறுகிறார்கள். உண்மையா?**

*- ஜே. ஜீவி, குரோம்பேட்டை.*

அவ்வாறு நினைப்பது தவறு. மருத்துவ நிலையங்களிலும், மருத்துவ கல்லூரிகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகள் உள. தனியாக இரத்த பரிசோதனை நிலையங்கள் நடத்தியும் வேலை வாய்ப்புகளை உண்டு பண்ணலாம். நீங்கள் சென்னையில் இருப்பதால், சென்னையில் எந்தெந்த கல்லூரிகளில் M.Sc. Bio-Chemistry உள்ளது என்று கீழே கொடுக்கிறேன்.

1. பாரதி மகளிர் கல்லூரி, சென்னை - 108.
2. வள்ளியம்மாள் கல்லூரி, சென்னை - 40.
3. மீனாட்சி கல்லூரி, சென்னை - 24.
4. பேரா. தனபால் கல்லூரி, சென்னை - 103.
5. ஆதிபராசக்தி கல்லூரி, கலவை - 632 506.
6. ஸ்ரீ சங்கரா கல்லூரி, காஞ்சிபுரம், 631 552.
7. சென்னை பல்கலைக்கழகம்

**பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த நாங்கள் Tailoring, Typing, Computer Class சேர யாரை அணுக வேண்டும்.**

*- ஏ. முத்து, பட்டுக்கோட்டை.*

நீங்கள் பட்டுக்கோட்டையை சேர்ந்தவர்களாதலால், அருகில் உள்ள Employment Exchange அலுவலகத்தை அணுகி விசாரிக்கவும். அத்துடன் அருகில் உள்ள Directorate of Backward Class-யின் கிளை அலுவலகம் இருந்தால் விசாரிக்கவும்.

**நான் வேலையில்லா பட்டதாரி. தொழில் துவங்க உதவி தொகை பெற யாரை அணுக வேண்டும்.**

*- ஜி. பி. நரேன், பட்டுக்கோட்டை.*

நீங்கள் மார்ச் மாதப் 'பெண்மணி' இதழை ஒரு முறை புரட்டிப் பார்க்கவும். 'மாணவ மையம்' பகுதியை அடுத்து 'நீங்கள் வேலை தேடுபவரா' என்ற தலைப்பின் கீழ் உள்ள செய்தியை படிக்கவும்.

ஒவ்வொரு வங்கியிலும் சுய தொழிலை ஊக்குவிக்கும் மையம் உள்ளது. ஆகவே நீங்கள் வசிக்கும் இடத்தின் அருகாமையிலிருக்கும் வங்கியை அணுகவும்.



**நான் ஒன்பதாம் வகுப்பில் தேறவில்லை. அஞ்சல் வழி மூலம் நான் மேற்படிப்பு படிக்கலாமா? எவ்வாறு படிக்கலாம்?**

*- C. லதா, தோக்கவாடி.*

நீங்கள் அஞ்சல் வழி மூலம் B.A. படிப்பு படிக்கலாம். ஆனால் உங்களுக்கு 21 வயது முடிவு பெற்றிருக்க வேண்டும். அப்படியானால் நுழைவு தேர்வு எழுதி அதில் தேறினால் B.A. படிப்பு திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் படிக்கலாம். இந்த திறந்த வெளி பல்கலைக் கழகம் தமிழ் நாட்டில் சென்னை பல்கலைக் கழகம்; அண்ணாமலை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகங்களில் உள்ளது. வயது 21 ஆகவில்லையெனில் Private ஆக தேர்வுகள் எழுதலாம். மேலும் விபரம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி–

Directorate of School Education
College Road,
Nungampakkam
Chennai - 6.

**B.Sc. Bio-Tech. முடித்தபிறகு எவ்வாறு M.Sc. Bio-Tech-யில் சேருவது.**

*ஆர். ஷமீலா, பெங்களூர்*

ஜவஹர்லால் பல்கலைக் கழகம் நடத்தும் Common Entrance Test மூலம் கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் M.Sc. Bio-Tech Course-க்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகம் கோவை - 641 003.
2. பாரதியார் பல்கலைக் கழகம் கோவை 641 046.
3. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம். மதுரை - 625 021.

**+2 Pure Science முடித்த பிறகு கணிதம் இல்லாமல் B.Sc Chemistry கிடைக்குமா?**

*- கே. எம். ரூத் ஜூலியட், அம்பத்தூர்.*

B.Sc. Chemistry-யில் கணிதம் துணைப்பாடம் இல்லாமல், கீழ்க்கண்ட கல்லூரிகளில் படிக்கலாம்.

1. JBAS மகளிர் கல்லூரி.

2. காயிதே மில்லத் அரசுக் கலைக் கல்லூரி.

3. இராணி மேரி கல்லூரி.

4. பெண்கள் கிருத்துவக் கல்லூரி.

**Diploma in School Management படிக்க விரும்புகிறேன். எங்குள்ளது? அஞ்சல் வழி மூலம் இதனை படிக்க இயலுமா?**

*கே.எல். அபிராமி, ஆம்பூர்.*

Diploma in School Management. சென்னை பல்கலைக் கழகத்தில் மாலை நேர வகுப்பு நடக்கிறது. அஞ்சல் வழி மூலம் இந்த படிப்பு நடத்தப்படவில்லை.

**நான் +2 படித்துவிட்டு தனியார் நூற்பாலையில் தரக் கட்டுப்பாடு துறையில் பணி புரிகிறேன். மேற்கொண்டு பணியில் இருந்தபடியே Textile Diploma Course படிக்க முடியுமா?**

*டி. அருள் ஜோதி தேவராஜன், நாகை கோட்டை.*

Textile Diploma மாலைநேர வகுப்பு மூலமோ, அஞ்சல் வழி வகுப்பு மூலமோ சொல்லித் தரப்படவில்லை.

கீழ்க்கண்ட இடங்களில் முழு நேர Diploma வகுப்புகள் நடத்தப்படுகிறது.

1. Institute of Textile Technology. Chennai - 113.

2. S.S.M. Institute of Textile Technology Kumarapalayam - 638 183.

3. P.S.G. PolyTechnic Coimbatore-641 004.

**பிளாஸ்டிக் டெக்னாலஜி டிப்ளமோ தமிழ் நாட்டில் எங்கு உள்ளது.**

*- என். மனோ செந்தில், திருமலாபுரம்.*

Central Institute of Plastic Engineering and Technology (CIPET), Guindy, Chennai - 600 032.

**என் அண்ணன் B.Sc. Maths முடித்துள்ளான். M.C.A. Evening College-ல் படிக்கலாமா? அப்படி படித்தால் Regular படிப்புக்குள்ள மதிப்பு உண்டா?**

*- வெ. சுகனிதா, தர்மபுரி.*

கீழ்க்கண்ட கல்லூரிகளில் M.C.A மாலை நேர வகுப்புகள் மூலம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

M.G.R. கல்லூரி (Co-Education) ஹோசூர். 635 125.

சப்தகிரி பொறியியல் கல்லூரி, தர்மபுரி - 636 701.

சென்னை பல்கலைக் கழகம் அஞ்சல் வழி மூலம் M.C.A. நடத்துகிறது.

மேலும் விபரம் அறிய

P.G and P.G. Diploma Courses in Tamil Nadu, என்ற புத்தகம் பெற ரூ.18 Secretary, University Students Advisory Bureau, University of Madras- க்கு மணியார்டர் அனுப்பவும்.

**நான் +2 படிக்கிறேன். Catering படிப்பதற்கு எவ்வாறு மனு செய்ய வேண்டும். மற்றும் இன்ஜினியரிங், மருத்துவ படிப்புகள் பற்றி விபரம் கூறவும்.**

*ஜே. சாம்டேனியல், சென்னை - 12.*

Hotel Management and Catering Technology படிப்பதற்கு, ஜனவரி மாதம் நடத்தப்படும் நுழைவு தேர்வு எழுதினால் நாட்டில் உள்ள 11 Hotel Management and Catering Technology Course-க்கு அனுமதி பெற தயார் ஆகிறீர்கள். பின்பு நேர்முக தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவீர்கள். அது தவிர பல பெண்கள் கல்லூரிகளும் மூன்று வருட படிப்பு 'Hotel Management and Catering Technology' நடத்துகிறது. மற்றும் B.E. Courses, M.B.B.S. Courses விபரங்கள் அறிய What is after +2 என்ற புத்தகம் பார்த்து அறிந்து கொள்ளவும். அப்புத்தகம் பெற ரூ.30 Secretary, USAB, University of Madras என்ற விலாசத்துக்கு மணியார்டர் அனுப்பவும்.

**நான் M.Com. படித்துள்ளேன். மேற்கொண்டு வணிகவியலில் B.Ed. or M.Phil. எங்கு படிக்கலாம்?**

*- கீதா, பாலக்காடு.*

கீழ்க்கண்ட கல்லூரிகளில் வணிகவியல் B.Ed, M.Phil உள்ளது.

1. N.K.T. College of Education, Chennai - 600 005.

2. St. Choeslopher College of Education, Chennai - 7.

3. Shri Sarada College of Education Salem - 636 004.

4. Govt. College of Education Kumarapalayam - 638 183.

**நான் B.Sc. (Statistics) முடித்துள்ளேன். M.A. Music படிக்க முடியுமா? எங்கு உள்ளது.**

*- எம். எஸ். சரஸ்வதி, தர்மபுரி.*

M.A. Music படிக்க B.A. Music படிக்க வேண்டும். M.A. Music சென்னை பல்கலைக் கழகத்தில் உள்ளது.

**நான் + 2 காமர்ஸ் பிரிவு படித்திருக்கிறேன். B.B.A. படிக்க முடியுமா?**

*- மாலதி பாஸ்கரன், சென்னை.*

படிக்க இயலும்.

**I.A.S. படிக்க என்ன தகுதி வேண்டும்?**

*- மாயாவதி, சென்னை.*

*- மஞ்சுளா சென்னை.*

*- கல்பனா, திருக்கழுக்குன்றம்.*

I.A.S. தேர்வு எழுத இளநிலை பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். வயது 28-க்கு மிகாமல் இருக்க வேண்டும். 'பயிற்சி பெற அணுக வேண்டிய முகவரிகள்.

1. Special training Institute
12th Main Road, 2nd Avenue,
Anna Nagar, West Chennai.

2. I.A.S Coaching Centre
Madurai Kamaraj University,
Palkalai Nagar,
Madurai - 21.

சென்னையில் சில தனியார் நிறுவனங்களும் I.A.S. தேர்வுக்கு பயிற்சி அளிக்கின்றன.

**நான் +2 Commerce படித்திருக்கிறேன். மேற்கொண்டு என்ன படிக்கலாம்.**

*- மாலதி, சென்னை.*

நீங்கள் B.Com, B.B.A, B.B.M, ICWA, C.A, C.S- போன்ற படிப்புகள் படிக்கலாம்.

**நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வயது 24 ஆகிறது. அஞ்சல் வழி கல்வி மூலம் படிக்க விரும்புகிறேன். விபரம் தெரிவிக்கவும்?**

*- கே. மதினா, பொதக்குடி.*

உங்களுக்கு வயது 24 ஆனதால் Open University Scheme என்பதன் அடிப்படையில் நுழைவு தேர்வில் தேறினால் B.A Eng, Eco., Tamil போன்ற பாடங்களை படிக்கலாம். திறந்த வெளி பல்கலைப் படிப்பிற்கு,

சென்னை பல்கலைக் கழகம்,
அண்ணாமலை பல்கலைக் கழகம்,
மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களை தொடர்பு கொள்ளலாம்.

**நான் 86-89-ல் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி மூலம் B.Com. படித்தேன். ஆனால் டிகிரி முடிக்கவில்லை. T.C. என்னிடம் உள்ளது. அதை வைத்து சென்னை பல்கலைக் கழகத்தில் M.A. தமிழ் திறந்தவெளி பல்கலைக் கழகம் மூலம் படிக்க இயலுமா?**

*- வி. ஆர். பிரபா, சென்னை - 4.*

சென்னை பல்கலைக் கழகத்தில் M.A. தமிழ் திறந்த பல்கலைக் கழகம் மூலம் சொல்லித் தரப்படவில்லை. ஆகவே நீங்கள் மதுரை காமராஜ் அல்லது அண்ணாமலை பல்கலைக் கழகத்தை அணுகவும். ✦




# ஏனோ தெரியவில்லை

5

## பாலகுமாரன்

ஆத்திகம், நாத்திகம், கடவுள் இவற்றையெல்லாம் சற்று ஒதுக்கிவைத்து விட்டு, எளிமையான, இனிமையான விஷயங்களைப் பற்றி இந்தமுறை எழுதலாமென்று இருக்கிறேன்.

என் வீட்டில் இருபத்தெட்டு சேனல்கள் வருகிறது. இருபத்தெட்டு சேனலிலும் என்னென்னமோ விஷயங்கள் ஒளிபரப்பாகின்றன.

ஆனால், என் வீடு தேர்ந்தெடுத்த சில விஷயங்களை மட்டுமே பார்க்கிறது.

லலிதாவின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை விடாமல் உட்கார்ந்து அனுபவிக்கிறது. நானும் முடிந்தபோது பார்த்து விடுகிறேன்.

அந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு காரணம் அதை நடத்துகிற நண்பர் அப்துல் ஹமீதின் திறமை. பேச்சு சாதுர்யம். அதிகம் புண்படுத்தாமல் நாசூக்காய் செய்யும் கேலி. பாடுபவர்கள் ஸ்ருதி பிசகியோ, தாளம் தப்பியோ, இசை அம்சம் குறைவாகவோ பாடினால், 'இதை பேச்சுப் போட்டி என்று நினைத்து மேடை ஏறிவிட்டார் போலும். இருப்பினும் மிக நன்றாக பாடினார். அவருக்கு மனமார்ந்த பாராட்டுகள் என்று மழுப்பி விடுகிறார்.

தவறான வரிகளை சேர்த்துப் பாடினால், 'மிக்க நன்றி நண்பரே, தொடர்ந்து உங்களால் பாட்டு இட்டுக் கட்ட முடியாமல் போய்விட்டது. எனினும் வாழ்த்துக்கள்' என்று அடித்தாற்போலவும், தட்டிக் கொடுத்தாற் போலவும் பேசுகிற பேச்சு மிக சுவாரஸ்யமானது.

இதில் பிடித்த விஷயம் சுமாராய் பாடத் தெரிந்தவர்கள்கூட மேடையேறி, தன்னம்பிக்கையோடு பாடுவது தான்.

ராகம் சங்கீதம் நிகழ்ச்சியிலும், ரமணன் நடத்துகிற பஜாஜ் ஸப்தஸ்வர நிகழ்ச்சியிலும் நன்றாக பாடுபவர்களுக்கிடையேதான் போட்டி.

தொலைக்காட்சிப் பெட்டிக்கு வருமுன்பே பாடச் சொல்லி, தேர்ந்தெடுத்து, வடிகட்டி.....அதற்குப் பிறகுதான் தேர்ந்ததை தேர்ந்ததோடு போட்டியிட விடுகிறார்கள்.

அப்துல் ஹமீது நிகழ்ச்சியில் மிக சுமாரான குரல் வளமுள்ளவர்கள்கூட மேடையில் அனுமதிக்கப்படுகிறார்கள். சங்கீதத்தின் எந்த அம்சமும் அவர்களுக்குத் தெரியாது என்பது நமக்குத் தெரிந்து விடுகிறது. தாளக் கட்டோ, ஸ்ருதி சேர்த்தலோ, ஸ்வர விஷயமோ அறியாதவர்களாய், அதேசமயம் தான் நன்றாகப் பாடுகிறோம் என்ற நினைப்போடு மேடையேறுகிறார்கள். பாடுகிறார்கள்.

ஜெயிக்கிறார்களா தோற்கிறார்களா என்பதல்ல முக்கியம். பாடுகிறார்கள் என்பதே உயர்ந்த விஷயம். வெகுவாய் பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

சென்னையின் நகரத்து நாகரிகம் படிந்தவர்கள் மட்டுமல்ல; திருச்சி, கோயம்புத்தூர், மதுரை என்று சற்று அடக்கமான நாகரிகம் கொண்ட ஊர்களிலிருந்தும் மன்னார்குடி, தூத்துக்குடி, முசிறி, ஈரோடு, சத்தியமங்கலம் போன்ற அமைதியான கிராமத்து வாசனை மிக்க ஊர்களிலிருந்தும் பெண்களும், ஆண்களும் பாட வருகிறார்கள். தயங்காமல் மேடையேறி தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

சபையேறுதல் என்கிற விஷயம் அதீத தைரியம் தேவைப்படுகிற விஷயம் இதனால் நடைபெறுகிறது. இது மிகப்பெரிய கலாச்சார மாறுதலுக்கு அடிநாதமாக இருக்கப் போகிறது.

சபை என்றால் ஆயிரம் பேர் கொண்ட அரங்க சபை மட்டுமல்ல; கிட்டத்தட்ட மூன்று கோடி மக்களால் எதிர்பார்க்கப்படுகின்ற மிகப்பெரிய சபையொன்றில் அவர்கள் ஏறி தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

இப்படி சபைக்கூச்சம் போவது பெண்களுக்கு நல்லது. ஆண்களுக்கும் நல்லது. பாடுவதற்கு மட்டுமில்லை நாலு பேர் முன்பு பேசுவதற்கும் இப்படிப் பாடியது உதவும். தன்னால் சாதிக்க முடியுமென்று தோன்றும். தான் எப்படிப் பாடினோம் என்று தெரிய வரும். எப்படி பாடியிருக்க வேண்டும் என்று யோசனை வரும்.

தேர்ந்தவர்களை அழைத்து பாடச் செய்வதைவிட, ஆர்வம் மட்டுமே உள்ளவர்களை மேடைக்கு அழைப்பது நிகழ்ச்சி இயல்பாகி விடுகிறது. இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதால் பார்க்கிறவர்களுக்கும் தன்னம்பிக்கை வளர்கிறது.

'இந்த அம்மா சுமாராத்தான் பாடுறாங்க. இவங்கள விட நான் நல்லாப் பாடுவேன். இந்த அம்மா ரொம்ப நல்லாப் பாடுறாங்க. நானும் இவங்கள மாதிரியே பாட கத்துக்கப் போறேன்' என்று இரண்டு வகையான நம்பிக்கை விஷயங்கள் பார்ப்பவர்களிடமும் தொற்றிக் கொள்கின்றன.

நடிக நடிகையரை முன்னே நிறுத்தி நிகழ்ச்சி நடத்துவதைவிட, பிரபலமானவர்களிடம் கேள்வி கேட்டு பதில் பெறுவதை விட முகமில்லாதவர்களை மேடைக்கு அழைப்பது ஒரு பொதுஜன சேவை போல நல்ல விஷயம்.

லலிதாவின் பாட்டுக்குப் பாட்டு போல, விசுவின் அரட்டை அரங்கமும் இந்த உற்சாகத்தை நீண்ட நாளாக கொடுத்துக் கொண்டிருக்கிறது. பதினெட்டு வயதுப்



பெண்ணிலிருந்து, அறுபது வயதுக்கிழவர் வரை ஆவேசமாகப் பேசுவதை ரசிக்க முடிகிறது. அவர்கள் பேச்சின் சாராம்சம் சரியா தவறா என்பது முக்கியமே அல்ல. அவர்கள் தைரியமாகப் பேசுகிறார்கள் என்பதுதான் முக்கியம்.

இதில் அதிகப்பிரசங்கித்தனம் அசட்டுத்தனம் எல்லாம் கலந்துதான் இருக்கும். இதை கடுமையாக விமர்சிக்கவே கூடாது. மடக்கி நோகடிக்கக் கூடாது.

உன் கருத்து அப்படியா...நல்லது என்று தட்டிக் கொடுத்து பாராட்ட வேண்டும்.

நடிகர் விசு இதை திறம்படவே செய்கிறார்.

இருக்கிற ஐந்து தமிழ் சேனல்களில் ஒரு பதினைந்து





சதவிகிதம் பொதுமக்களுக்காக திறந்து விடப்பட்டிருக்கிறது.

முன்பிருந்ததைவிட சென்னைத் தொலைக்காட்சியில் திரு.ஏ.நடராஜன் அவர்கள் தலைமைக்குப் பிறகு பண்டிகை நிகழ்ச்சிகள் பரிசுப் போட்டிகளோடு பிரகாசிக்க ஆரம்பித்து விட்டன.

இது இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பது என் அவா. ஜனங்களோடு தொலைக்காட்சி இன்னும் அதிகம் பேச வேண்டுமென்பது என் விருப்பம்.

பட்ஜெட் பற்றிய தொடர் விவாதம், சமூக மாறுதலில் தொழிலாளர்கள் பங்கு, இந்திய தத்துவ ஞானத்தின் எழில் மிகுந்த காலம் போன்ற வறட்டு உரைகளெல்லாம் தவிர்க்க முடியாது போயினும், பொது ஜனங்களை வாழ்க்கை பற்றிய அபிப்ராயங்களை பேசுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

இரண்டு சக்கர ஓட்டிகளின் பிரச்னைகள் என்ன, அவர்கள் அரசிடம் என்ன வசதி எதிர்பார்க்கிறார்கள், அவர்கள் சொல்லும் பிரச்னைக்கு அவர்களே ஏதும் தீர்வு சொல்ல முடியுமா என்று பேசச் சொல்ல வேண்டும்.

வேலைக்குப் போய்வரும் பெண்மணி உடற்பயிற்சி செய்யலாமா கூடாதா, எப்போது செய்யலாம். எவ்வளவு செய்யலாம். நிபுணரை விளக்கச் சொல்லி, அதுபற்றிய அபிப்ராயத்தை பொதுமக்களிடம் கேட்க வேண்டும்.

'ஏன்' என்கிற ஒரு நிகழ்ச்சிக்கு குமுதம் ஆசிரியர் நண்பர் மாலன் ஏற்பாடு செய்திருந்தார். பேசத்தெரிந்த நாலு பிரபலங்களோடு ஒரு பத்து சாதாரணர்களை பேச வைத்திருந்தார். அந்த பத்தில் ஒன்பது பேர் பெண்கள். குடும்பத்தலைவி, கல்லூரி மாணவி, கணக்கர், டெலிஃபோன் ஆபரேட்டர் என்று பலரும் கலந்து திறம்பட பேசினார்கள்.

ஒரு இருபது வருடத்திற்கு முன்பு இந்தப் பழக்கமில்லை.

ஒரு பிரபல பத்திரிகைக்காக சாகித்ய அகாதமி விருதுபெற்ற ஒரு முதுபெரும் எழுத்தாளியை நான் பேட்டி காணச் சென்றிருந்தேன்.

அந்த அம்மாள் படித்தவர். முதிய பெண்மணி "டெல்லிக்கு பரிசு வாங்கப்போனா, இந்த எழுத்தாளி வீட்லதான் தங்கணும். ஹோட்டல்ல எல்லாம் நான் தங்க மாட்டேன். ஒரே ஆம்பளைக் கூட்டமா இருக்கும். யாராவது ஏதாவது பண்ணிடுவாளோன்னு பயம்." என்று குழந்தை போல் அந்த எழுத்தாளி பேச, நான் வியந்து போனேன்.

வெளிநாடுகளுக்குப் போன எழுத்தாளியாக இருந்தாலும், அந்தப் பெண்மணியின் உலகம் சிறியதாக இருந்தது. குழப்பமாக இருந்தது. மக்குத்தனமாக இருந்தது.

பழகுதல்தான் ஒரு விஷயத்தைப் பற்றி அபிப்ராயம் கொள்ள உதவுகிறது. அறிந்து கொள்ளும் ஆவலும், அறியும் திறனும் மற்றவரோடு பழகுவதில் விருத்தியாகின்றன.

இந்தப் பழகுதலில் ஒரு அம்சம்தான் மேடையேறிப் பாடுவதும், சபையேறி பேசுவதும்.

ஒரு பெண் சுடிதார் போட்டுக் கொள்ளத்துவங்க, மெல்ல மெல்ல கடைக்கோடி கிராமம் வரை சுடிதார் பரவியது போல, இந்த பேசுகிற, பாடுகிற ஆசை பரவும். குறிப்பாய் தமிழகப் பெண்களுக்கு இது உற்சாகமூட்டும்.

கதவுக்குப் பின்னால் முகம் மறைத்துக்கொண்டு, 'அவரு எங்கினயோ வெளியே போயிருக்காரு. எப்போ வருவாருனு தெரியாது. அவரு பேரெல்லாம் என் வாயால சொல்ல மாட்டேன்' என்று மதிமயங்காமல், பின்னடைந்த பெண்ணாக இல்லாமல், முன்வந்து பேசுவதற்கு இந்த டி.வி.நிகழ்ச்சிகளும் உதவுமென்று நினைக்கிறேன்.

அறிவுப் போட்டிகளை விட, இந்த விஷயங்கள் ஆனந்தமாக இருக்கின்றன.

சில பேருக்கு மட்டுமே தெரிந்த கர்நாடக சங்கீதத்தை போட்டிக்கு முன்வைக்காமல், பலபேரின் ரசனைக்கு உகந்த சினிமாப்பாட்டுக்களை எடுத்துக் கொள்வது ஒரு உத்தமமான விஷயம்.

கலைகளில் உயர்ந்தது தாழ்ந்தது இல்லை. கர்நாடக சங்கீதம் மட்டுமே மகத்தானது என்கிற பேச்சு வெறும் அலட்டல். ஆபாசமான கர்வக் கொப்பளிப்பு.

மேலும், கர்நாடக சங்கீதம் இலக்கண நுணுக்கங்களிலில்லை. மனம் கனிந்து கரைந்து பாடும் பாவத்திலிருக்கிறது. இலக்கண விஷயங்களையே போட்டியில் நோண்டி முகர, கிருதிகளிலுள்ள பாவம் எடுபடாமல் போய் சங்கீதம் சடுகுடு விளையாட்டு போல ஆகி விடுகிறது.

ராகம் சங்கீதம் இதற்கு உதாரணம்.

மோகன் வைத்யா வெறும் கர்வக் கொப்பளிப்பு.

ஆனால், கிட்டத்தட்ட இதே விஷயத்தை ஏஷியா நெட்டில் செய்கிறார்கள். 'நாத மாதுரி' என்கிற இசை நிகழ்ச்சியில் இந்தப்போட்டி அலட்டல்களை விட, கீர்த்தனையின் பாவம் வெளிப்படும்படி, இனிமை ததும்பும்படி பாடுகிறார்கள். பழனி முருகன் மீது பாட்டும், ஐயப்ப சங்கீதமும் சேர்த்து மெல்லிசைக்கு மரியாதை கொடுக்கிறார்கள். பத்து பதினைந்து வயது குழந்தைகள் பங்கு பெறுகிறார்கள்.

மிக மறைமுகமாய் சபையேறுகிற ஆசை பலபேர் நெஞ்சில் சுடர்விடுவதை உணர முடிகிறது. ஒரு சமூகம் அறிவார்ந்த சமூகமாய் வருவதற்கு இது ஆரம்பம்.

சினிமாப்பாட்டு பாடினால் அறிவார்ந்த சமூகமா என்று கேட்பது நிர்மூடம். ஆத்திரக்காரத்தனம்.

பொதுஜன அபிப்ராயங்கள் பிராபல்யமான விஷயங்களிலிருந்துதான் ஆரம்பிக்கும். உலக வங்கியில் இந்தியாவின் ஈடுபாடு, கம்யூனிஸ்ட் சீனாவின் புதிய பொதுவுடைமைக் கொள்கை, சமூகக்காடுகளில் ரசாயன உரம் என்பது பற்றி பேச, படித்தவர்களுக்குக்கூட இங்கு தெரியாது.

வீட்டுப்பிரச்னைதான் நாட்டுப் பிரச்னை. வயதானவர்களை பராமரிப்பதிலுள்ள சிரமம் என்பது பற்றி உண்மையாகப் பேசலாம். பண்டிகைகளும் வேலைக்குப் போகும் பெண்களும் என்று தலைப்பிட்டால் பத்து வாரம் பேசலாம். விசுவின் அரட்டை அரங்கத்தை வேறுவிதமாய் விரிவுபடுத்தலாம்.

வாழைப்பழமாக தின்பது, கலர் சோடாவாக குடிப்பது, கரண்டியில் எலுமிச்சம்பழம் எடுத்துப் போடுவது, கண்ணை கட்டிக்கொண்டு பலூன் உடைப்பது போன்றவைகள் சுவாரஸ்யமிருந்தாலும் லேசான அசட்டுத்தனத்தோடு முடிந்து விடுகின்றன. வெட்கம் விடுதலுக்கு உதவி செய்தாலும் விவேகம் குறைவாக இருக்கின்றன. இவைகளை விட பாட்டுக்குப்பாட்டு தெளிவானது. சுவையானது.

தொலைக்காட்சிப் பெட்டி நமது தமிழ் சமூகத்தின் கூச்சத்தை மெல்ல மெல்ல குறைத்துக் கொண்டு வருகிறது. பழகுதலை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறது. சபையில் முன்னிறுத்தும் ஆசையை அதிகரிக்கச் செய்கிறது.



தொடர்பு கொள்ளுதலே வாழ்க்கை என்கிற மகா வாக்கியப்படி பழகுகின்ற திறனையும், தைரியத்தையும் இது அதிகப்படுத்துகிறது.

இந்த நிகழ்ச்சிகளை நுகர்வோர் கலாச்சாரத்தின் சீரழிவு என்று யாரோ சொன்னார்கள். எல்லாவற்றையும் அரசுடைமையாக்கி அழித்துவிட வேண்டுமென்ற ஆத்திரமுள்ளவர்கள் கேலி பேசினார்கள்.

நகை விளம்பரத்திற்குத்தான் பாட்டுக்குப் பாட்டே தவிர, வேறு எந்த நல்ல கலாச்சாரத்திற்குமில்லை என்று வாதாடினார்கள்.

இங்குள்ள அத்தனை கலை இலக்கியங்களும் வியாபாரியின் முதுகில் உட்கார்ந்துதான் பயணப்படுகின்றன. எல்லா பிரபல வாரப்பத்திரிகைகளும் விளம்பரத்தின் தயவில்தான் விற்பனைக்கு வருகின்றன.

ஆணுறையிலிருந்து, குங்குமம் வரை விளம்பரப்படுத்தி வண்ணமயமாக வெளிவருகின்றன. விளம்பரங்கள் வர்ணமாக இருந்தால்தான் எடுக்கும். விளம்பரங்களுக்கு வர்ணம் போடுவதால்தான் மற்ற நடிக நடிகையர் படங்களும் வர்ணத்தில் போட முடிகிறது.

இல்லையெனில் இந்த ஐந்து ரூபாய்க்கு அறுபது பக்கம் கறுப்பு வெள்ளைதான் தரமுடியும்.

உலகம் முழுவதும இந்த நுகர்வோர் கலாச்சாரத்தினால்தான் கலைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அரசர்களும், மிராசுதார்களும் வளர்த்த கலை இப்பொழுது வியாபாரிகளிடம் போயிருக்கிறது. ஏனெனில், இப்போது அரசாங்கம் என்பது மறைமுகமாய் வியாபாரிகள் கையில்தான் இருக்கிறது.

கலை என்றைக்கும் கலைஞர்கள் கையில் இருந்ததேயில்லை.

பாட ஆசை வந்து, பேச ஆசை வந்து, விளையாட்டுகளில் பங்கெடுக்க ஆசை வந்து இந்த மத்தியதர வகுப்பு இவைகளில் நுழைய, இந்த மத்தியதர வகுப்பின் அடுத்த தலைமுறை இன்னும் வேகமாக இதற்கு பயிற்றுவிக்கப்படும். அப்போது, நிறைய திறமைகள் வெளிவரும்.

ஐரோப்பாவில் குழந்தைகள் தைரியமாகப் பேச, இருபது வருடங்கள் முன்பு துவங்கப்பட்ட தனியார் தொலைக்காட்சி சேனல்கள் என்று காரணம் காட்டப்படுகிறது.

'படிக்கவே மாட்டேங்கிறான். டி.வி.யே பாத்துண்டிருக்கான்' என்று பலர் நொந்து கொள்வது எனக்கு கேட்கிறது. வெறும் படிப்பு குமாஸ்தாக்களை உருவாக்கியது. பேசிப்பழகத் தெரியாத மக்களை உருவாக்கியது. ஆனால், இனி அடுத்த தலைமுறை எது குறித்தும் பேசிப் புரிந்துகொள்ளும் என்று எனக்குத் தோன்றுகிறது. பலரோடு பழக ஆசைப்படும் என்ற எண்ணம் வருகிறது.

சினிமாவை என் மூத்த தலைமுறையினர் கண்டபடிக்கு கண்டித்தனர். இன்று கண்டிப்பவர் மிகக்குறைவு. சபை ஏறி தன் திறமையை வெளிப்படுத்துவதை, குறிப்பாய் பெண்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதை கண்டிப்பவர்கள் இன்று அதிகமிருக்கலாம். நாளை குறையும் என்பது என் எண்ணம்.

ஏனோ தெரியவில்லை இந்தியாவில் சமூக மாறுதல்கள் மிக நிதானமாகத்தான் நிகழ்கின்றன.

- தொடரும்




**மூலிகை மருந்தின் மூலம் குடியை மறக்க**

**(குடிப்பவர்களுக்குத் தெரியாமலும் கொடுக்கலாம்)**

நாட்பட்ட ஆங்கில மருத்துவத்தால் கைவிடப்பட்ட புற்றுநோய், எய்ட்ஸ், வாத நோய்கள், மேகம், கிரந்திகள், வெண்புள்ளி, சிறுநீரக கோளாறுகள், மகப்பேறின்மை, ஜீவ அணுக்கள் குறைவு, நரம்பு தளர்ச்சி, விரைவில் விந்து வெளியாதல், நடுக்கம், பயம் உட்பட எல்லா நோய்களுக்கும் தனிக் கவனம் செலுத்தப்படும். தாங்கள் விரும்பும் ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ பெற்றுக் கொள்வதற்கு தக்க ஆதாரத்துடன் வரவும்.

மருத்துவ மாமணி

கர்மயோகி : **டாக்டர் ஆ. நடராசன்.**

**பதிவு பெற்ற: சித்த, ஆயுர்வேத, யூனானி, ஓமியோ மருத்துவ நிபுணர்.**

*பிரதிவாரம் சனிக்கிழமை பெங்களூர் வருகை*

ரூம். No.103, ஒட்டல் அருணா ஆனந்த்
No.7, முதல் கிராஸ் அன்னம்மாள் கோவில் விரிவு
(சங்கம் தியேட்டர் வடக்குப் பக்கம்) பஸ் ஸ்டாண்ட்
அருகில், பெங்களூர்-9. ஃபோன்: 2873577, 2203082.

*பிரதி ஞாயிறுதோறும் திருப்பூர் வருகை*

கடை எண் 27, M.M.Y. காம்ப்ளக்ஸ்,
காமராஜர் ரோடு, (பழைய பஸ் நிலையம் அருகில்)
திருப்பூர் -4. ஃபோன்: 747952, 747593

*மதுரை-சென்னை எல்லா நாட்களிலும்*

குரு சித்த வைத்திய சாலை B-46, இரண்டாவது மாடி,
ஏழுகடல் காம்ப்ளக்ஸ், ஏழுகடல் வீதி, மதுரை-1.
ஃபோன்: 628534.

*பிரதி செவ்வாய் தோறும் தஞ்சாவூர்-கும்பகோணம்*

173/2, வடக்குவீதி,
தஞ்சாவூர்- 613 001.
காலை8.A.M. to 11A.M..,

தாஜ்மகால் லாட்ஜ்
பொற்றாமரை தெற்கு,
கும்பகோணம்- 612 001.
ஃபோன்:21422,
மாலை3P.M to 5P.M

தலைமை:

**குருசித்த வைத்தியசாலை**

105, பாண்டிபஜார், தி.நகர். சென்னை-17.
ஃபோன்: 8231819.


223622

# ஒப்பிப்பது வாசிப்பதாகாது!



தொலைக்காட்சியில் செய்திகள் வாசிக்கப்படும்போது - பல சமயங்களில் மிக முக்கியமான செய்திகள் இருந்தாலும்கூட அவை நம் மனதில் பதிவது இல்லை.

அதற்கு என்ன காரணம்?

நாம்தான் அந்த செய்திகளை காதில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியப்படுத்துகிறோமா அல்லது அந்த செய்தியை வாசிப்பவர் அந்த செய்திக்கான முக்கியத்துவத்தை தந்து வாசிப்பதில்லையா..வார்த்தைகளில் அழுத்தம் இல்லையா..அல்லது வடிவத்தில் கோளாறா? அல்லது நமது கவனம் அந்த சமயத்தில் அலைக்கழிக்கப்படுகிறதா?

இவை பற்றி எல்லாம் நாம் எப்போதாவதுதான் நினைத்துப் பார்க்கிறோம். அதுவும் எப்போது?

இப்படி நாம் ஆச்சர்யப்படும்போதுதான் அந்த விஷயம் விளங்குகிறது..அத்தனை முக்கியம் வாய்ந்த செய்தியை நாம் கவனிக்காமல் போனது ஏன்..நாம் எப்படி அதை தவறவிட்டோம் என்று.


இதுகுறித்து சமீபத்தில் டாக்டர் கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டோம்.

'சொந்தச் சோகங்களைத் தன் படைப்புகளில் வடிப்பவன் நல்ல சமுதாயக் கலைஞனாக முடியாது'' என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை, செய்தி வாசிப்பவர்கள், தங்களுடைய தோற்றத்தை சுய விளம்பரம் ஆக்கிக்கொள்வது! செய்தி வாசிப்பவர் - மக்களுக்கு ஒரு டாக்டரைப் போன்ற, பேராசிரியரைப் போன்ற, வழக்கறிஞரைப் போன்ற, ஒரு பத்திரிகையாளரைப் போன்ற 'இமேஜ்' தர வேண்டுமே தவிர - ஒரு மாடலிங் அழகியைப்போல, ஒரு நடன மணியைப்போல, ஒரு நடிகையைப் போல தோற்றமளிக்க முயல்வது, டி.வி. என்கிற இந்த சாதனத்துக்குப் பொருந்தாது.

தொடக்கம் முதலே தொலைக்காட்சியை ஒரு சினிமாத் திரை போல் பார்க்கும் எண்ணம் மக்களுக்கு வந்ததும் தவறுதான்! சின்னத் திரை என்பது கனவுத் தொழிற்சாலை அல்ல' அது முழுவதுமான ஒரு கலைத்துறை அல்ல! பத்திரிகை, ரேடியோ போன்ற ஒரு மக்கள் தொடர்புச் சாதனம்! விஷுவலாக இருப்பதாலேயே அது சினிமாவாகி விடாது. தொலைக்காட்சிப் படங்கள், நாடகங்கள் ஆகியவையும்கூட சினிமாவைப் போல பிரம்மாண்ட காட்சி அமைப்புகளுடன், புனைவியலாக அமையாது. டி.வி.யில் அப்படி அமைய இயலாது, கூடாது என்பது ஒரு அடிப்படை சித்தாந்தம்! அப்படித்தான் டி.வி. இலக்கண நூல்கள் கூறுகின்றன, மேற்கு நாடுகளிலும் கூட! டி.வி.என்பது உண்மையியலைச் சார்ந்திருக்க வேண்டும். ரியலிசம் எனப்படும் மெய்ம்மையியலைப் பிரதிபலிக்க வேண்டும்.

அப்படியிருக்கையில், நமது அறிவிப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள் மற்றும் உரையாடல் நிகழ்த்துபவர்கள் குறிப்பாக பெண்கள் எப்படித் தோற்றமளிகிறார்கள்? ஒரு டாக்டர் நெக்லஸ் அணிந்து கொண்டு, ஜிமிக்கி போட்டுக் கொண்டு சர்வாலங்கார பூஷிதையாய் ஆபரேஷன் செய்வதில்லை. ஒரு வழக்கறிஞரோ அல்லது பேராசிரியையோ கூடை போல பூ வைத்து, ஒரு சாண் ஜரிகை போட்ட பட்டுப் புடவை அணிந்து வேலைக்குப் போவதில்லை. ஆனால் செய்தி வாசிப்பவர்களோ - செய்திகளே மந்தப்படும் வகையில் தங்களுடைய உடையலங்காரத்தால் கவர்வது விசித்திரமாகவே யுள்ளது. தில்லியில் உள்ள செய்தி வாசிக்கும் பெண்கள், சென்னையில் உள்ளவர்களைப் போல இல்லாமல், 'Television Ethics' க்கு உட்பட்டு கட்டுப்பட்டுள்ளது வெளிப்படையாய்த் தெரிகிறது! பூவும், பொட்டும், குறைந்தபட்சம் நகைகளும் தமிழ் நாகரிகத்தின் அடையாளங்கள் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்; இருந்தாலும் அவை அளவோடு இருக்க வேண்டும்! மின்னலடிக்கும் காதணியோ அல்லது கைக்கடியார ஸ்டிராப்போ மிக முக்கிய பட்ஜெட் விவரங்கள் காதில் விழ முடியாத அளவு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றக் கூடாது!

சிலர் செய்தி வாசிப்பதைப் பார்க்கும்போது, 'எட்டாம் வகுப்பு ஆசிரியர் 'சுற்றுப்புறச் சூழல்' என்னும் ஐந்தாவது பாடத்தைப் படி என்றதும், எழுந்து நின்று ஒரு மாணவி சத்தம் போட்டு ஒப்பிப்பது போலப் படிப்பது தான் என் நினைவுக்கு வருகிறது! செய்தி வாசிப்பாளர்கள் நடுநிலையாளவர்களாக இருப்பது எவ்வளவு அவசியமோ - அவ்வளவு அவசியம் சமுதாயப பொறுப்புடையவர்களாக இருப்பதும். அறிவுப் பக்குவமுடையவர்கள்தான் செய்தி வாசிக்க வேண்டுமேயன்றி அழகுப் பதுமைகளாக இருப்பது மட்டுமே போதாது!



அறிவிப்பாளர்கள் கதையே வேறு! அவர்கள் நிச்சயமாய் அழகுப் பதுமைகள்தான்! அடிப்படை விதிகள் அதை அனுமதிக்கின்றன. மரபு மீறாத வகையில் எழிலரசிகளாய்த் தோன்றலாம். ஆனால் அன்றைய நிகழ்ச்சிகளை அறிவிப்பதற்குக் கூட கீழே குனிந்து காகிதத்தைப் பார்த்தால், அவர் தகுதியானவர் அல்ல என்று நாம் முடிவெடுத்து விடலாம்!

சமையல் குறிப்புகளைத் தரும் பெண்மணிகள் பலர் கூந்தலை விரித்துக் கொண்டு நிற்பது ஏன்? தலை முடி உணவில் விழக்கூடாது என்பதால்தான் – 'செஃப்கள்' எல்லாம் தலையில் வெள்ளைத் தொப்பிகள் அணிகிறார்கள். நம் ஊரிலோ கல்லுப் பதித்த மோதிரம் மின்ன, ஏகப்பட்ட தங்க வளையல்களோடு வந்து வெஜிடபிள் பிரியாணி செய்கிறார்கள். கைகள் அழகாகத் தெரிய வேண்டுமாம்! தூய்மைதான் அழகு சமையல் வேலையில் என்பது நாம் சொல்லித்தானா தெரிய வேண்டும்?

இனி, இவர்கள் பேசும் மொழியைக் கேளுங்கள். நாம் இருப்பது தமிழ்நாட்டில்தானா என்று நமக்கே சந்தேகம் வந்துவிடும்! 'இந்த கொத்தமல்லியை மிக்ஸியிலே கிரைண்ட் பண்ணுங்க? fine ஆ கிரைண்ட் பண்ணுங்க? காஸ்ல non-stick pan வச்சு heat ஆனதும், ஆயில் விடுங்க? அப்புறம் ஆனியன் போட்டு saute பண்ணுங்க? பிரௌன் ஆனதும் டொமாட்டோ சேர்த்து gravy யாக்குங்க!' என்று சமையலுக்குக் கூட தமிழ் லாயக்கில்லை என்று நிரூபிக்கப் பார்க்கிறார்கள். ஏதோ இடையில் ஓரிரு ஆங்கிலச் சொற்கள் வந்தால் பரவாயில்லை. மின் இயந்திரம் என்பதற்குப் பதிலாக 'மிக்ஸி' என்றே வைத்துக் கொள்வோம். 'மிக்ஸியில் கொத்தமல்லியை விழுது போல மைய அரைத்து எடுங்கள். அடுப்பில், non-stick வாணலி வைத்து சூடானதும் எண்ணெயை விட்டு, வெங்காயம் போட்டு வதக்குங்கள். பின் தக்காளியைக் கூடச் சேர்த்து அடர்த்தியான பொன்நிறத்தில் தளதள என்று வதக்கி எடுங்கள்' என்று சொல்லக்கூடாதா?

மனசு என்பதற்கு Heart என்றும், கல்லூரி என்பதற்கு College என்றும், மகிழ்ச்சி என்பதற்கு Happy என்றும், இரவு என்பதற்கு Night என்றும், இனிப்பு என்பதற்கு Sweet என்றும் வழக்கமான தமிழ்ச் சொற்களைக் கூடத் துப்புரவாய்த் துடைத்துப் போடுகிற அநியாயத்தைத் தடுக்க பத்திரிகைகள்தாம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!

செய்தி வாசிப்பவர்களே உச்சரிப்பைப் படுகொலை செய்கிறார்கள்! தூது என்பதை D உச்சரிப்போடும் சொன்னார் என்பதை ஸ உச்சரிப்போடும் பட்டியலிட்டால் கணக்கிலடங்காது. ஊர்களின் பெயர்களை எப்படி உச்சரிப்பது? மதுரை என்பது தூய தமிழ்ச்சொல்! இதை Geographical Pronunciation அதாவது பூகோளரீதியான உச்சரிப்பு எனலாம். அதுவே ஆங்கிலமயமாக்கப்படும்போது மெஜுரா என்று வரும்.

பெங்களூர் என்பது தமிழ் மயமாக்கப்பட்ட உச்சரிப்பு Bangalore (பேங்களூர்) என்பது ஆங்கில மயமாக்கப்பட்ட உச்சரிப்பு! பங்களூரு என்பது இயல்பான கன்னட உச்சரிப்பு. அதாவது Geographical Pronunciation. இதுவரை எந்த டி.வி. நிலையமும், செய்தித்துறை இயக்குனரும், வாசிப்பாளர்களுக்குப் பொது விதியாக இன்ன வகை உச்சரிப்பு மாதிரியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லித் தரவில்லை என்பது கண்கூடு; (காதுகூடு?).

ஒருவர் கஷ்மீர் என, இன்னொருவர் கேஷ்மீர் என, மற்றவர் காஷ்மீர் என மூன்று ஊர்களாக்கி விடுகிறார்கள். முன்பெல்லாம் தூர்தர்ஷன் மட்டுமே குறைகளுக்கு இலக்காகி இருந்தது. இப்போது எத்தனையோ தனியார் டி.வி.க்கள் உருவாகியும் எவருக்கும் உண்மையான தர நிர்ணயத்தில் ஈடுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.





**டி.வி.யில் தொகுப்புரை வழங்க வருபவர்களுக்கு சில யோசனைகள்:-**

❖ எப்போதும் மென்மையான நிற உடைகளையே அணியுங்கள். அதிக அடர்த்தியான (dark) நிறம் அல்லது மிக வெளிர் (light) நிறங்களைத் தவிர்த்து விடுங்கள். நடுநிலையான வண்ணங்கள்தான் முகத்தைத் தெளிவாகக் காட்டும். மற்றவர் கண்களைக் கூச வைக்கும் ஆடைகளை அணியாதீர்கள். நமக்காகத்தான் ஆடை! ஆடைக்காக நாமல்ல!

❖ அதிகமான நகைகள் அணிவதைத் தவிர்த்து விடுங்கள். இயற்கை அழகு இதனால் மறைந்து விடுகிறது.

❖ டி.வி.நிகழ்ச்சிகளின் முன் பதிவுக்கோ அல்லது நேரடி ஒளிபரப்புக்கோ செல்வதாக இருந்தால், முந்தைய தினத்திலிருந்து அதிகமாக வெயிலில் அலைய வேண்டாம். மனதை அமைதியோடு வைத்திருங்கள். இது மிக முக்கியம்! கவலை இருந்தால் முகம் வெளிக்காட்டி விடும்.

❖ சொல்ல வேண்டிய அறிவிப்பை அல்லது தொகுப்புரையை நன்றாக மனதில் பதிய வையுங்கள். தோற்றத்தின் மீது மட்டுமே கவனம் வைத்து இதைக் கோட்டை விட்டு விடாதீர்கள்!

❖ நிகழ்ச்சிக்கு முந்திய நாள் அல்லது அன்று காலை முடிந்தால் லேசாய் எண்ணெய் தேய்த்துக் குளியுங்கள். முகம் பொலிவு பெறும். உடல் உற்சாகமாக இருக்கும். அடிப்படை சுகாதாரம்தான் அழகின் மூலாதாரம்!

❖ உடைகளை மூன்று நாட்களுக்கு முன்பே தேர்ந்தெடுத்து வையுங்கள். இறுதி நேரம் வரை மூளையைக் கசக்க வேண்டாம்!

❖ முகப் பராமரிப்புக்காக அழகு நிலையம் செல்ல முடியாதவர்கள், வீட்டிலேயே செய்து கொள்ளுங்கள்! நேரத்தை அழகு நிலையத்தில் வீணடிக்க வேண்டாம்!

❖ நெற்றியில் வைக்கும் பொட்டின் நிறமும், உதட்டுச் சாயமும் முரண்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்! முரண்பட்டால் முகம் களையிழந்து விடும்! உதாரணமாக, அஞ்சலக சிவப்பு நிறத்தில் பொட்டும், ரோஸ் நிற உதட்டுச் சாயமும் அணியாதீர்கள்.

❖ முழுத் தோற்றமும் தலை முதல் கால் வரை பளிச்சென்று இருக்க வேண்டும்! கை நகம், கால் நகம் உட்பட எல்லாவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இது தெம்பைத் தரும்.


❖ மிக மிக முக்கியம்:- முக பாவம்! அலட்டிக் கொள்ளாதீர்கள்! பார்வையாளர்களை எரிச்சல் படுத்தாமல், தன்னம்பிக்கையோடு அதே நேரம் அடக்கத்தோடு பேசுங்கள். இனிமையாய்ப் புன்னகையுங்கள்.

**செய்தி வாசிப்பவர்களாயிருந்தால்:-**

செய்தி வாசித்து முடித்தவுடன் புன்னகை செய்ய வேண்டுமே என்பதற்காக ரயில் கவிழ்ந்து 100 பேர் பலியாகியிருக்கும்போதோ, வேறு பிற சோகச் செய்திகள் நிகழ்ந்திருக்கும்போதோ புன்னகைக்காதீர்கள்.

டி.வி.யில் தோன்றுவதும் மற்ற வேலைகளைப் போல்தான். வேலையில் கவனம் தேவை! காமிராவுக்கு முன்னால் நிற்கும்போது, 'பக்கத்து வீட்டு மாமி பார்த்துக் கொண்டிருப்பாள், என் கணவர் பார்ப்பார், என் காதலர் பார்ப்பார், மற்ற அறிவிப்பாளரைவிட நான் அழகு' போன்ற சிந்தனைகளைத் தூக்கிக் குப்பையில் போடுங்கள். நீங்களாயிற்று! உங்கள் முன்னால் இருக்கும் காமிராவாயிற்று! இதற்கு இடையே யாரும் வரக்கூடாது! ✦

- சர்ச்சில் பாண்டியன்

Flat & House Promoters

**SHIV APARTMENTS**

**WE ACCEPT DEPOSIT**

**18% rate**

❖ 3 months once Interest Payment

❖ Deposit for Business Development

❖ Interested Persons may contact in Person

*107, Ashoknagar Main Road,*

*(Samiyarmadam Bus Stop)*

*Kodambakkam, Chennai - 24.*

*Phone : 427877. Pager : 9610 - 113469.*

ADVT.

# ஞானத்தின் விலை நாற்பதாயிரம்

இந்திரா சௌந்தர்ராஜன்

ஒரு காசா இரு காசா?

முள்ளங்கிப் பத்தையாக நாற்பதாயிரம்!

அவ்வளவும் போச்சு...

ஒரு காரேஜ் ஒர்க் ஷாப்பில் குமாஸ்தாவாக கிட்டதட்ட முப்பது வருடம் குப்பை கூட்டியதற்காக வந்த ரிடயர்மெண்ட் தொகை அது.

கைவசம் இருந்தவரை கோபாலனுக்கு புதிய ரத்தம் ஓடுவது போல் ஒரு தெம்பிருந்தது. படுத்தவுடன் தூங்கி, விழித்தவுடன் விடிந்து விட்டதே என்ற கவலையின்றி தைரியமாக காரியங்கள் செய்ய முடிந்தது.

நான் வெறும் பயல் இல்லை என்கிற நினைப்பு தான் காரணம். அந்த நினைப்புக்கு காரணமான நாற்பதாயிரமும் இப்படியா போகும்?

முப்பது வருஷ உழைப்பை ஒரு முப்பது சத வட்டிக்கு மயங்கியதில் இழந்து விட்டார்! 'மூணு வருஷத்தில் இரட்டிப்பு, ஒரு தங்கக்காசு, ஒரு ஊட்டி ஜாலி ட்ரிப் வேறு' என்று கலர் கலராய் விளம்பரம் செய்து கபால் என்று கவிழ்த்து விட்டது அந்த ஃபைனான்ஸ் நிறுவனமும் கூட....

நிறுவன அதிபரை பிடித்து ஜெயிலில் போட்டிருக்கிறார்களாம். கோபாலன் கூட பத்திரிகையில் அந்த முகரையைப் பார்த்தார். மாட்டிக் கொண்ட பயமோ கௌரவ சேதமோ துளியும் இன்றி ஏதோ இதெல்லாம், வாழ்வில் ரொம்ப சகஜம் என்று நினைப்பது போல் அந்த மனிதரிடம் போஸ் வேறு...

அவன் ஜெயிலுக்கு போனால் என்ன- போகா விட்டால் என்ன? போட்ட பணம் திரும்புமா?

இதுதான் கோபாலன் முன் விசுவரூபம் எடுத்து நிற்கும் கேள்வி. நின்றால், அமர்ந்தால், நிமிர்ந்தால், குனிந்தால் இதுதான் கேள்வி.

"ஆசை... ஆசை... யாரை விட்டது? நூறு புத்தர் பொறந்து தெருத் தெருவா சுத்தி வந்து போதனை செஞ்சாலும் ஆசை மட்டும் மனுஷனை விடாது. பட்டாலும் புத்தி வராது..."

– தோசை வார்க்கும் போது தேவையே இல்லாமல் மருமகள் மாலா புலம்புகிறாள். அவளுக்கென்னவோ சன்யாச குணம் மாதிரி. ஒத்து ஊதுகிறான் அவள் புருஷன்.

ஒரு புடவை எடுக்க நூறு துணிக்கடை ஏறி ஆயிரம் புடவையையாவது பார்த்து அதிலும் திருப்தியடையாமல் அரை மனதாக ஒரு புடவை வாங்குபவள்.

அவள் சொல்கிறாள் இப்படி... ஹூம் – எல்லாம் நேரம்! தலையில் அடித்துக் கொள்கிறார் கோபாலன். காபி வருகிறது. இரண்டாவது டிகாக்ஷன் என்று ருசியில் தெரிந்து போகிறது. ஏன் இப்படி என்றெல்லாம் கேட்க முடியாது. ஏதோ இதாவது கட் ஆகாமல் கிடைக்கிறதே... அதுவும் கூட பணம் திரும்ப கிடைத்தாலும் கிடைக்கும் என்று அவள் லேசாக நம்புவதால்... அறவே கிடைக்காது என்று தெரிந்து விட்டால் கோபாலன் திண்ணைக்கு போக வேண்டி வரலாம்.

ஆமாம்...

அந்த தெருவில் அதுக்கு நிறைய உதாரணங்கள் இருக்கிறது.

கோபாலன் அதையெல்லாம் நினைத்து பெருமூச் செறிகிறார்.

பணத்தை தொலைத்ததை விடவும் இதுதான் அதிக கவலையளிக்கிறது.

"இப்படியே உக்காந்துகிட்டிருந்தா எப்படி? போலீஸ் ஸ்டேஷன்ல போய் என்னாச்சு ஏதாச்சுன்னு கேட்டு வர வேண்டியதுதானே? ஒரு வக்கீலை பார்ப்போம், விவரம் தெரிஞ்சவங்களை பாப்போம்னு இல்லாம சதா மோட்டுவளைய பார்த்து பெருமூச்சு விட்டுகிட்டு இருந்தா பணம் கிடைச்சுடுமா என்ன?"

மாலா கோபாலனை வீட்டுக்குள் படுக்க விடுவதாக இல்லை. அவரும் சோர்வோடு வீதிக்கு வருகிறார்.

இப்படி நோக்கமில்லாமல் வெளிக்கிளம்பியதேயில்லை. சோர்ந்துபோனதுமில்லை இது முதல் முறை...

கால்கள் நடந்து நடந்து பழகிய முருகன் கோயில் மண்டபத்துக்குதான் போய் நிற்கின்றன.

அந்த மண்டபத்தில் சதா நான்கு கிழடுகளை பார்க்கலாம். வருபவர் போபவர் முகத்தை பார்த்துக் கொண்டும் மேலே வந்தமரும் ஈயை விரட்டிக் கொண்டும் அவர்கள் அவர்களுக்குள் பேசியதையே பேசிக் கொண்டு இருப்பார்கள். வாரத்துக்கு ஒரு முறை குளிப்பார்களோ என்னவோ? அவர்களை பார்க்கும் போதெல்லாம் இந்த லிஸ்ட்டில் நாமும் சேர்ந்து விடக் கூடாது என்கிற பயம் தோன்றும் கோபாலனுக்கு. இன்று அவர்களுக்கு அருகிலேயே போய் அமர வேண்டிய நிலை! "என்ன ஸ்வாமிகள்.. பணம் போயிடத்துன்னு கேள்விப்பட்டோம். இப்படியா ஏமாறுவீர்?"

"பேசாம எங்களப் போல எதையும் சேக்காமலே இருந்துருக்கலாம்"

"சேத்து வெச்சுதான் என்ன பண்ணப் போறோம் – போகும்போது கொண்டா போகப் போறோம். ஆமாம் நம்ம மாஜி சி. எம்மை என்ன பண்ணுவாங்க. ஒரு 12 வருஷமாவது உள்ள வைக்கணும்... என்ன நான் சொல்றது?"

– அவர்கள் கருத்துடன் திசை மாறுகிறார்கள். கோபாலன் மௌனமாய் ஒதுங்கி அமருகிறார். திரும்பவும் அவர்கள் சிறிதுநேரம் கழித்து ஃபைனான்ஸ் புராணம் பாடக்கூடும். கோபாலனை இளிச்சவாயனாக்கக் கூடும். இதற்காகவும், பணம் காரணமாகவும் இத்தனை துவண்டு போவது, சரியில்லை என்பது போல ஒரு ஞானம்! ஆனால் முடியவில்லையே... நாம் அடிமைப் படுத்த வேண்டிய ஒன்றுக்கு நாம் அடிமையாவதா?



அடுக்கடுக்காக கேள்விகள் அவருக்குள்.

'யாரை எந்த ஜென்மத்தில் ஏமாற்றினோமோ – இன்று இழந்து நிற்கிறோம். இழந்தது திரும்ப வரலாம் – வராமலும் போகலாம்' ஆனால் அதன் நிமித்தம் இப்போது இழந்து கொண்டிருக்கும் விஷயங்களை பார்க்கும் போது கோபாலனை அது என்னவோ செய்கிறது. பின்னாலே பணம் வரும் என்பதற்காகவே மருமகள் இது வரை அன்பு காட்டி வந்திருக்கிறாள். மகனும் அப்படித் தான் தெரிகிறான். எப்பொழுது இவன் பணம் தொலையும் என்று காத்திருந்த மாதிரி அண்டை அயலிடம் அபிப்ராயங்கள். திண்ணைத் தூங்கிகள் எல்லாம் அபிப்ராயம் சொல்லும் அளவுக்கு நிலைமையோ போய் கொண்டிருக்கிறது. போலீசின் அனுபவத்தை நினைத்தாலோ மிளகாயை பூசிக் கொண்டது போல் எரிச்சல் மண்டுகிறது.

"ஒரு பத்து பர்சன்டை தரேன்னு சொல்லுங்க... எதையாவது பண்ணி பணத்தை வாங்கித்தர பாக்கறோம். – கான்ஸ்டபிள் காதைக் கடித்தது கடூரமாய் நினைவில் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

அனைத்துக்கும் மேலாக அந்த இழப்பால் இத்தனை ஒடிந்து ஓரங்கட்டிக் கொண்டு மௌனியாகி விட்டோமே...?

நான் சம்பாதித்தது – நான் இழந்ததும் படுத்தி விட்டதே... படுத்திக் கொண்டிருக்கிறதே... ச்சை.. இவ்வளவு பலவீனமானவனா நான்?

சுய பச்சாதாபமும், கழிவிரக்கமும் யாருக்கு வேண்டும்?

நெடுநேர சிந்தனைக்கு பிறகு நிமிறுகிறார் கோபாலன்.



இனி அந்த நாற்பதை பற்றி நினைத்தே பார்க்கக் கூடாது.. அது வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி – ஆனால் வரவேண்டியது வந்து விட்டதைப் போல ஒரு நினைப்பு.

அதுதான் எதற்கும் கலங்காத திடசித்தம்.

உதறி விட்டுக் கொண்டு மிடுக்காக நடக்கிறார். முன் போன்ற சோர்ந்த நடையில்லை.

பழையபடி காரேஜ் ஒர்க் ஷாப்பிற்கே போய் வேலை பார்க்க வேண்டியதுதான். என்ன அரைச் சம்பளம் தருவான்.

பரவாயில்லை. ஏதோ வண்டி ஓடும்.

வீட்டில் மருமகளின் போக்கையும் வேறு விதமாக சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

கொடுக்கின்ற பணத்துக்கு சோறு போட்டால் போதும் என்று சொல்லி விட வேண்டும். காபி, மாலையானால் பஜ்ஜி போண்டா சமாச்சாரங்கள், ஈஸி சேரில் மல்லாந்தபடி கேபி டி.வி பார்ப்பது என்று சகல ருசியான விஷயங்களுக்கும் 144 போட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

மருமகளிடம் மகத்தான ஆச்சரியம்.

"உங்களுக்கு என்ன வந்துச்சு.. அந்த பணத்தை எப்படி திருப்பி வாங்கறதுன்னு பாக்காம திரும்ப வேலைக்கு போறேன்னுகிட்டு. அதுக்கு வர்ற வட்டியும் – இப்ப நீங்க வாங்கப் போற சம்பளமும் ஒண்ணுதான் தெரியும்ல.."

தெரியும் என்கிற மாதிரி தலையாட்டி விட்டு வேலைக்கு கிளம்புகிறார். முடிவெடுத்தது போல பசிக்கு வயிற்றை நிரப்பிக் கொள்வதோடு சரி..

– இரவில் படுக்கை கூட திண்ணையில்தான்.

– அவளாக வெளியே தள்ளி விடும் முன் தானாக வந்து விடுவது நல்லதல்லவா?

எதிர்த்து உரிமை பற்றி பேசி, பாசம் பற்றி, மதிப்பு மரியாதை பற்றியெல்லாம் பேசி எதைப் பார்க்கப் போகிறோம்?

மூச்சு விடாதபடி ஒருவகை சத்யாக்கிரகம் நடத்துபவரை மருமகளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

வெளியே இருந்து வரும்போது முடிந்த அளவு காய்கறி, பழம் என்று வாங்கி வந்து விடுகிறார். பதிலுக்கு ஒரு வாய் காபி என்று கேட்டு குடித்து விடுவதில்லை.

உள்ளே கேபிள் டிவி ஓடிக் கொண்டிருந்தாலும், திண்ணையில் விசிறிக் கொண்டு வானத்து நட்சத்திரம் பார்ப்பது கௌரவமாக இருக்கிறது.

யாராவது பணம் பற்றி பேசினாலும் பதிலுக்கு 'அது வரும்போது வரட்டுமே' என்கிற ஒரு வரி பதில்.

போலீஸ் ஸ்டேஷன் பக்கம் கூட போய் நெடு நாளாகி விட்டது.

இப்போதைய போக்கும் செயலும் திடமாக இருப்பதாகப் படுகிறது. நிறைய விஷயங்களை ஜெயித்த பல வீரனாக ஒரு வகை உணர்வு உள்ளுக்குள் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

நாற்பதாயிரம் ஏதோ ஒரு வகையில் தந்த ஞானம் இது.

அது இருந்தால் கூட இத்தனை திடசித்தம் வாய்த்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

முன்பெல்லாம் மூச்சுக்கு முன்னூறு முறை பிலாக்கணம் படிக்கும் மருமகள் கூட இப்போது மாமனாரிடம் மரியாதை வயப்பட்ட மாதிரி தெரிகிறாள்.

"உங்கப்பா என்னங்க... தன்னைத்தானே தண்டிச்சுகிட்டு? பாக்கறவங்க என்னைல்ல கொடுமைக்காரியா நினைப்பாங்க. தினம் காபியாவது குடிக்கச் சொல்லுங்க. வயசாயிட்டாலே ரொம்பதான் ரோஷம் போல" – உள்ளே முணு முணுக்கும் மருமகள் எதிரில் இப்போது நல்ல நிமிர்ந்த சிரத்தோடு அழியா புன்னகை முகத்தோடு கோபாலன்.

"இதோ பாரும்மா நான் ரோஷக்காரனா இருந்திருந்தா உன் கையால சாப்பாடே வேண்டாம்னு சொல்லியிருப்பேன். அப்படியெல்லாம் இல்லை. பேராசையாலையோ இல்லை புத்தி கெட்டுப் போன தாலையோ பணத்தை தொலைச்சிட்டேன். அதுக்கு ஒரு தண்டனையாதான் நான் என்னை சுருக்கிக்கறதா நீ நினைக்கணும். இப்படி இருக்கறதும் நல்லாதான் இருக்கு. எனக்கு துளிகூட வருத்தமேயில்லை. போய் வேலைய பார்."

– கோபாலன் பேச்சு அவளை என்னவோ செய்கிறது. பதற்றமில்லாத, புன்னகை வதனத்துடன் பொய்க்கலப்பில்லாத அவரின் அந்த சுய விமர்சனம் மனதை கொத்துகிறது.

"மாமா.. நீங்க ரொம்ப மாறிட்டீங்க." என்கிறாள்.

"ஆமாம்மா.. அந்த பணம் என்னை மாத்திடிச்சி." – இது அவர்.

"ஆமாம் மாமா.. ஆனா இப்பதான் நீங்க ரொம்ப கம்பீரமா தெரியறீங்க. பணம் இருந்தப்ப கூட இத்தனை நேர்த்தியை பேச்சை உங்ககிட்ட நான் பார்த்ததில்லை."

"ஆமாம்மா.. இந்த ஞானத்துக்கு நான் கொடுத்த விலைதான் நாப்பதாயிரம்."

"கரெக்ட் மாமா– பணத்துக்குள்ள நாம இருக்கறதுக்கும் நமக்குள்ள பணம் இருக்கறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. நானும் அதை இப்ப உங்க மூலமா உணர்றேன். அது சரி – அந்த பணம் திரும்ப கிடைச்சுடும் போல தெரியுதே இனி என்ன செய்யப் போறீங்க? வேலைக்கு போகப் போறீங்களா இல்லை...?"

"கட்டாயம் போவேன். சாகற நாள் வரை யாராவது வேலை கொடுத்தா செய்துகிட்டே இருக்கணும். அப்பதான் இப்பல்லாம் மதிப்பு! இல்லேன்னா நம்ம கிட்ட இருக்கற பணத்துக்குதான் மதிப்பு. நமக்கு இல்ல.."

"அதனால அந்த பணத்தை யாருக்காவது நன்கொடையா கொடுத்துடப் போறீங்களா?"

– பாய்ச்சலாக, அதே சமயம் ஆழம் பார்க்கிற மாதிரி வார்த்தைகளை போடுகிறாள். அவளிடம் நிறைய எதிர்பார்ப்பு இருப்பதும் இமைத் துடிப்பில் தெரிகிறது.

"ஆமாம்மா.." – கோபாலன் இப்படிச் சொல்லி மேலும் அதிர்ச்சி மூட்டுகிறார்.

"யாருக்கு?" – பதில் வேகம் மாலாவிடம்.

"உன் புருஷனுக்குதான்..." – கோபாலனின் பதிலில் மாலா முகத்தில் ஆச்சரியமாயும் மகிழ்ச்சியாயும் உணர்வலைகள்.

"நன்கொடை தர நான் ஒண்ணும் பெரிய காசுக்காரன் இல்லை. இருந்தும் தரேன்னா அதுக்குக் காரணம் இருக்கு. பணம் இல்லாம வாழ இப்ப நான் பழகிட்டேன். ஆனா நீங்க அப்படி இல்லை. என் ஞானம் உங்களுக்கு வரும்னும் எதிர்பார்க்க முடியாது. ஆகையாலதான் அந்த பணத்தை உங்களுக்கே தந்துடலாம்னு இருக்கேன்.

அதுக்காக உன் அன்புலையும், பாசத்துலையும் இப்ப இருக்கற ரேஷன் அளவை நீக்கி தாராளத்துக்கு மாறிடாதேம்மா.

ஏன்னா நான் இப்ப பணத்த மட்டுமில்ல, போலித்தனங்களையும் வெறுக்கறேன்."

பேசிவிட்டு திண்ணையை நோக்கி நடப்பவரை விக்கித்து வெறிக்கிறாள் மாலா. ✦

# சொன்னது சரிதானா?

உசிலம்பட்டி சிசுக்கொலைகளைப்போல இன்னொரு கிராமத்தில் நடப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக பத்திரிகைகளில் பரபரப்பாக பேசப்பட்டது. சட்டத்தின் உதவியுடன் அவர்களை தண்டிக்கலாம். ஆனால், சில ஆண் ஆதிக்கவாதிகளால் தினம் தினமும் அணுஅணுவாக உயிரை விட்டுக்கொண்டிருக்கும் எத்தனையோ பெண்களை எதைக் கொண்டு எப்படிக் காப்பாற்றுவது? சந்தோஷத்தை சந்திக்கும் முன்னரே சவக்குழிக்குள் சென்று விடும் பெண்கள்தான் எத்தனை பேர்? பெண்களை வைரத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். சரியான முறையில் பட்டைத் தீட்டப்பட்டால் அது அழகாய் ஒளிர்ந்து விலை மதிப்பு மிக்க பொருளாகிறது. அதையே பொடியாய் நுணுக்கி வாய்க்குள் போட்டுக் கொண்டால் கொடிய விஷமாகிறது. ஒரு பெண் வைரமாய் ஜொலிப்பதும் விஷமாய் மாறுவதும் ஆண்கள் கையில்தான் இருக்கிறது. ஆனால் இதை ஆண்கள் எந்த காலத்திலும் சரியாய் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

உதாரணத்திற்கு சித்தர் பாடல்களை எடுத்துக் கொள்ளலாம். சமுதாயத்திலிருந்து சற்றே ஒதுங்கி நின்று, சமூகத்தின் மூட பழக்க வழக்கங்களையும், கண் மூடித்தனமான கொள்கைகளையும் எதிர்த்து நின்ற சிந்தனைச் சிற்பிகள் சித்தர்கள். அற்புதமான மருத்துவ முறைகளையும், யோக நெறிகளையும் உலகிற்கு கொடுத்தவர்கள் சித்தர்கள். ஆனால், பெண்களைப் பற்றிப் பாடும்போது......? 'ஊத்தைச் சடலமடி, உப்பிருந்த பாண்டமடி' என்று பொதுவாய் சொன்னதுடன் நின்றிருக்கலாம். எழுதுகோலே சற்று நாணித் தலைக் குனியும்படி பெண்களை இழிவாக வருணித்தும். கேவலப் படுத்தியும் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளதைக் காணும்போது, 'தாங்களும் ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தவர்கள் தானே' என்பதை இவர்கள் எப்படி மறந்து போனார்கள் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

செண்டு முலைவண்டு விழிகொண்ட
தோகையைச்
சித்தப்பால் விழுங்கியே சீபென்
றொருத்தம்
குண்டுகட் டெருமை யேறுங் கூற்றுப்
பருந்தைக்
கொன்று தின்றுவிட்டோமென் றாடாய்
பாம்பே.

இப்படிப் பெண்ணை எமனென்றும், பருந்தென்றும் சொல்பவர் பாம்பாட்டிச் சித்தர்.

பெண்ணை ஏசும் பட்டினத்தாரோ தன்னைப் பெற்றதாய் இறந்தபோது,

அரிசியோ நானிடுவே னாத்தாள்
தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் -
ருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வமே
திரவியப்பூ
மானே யென அழைத்த வாய்க்கு

- என்று கதறியழுவதால் தாய்மையை போற்றுவது சிறிது ஆறுதல் தருகிறது. இப்படி இடைக்காட்டு சித்தர், அகப்பேய் சித்தர் குதம்பைச் சித்தர், சிவவாக்கிய சித்தர், அழுகணிச்சித்தர் எனப் பலரின் பாடல்களிலும் பெண்களைப் பற்றி பேசியிருந்தாலும் பட்டினத்தாரும், பாம்பாட்டி சித்தரும்தான் அதிகமாக பாடியிருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் பேசுவது பொது மகளிரைப் பற்றி மட்டும்தான் என்பது ஒருசாரார் விவாதம். சங்கப் பாடல்களைப் பார்த்தோம் என்றால் இப்படிப்பட்ட பெண்களுக்கென நாட்டில் ஒரு சிறு பகுதியையே ஒதுக்கி வைத்திருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. அப்பெண்களின் பரிதாப நிலைக்குக் காரணம் ஆண்கள்தானே. இதைவிடக் கொடுமை என்னவென்றால் சில குடும்பங்களில் பிறக்கும் சில பெண்களை சிறுவயதிலேயே சாமிக்கு காணிக்கையாக்கி(?) அவர்கள் வளர்ந்ததும் ஆசாமிகள் அனுபவிக்கும் 'தேவதாசி' என்ற முறை அன்று ஆதரிக்கப்பட்டதுதான். இப்படிக்கூட ஒரு காலகட்டத்தில் நம் சமுதாயத்தில் பழக்கங்கள் இருந்திருக்கின்றன என்று நினைக்கும்போது நம் கண்கள் சிந்துவது கண்ணீரல்ல செந்நீராகத்தான் இருக்க முடியும். மேலும் ஒரு மன்னனுக்கு மனைவிகள் எத்தனை வேண்டுமானாலும் இருக்கலாம் என்கிற போது நாட்டு மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? போர்க்களத்தில் ஒரு நாட்டை இன்னொருவன் வென்று விட்டான் என்றால் அவனது அடுத்த இலக்கு தோற்ற நாட்டுப் பெண்கள் மீதுதான்.



அதிகாரத்திற்கும், ஆடம்பரத்திற்கும் பேராசைப்படும் அரசர்கள்! 'வீரம்' என்கிற பெயரால் மூளைச்சலவைச் செய்யப்பட்டு அரசர்களின் சுயநலத்திற்காக தங்கள் உயிரை விடத்துணியும் ஆண்கள்! இவர்களது இன்பத்திற்காக மட்டுமே படைக்கப்பட்ட பதுமைகளாகக் கொண்டாடப்பட்ட பெண்கள்! சமுதாயம் இப்படியாயிருக்கும் போது ஒட்டுமொத்தமாக சமுதாயத்தைக் குற்றம் சாட்டாமல் ஒரு தலைப்பட்சமாகப் பெண்களைக் குறை சொல்வது எந்தவிதத்திலும் நியாயமில்லையே. பல வழிகளில் மனதை அடக்கத் தெரிந்த சித்தர்களுக்கு ஏனோ இன்னொரு மனதை புரிந்து கொள்ளத் தெரியவில்லை. அதனால்தான் பெண்ணை பேசும் தெய்வமாகப் போற்றிய வள்ளுவனையும், கம்பனையும், பாரதியையும் இன்று நாட்டு மக்கள் மேடைகளில் பாராட்டி முழங்குவதுபோல சித்தர் பாடல்களைப் பற்றி சிந்திப்பதில்லை. எழுத்தோ, பேச்சோ, இலக்கியமோ எதுவாக இருந்தாலும் சரி, பெண்ணின் துயரை உணர்ந்தவர்களுக்கு மட்டுமே வருங்கால சரித்திரத்தில் மிக நல்ல இடமிருக்கும் என்பதை நிரூபித்து விட்டன இந்த சித்தர் பாடல்கள். ✦

– இந்திரா தேவராஜ்

**பெங்களூரின் அழகான, அமைதியான மல்லேஸ்வரத்தில் முயல்கள் துள்ளித் திரிந்து ஓடும் பச்சைப் பசேல் புல்வெளியின் நடுவே நடிகை சரோஜாதேவியின் பங்களா. முன்புற ஹாலில் சரோஜாதேவி பரிசு வாங்கும் விதவிதமான படங்கள். இந்திரா காந்தியுடன், சிவாஜி கணேசனுடன், இன்னும் பெரிய, பெரிய தலைவர்களுடன் எடுத்துக் கொண்ட விதவிதமான 'ப்ளோ அப்கள்'... சிரித்துக் கொண்டே 'அபிநய சரஸ்வதி' நம்மை அன்புடன் வரவேற்கிறார். அவருடன் ஒரு மினி பேட்டி...**

# என்றும் மாறா ரோஜா!



**ஆண், பெண் சமத்துவம் பற்றி முந்தைய காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இப்ப எத்தனையோ முன்னேறிடுச்சு இல்லையா?**

நிச்சயமா இல்லை. இப்பக்கூட விதவைன்னாலே நம்ம சமுதாயத்திலே அதுக்கு தனி ட்ரீட்மெண்ட் தான் கொடுக்கறாங்க. எனக்குத் தெரிஞ்ச ஒரு famous டைரக்டர் தன்னோட அம்மா புருஷனை இழந்து விதவையாகி விட்டார் என்கிற காரணத்தினால் சினிமா பட பூஜையின்போது அவங்களை ஒதுங்கி வேறு பக்கமாய் போய் நிற்கச் சொன்னார். எனக்கு அப்ப ரொம்ப மனசு கஷ்டமா இருந்தது. தன்னோட அம்மாவையே அவர் அப்படிச் சொல்றப்ப, அப்புறம் என்ன இருக்கு?

இதெல்லாம் இன்னும் மாறவே இல்லை. மாறிடுச்சுன்னு நாம பொய்யா நினைச்சுக்கிட்டிருக்கோம்.

**பெண் விடுதலை பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க மேடம்?**

இந்தப் பேச்சுக்கே இடமில்லை. நிச்சயமா இந்தியாவுலே அது எந்தப் பெண்ணுக்கும் கிடைக்கவே கிடைக்காது.

**பொதுவா எல்லோருக்குமே ஒரு எண்ணம். எல்லா சினிமா நடிகைகளின் வாழ்வுக்குப் பின்னாலேயும் ஏதோ ஒரு சோகம் மறைஞ்சிருக்கும்னு நினைக்கறாங்க. இது உண்மையா?**

எஸ்.சோகம் இருக்குதான். ஆனா சினிமா நடிகைகளுக்கு மட்டுமில்லை. எல்லார் வாழ்விலேயும் ஏதோ ஒரு சோகம் திரை மறைவில் இருக்கத்தான் செய்யுது. நாங்க எல்லாம் Popular ஆக இருக்கறதாலே அது வெளியே வந்துடறது. இப்போ கூட நான் ஷூட்டிங்கிலே தவறிக் கீழே விழுந்துட்டா 'சரோஜாதேவி தடுக்கி விழுந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார்' என்று பெரிசா பேப்பர்லே போட்டுடறாங்க.

டைவர்ஸ், இரண்டாவது கல்யாணம் செஞ்சுக்கறது எல்லாம் கூட அப்படித்தான். நிறைய சினிமா நடிகைகள், ஏன் முன்பே கல்யாணம் ஆன ஆண்களையே திருமணம் செஞ்சுக்கறாங்க? என்று கிண்டலும், நக்கலுமா கேள்வியை எழுப்பறாங்க. ஆனா சினிமா பீல்டிலே இல்லாத நிறைய பெண்களும் இப்படி செஞ்சுக்கறாங்க. அவங்களை யாரும் கேள்வி கேட்கறதில்லை.

சினி பீல்டிலே இருக்கறவங்களைப் பத்தி கண்டபடி பேசறதை எல்லோரும் விட்டுடணும்; அவங்களுக்கும் பீலிங்ஸ் உண்டுனு புரிஞ்சுக்கணும்.

ஒரு டாக்டர், டீச்சர், ஸ்டெனோ மாதிரி இதுவும் ஒரு Job. that's all.

**முன்பெல்லாம் நீங்க நடிச்ச காலத்திலே திறமைக்கு மட்டுமே மதிப்பு கொடுத்தாங்க. இப்ப நிறைய நடிகைங்க ரொம்ப 'செக்ஸி'யா டிரஸ் பண்ணிகிட்டு வர்றாங்க. இது தேவைதானா?**



சினிமாவுல மட்டும் இல்லை. எல்லாத்திலேயுமே 'மாற்றம்' என்பது வந்துகிட்டுதான் இருக்கு. நம்ம பாட்டி இருந்தது மாதிரி நம்ம அம்மா இல்லை. நம்ம அம்மா இருந்தது மாதிரி நாம் இப்ப இல்லை. நாம இருக்கறது மாதிரி நம்ம பொண்ணுங்க இருப்பாங்களா? 'We can't say.' இது ஒரு trend. உலகத்திலே எதிலேயுமே, எல்லாத்துலேயுமே மாற்றம் தொடர்ச்சியா வந்துகிட்டுதான் இருக்கு. அதுமாதிரிதான் சினிமாவுலேயும்.

**உங்க காலத்திலே 'டப்பிங்' என்பதே கிடையாது. இப்போ எதற்கெடுத்தாலும் டப்பிங். இதுபற்றி.....**

உண்மைதான். முன்பெல்லாம் ஒரு படத்தில் நடிக்கணும் என்றால் ரொம்பக் கஷ்டப்பட்டு அந்த மொழியை கத்துப்போம். அப்பத்தான் நாங்க உண்மையாகவே involve ஆகி நடிச்சது மாதிரி ஒரு பீலிங் இருக்கும். இப்ப, பல படங்கள்லே டப்பிங்தான். ஒரு அட்சரம் கூடத் தெரியாம அந்த மொழியிலே நடிச்சிட்டுப் போயிடறாங்க. ஆனா இது இப்போதைய சூழ்நிலை. தப்புன்னு சொல்ல முடியாது.

**சினிமாவுக்கு வந்து மிகப்பெரிய நடிகை ஆயிட்டீங்க. இது நீங்க விரும்பித் தேர்ந்தெடுத்த துறையா அல்லது சூழ்நிலையின் காரணமாக சினிமாவுக்கு வந்தீங்களா?**

நோ. நோ. சினிமாவை நான் விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை. It is my fate. என் family சூழ்நிலையின் காரணமாகத்தான் நான் சினிமாவிற்கு வந்தேன்.

ஆனா சினிமாவுக்கு வந்தபிறகு ஒரு involvement டோட, நல்ல பெயர் வாங்கணும் என்கிற வெறியோட உழைச்சேன். உழைப்புன்னா சாதாரண உழைப்பு இல்லை. 22 மணி நேரம் சாப்பாடு, தூக்கம் எதுவுமே இல்லாம தொடர்ச்சியா வேலை செஞ்சிருக்கேன். ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் இந்தப் பெயர் வந்தது. ஆனா நான் இப்ப இத்தனை வசதியோட, புகழோட இருப்பதற்குக் காரணம் சினிமாதான். அதை நிச்சயமா மறுக்க முடியாது.

**நீங்கள் நடித்தபொழுது ஷூட்டிங் ஸ்பாட்டில் நடந்த சுவையான அல்லது மறக்க முடியாத சம்பவம் ஏதாவது சொல்ல முடியுமா?**

ம். நிறைய இருக்கு. எதைச் சொல்றதுன்னு தெரியலை. ஒரு தடவை ஷூட்டிங்கின்பொழுது குதிரை சவாரி செஞ்சு கீழே விழுந்து நல்லா அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருந்தேன். இப்பக்கூட அதன் காரணமாகத்தான் எனக்கு Back Pain இருக்கு.

அப்புறம், பாலும் பழமும் பார்த்துட்டு சிவாஜி சாரே, 'என்னை விட நீ நல்லா நடிச்சிருக்கே' என்று சொன்னார்.


சினி பீல்டிலே சிவாஜி சார் ஒரு உயர்ந்த நடிகர். அவரே இது மாதிரி என்கிட்ட சொன்னப்போ எனக்கு ரொம்ப ரொம்ப பெருமையா இருந்தது.

இன்னும் எத்தனை, எத்தனையோ. அழுகை, சிரிப்பு, சந்தோஷம், துக்கம் என்று நவரசமும் கலந்ததுதான் எங்கள் வாழ்க்கை!

என்றும் மாறா புன்சிரிப்புடன் 'அபிநய சரஸ்வதி' எழுந்து நமக்கு விடைகொடுக்க.... ஒரு நடிகையின் மறு பக்கத்தைப் படித்த திருப்தியுடன், நாமும் விடைபெற்றோம். ✦

**- உமா ஜானகிராமன்**

# இசைத்ததில் இசைவத்தது!



### சுநாத சௌந்தர்யம்

**ச**ங்கீதா காஸெட் நிறுவனத்தினர் எஸ். காயத்ரி அவர்களின் 'சுநாத சௌந்தர்யம்' என்கின்ற ஒலி நாடாவினை வெளியிட்டுள்ளன. காயத்ரி தன்னுடைய இனிமையான இசையில் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் உருப்படியான ஸ்ரீ மஹாகணபதி- கௌள ராகத்தில் ஆரம்பித்து ஊத்துக்காடு வெங்கட சுப்ப அய்யர், தியாகராஜர், அம்புஜம் கிருஷ்ணா, பாரதியார், சூர்தாஸ்பிஜன் - ஆகியோரின் உருப்படிகளைப் பாடியுள்ளார்.

### அச்சுதானந்தம் :

**க**லாவர்த்தனி வழங்கும் ஒலி நாடாவான 'அச்சுதானந்தம்' என்கிற அமுதினை வழங்கியவர் சுபா கணேசன் அவர்கள். காலஞ்சென்ற 'இசை மேதை' எம்.எல்.வி. அவர்களின் சீடராவார். தன்னுடைய இனிமையான குரலில் அச்சுதானந்தத்தை வழங்கியுள்ளார். மும்மூர்த்திகளின் உருப்படிகளுடன் பாபநாசம் சிவன், புரந்தரதாஸர், அன்னமாச்சார்யா ஆகியோரின் உருப்படிகளையும் வழங்கியுள்ளார்.





### INRECO வழங்கும் Kiddy's Favourite Rhymes

**I**NRECO நிறுவனத்தினர் சாமுவேல் அவர்களின் இசையில் குழந்தைகளுக்கென சில நர்சரி ரைம்ஸ், பிறந்தநாள் இசையினை சுஜாதா அவர்களின் மென்மையான குரலில் ஒலிநாடாவை வழங்கியுள்ளனர். ஜானகி சபேஷ் அவர்களின் அழகிய விரிவுரையுடன் குழந்தைகள் எளிதில் அறிந்து கற்கக்கூடியபடி அருமையாக அமைந்துள்ளது. குழந்தைகள் லைப்ராரியில் அவசியம் வைத்துக்கொள்ள வேண்டிய காஸெட். லிவெயன் சாமுவேல் வித்தியாசமான இசை குறிப்பிடத் தக்கது.

### Fascinating Fantasy

**E**L.V. Audios நிறுவனத்தினர் லலிதா, நந்தினி சகோதரிகளின் சுகமான வயலின் இசை காஸெட்டினை வெளியிட்டுள்ளனர். கணபதி சச்சிதானந்த ஸ்வாமி அவர்களுக்கு இந்த வயலின் இசையினை சமர்ப்பித்துள்ளனர். 'Fascinating Fantasy' யில் தியாகராஜர், முத்துஸ்வாமி




தீக்ஷிதர், பட்டணம் சுப்ரமண்ய அய்யர், சச்சிதானந்த ஸ்வாமி ஆகியோரின் உருப்படிகளை வழங்கியுள்ளார்.

### ஸ்ரீராம் கங்காதரன் :

**ஸ்ரீ**ராம் கங்காதரன் சமீபத்திலுள்ள சிறந்த இளம் பாடகர்களில் ஒருவராவர். நல்ல சாரீர வசதிப் படைத்தவர். 'இசைமேதை' மறைந்த திரு. ஜி.என்.பி. அவர்களின் வழியில் அருமையாகப் பாடுகின்றார்



இளைய தலைமுறையில் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக் கொண்டுள்ளார். அவர் சர்வலகுவில் கல்பனா ஸ்வரங்களில் பாடும்போது கேட்பவர்களை ஒரு தனி உலகத்திற்கு அழைத்துச் செல்கிறார். நிச்சயமாக முன்னணிப் பாடகராக வருவதற்கான பல அம்சங்கள் அவருடைய இசையினில் குடி கொண்டிருக்கிறது. ஏவி.எம். ஆடியோ நிறுவனத்தினர் வழங்கியுள்ள ஸ்ரீராம் கங்காதரன் அவர்களின் இசை - யாவரும் கேட்டு மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டிய ஒரு காஸெட். அவர் தேர்ந்தெடுத்துள்ள எல்லா உருப்படிகளும் மிக இனிமையாகவும் ரசிக்கும்படியும் அமைந்துள்ளன ஒவ்வொரு உருப்படியும் ஒவ்வொரு தனித்தன்மையுடன் உள்ளது.

### கர்நாடக சங்கீதம் - லலிதா கிருஷ்ணன்

**ரே**வதி என்டர்ப்ரைசஸ் வழங்கும் லலிதா கிருஷ்ணன் அவர்களின் கர்நாடக சங்கீத இசைக்கு பக்க வாத்தியமாக விட்டல் ராமமூர்த்தி வயலினும், கணபதிராமன் மிருதங்கமும் வாசித்துள்ளனர். ஸரஸீருஜா - நாட்டை ராக உருப்




படியில் ஆரம்பித்து சுத்த சாவேரி, ரஞ்ஜனி, பிந்து மாலினி, மோஹனம், போஹாக் ராகங்களில் உருப்படிகளை பாடியுள்ளார். லால்குடி ஜெயராமன் அவர்களின் மதுவந்திதில்லானாவை மிகவும் அருமையாகப் பாடி முடித்திருக்கின்றார்.

### என் இதய குடிலினில்

**ல**வி காசெட் நிறுவனத்தினர் கிறிஸ்தவ பாடல்களை மெலோரித் அவர்களது இசையமைப்பில் வழங்கியுள்ளார்கள். பாடல்களின் எளிமையான வரிகளுக்குச் சொந்தக்காரர் - ரெமி, மின்மினி, சுஜாதா, சிந்து,






கிருஷ்ணராஜ் மற்றும் மெலோரித் ஆகியோரது குரல்களில் பத்துப் பாடல்கள் அடங்கிய இந்த காசட் அட்டையின் உட்புறத்தில் முழுப் பாடல் வரிகளும் அச்சிடப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பம்சம்.

### இயேசுவே ஜீவன்

**மே**க்னா சவுண்ட் காசட் நிறுவனத்தினரின் சமீபத்திய வெளியீடு, கிறிஸ்துவ பாடல்களை அழகிய தமிழில் இயற்றியிருப்பவர் - அருள் அமிர்தராஜ அவர்கள். மனோ, மேரி விர் ஜீனியா, ஹேமா ஜான், மெலோரித் ஆகியோரின் இனிய குரலில் பாடல்களுக்கு மெலோரித் அவர்கள் சிறப்பாக இசையமைத்திருக்கிறார். ✦

- சாந்தா சுப்ரமணியம்


விற்பனையாகிறது....

நல்ல காலம்

ஜோதிட தெய்வீக மாத இதழ்



- பால ஜோதிடரின் அணுகு முறையில் மாத பலன்களும், ஆராய்ச்சி கட்டுரையும்..
- ஸ்ரீகவியின் 'ஸ்ரீ அரவிந்த அன்னை' கட்டுரைத் தொடர்
- கடலங்குடி கே.சரஸ்வதி 'கேள்வி - பதில்கள்'
- இலவச கம்ப்யூட்டர் ஜாதகம்
- ஜோதிடத்தில் தாய்மார்களுக்கென தனிப்பகுதி
- மற்றும் பிரபல ஜோதிடர்களின் அலசல்களில் வித்தியாசமான கோணத்தில்...

இது ஒரு 'பெண்மணி' வெளியீடு

EMERALD CORAL

CAT'S EYE SAPPHIRE DIAMOND PUSHPARAGAM GOMETHAKAM

## யார் அந்த அதிர்ஷ்டசாலி

**பெரியவர்களா? -** முதல் பரிசு 2-ம் பரிசு 3-ம் பரிசு (ரூ.10,000, ரூ.7000, ரூ.3000

**குழந்தைகளா? -** (30 மாணவர்களுக்கு ரூ.700 மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்கள். L.K.G. முதல் +2 வரை)

**இப்பரிசுத் திட்டம் ரூ.201/- செலுத்தி ஜாதகம் பார்ப்பவர்களுக்கு மட்டுமே!**

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் தீர்வு நிச்சயம் உண்டு. அவ்வாறு ஏற்படும் பிரச்சனைகளை அவர்களின் ஜாதகத்திற்கு ஏற்றாற்போல் எண் கணிதம், கைரேகை, ஜாதகம் முதலியவைகளைக் கொண்டு பல கோணங்களில் ஆராய்ந்து கைதேர்ந்த ஜோதிடர்களால், ஜீவனுள்ள அதிர்ஷ்டக் கற்களை "ஜெய்ப்பூர் ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ்" பரிந்துரை செய்கிறது.

**முக்கிய அறிவிப்பு**

முக்கியமாக மார்ச் 97 முதல் ரூ.201/- செலுத்தி காசெட் மூலமாக, நாங்கள் பரிந்துரைச் செய்யும் அதிர்ஷ்டக் கற்களை அணிந்து ஒரு வருடத்திற்கு பின் பிரச்சனைகள் தீரவில்லை என்று கருதுபவர்களின் கற்களை சிறிதளவு தள்ளுபடி செய்து நாங்களே எடுத்துக் கொள்கிறோம். இதுபோன்ற சவாலை வேறு யாரும் தர முடியாது. ஏனெனில், நாங்கள் வழங்கும் கற்கள் சுத்தமான, ஜீவனுள்ள அதிர்ஷ்டக் கற்கள் என்பது உறுதி.

● வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டினர் எங்களை நேரடியாக தொடர்பு கொள்வதற்கு விசேஷ E-Mail வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே இனிமேல் தொலைபேசியிலோ கடிதத்திலோ தொடர்பு கொள்ள வேண்டிய அவசியமில்லை. தாங்கள் எங்களை நேரடியாக E-Mail தொடர்பு கொள்வதற்கு 14 யு.எஸ். டாலர்கள் (அ) ரூ.450-ஐ D.D ஆக Mr. Rajendra Kumar M. Metha என்ற பெயருக்கு அனுப்பி தங்களின் எதிர்கால பலன்களை உடனடியாக பெற்றுக் கொள்ளலாம். இதனுடன் ஜாதகம், பிறந்த இடம், பிறந்த தேதி முதலியவற்றையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

**E-Mail Address : punitrm@giasmda. vsnl. net.in**

வெளியூர் அன்பர்கள் தங்கள் ஜாதக நகலுடன் ரூ. 101-க்கு நீங்கள் எந்த ஜாதிக் கற்கள் அணிந்து கொள்ளலாம் என்று மட்டும் சொல்லப்படும். ரூ. 151-க்கு நீங்கள் ஜாதகத்துடன் கேட்கும் ஐந்து கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். ரூ. 201-க்கு உங்கள் வாழ்க்கை முழுவதற்குமான பலன்களும், ஆடியோ காசெட் மூலம் தரப்படும். ஜாதகத்துடன் கொரியர் சார்ஜ் (தமிழகம் ரூ.25, தென் மாநிலங்கள் ரூ.30, வடமாநிலங்கள் ரூ.60) சேர்த்து அனுப்ப வேண்டும்.

Sri Rajendra Kumar M. Mehta.

**JAIPUR GEM'S 'N' JEWEL**

NEAR PANAGAL PARK, OPP. A.R.R. COMPLEX,
52-A, NORTH USMAN ROAD, T. NAGAR, MADRAS - 600 017.
SOUTH INDIA, TAMIL NADU. PHONE : 8253404, PAGER NO. 9632-709074
Working Hours: 10.00 A.M. TO 7.30 P.M. SUNDAY HOLIDAY

On Appointment only

ரூ. 200/- முதல் ஹைதராபாத் முத்துக்கள் பதித்த வளையல்கள் நூற்றுக்கணக்கான டிசைன்களில் விற்பனைக்கு உள்ளது.

RUBY (எல்லா ஜாதி கற்களும் எங்களிடம் கிடைக்கும்.) PEARL

ADVT.

# ஏப்ரல் மாத சிறந்த பெண்மணி!



திருச்சியை சேர்ந்த டாக்டர் ஜெயம் கண்ணனை, மைதிலி சேஷாத்ரி 'சிறந்த பெண்மணி' பகுதிக்கு சிபாரிசு செய்துள்ளார். ஏப்ரல் மாத சிறந்த பெண்மணி ஜெயம் கண்ணனைப் பற்றி, மைதிலி சேஷாத்ரியின் கடிதத்திலிருந்து சில தகவல்கள்....

'வறுமையை நினைத்து பயந்து விடாதே....
திறமை இருக்கு மறந்து விடாதே....'

என்னும் பட்டுக்கோட்டையாரின் வரிகளுக்கேற்ப வாழ்ந்து காட்டும் வாழ்வியல் நிஜம்தான், ஜெயம் கண்ணன்! 'கர்ப்பரட்சகா' கருத்தரிப்பு உதவி மையத்தையும், சென்னையில் ஆண் மலட்டுத்தன்மை பற்றி ஆராய்ந்து மருத்துவம் செய்ய தமிழகத்திலேயே முதன் முதலாக I.C.C.I. கம்ப்யூட்டர் முறையினையும் ஆரம்பித்துள்ளார்.

கத்துக்குட்டி டாக்டர்களே இந்த காலத்தில் நகரத்தில் நர்சிங் ஹோம் வைத்து பணம் பண்ண வேண்டும் என்று நினைக்கும்போது, 15 முறை பதக்கங்களை பெற்ற ஜெயம் கண்ணன், 1970 - ல் நீடாமங்கலத்திற்கு அருகில் உள்ள கிராமங்களில் ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகள் மருத்துவராகப் பணியாற்றினார். மகப்பேறு துறையில் கொடிகட்டிப் பறக்கும் ஹாங்காங்கில், இவர் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். நடுத்தர வர்க்க குழந்தை இல்லாதவர்களின், எட்டாத கனவு, 'டெஸ்ட் டியூப் குழந்தைகள்!' எந்த லாப நோக்கும் இன்றி மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்னும் உயரிய நோக்கில் 'டெஸ்ட் டியூப் பேபீஸ் சென்டரை' திருச்சியில் ஆரம்பித்துள்ளார் ஜெயம் கண்ணன். இப்படி தொடர்ந்து கொண்டிருக்கும் அவரின் சேவை மைல் கற்கள் பலப்பல!

நம் நாட்டில் ஓரளவிற்கு படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையே... என்ற திண்டாட்டம். அதிகம் படித்தவர்களுக்கோ எப்போது 'விசா' கிடைக்கும்? வெளி நாட்டிற்குச் சென்று எவ்வளவு சம்பாதிக்கலாம்....என்னும் எதிர்பார்ப்பு. இந்த நிலையில் அமெரிக்காவில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தும், 'எனக்கு இலவசமாக மருத்துவ படிப்பு கொடுத்த தமிழ்நாட்டிற்கு என் படிப்பு பயனாகட்டும்...' என்று அதை உதறித் தள்ளிய,

'பெண்மணி' தேர்வு செய்த, மனித நேயமுள்ள இந்த 'சிறந்த பெண்மணி'க்கு ரூ.500 மதிப்புள்ள புடவையை வழங்கி கௌரவிப்பவர்கள் 'ராமச்சந்திரா சாரீஸ்' நிறுவனத்தின் உரிமையாளர்கள்!

---

# எல்லாம் தெரிஞ்ச எச்சுமிப் பாட்டி

என்ன பேத்திகளா....

எப்படி இருக்கீங்க? உங்க எல்லாருக்கும் வைத்தியம் சொல்லிட்டிருந்த எனக்கே உடம்பு சரியில்லை...மூக்கு முட்ட ஜலதோஷம்; பானையப் போட்டு உடைக்கறாப்பல இருமல். வேண்டாம் வேண்டாம்னு கதறினாலும் கேட்காம – உங்க தாத்தா ஸ்நோஃபீல்ட் ஐஸ்க்ரீம் பார்லருக்கு அழைச்சிட்டுப் போய் 'பெர்ஷியன் டிலைட்'னு ஒரு வெரைடிய வாங்கித் தந்து சாப்பிட்டாத்தான் ஆச்சுன்னு ஒரே பிடிவாதம்.. (சில சமயத்துல இந்த மாதிரி அன்புத் தொல்லை கொடுத்து திணற அடிச்சிடுவார்) எனக்கும் அல்ப ஆசை. சாப்பிட்டுட்டேன்...தாங்கலைடியம்மா.. வீட்டுக்குள்ளேயே கம்பளிய இழுத்துப் போர்த்திட்டு படுத்துட்டிருக்கேன். என் தம்பி பெண்டாட்டி, சித்தரத்தை இலை, தூதுவளை இலை, துளசி எல்லாத்தையும் வேகப் போட்டு கஷாயம் வச்சுத் தந்திருக்கா. நான் குடிச்சிட்டிருக்கேன். என்னை ஐஸ்க்ரீம் சாப்பிட வச்சு, இப்படி சளியோடயும் இருமலோடயும் திண்டாட வச்சுட்டு, தாத்தா ஜம்முனு கிளம்பி சரவண பவனுக்கு சாப்பிடப் போயிருக்கார்.

பரவாயில்லே, படு..இந்த சாக்குலேயாவது நான் கொஞ்சம் நல்ல சாப்பாட்டை சாப்பிட்டுட்டு வர்றேன்னு என்கிட்டயே ரேக்கிட்டுப் போறார்..

ஹூம்...என்னைப் படுக்கப் போடணும்னே திட்டம் போட்டு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்தாலும் கொடுத்திருப்பார். மனசு முழுக்க கல்மிஷம்....

சரி...அடுத்த மாசம் வட்டியும் முதலுமா சேர்த்து வச்சு எழுதிடறேன்..அப்ப நான் வரட்டுமா.... லொக்கு...லொக்கு...லொக்கு.... ஆசீர்வாதம். லொக்கு..

இப்படிக்கு
**லொக்கு எச்சுமிப் பாட்டி**



தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

# ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்

5 கலர் டிவி

இரண்டு நபருக்கு மோட்டார் சைக்கிள்

10 தங்க வளையல்கள் (1பவுன்)

250 மி.லி. இங் சைஸ் ரூ. 3.16 ஆதாயம்!

10 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1000/-

25 தங்க லாக்கட்கள் 1/2 பவுன்

200 நபர்களுக்கு ஒவ்வொரு வருக்கும் ரூ. 500/-




400 நபர்களுக்கு ஒவ்வொரு வருக்கும் ரூ. 250/-

## உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்ப்பர் - புரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - புரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது, மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல, ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

Write to : **Jyothy Laboratories (UJALA)**, 2- A, Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.

# Dear Music Students!

Yet another Classical Lessons package from

**HMV**

## CARNATIC LESSONS


**(NOTTUSWARA SAHITYA & VARNAMS)**

in 6 Musicassette pack by

## S.RAJESWARI

**(Lecturer in Tamil Nadu Govt. Music College)**


**With Disciples**




Also available other releases of

**S.RAJESWARI**

1. **MARRIAGE SONGS** (Tamil)
2. **BASIC LESSONS** in carnatic music-7 volumes
3. **DIVINE SLOKAS** for **Children**-2 Volumes (Sanskrit)




RPG

HMV

**Cassettes available at all Music Stores**

# இருப்பும் இறப்பும் இறப்பும் இருப்பும்

**கமலா சடகோபன்**

**ஊ**ர்மிளா வேதனையுடன் நெளிந்தாள். காலையிலிருந்து இடுப்பின் இரண்டு பக்கங்களிலும் நரம்பு சுண்டி இழுக்கிறது. இப்பொழுது பளிச்சென்று யாரோ முதுகின் கீழ் பக்கம் அழுத்தினாற்போல வலித்தது

லேடி டாக்டர் கூறியிருந்த தேதி நேற்றோடு போய் விட்டது. இன்று நிச்சயம் பிரசவம் ஆகிவிடும். மெள்ள அந்த அறைக்குள்ளேயே உலாவ ஆரம்பித்தாள்.

உலகத்தில் மற்றப் பெண்களுக்குக் கிடைத்தது போல் இவளுக்கும் தாய்மைப் பதவி கிடைத்து விட்டது. ஆனால் –

இதை அதிர்ஷ்டம் என்று ஏற்றுக் கொள்ள முடியவில்லையே. இவளுடைய அவல வாழ்க்கைக்கு குழந்தை ஒன்றுதான் பாக்கி என்று நினைக்கத் தோணுகிறது.

க்ல்யாணம் தினேஷுடன் முடிந்து இவள் பத்து மாதங்கள்தான் ஆனந்த வாழ்க்கை வாழ்ந்தாள். குறை, கலக்கம், கவலை, குழப்பம் எதுவுமே நிழலாகக் கூட தீண்டாமல், மகிழ்ச்சியை மட்டும் இருவரும் அனுபவித்தனர்.

...இனிமேல் உனக்கு வாழ்க்கையே இல்லை, இப்பொழுதே நன்றாக அனுபவித்துக் கொள் என்பது போல் அந்த பொல்லாத கடவுள் இவளது குறுகிய கால திருமண வாழ்க்கையை வேடிக்கை பார்த்திருப்பார். இவள் தான் புரிந்துக் கொள்ளாமல் தலை கால் தெரியாமல் துள்ளினாள்.

வெறும் நாற்பதே நாட்கள் தள்ளிய போதே அவளது கணவன் தினேஷ் எவ்வளவு உற்சாகத்துடன் கலாட்டா செய்து விட்டான். புதுமையான பெயர்களைத் தேடி எடுத்துக் குறித்துக் கொண்டான்.

ஆண் குழந்தைகளுக்கான பெயர் ஒரு பட்டியல், பெண் குழந்தைகளுக்கான பெயர்களை ஒரு பட்டியல் தயாரித்து அப்பொழுதே எந்த பெயரை தேர்ந்தெடுப்பது என்று அவளிடம் விவாதிப்பான்.

“இதோபாரு ஊர்மி,... ட்வின்ஸ் ஆக இருந்தாக் கூட கவலைப் படாதே... ஒரே கல்லில் ரெண்டு மாங்கா- ஆனா பெண் ஒண்ணு, பிள்ளை ஒண்ணு..னு ரகத்திற்கு ஒன்றாய் இருக்கணும். பிள்ளையார் சுழி, மங்களம் இரண்டும் ஒரே சமயத்தில் இருக்கட்டும்.”

...“ஆசையைப் பாரு!” – என்று ஊர்மிளா பொய் கோபத்துடன் அவனது தலையில் இலேசாக குட்டினாள்.

அவன் எந்த வேளையில் சொன்னானோ, அது பயங்கரமாக பலித்தே விட்டது. இந்த குழந்தை அவளுக்கு முதலும் முடிவுமாக அமைந்து விட்டது.

அவன் அப்படிச் சொல்லி ஒரு வாரத்திற்கெல்லாம், அவனது ஸ்கூட்டரும் லாரி ஒன்றும் மோதி விபத்து பயங்கரமாக ஏற்பட்டது...

ஆஸ்பத்திரியில் மாதக் கணக்கில் கிடந்தான். காயங்கள் எல்லாம் ஆறி விட்டன. தலையில் வெளிக் காயம் ஆறிவிட்டது. ஆனால் –

அவனுக்கு நினைவு மட்டும் தெளியவில்லை. நிரந்தர மயக்கம். எல்லாருக்கும் அவன் இனி செத்தவானாகி விட்டான். டாக்டர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உண்மையை விளக்கி வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்.

இவளுக்கு என்ன குழந்தை பிறந்தாலும், அவனுக்குத் தெரியப் போவதில்லை...

பெற்ற வயிறு குமைந்து எரிய குலுங்கி அழும் வயது முதிர்ந்த பெற்றோர்களின் புத்திர பாசத்திற்காக அவனது கண்கள் திறக்கப் போவதில்லை.

கட்டிலின் அருகில் கட்டிய மனைவி ஒருத்தி அவனது மூடிய கண்களை, ஏக்கத்துடன் ‘திறக்காதா?’ என்று பார்த்துக் கொண்டு காத்திருப்பதை அவன் உணரப் போவதில்லை.

ஏனெனில் அவனது மூளை செத்து விட்டது. அவன் சாகவில்லை...

ஊர்மிளாவின் தாய் கௌரி அவளது அறைக்கு வந்தாள். “ஊர்மிளா? ஏன் உலாத்திண்டிருக்கே? வலி ஆரம்பிச்சுடுத்தா?”...

“ஒரு மாதிரியா இருக்கும்மா... இந்த பிரசவத்திலே எனக்கு ஏதாவது ஆனாலும் நீ வேதனைப் படாதே. என்னுடைய அவல வாழ்க்கைக்கு ஒரு விடிவு கிடைச்சதா நீ மனசைத் தேத்திக்கோ..”

“என்னைக் கொல்லாதேடி”– கௌரி அவளை அணைத்துக் கொண்டு அழுதாள். ஊர்மிளாவின் தந்தை ராமனாதன் வந்தார்.

“அம்மாவும், பொண்ணும் ஏன் இப்படி அமர்க்களப்படுத்தறீங்க..; தினேஷ் விஷயம் புதுசா நடந்ததா என்ன? என்னிக்கோ முடிஞ்ச விஷயம்... புதுசா என்ன அழுகை வேண்டி இருக்கு... கௌரி, உனக்கு அறிவே இல்லே.. அவ இருக்கற நிலையிலே இப்ப அதைப் பத்தி நினைக்கவே இடம் கொடுக்கக் கூடாது” – என்று கடுமையாகப் பேசினார்.

“சந்துரு, கார்ரை எடு.. ஊர்மியை நர்சிங் ஹோமுக்கு அழைச்சிண்டுப் போகலாம்.” – ஹாலில் இருந்த தன் மகன் சந்துருவிடம் கூறினார்.

**ந**ர்சிங்ஹோமில் ஊர்மிளாவை உள்ளே அழைத்துப் போய்விட்டனர். ஊர்மிளாவின் தந்தை ராமனாதன் தயக்கத்துடன் கூறினார்.

“....கௌரி, சம்பந்திக்கு போன் பண்ணி சொல்லட்டுமா? நான் அவர்களுக்குத் தெரிவிக்கல்லே..னு தப்பா போகும்..”

“எதையோச் செய்யுங்க!” கௌரி அலுத்துக் கொண்டாள்.

ராமனாதன் போனதும் சந்துரு ஆரம்பித்தான். “தினேஷின் பேரண்ட்ஸ் ரொம்ப நல்லவர்கள்தான். அவனுக்கு நினைவு இனிமேல் திரும்பாது..னு தெரிஞ்சதும் அவ மாமனார் என்ன சொன்னார்? நினைவிருக்கா?.. இந்த குழந்தை வளர வேண்டாம். ஊர்மிளா ரொம்ப சின்ன பொண்ணு.. இதை அழிச்சிட்டு தினேஷை டைவர்ஸ் செய்யட்டும். அவளுக்கு..னு புது வாழ்க்கையை அமைச்சுக்கட்டும்..னு சொன்னார். நீதான் சும்மா இருந்துட்டே..”

“இல்லேடா, ஊர்மிளாதான் பிடிவாதமா மறுத்துட்டா... அவன் மயக்க நிலையிலே இருக்கும்போது இவள் ஒருத்தி மட்டும் டைவர்ஸ் முடிவு எடுக்கறது, அவ, மனச்சாட்சிக்கு சரிப்படல்லே..னு சொல்லிட்டா..”

“ஆமா, இவ டைவர்ஸ் பண்ணிக்கலாமானு அவனை கன்ஸல்ட் செய்யறதுக்காக, ஒரே தடவை அவன் கண்களைத் திறந்து பார்க்கப் போறானாக்கும்.. டாடா சொல்லி வழி அனுப்பப் போறான்... பைத்தியக்கார ஸெண்டிமெண்ட் ஒருவழியா அவன் சாப்டரே க்ளோஸ் ஆனாதான் அவளுக்கு விடுதலை கிடைக்கும்.. வழி பொறாக்கும்”

“சந்துரு! உன்னை கெஞ்சி கேட்டுக்கறேன்.. இந்த சமயத்திலே இப்படி பேசாதேடா..” கண்களில் கண்ணீர் வழிய கௌரி கெஞ்சினாள்.


**ஊ**ர்மிளாவுக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அதைத் தன் கண்ணால் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கூட இல்லாது அவள் காணப் பட்டாள்.

“அம்மா”– திடீரென்று அவள் அழைத்ததும் கௌரி அருகில் வந்தாள்.

“கதைகளில், சினிமாக்களில் வருவதுபோல் மிராகிலா ஏதாவது நடக்கலாம் இல்லையா? இந்த குழந்தையை எடுத்துப் போய் அவர் காதுகளின் அருகில் வைத்து அழ வைத்தால் அவருக்கு ஒருவேளை நினைவு திரும்பலாம் இல்லியா?”

பலகீனமான இந்த நிலையில் அவள் தினேஷைப் பற்றி பேசுவதே கௌரிக்குக் பிடிக்கவில்லை.

“இதோ பாரு ஊர்மிளா, அன்னிலேருந்துநேற்று வரை, தினம் அவன் பக்கத்திலே உட்கார்ந்து காதுகிட்டே தினேஷ், தினேஷ்னு ஜபம் பண்ணியே.. குரலை விட்டு



அழறே.. கட்டின பொண்டாட்டி குரலுக்குக் கண் திறக்காதவன் இன்னிக்குப் பிறந்த இந்த இளம் குருத்து குரலுக்கா கண் திறக்கப் போறான்?"

'மாப்பிள்ளை, அவர்'... என்றெல்லாம் மரியாதை கொடுத்து வந்த அம்மா, பேரன் பிறந்தவுடன் ஏக வசனத்தில் அவன், இவன் என்று பேச ஆரம்பித்து விட்டதை கவனித்தாள். அவளைக் கேட்டால் அவள் என்ன சொல்லுவாள்?.

அது, இது என்று பேச வேண்டியதை, நான் 'அவன்' என்று பேசுவதே பெரிய மரியாதை என்று நிச்சயம் சொல்லுவாள். சந்துரு ஒரு தடவை மெர்ஸி கில்லிஸ் என்று ஆரம்பித்து, ஊர்மிளா கோபத்துடன் மாமியார் வீட்டிலேயே இருந்து, இவர்கள் முகத்திலேயே விழிக்காதிருந்தாள். சந்துரு அவளைத் தேடி வந்து மன்னிப்பு கேட்டான்.

வேதனையுடன் ஊர்மிளா மறுபுறம் திரும்பி படுத்துக் கொண்டாள்.

**ஊ**ர்மிளாவின் மாமியாரும், மாமனாரும் நர்சிங் ஹோமுக்கு வந்தனர். "அப்படியே அப்பனை உரிச்சு வைச்சிருக்கான்"- என்று மாமியார் வாயெல்லாம் பல்லாக சொன்னதும், ஊர்மிளா சட்டென்று தொட்டிலைத் திரும்பிப் பார்த்தாள். முதன்முதலாக அப்பொழுதான் தன் குழந்தையைப் பார்க்கிறாள். அவளது இதழ்களில் புன்னகை அரும்பியது.

பிறந்த வீட்டிற்கு குழந்தையுடன் திரும்பினாள். தொட்டில், நாமகரணம் எதுவுமே வேண்டாம் என்று பிடிவாதமாக மறுத்தாள். தினேஷ் தேர்ந்தெடுத்த பெயர்களை எல்லாம் வைக்காமல், பொதுவாக பாபு என்று கூப்பிட்டாள். அதுவே நிலைத்து விட்டது.

சீக்கிரமே நல்ல நாள் பார்த்து குழந்தையுடன் தன்னை புக்ககத்தில் கொண்டு விடும்படியாக தன் தாயை வற்புறுத்தினாள்.

அங்கே போனதும் குழந்தையுடன் தினேஷின் அருகில் உட்கார்ந்திருப்பாள். அவனுக்குப் புரிகிறதோ இல்லையோ, தினேஷைச் சுட்டிக் காட்டி "உன் அப்பா பார்"- என்று அடிக்கடி சொல்வாள்.

அவனுடைய மென்மையான சின்னஞ்சிறு கரங்களினால் அவனுடைய முகத்தைத் தடவ வைப்பாள். ஆனால் எந்தவித அதிசயமும் நடக்கவில்லை. அவன் மாறுதலற்ற தன்மையோடு ஒரே விதமாக படுக்கையில் கிடந்தான்.

பாபு வளர்ந்தான். நன்றாகப் பேச ஆரம்பித்து விட்டான். "அம்மா.. அப்பா ஏன் எப்போ பார்த்தாலும் தூங்கறார்?"

மூவரும் அதிர்ச்சியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆங்கிலத்தில் மெல்லிய குரலில் பெரியவர் கூறினார். "அம்மா ஊர்மிளா,.. என் பிள்ளையின் விதி எங்களுக்குத் தெரிஞ்சுப் போச்சு... பாபுவின் இள மனசிலே எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது.. அவன் நல்ல விதமாக வளரணும். எங்களுக்கு இப்ப அதுதான் முக்கியம். அவனுக்காகவாவது நீ ஒரு புது வாழ்க்கை அமைச்சுக்கணும்.."

அவள் திரும்பி கணவனைப் பார்த்தாள்.

அவர் மீண்டும் தொடர்ந்தார். இந்த முறை அவர் குரலில் கண்டிப்பு அதிகமாகவே ஒலித்தது.

"அவன் சாவை எதிர்பார்த்துண்டிருக்கான். முதுமையோடு நாங்க ரெண்டு பேரும் கூட முடிவுரைக்காக காத்திருக்கோம்.. எங்க மூணுபேர் வட்டத்துக்குள்ளே பாபுக்கு இடம் கிடையாது. அவனுக்காக உனக்கும் இங்கே இடம் கிடையாது.."

"தினேஷ்" மனதிற்குள் புலம்பினாள்.. "இதை நான் எப்படி ஏத்துக்க முடியும்? நீங்களே சொல்லுங்க".

நினைவற்ற நிலையில் தினேஷ் மறுநாளே பதில் சொல்லி விட்டான். எப்பொழுது நடந்தது என்று இவர்கள் குழம்பும் வகையில் அவன் நடு இரவில் அடங்கி விட்டான்.

ஊர்மிளாதான் பயங்கரமாக கதறினாள். அவளது மாமனார் ஒரு பெருமூச்சுடன் "அவன் கஷ்டம் விடிஞ்சது" - என்று ஒரு வரியில் தன் துயரத்தை முடித்துக் கொண்டார்.

ஊர்மிளாவின் பிறந்தகத்தினர் ஒரு வழியாக பெண்ணுக்கு பிரச்னை தீர்ந்தது என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டனர்.

தினேஷின் கம்பெனியில் ஊர்மிளாவிற்கு கௌரவமான வேலை ஒன்று கிடைத்தது. அடுத்த வருடமே பாபு நர்ஸரி பள்ளிக்கும் போக ஆரம்பித்தான்.

ஊர்மிளா இரண்டு வீடுகளிலும் மாறி மாறி இருந்தாள். சந்துரு ஒரு நாள் அவளைத் தேடி வந்தான்.

அவனுக்குக் கல்யாணப் பேச்சு நடக்கிறதென்று அவளுக்குத் தெரியும். அது மட்டும் இல்லை.. அவளுக்கு மீண்டும் ஒரு நல்ல வாழ்க்கை அமையும் வரையில் தனக்கு கல்யாணம் வேண்டாம் என்று அவன் கூறும் போது ஊர்மிளாவே அதை தற்செயலாக கேட்க நேர்ந்தது.

அப்பா தன் நண்பரின் மகளை இவளுக்காக தேர்ந்தெடுத்து விட்டு, மகளிடம் பேச தைரியம் இல்லாமல் வளைய வந்து கொண்டிருந்தார்.

சந்துரு தன் நெருங்கிய நண்பன் வசதியோடு இருக்கிறான் என்றும், அவளை மணக்க விரும்புவதாக கூறிக் கொண்டு அவளது விருப்பத்தைக் கேட்டான்.

ஊர்மிளா அருகிலிருந்த பாபுவைத் தூக்கி தன் மடியில் இருத்திக் கொண்டாள்.

..."பாபு, உன் மாமா உன்னை அடியோடு மறந்துட்டார் பார்த்தியா?"...

"டைவர்ஸ்னு ஆரம்பிச்ச போது தினேஷே சாக்கு சொன்னாப் போலே, கல்யாணம்னு ஆர்ம்பிச்சதும் பிள்ளையைக் காட்டறே.."

..."தப்பென்ன? எப்பொழுதும் தூங்கற எங்கப்பா எங்கே?..னு என்னை கேக்கறவன், நாளைக்கு இன்னொருத்தரை தன் அப்பானு காட்டினா ஒத்துப்பானா?"

..."குழந்தைதானே? நாளடைவில் மறந்து போகும்.. பழக்கமாயிட்டா அப்பானு கூட ஏத்துக்கும் ஊர்மிளா.. நீ நடக்கப் போற பாதை ரொம்ப நீளம்"...

"ஸோ வாட்.. பாபு கூட நான் நடக்கும் போது எனக்கு எந்த சோர்வும் வராது. இங்கிலீஷ்லே ஸ்டெப் மதருக்கு மாஸ்குலைன் ஜெண்டர் என்ன?"

'ஏன் இப்படி கேள்வி கேட்கிறாள்'-என்று ஒரு முறை அவளை ஏறிட்டுப் பார்த்து விட்டு "ஸ்டெப் ஃபாதர்" என்று பதிலளித்தான்.

"இப்போ தமிழ்லே மாற்றாந்தாய்க்கு ஆண்பால் சொல்லு"- என்று பதிலளித்தாள்.

சில வினாடிகள் யோசித்து விட்டு "மாற்றான் தகப்பன்.. இல்லை.. மாற்றாந்தந்தை" என்று தடுமாறினான்.

"வார்த்தை நெருடுகிறது.. இல்லையா? வார்த்தை மட்டும் இல்லை... உறவும் நெருடல்தான். வழக்கு மொழியாக தமிழிலே இந்த வார்த்தையே கிடையாது. ஏன் தெரியுமா? தமிழ்லே இந்த உறவு முறையே கிடையாது."

"உன்னோடே பேச என்னால் முடியாது.. தூங்கற அப்பா எங்கேனு இப்ப கேட்கிற பாபு எனக்கு அப்பாவே கிடையாதானு வயசு வந்தப்புறம் குறைப்படலாம்"..


"மாட்டான்.. அம்மாவும் நீயே அப்பாவும் நீயேனு அவனைப் பழக்கப்படுத்திடுவேன்."

"ஆண்பிள்ளைத் துணை இல்லாம பெண் குழந்தைகளை வளர்க்கலாம். ஆண் குழந்தைகளை வளர்க்க முடியாது.."

"சந்துரு, .. தினேஷ் உடம்பில் எங்கேயோ ஒளிஞ்சிண்டு உயிர் விளக்கு மெல்லிய திரியாய் எரிந்த போது அதை பிரகாசமாக எரியச் செய்யணும்னு வெறியோடே அந்த திரியை தேடினேன்.. எனக்கு கிடைக்கல்லே.. இப்ப தினேஷ் இல்லே.. ஆனா அந்த உயிர் விளக்கு என் நெஞ்சிலே இப்ப கலந்திருக்கு... எனக்கு குட்டி தினேஷை தனியா வளர்க்கும் அளவுக்கு நம்பிக்கையும் தெம்பும் வந்திருக்கு.. என் வயதான மாமனார், மாமியாருக்கும் நான்தான் பொறுப்பா ஆதரவு தரணும்.. அது என்னுடைய கடமை.. நிரந்தரமா நான் அங்கே பாபுவோடே இருக்கிறதா முடிவு எடுத்துட்டேன்.. இனி மேல் எந்த பேச்சுக்கும் இடமில்லை..."

சந்துரு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவனை இடைமறித்துத் தடுத்த ஊர்மிளா தொடர்ந்து கூறினாள். "உன் பாசம் எனக்கும் புரியாம போயிடல்லே.. இனிமேல் உன் தங்கையின் கண்களில் கண்ணீர் வராது.. என் விஷயத்திலே உனக்கு இந்த உறுதியைத் தவிர வேறு என்ன வேணும்?"

சந்துரு அவள் பேசிய வார்த்தைகளில் தன்னை மறந்து நின்றான். ✦



அக்காவ்,

அண்ணன், தம்பி வீட்டுக்கு, குடும்பத்தோட நீ போனப்ப, அவங்க பாட்டுக்கு வேற ஒரு முக்கியமானக் கல்யாணத்துக்கு கிளம்பிப் போயிட்டாங்க..அங்கே போயும் சமையல் வேலை என் தலையிலதான்னு அலுத்துக்கறியே...நீ கிளம்பிப் போறதுக்கு முன்னால - 'நான் வரட்டுமா, உங்களுக்கு ஏதாவது புரோகிராம் இருக்கா'ன்னு கேட்காதது யார் தப்புங்கறேன்?

பெத்த தாயார் வீடானாலும், வரலாமா - நீ இருப்பியான்னு கேட்டுட்டுப் போனா உனக்கும் மரியாதை. அவங்களும் நம்மகூட நேரத்தைச் செலவிட வசதியா இருக்கும்..

அதை விட்டுட்டு, மத்தவங்களையே குத்தம் சொல்லிட்டு நிற்காதே...ஆமா..

சிஸ்டர் சின்னப்பாப்பா




# தமிழக பக்தகோடிகளுக்கு ஓர் தெய்வீக அழைப்பிதழ்

தமிழகத்தில் மிகப்பிரசித்தி பெற்ற சமயபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் அருளால் தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் தொழில் ஸ்தானத்திலும் சகல முன்னேற்றங்களும் லாப ஸ்தானங்களும் ஏற்பட சமயபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மனின் அருளும் ஆசியும் பெற்று கடந்த 25 ஆண்டுகளாக தமிழகப் பக்தகோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் சுபிட்சங்களையும் ஐஸ்வர்யங்களையும் ஏற்படுத்தி தமிழக பக்தகோடிகளிடையே அழியாப் பேரும் புகழும் பெற்று மறைந்த அருள்வாக்கு ஸ்ரீலஸ்ரீ எஸ். பகவதி அம்மையாரின் குமாரரும் பரம்பரை தொழில் வாரிசுமாகிய .முத்து மாரியம்மனின் அருளும் ஆசியும் பெற்ற தேவி உபாசகர் அருள்வாக்கு **ஸ்ரீலஸ்ரீ எஸ். சாஸ்திரிதாஸ் ஸ்வாமிகள்** தங்கள் ஜாதகம், கைரேகை இரண்டும் இல்லாமல் அம்பாளின் அருளால் தங்கள் குடும்பத்தில் உள்ள நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்ளவும் எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் தாங்கள் நியாயமாக நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியடையவும் திருமணத்தில் தடைகள் உள்ள ஆண்களும், பெண்களும் திருமணமாகி பல ஆண்டுகள் சென்றும் குழந்தை பாக்கியம் இல்லாத சகோதரிகளும் செய்யும் தொழில் மந்தம் மற்றும் தங்கள் குடும்பத்தில் உள்ள சகல பிரச்சனைகளுக்கும் ஸ்வாமி அவர்களை நேரில் சந்தித்து அம்மனின் அருள்பெற்று சகல நன்மைகளையும் அடையுங்கள். நேரில் சந்திக்க முடியாத வெளியூர் பக்த கோடிகள் தங்கள் பெயர், வயது, பிரச்சனைகள் என்ன என்பதை விவரமாக தமிழில் எழுதி சுய விலாசமிட்ட ஒரு ரூபாய் கவர் இணைத்து **எஸ். சாஸ்திரிதாஸ் ஸ்வாமிகள் அருள் நிறுவனம், தபால் பெட்டி எண்.619, திருச்சி-620 008,** தென்னிந்தியா என்ற முகவரிக்கு அனுப்பினால் அதை அம்மனின் விசேஷ பூஜையில் வைத்து அம்மன் அருள்வாக்கும் பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும். சமயபுரம் மகமாயிக்கு காணிக்கை பக்தகோடிகள் விருப்பப்படி எம்.ஓ. மூலம் அனுப்பலாம்.





**குறிப்பு : சில விசேஷ பூஜைக்காக ஸ்வாமிகள் அடிக்கடி வெளியூர் சென்று கொண்டிருப்பதால் நேரில் சந்திக்க விரும்பும் பக்த கோடிகள் பிரதி வெள்ளிக்கிழமை மட்டும் எஸ். சாஸ்திரிதாஸ் ஸ்வாமிகள், அருள் நிறுவனம் 39, சின்ன செட்டித் தெரு, திருச்சி - 620 008 என்ற முகவரியில் நேரில் சந்திக்கலாம்.**

ADVT.

# 'மேஞ்சியம்' மரமல்ல.. வரம்!



ஒரு பொருளின் சில பகுதிகள் மட்டும் பயன்படுவதைவிட அதன் எல்லா பகுதிகளும் பயன்பட்டால் அதைத்தான் மக்கள் அதிகம் விரும்புவர். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்..' யானையைப்போல் தான் மேஞ்சியம் மரமும்!

ஐக்கிய அமெரிக்காவின் தேசிய அறிவியல் அகாடமி இந்த மேஞ்சியம் மரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து பல உண்மைகளை வெளியிட்டிருந்தது. இந்த மரம் முதன்முதலில் ஆஸ்திரேலிய பாலை வனத்தில் தோன்றி பின்னர் மலேசியாவில் 'சபா' என்ற இடத்தில் பயிரிடப்பட்டு, பல இடங்களுக்கும் பரவி பயனளித்துக் கொண்டிருக்கிறது. எந்தவிதமான சிதோஷ்ண நிலையிலும் வளரக் கூடியது மேஞ்சியம் மரம். பத்து ஆண்டுகளில் அதிகபட்ச உயரமாக 90 அடியும், 110 சென்டிமீட்டர் சுற்றளவும் உடையதாக வளர்கிறது. தற்போது மேஞ்சியம் மரத்தின் ஒரு கன அடி ரூ. 550-ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின் நிச்சயம் இது ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் விலைபோகும்.

மேஞ்சியம் மரத்தை இந்தியாவுக்கு அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் சென்னையில் அறிமுகப்படுத்தியிருப்பவர், 'டச்-வுட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரெஜித் அபிரகாம். இதற்காக இவர், சென்னையை சுற்றி பல இடங்களில் ஏறக்குறைய 30 ஏக்கர் நிலங்களை வாங்கியுள்ளார்.

தேக்கு மரத்தின் உறுதியும், பளபளப்பும் மேஞ்சியம் மரத்திலும் இருப்பதால், மரச்சாமான்கள் செய்வதற்கும் கட்டுமானப் பணிகளுக்கும் கூட 'மேஞ்சியம்' பயன்படுகிறது.

"நாங்கள் வாடிக்கையாளர்கள் கொடுக்கும் சிறிய முதலீட்டை ஒரு பெரும் பொற்குவியலாக பத்தே ஆண்டுகளில், நூறு மடங்காக பெருக்கித் தருகிறோம். எங்கள் பண்ணை முழுவதும் காப்பீடு செய்யப்பட்டு சிறந்த முறையில் திறமையும், அனுபவமும் நிறைந்த வல்லுனர்களின் பராமரிப்பில் மிக அதி நவீன யுத்திகளை பயன்படுத்தி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நில முதலீட்டாளர்களுக்கு நிலத்தை எப்போது வேண்டுமானாலும் அழைத்துச் சென்று காண்பிக்கிறோம். மேஞ்சியம் மர விற்பனையை A,B,C என்று மூன்று முறை திட்டமாக பிரித்துள்ளோம். 'A' முறையில் ரூ. 4,500 முதலீடு செய்பவர்களுக்கு 10-வது ஆண்டில் 275 கன அடிமரம் கிடைக்கும். இதில் லாபம் ரூ.3,43,750. 'B' முறையில் ரூ. 2,250 முதலீடு செய்பவர்களுக்கு 10-வது ஆண்டில் 125 கனஅடிமரம் கிடைக்கும். இதில் லாபம் ரூ. 1,56,250. 'C' முறையில் ரூ. 750 முதலீடு செய்பவர்களுக்கு 10-வது ஆண்டில் 40 கன அடிமரம் கிடைக்கும். இதில் லாபம் ரூ.50,000 என்று டச்-வுச் நிறுவனத்தின் விற்பனை முறையை விவரித்தார் ரெஜித் அபிரகாம்.

அடிமுதல் நுனி வரை நல்லதையே செய்யும் மேஞ்சியத்தை மரம் என்று சொல்வதை விட மக்களுக்குக் கிடைத்திருக்கும் வரம் என்றே சொல்லலாம்!

- எஸ். பிரமீளா பிரிட்டோ

## 'நம்மவர்' பரதத்தில் ஏசு வர்ணம்!


பொதுவாக பரத நாட்டியத்தை 'நம்மவர்'கள்தான் அதிகம் விரும்பி கற்றுக் கொள்வார்கள். ஆனால் சென்ற மாதம் மியூசிக் அகாடமியில் நடந்த கிறித்துவப் பெண்ணான செல்வி ஒபீலியாவின் நாட்டிய அரங்கேற்றம் நம்மவர்களும் ரசிக்கும்படி இருந்தது. நிகழ்ச்சியின் ஹை-லைட்டான விஷயம், இதுவரை ஆண்டாளுக்கும், கிருஷ்ணனுக்கும் மட்டுமே பயன்பட்டு வந்த பரதம் இனிமேல் ஏசுவுக்கும் பயன்படப் போகிறது என்பதுதான்! "ஓர் நாயகியானவள், தன் தோழியிடம் நாயகனில்லாமல் தான் படும் ஏக்கத்தை எடுத்துக்கூறி, தன்னுடைய நாயகனை அழைத்துவா" என்று அன்புக் கட்டளையிடுவது - இது தான் வர்ணம். காதலனுக்காக ஏங்கும் வழக்கமான ஏக்கத்தை, இறைவனின் வரத்துக்காக ஏங்கும் பக்தி ஏக்கமாக மாற்றி எழுதித் தாருங்கள், என்று ஒபீலியாவின் நடன ஆசிரியர்கள் கவியரசு வைரமுத்துவிடம் கேட்க, அவரும்,

"நாதனை எங்கே காணுவேன்
சகியே - எந்தன்
ஏசுநாதனை எங்கே காணுவேன்....."

என்று 'ஏசு வர்ணம்' எழுதி தந்திருக்கிறார்.

"ஆணி அடித்தவர்க்கும், அன்பு கொடுத்தவரை காணத் துடிக்குது...." இதற்கு எப்படி அபிநயம் பிடிக்கப் போகிறார் என்று இருந்தேன். பிரமாதமாக ஒபீலியா அந்த வரிகளுக்கு தன்னுடைய அபிநயத்தால் மெருகூட்டியிருக்கிறார் என்று புகழ்ந்தார் கவியரசர். இந்த புதிய மதப்பிரச்சார உத்திக்கு, ஒபீலியாவின் பெற்றோர்களான பென்னடிக் மேரி, புஷ்ப நாயகம் அவர்களுக்கு என்றைக்கும் கிடைக்கும் ஏசுவின் ஆசீர்வாதம்!





## ஸ்டிரா பெர்ரி நிறத்துக்கு..



"டேய்....பணம் செலவாவுமேன்னு குங்குமப்பூ வாங்கிக் கொடுக்காம இருந்திடாத.... அப்புறம் கருப்பட்டி மாதிரி குழந்த பொறந்துடுச்சேன்னு வருத்தப்படாத..." - நாம் இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி நடந்தாலும், இன்னும் நம் வீட்டு பெரிசுகள் உதிர்க்கும் டையலாக்தான் இது!

பெண்களின் சருமம் சிவப்பாவதற்கு எத்தனையோ க்ரீம்கள், லோஷன்கள் இருந்தாலும், ஒட்டுமொத்தமாக தாய்க்குலமும் சில தந்தை குலங்களும் கூட 'யெஸ் ஐ காட் இட்' என்று தேர்ந்தெடுப்பது 'ஃபேர் ப்ளஸ்' க்ரீமைத் தான். பொதுவாக, உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருட்கள் முதலில் உள்ளூரில் தான் விலைபோகும். அதற்கு பிறகுதான் வெளிநாட்டில் தன்னுடைய மார்க்கெட்டை பிடிக்கப் பார்க்கும். ஆனால், 'ஃபேர் ப்ளஸ்' க்ரீம் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும் 'நெம்பர் ஒன்' என்னும் நிலையை தக்க வைத்துக் கொண்டு இப்போது இந்தியாவில் பிரவேசித்துள்ளது.

பாண்டிச்சேரியில் தயாரிக்கப்படும் 'ஃபேர் ப்ளஸ்' ஆரம்பித்த ஒரே வருடத்தில் இரண்டு கோடி ரூபாய்க்கும் மேல் ஏற்றுமதி செய்து சாதனை படைத்திருக்கிறது. "ஃபேசியல் க்ரீம் என்றாலே அதில் 'ப்ளீச்' என்னும் கெமிக்கலை பயன்படுத்துகிறார்கள். இப்படி உருவாக்கப்படும் செயற்கை க்ரீம்களால் முதலில் முகம் கண்ணாடிபோல் இருந்தாலும், சிறிது நாளில் கீறல் விழுந்து, ரசம் போன கண்ணாடி போல் ஆகிவிடும். 'ஃபேர் ப்ளஸ்' இயற்கையான கேலண்டுலா, ஆலோடுவரா போன்ற மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஆலோவெரா ஈரப்பதம் இழந்து வறண்டு போயிருக்கும் சருமத்திற்கு புத்துணர்ச்சியை அளிக்கிறது. சூரியனின் அல்ட்ரா வயலட் கதிர்களிடமிருந்து சருமத்தை காக்கும் செயலையும், கறுத்துப் போகாமல் காக்கும் செயலையும் ஃபேர் ப்ளஸ் க்ரீமில் உள்ள இயற்கை மூலிகையான கேலண்டுலா செய்கிறது. ஃபேர் ப்ளஸ் க்ரீம் 25 கிராம், 50 கிராம் முறையே ரூ.19.50-க்கும், ரூ.34.50-க்கும் கிடைக் கிறது. விரைவில் 'ஃபேர் ப்ளஸ்' வெளி நாடுகளைப் போலவே, இந்தியாவிலும் கால் பதிக்கும்" என்றார் ஃபேர் ப்ளஸ் தயாரிக்கும் வேல் எக்ஸ்போர்ட் நிறுவனத் தின் மேனேஜிங் டைரக்டர் அசோக் குமார்!

- தாமஸ்

## வாடிக்கையாளர்களே விளம்பரங்கள்!

சுங்குடி புடவைகளுக்கென்றே ஒரு கடையா? இருக்கிறது, சென்னை மேற்கு மாம்பலத்தில்.

மாறி வரும் நாகரிகத்தில் புதுப் புது துணி ரகங்கள் வந்து, சென்று கொண்டிருந்தாலும் - 'அன்று முதல் இன்று வரை' சுங்குடி புடவைகளுக்கான வரவேற்பில் வாடிக்கையாளர்களிடம் எந்த மாற்றமும் இல்லை.." என்கிறார் சென்னை ராமச்சந்திரா சாரீஸின் பங்குதாரர் ஜெயராமன்.

ஆரம்ப கட்டங்களில் மதுரையில் தங்கள் சொந்த தறியில் நெய்த புடவைகளை சென்னைக்கு கொண்டு வந்து வீடு வீடாக சென்று விற்பனை செய்தவர்கள் ஜெயராமன், சுப்பிரமணியன் சகோதரர்கள்.

அப்போதைய கால கட்டத்தில் சுங்குடி உற்பத்தியில் வணிகர்கள் பலர் ஆர்வம் காட்டாததால் அப்போதிருந்த சந்தை தேவை பூர்த்தி செய்யப்படாமலிருந்தது. இதை உணர்ந்து சுங்குடி புடவைகளை மட்டுமே உற்பத்தி செய்து, வாடிக்கையாளர்களிடம் எடுத்து செல்வதில் தனிக் கவனம் செலுத்தியது இவர்களின் வெற்றிக்கு வித்திட்டது.


"ஆரிய கௌடா சாலையில் 'ராமச்சந்திரா சாரீஸ்' என்ற பெயரில் இதற்கென தனி கடையே நிறுவ முடிந்தது" என்கிறார் ஜெயராமன்.


சுங்குடி புடவைகளை பொறுத்த வரை சென்னையில் எல்லா கடைகளிலும் கிடைப்பதில்லை, கிடைத்தாலும் ஒரு சில வண்ணங்களில் ஒரு சில டிசைன்களில் மட்டுமே கிடைக்கும் என்ற நிலையில், இந்த ரக புடவைகளுக்காகவே நிறுவப்பட்டிருக்கும் இக்கடையில் எண்ணற்ற வண்ணங்களில், விதவிதமான டிசைன்களில், மிகக் குறைந்த விலையில் சுங்குடி புடவைகள் கிடைக்கிறது. அதுதவிர, நாகரிக தேவைகளுக்கேற்ப கல்லூரி மங்கையரும், இளம்பெண்களும் விரும்பும் சுரிதார் போன்ற உடைகளையும் சுங்குடியில் அளிப்பது இவர்களது தனிச்சிறப்பு.

சுங்குடி பரம்பரைத் தொழில் ஆதலால் மிக உயர்ந்த தரத்திலும், வாங்கி விற்காமல் சொந்த தறியில் நெய்வதால் மிகக் குறைந்த விலையிலும் எங்களால் அளிக்க முடிகிறது. அதுதவிர, நடுத்தர மக்களுக்குப் பயன்படும் வகையிலான தவணை முறை விற்பனையும் எங்களிடம் உண்டு என்று சொல்லும் இந்த சகோதரர்கள் பணியாளர்களை நியமித்தால் சரியாக கவனிக்க மாட்டார்களோ என்ற அச்சத்தில் ஒவ்வொரு வாடிக்கையாளர்களையும் தாங்களே நேரடியாக கவனித்தல், கனிவான பாங்கு இவற்றால் அண்மையில் இந் நிறுவனம் சென்னை மயிலாப்பூரிலும் தனது கிளையை வெற்றிகரமாக நிறுவியுள்ளது.

"எங்களிடம் வந்து செல்லும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுமே எங்கள் வளர்ச்சிக்கு வித்திடும் விளம்பரங்கள்" என்கிறார்கள் இணைந்த குரலில் இச்சகோதரர்கள்.

- சிவகுமார்







**எடை**

நிறுத்துப் பார்த்தேன்
தராசில்.....
நீ உயர்ந்தாய்...!
உன் நகைகளோ
இறங்கின.
நீயே என் மனைவி!

- சாருமதி, சென்னை - 8.

**குப்பையின் குமுறல்**

வீட்டில் இருக்க
விடுவதில்லை
வீதியில் இருக்க
அனுமதியில்லை
என்
சொந்தத் தொட்டிகளில்
வசிக்க நினைத்தால்
ஏற்கெனவே அங்கு
குழந்தைகள்!!
எங்கே போவது நான்?

- கே.சுமதி, சென்னை - 2.



**எதார்த்தம்**

அண்ணனாய்த்
தோன்றினான்
அன்பாயிருந்தேன்.
கண்ணனாய்த் தோன்றினான்
பக்தியைப் பொழிந்தேன்
காதலனாய்த் தோன்றினான்
காதலில் மூழ்கினேன்.
கல்யாணத்திற்குப் பிறகு.....
அன்பு..பக்தி..காதல்
ஏதுமில்லை.
ரேஷன்..மண்ணெண்ணை,
சர்க்கரை.....
ஏசல் பூசல் மோதல்....

- சுஜாதா மூர்த்தி, சென்னை - 15.

என் அன்பான குயில்களுக்கு.....

அநேகமாய் இளம்பெண்கள் அனைவருமே கவிதை எழுதத் தொடங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சரஞ்சரமாய்க் கவிதைகள் வந்து குவிந்திருக்கின்றன. இரண்டு கைகளிலும் அம்புகளை எறிவதனால் அர்ச்சுனனுக்கு 'சவ்யசாசி' என்ற காரணப் பெயருண்டு. அதுபோல் 'சவ்யசாசி'களாய், இரண்டு கைகளாலும் பலர் இரண்டிரண்டு கவிதை மடல்களை அனுப்பியிருக்கிறார்கள். இது உங்கள் 'அதீத'மான அன்பின் வெளிப்பாடுதான்.. இருந்தாலும் ஒன்றை நன்றாக அனுப்புங்களேன் - அடுத்தவர்க்கும் வாய்ப்புக் கிடைக்குமல்லவா?

இந்தக் கவிதைகள் பக்கமே வளரும் பெண் கவிஞர்களுக்கு உற்சாகந் தந்து அவர்களை வளர்க்கத்தான்....எனவே இந்தப்பகுதி 'மகளிர்க்கு மட்டும்' என்பதைச் சகோதரக் கவிஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தனிக் கவிதைப் பகுதியில் ஆண் கவிஞர்களும் பங்கு பெறலாம்.


சில பெண் கவிஞர்களின் கவிதைகள் உறையை விட்டு எடுக்க முடியாத அளவிற்கு ஒட்டி அனுப்பப்பட்டுள்ளன. இதுவும் உங்கள் அழுத்தமான பாசத்தின் வெளிப்பாடுதான் என்றாலும் கவிதைகளை இலகுவாகப் பிரித்துப் படிக்க வேண்டுமல்லவா?

நம்பிக்கை நட்சத்திரங்கள் சிலருக்குத் தனிப்பட....அவர்கள் முகவரிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

இனி....நாளை சுடர்க்கதிர்களை வீசி உலாவர இருக்கும் இன்றைய தூரத்து நட்சத்திரங்களைக் கண்சிமிட்ட விட்டு விடைபெறுகிறேன்.

*அன்புடன்,*

*பொன்மணி வைரமுத்து*






**தொலைக்காட்சிப் பெட்டி**

பொழுதுபோக்கிற்காக
வீட்டினுள் நுழைந்தேன்
பெண்களை வசப்படுத்தி
சமையலை...பொழுதுபோக்காக
மாற்றிய பெருமை
எனக்குண்டு!

- ராஜிராதா, திருச்சி.

**இசை**

புல்லாங்குழல்
மொழிபெயர்க்காமல்
காற்று இசையாகுமா?

- லலிதாகணேசன், திருநெல்வேலி.

**சுழல்**

சங்கு பொறுக்கி
மாலைகோர்த்து
கருவாடு உலர்த்தி
கண்டம்போட்டு
ஆணிஅடித்து தோணிகாத்து
ஆடைதுவைத்து கஞ்சிகாய்ச்சி
காத்திருந்தாள் செம்படச்சி.
கள்ளுண்டு கனவில் மூழ்கி
கழுதையாய் உதைத்துக்
கணவன் செய்யும்
கொடுமைக்கு
முடிவில்லை.
கடலின் சுழல்போல்....
மீண்டும் மீண்டும்...

- ஆர்.வானதி, திருவண்ணாமலை.

**பெண்மை**

இளகும் இறுகும்
குமுறும் நிமிரும்
சரித்திரம் படைக்கும்
சரித்திரமாகும்

- திருமதி செல்விசெகன், சேலம்.

**மனைவி?**

கணவன் சொன்னான்
மனைவி என்பவள்
'செருப்பைப் போல'
கணவனின் காலடியில்தான்
இருக்க வேண்டும்.
மனைவி பதிலிறுத்தாள்:
அப்படியானால்
அந்தகாரத்தில்
அந்தச் செருப்பு எதற்கு?
இந்தச் செருப்பை வைத்துக்
கொள்ளுங்கள்...அவன்
காலடியில் கிடந்ததைக்
கையில் தந்தாள்.


- மாயாசேகர், பம்பாய்.

# உங்கள் இல்லத்தில் எங்கள் "சமய சஞ்சீவி"யை வரவேற்றிடுங்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டிடுங்கள்.



AKSHAYA PATRAM CHITS FESTIVAL
April 1st - 15th, 1997
JOIN TODAY

சரியான சமயத்தில் செய்யப்படும் உதவிக்கு இணையாக வேறு எதையும் கூறமுடியாது. அத்தகைய உதவியைச் செய்யும் நட்பு பொக்கிஷம் போன்றது – நட்பைப் பற்றிய இந்தக் கருத்தில் ராம் காஷ்யப் சிட்ஸ் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறது. **எங்கள் ஊழியர்கள், முகவர்கள்** ஆகியோர் உங்களுக்கு அளிக்கும் சேவையின் அடித்தளமாக இருப்பதும் இந்தக் கருத்துதான். அதனால்தான் அவர்களை **சமய சஞ்சீவிகள்** என்று அழைக்கிறோம். மானிடப் பண்புகள், நிலையான உறவுகள், சமூக வளம் ஆகியவற்றில் எங்களுக்குள்ள முழுமையான ஈடுபாட்டின் அடிப்படையில்தான் அவர்கள் உங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.



சந்தாதாரருக்கான பரிசு

சீட்டுகளை ஒரு பயனுள்ள சேமிப்பு வழிமுறையாக மக்கள் நீண்ட நெடுங்காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். எப்போதெல்லாம் அவசியத் தேவை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் அவர்களுக்கு சீட்டுகள் பேருதவியாக இருந்து வருகின்றன என்பது நிரூபணமான ஒன்று. இன்னும் சொல்லப்போனால், வளர்ந்து வரும் நாடுகளில் சீட்டுகள் மிகப்பாதுகாப்பான சேமிப்பு வழிமுறையாக விளங்கி வருகின்றன என்பதை **ஏசியன் டெவலப்மெண்ட் வங்கி**யின் ஆய்வறிக்கை தெளிவுபடுத்தி இருக்கிறது. நம்பகத்தன்மை, பண்பாடு, தொலைநோக்கு ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ராம் காஷ்யப் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அந்த நிறுவனங்களில் ஓர் அங்கமான ராம் காஷ்யப் சிட்ஸ் இந்த வழிமுறையை மிகச் சரியாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

## இலவச பரிசு




Johnson & Johnson
வழங்குபவர் எங்கள்
## சமய சஞ்சீவி




அறிமுகப்படுத்துவோருக்கான பரிசு

மேலும் விவரங்களுக்கு கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்புங்கள்.

அல்லது, எங்கள் கிளைகளில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள். எங்கள் சமய சஞ்சீவி உங்கள் இல்லத்திற்கே வந்து உங்களுக்கு ஒரு இலவச பரிசை அளிப்பதுடன், ராம் காஷ்யப் சிட்ஸ் அளித்திடும் அனைத்து நலன்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார். அவை உங்கள் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையோடு எதிர்நோக்கும் ஆற்றலை உங்களுக்கு அளிப்பவை. எங்கள் சமய சஞ்சீவிக்கு நல்வரவு கூறுங்கள்.

இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பவும்.

ஆம், உங்கள் **சமயசஞ்சீவி**யை சந்திக்க விரும்புகிறேன்.



பெயர் : ..............................

முகவரி : ..............................

.............................. போன் : ..............................

தொழில் : ..............................

**Ram Kaashyap Chits**

**ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தேர்வு**

ராம் காஷ்யப் நிறுவனங்களில் ஓர் அங்கம்

**ராம் காஷ்யப் குருப் நிறுவனங்கள் முகவரி : நிர்வாக அலுவலகம்** : 14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017. போன் 4341513, 4330034
**கிளைகள் : தமிழ்நாடு : சென்னை : • ஆழ்வார்பேட்டை** : 1/1 (கீழ்த்தளம்), சர் தேசிகா ரோடு, ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகில், சென்னை 600 004. போன் 4970205 **• மேற்கு மாம்பலம்** : 1/A, முதல் மாடி, மூர்த்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033. போன் 4896638 **• அண்ணா நகர்** : 102, 'D' பிளாக், N.P. டவர்ஸ் சிந்தாமணி அருகில், அண்ணா நகர் கிழக்கு, சென்னை 600 102. போன் 610979 **• அடையாறு** : 11, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு சென்னை 600 020. போன் 418081 **• தி.நகர்** : 14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017. போன் 4341513 **• கோயம்புத்தூர்** : 2வது மாடி, ஏசியாடிக் பில்டிங், 378 டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் 641 018. போன் 231886 **• திண்டுக்கல்** : 24 புதிய அக்ரஹாரம், திண்டுக்கல் 624 001. போன் 34218 **• திருநெல்வேலி** : கடை எண் 5, எலைட் காம்ப்ளக்ஸ், 182 E/24, S.N. ஹை ரோடு, திருநெல்வேலி 627 001 போன் 23808 **• கும்பகோணம்** : நல்லி பிளாசா, முதல் மாடி 34 T.S.R. பெரிய தெரு, கும்பகோணம் 612 001. போன் 30246 **• மதுரை** : N.C.S. பில்டிங் 113-B, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, மதுரை 624 001. போன் 741802 **• தஞ்சாவூர்** : Dr.K.P.V. டவர்ஸ், T.S. எண் 2651 தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர் 613 009. போன் 25871 **• திருச்சி** : 44–45 அன்னை சிவகாமி காம்ப்ளக்ஸ், சிங்காரத் தோப்பு (சூப்பர் பஜார்) திருச்சி 620 008. போன் 704752 **• ஈரோடு** : ஆனூர் அம்மன் காம்ப்ளக்ஸ், 58 சத்தி ரோடு, ஈரோடு 638 003. போன் 79822 **• சேலம்** : 61, செர்ரி ரோடு, சேலம் 636 007. போன் 418171 **• திருவாரூர்** : 80–A தெற்கு தெரு, திருவாரூர் 610 002. போன் 20895 **• காரைக்குடி** : எண் 1, T.T. நகர், முதல் தெரு S.K.N. பில்டிங்ஸ் (கீழ்த்தளம்) காரைக்குடி 630 001.

நண்பர் ஒருவர் ஒரு நாள் என்னிடம் பேசுகையில் "திருமணமான பெண்களை அதுவும் வேலைக்குச் செல்கின்ற பெண்களின் மனதை திசைத்திருப்பி தம் வசமாக்குவது பெருகி வருகிறதே. இவ்வாறுச் செய்வதும் அநேகமாக திருமணமான ஆண்களாகத்தான் இருக்கிறார்கள். அப்பெண்களின் கணவன்மார்கள் வேலை நிமித்தம் வெளியூர்களுக்குச் சென்று விடுவதால் உதவுகிறார்போல் நாடகமாடி அவர்களிடம் பேசிப்பேசியே கலைத்து விடுகிறார்கள். நீங்க இதைப்பற்றி சிந்தித்தீர்களா?" என்று கேட்டார்.

அவர் சொன்னது உண்மைதான். சிறு வயதிலேயே இரு சம்பவங்கள் எனக்கு தெரிந்திருந்தன. பணிக்கு வந்த பிறகு ஒரு நல்ல குடும்பம் எப்படி சின்னாபின்னம் ஆகிறது என்று கண்கூடாகக் கண்டேன். மிகவும் பரிதாபமான சம்பவம் அது. இரு குடும்பங்களும் நல்ல கௌரவமான குடும்பங்கள். நிரம்ப படித்தவர்கள். சம்பந்தப்பட்ட ஆணின் மனைவி அழகிலும், குணத்திலும், வசதி, பண்பாடு என்று எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல. அதேபோல் திசை திருப்பப்பட்ட பெண்ணின் கணவர் உத்தமர். அழகு, அறிவு, அந்தஸ்து, பண்பு, பண்பாடு, குணம் எதுவிலும் குறைவில்லை. சொல்லப்போனால் தன் நண்பரைவிட இவர்தான் சிறந்த மனிதர் என்றேச் சொல்லலாம். எவ்வாறு சிறுகச் சிறுக அந்த படித்த அயோக்கியன் தம் நண்பரின் மனைவியின் மனதை கலைத்தார் என்று பார்த்தபோது நட்பின் மீது நம்பிக்கையே இல்லாமல் போயிற்று.

இரட்டை வாழ்க்கைக்கு ஆயத்தமாகாமல் ஆணோ பெண்ணோ தம் திருமண வாழ்க்கையை முறித்துக் கொண்டு புதிய உறவில் பிணைப்பர்.

நான் மேலே கூறியது மிகவும் நிறைவான மணவாழ்க்கை நடத்தும் ஆண் பெண்களைப்பற்றிதான். ஏதாவது ஒரு குறை மனதில், வாழ்க்கையில், சந்தித்த பெண்களை தன் வசமாக்க முயற்சிப்பது மிகவும் வழக்கத்தில் இருக்கிறது. அதேபோல் நிறைவான மணவாழ்க்கை அமையாத ஆண்களும் வேறு வடிகாலைத்தேடி அலைவதும் சகஜம்தான். அதேபோல் ஒழுக்கங்கெட்ட ஆண் - பெண்களைப் பற்றியும் நான் பேசவில்லை. இராமரின் மறு அவதாரமாக இருப்பவர்கள் திடீரென்று நல்ல பெண்களைச் சீர்குலைய வைத்ததுதான் விந்தை. இதுபோன்ற வழக்குகளைப் பற்றித்தான் நண்பரும் சுட்டிக்காட்டினார். இதைப்பற்றி சிந்திக்கும்போது பல சம்பவங்கள் நிழற் படமாக மனத்திரையில் ஓடுகின்றன. உங்களில் பலருக்கும் இதுபோன்ற சம்பவங்கள் நிறைய தெரிந்திருக்கும்.

இந்தச் சம்பவங்களிலிருந்து மாறுபட்ட ஒரு சம்பவத்தைப்பற்றி என் நாட்குறிப்பில் கண்டேன். ஒரு ஆணின் போக்கினால் எப்படி ஒரு பெண் பாதிக்கப்பட்டார்? அவர் தம் பெயரையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள தம் இலட்சியங்களையே உதறி எவ்வாறு தம்மை விடுவித்துக் கொண்டார் என்று நினைக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. அந்த ஆணின் மீது முட்டாள்தனமாக அவர் நடந்து கொண்டாரே என்று கோபமாகவும் வருகிறது.

# கேளடி பெண்மணி

**- குத்சியா காந்தி ஐ.ஏ.எஸ்.**

இதுபோன்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஆண்கள் அநேகமாக திருமணமானவர்களே. அதுவும் தெருவில் திரியும் போக்கிரியோ, ரௌடியோ அல்ல. சமுதாயத்தில் அவர்களுடைய சரகத்தில் நல்ல அந்தஸ்துப் பெற்றவர்கள், வெளிப்பார்வைக்கு நிறைவான குடும்ப வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்கள் பெரிய சாதனைகளைப் புரிந்துப் பெண்களை தன்வசமாக்குவது கிடையாது. மிகச் சிறியச் சிறிய உதவிகள். ஆனால் சமயோசித உதவிகளைப் புரிந்து செய்கின்ற உதவிகளாலே மனதைக் கவர்ந்து ஒரு நம்பிக்கையை உண்டாக்கி விடுகின்றனர். மேலும் தம் மனைவியையோ அல்லது சம்பந்தப்பட்ட பெண்ணின் கணவரையோ தாழ்த்திப் பேசுவது கிடையாது. அவர்களிடம் நல்ல கௌரவமான முறையிலேயே பழகுவர். மெச்சவும் செய்வர். ஆகையால் எவருக்குமே சந்தேகமும் வராது. மேலும் திருமணமான, கௌரவமான மனிதராகையால் லேசில் எல்லோரும் அவரை நம்பி அவர் செய்யும் உதவிகளினால் அவரின் இமேஜ் உயர்ந்து அந்த மனிதர் மிகவும் விரும்பத்தக்கவரும் நம்பிக்கையானவருமாக ஆகி விடுகிறார். நம்பிக்கை வேரூன்றியப்பிறகு மெல்ல மெல்ல தம் நோக்கத்தை நிறைவேற்றும் பணியில் இறங்குவார் மனிதர். தம் குடும்பத்தையும் விட்டுவிட மாட்டார். அப்பெண்ணையும் குடும்பத்தை விட்டுவிட வற்புறுத்த மாட்டார். இருவருமே இரட்டை வாழ்க்கை நடத்துவார்கள். மனதாலும் உடலாலும் இரட்டை வாழ்க்கை! ஒருசில சம்பவங்களில்தான் இதுபோன்ற

அந்த வெள்ளை நிறக் கார் கல்லூரி வளாகத்தில் நுழைந்தவுடன் கல்லூரியே நிசப்தமாகி விட்டது. முதல்வர் அறையின் முன் அந்தக் கார் நின்றது. அதிலிருந்து நிருபமா - கல்லூரியின் முதல்வர் - இறங்கினார். கடைநிலை ஊழியர் மரியாதையாக அவருடைய கைப்பையை வாங்கி, ஒதுங்கி நின்றான். நிருபமா கம்பீரமாக தம் அறையினுள் நுழைந்தார். வழியில் மாணாக்கரும் விரிவுரையாளர்களும் வணக்கம் மேடம், குட் மார்னிங் மாம் என்று மரியாதையுடன் - இல்லை பயபக்தியுடன் கூறிக் கொண்டிருந்தனர். எல்லாவற்றிற்கும் புன்னகை யிலும், லேசான தலையசைப்பிலும் பதில் அளித்தார் நிருபமா.

நிருபமா - நடமாடும் பல்கலைக்கழகம்! அவரைப் பார்த்த மாத்திரத்தில் ஓடிச்சென்று பேசணும்போல் தூண்டும் ஒரு ஈர்ப்புச் சக்தி உடையவர். பேரழகி இல்லையென்றாலும் எந்த ஒரு கூட்டத்தில் இருந்தாலும் ஒரு தனித்துவம் அவரிடம் உண்டு. கருணையே வடிவானவர். ஆனால் கண்டிப்பு நிறைந்தவர். ஆட்களை வைத்து வேலை வாங்குவதில் அவருக்கு நிகர் அவரே. நிர்வாகத்திறமை மிக்கவர். அசுரப்புலி என்றும் கூறலாம். இளவயதிலேயே பட்டங்கள் பலப்பெற்று எடுத்த எடுப்பிலேயே ஒரு கல்லூரியில் சேர்ந்தவர். அவர் பாடம் நடத்தினால் மிகக் குறைவான அறிவுத்திறன் பெற்றவரும் மறக்க வாய்ப்பில்லை. எந்த பொறுப்பு தந்தாலும் இன்முகத்துடன் ஏற்றுக்கொள்வார். மிக குறுகிய காலத்தில் கல்லூரி நிர்வாகமே இவரது திறமைகளைக்கண்டு மெச்சி புதிய கல்லூரிக்கு அவரை முதல்வராக தேர்ந்தெடுத்தது. புதிய கல்லூரி சில ஆண்டுகளிலேயே அம்மாநிலத்தின் சிறந்த கல்லூரிகளுள் முதன்மை வகித்தது. ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து படிக்கும் கல்லூரிதான். ஆனால் ஒரு நாளும் எந்த ஒரு மாணவனும் எந்த ஒரு மாணவியின் மீதும் காகித ராக்கெட்டு விட்டார் என்ற சரித்திரம் கிடையாது. எந்த ஒரு கூட்டத்திலும் மாணாக்கர் சீட்டி அடித்தார்கள், ஆயி ஊய் என்று கத்தினார்கள் என்று ஒரு சம்பவமும் இல்லை. பெண்ணைப் பெற்றவர்கள் தம் பெண்களை பெண்கள் கல்லூரிக்கு அனுப்புவதற்கு பதிலாக நிருபமா கல்லூரிக்கு அனுப்பத்தான் விரும்பினர். மாணாக்கரிடம் ஒழுக்கத்தை எதிர்பார்த்த நிருபமா மாணாக்கர் எதிர்பார்த்த வசதிகளும், சுதந்திரமும் அவர்களுக்கு அளிக்க தயங்குவதில்லை. இவர் கூறிவிட்டால் கல்லூரி நிர்வாகம் எதையும் மறுத்ததில்லை. கல்லூரியின் நிர்வாகத்தில் எவரும், தாளாளர் உட்பட, தலையிட நிருபமா அனுமதித்ததும் இல்லை. கல்லூரியின் துறைத்தலைவர்கள் முதல் கூட்டிப்பெருக்குபவர் வரை தத்தம் பணிகளை செம்மையாகச் செய்தனர். செய்யாதவர்களையும் செய்ய வைப்பார் நிருபமா. முரடர் என்ற பெயர் எடுத்தவர்கள் எல்லாம் இவர்முன் பூனை. கத்த மாட்டார். திட்ட மாட்டார். இருப்பினும் எதிராளிக்குத் தம் எண்ணத்தையும் நோக்கத்தையும் புரிய வைத்துவிடுவார். எதிராளியிடம் இருக்கும் பலவீனங்களை புரிந்துகொண்டு அவரை கூடுமானவரை திருத்தியே விடுவார். அந்த அளவிற்கு ஒரு சக்தி அவரிடம் இருந்தது. அவர் நடமாடும் பல்கலைக்கழகம் என்று சொன்னேன். எந்த ஒரு பொருளைப் பற்றிப் பேசச் சொன்னாலும் ஆதாரபூர்வமாகப் பேசுவார். தொழில்நுட்பப் பொருளாக இருந்தாலும் சரி, பொது விஷயமாக இருந்தாலும் சரி, நூலகத்தையே மனதில் சுமந்தாற்போல் எல்லாவற்றையும் பற்றி முழுமையாகப் பேசுவார். பிறந்தபோதே நூலை படித்துக் கொண்டு பிறந்தாரோ என்று வியப்பேற்படும்! ஆடல், பாடல், விளையாட்டு, கலை என்று எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கினார். சிறப்பாக பேசுவார்.



சொற்ப எண்ணிக்கையில் துவங்கிய அக்கல்லூரி விரைவிலேயே மூவாயிரம் மாணாக்கர்களைக் கொண்ட கல்லூரியாகவும் தலைநகரின் பல கல்லூரிகளில் இல்லாத பல நவீன பாடங்களைக் கொண்டதாகவும் வளர்ந்தது. தலைநகரிலிருந்து இக்கல்லூரியில் படிக்க மாணாக்கர் போட்டி போடுவதுதான் கிராமப்பகுதியில் துவக்கப்பட்ட இக்கல்லூரியின் சிறப்பு.

நிருபமாவின் மனதில் ஒரு குறை இருந்து கொண்டே இருந்தது. அவரது கல்லூரி எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கினாலும் விளையாட்டுத் துறையில் கொஞ்சம் பின்தங்கித்தான் இருந்தது. நிருபமாவே ஒரு விளையாட்டு வீராங்கனை அவர் தமது கல்லூரி மாநில அளவில் நல்லப்பல சாதனைகள் புரியவேண்டும் என்று மட்டும் நினைக்கவில்லை. ஆசிய விளையாட்டுகளிலும் ஒலிம்பிக்கிலும் கலந்துகொள்ளும் அளவிற்கு தம் மாணாக்கர் ஆயத்தமாக்க வேண்டும் என்று விரும்பினார். அவரிடம் தற்போது இருந்த மிஸ்.குல்கர்னி நல்ல பயிற்சியாளராக இருந்தபோதிலும் இன்னும் நிறைய திறமை உள்ளவரைத் தேடினார் நிருபமா.

ஒரு நாள் தாளாளர் நிருபமாவை அழைத்து "தலைநகரிலுள்ள நமது பள்ளியில் ஒரு விளையாட்டு ஆசிரியர் உள்ளார். மிகவும் தேர்ச்சி பெற்றவர். பெயர் கமல்ராஜ். திறமைசாலி. அவர் நமது பள்ளி மாணாக்கர். நல்ல விதத்தில் பயிற்சி அளித்து ஒரு சிலர் வெளிநாட்டிற்குச் சென்று வந்ததை தாங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வளவு திறமை இருந்தும் அவருக்கும் பள்ளியின் முதல்வர் திரு. பாஜ்பாய்க்கும் ஒத்துக்கொள்ளவில்லை. தங்கள் கல்லூரியில் அவரை அழைத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார்.

"நீங்க அவரை முதலில் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள். பிறகு என் முடிவைச் சொல்கிறேன்" என்று நிருபமா பதில் கூறினார்.

நிருபமா ஒரு நாள் தம் அலுவலகப் பணியில் மூழ்கி இருந்தபோது அலுவலகப் பணியாளர் ஒரு சீட்டு கொண்டு வந்து தந்தார். அதில் கேப்டன் கமல்ராஜு என்று எழுதியிருந்தது. 'வரச்சொல்' என்றார். அடுத்த நிமிடம் விளையாட்டு வீரர்களே பொறாமைப்படும் அளவில் கட்டுமஸ்தான உடலமைப்புக்கொண்ட கவர்ச்சிகரமான ஹீரோவைப்போல் ஒருவர் நிருபமாவின் முன் தோன்றி 'கேப்டன் ராஜு உங்கள் சேவையில் மேடம்' என்று மிகவும் ஸ்டைலாகவும் அலட்டலாகவும் கூறினார்.

சலனமில்லாமல் நிருபமா அவரை உட்காரச்சொல்லி அவரிடம் பேசினார். அவருடைய ஆவணங்களை எல்லாம் பார்த்தார். அலட்டல், தற்பெருமை இவற்றை அகற்றிவிட்டால் ஆள் மோசமில்லை என்பது நிருபமாவின் கணிப்பு. "நீங்க மிலிட்டரியில் இருந்த ஆவணம் எங்கே?" என்று கேட்டார். "ஓ - இல்லை இல்லை. நான் மிலிட்டரியில் இருந்திருக்கவில்லை. என்னை சிறுவயது முதல் கேப்டன் என்று அழைப்பார்கள். அது அடைமொழியாக என்

பெயருடன் ஒட்டிக் கொண்டது" என்றார் கமல்ராஜ்.

நிருபமாவின் கல்லூரி மாநிலங்களுக்கிடையேயான போட்டி ஒன்றில் கலந்துகொள்ள வேண்டிய தருணம் அது. இத்தருணத்தில் கமல்ராஜைப் பரீட்சிப்பதுபோல மாணாக்கரை அப்போட்டிக்கு ஆயத்தம் செய்யச் சொல்லலாம். அவருடைய பயிற்சி முறைகள் எல்லாம் கவனித்துக் கொள்ளலாம். பிறகு முடிவு செய்யலாம் என்று நிருபமாவும் தம் எண்ணத்தை கமல்ராஜிடம் சொன்னார். "நான் பயிற்சி அளிக்கிறேன். இக்கல்லூரியின் நல்ல காலம் துவங்கிவிட்டது என்றே நீங்கள் கொள்ளலாம் மேடம்" என்று கூறிய அவர் உடனே காரியத்திலும் இறங்கினார். கடுமையான பயிற்சி துவங்கியது. நிருபமா கூடவே இருந்து அவ்வப்போது கவனித்தார். அதிகாலை இரவு என்று எந்நேரமும் மாணாக்கர்களுக்கு பயிற்சி. நிருபமாவும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் பயிற்சிகளைக் காணச் சென்றார். கமல்ராஜின் பயிற்சி முறைகள், மாணாக்கர்களிடம் அதுவும் குறிப்பாக மாணவிகளிடம் பழகும் முறை மிகவும் கண்ணியமாக இருந்தது. மிஸ். குல்கர்னி என்ற விளையாட்டு பயிற்சி ஆசிரியர் அக்கல்லூரியின் 'கிளியோபாட்ரா' என்று அழைக்கப்படும் பேரழகி. அவரை எல்லாம் கமல்ராஜ் சட்டையே செய்யவில்லை. பயிற்சி சம்பந்தமாக பேசினார்.

பழகினாரே தவிர மற்றபடி மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டார். மாணாக்கர்களும் அவரை 'கேப்டன் சார்' என்று மிகவும் அன்புடன் பழகினார்கள். மாணவிகளும் தமக்குள் 'கேப்டன் ஹீரோ' என்று அவரை அழைத்துக் கொண்டனர். அனைவரும் உற்சாகமாக இருந்தனர். குறுகிய கால முயற்சி கல்லூரி அணியை மூன்றாவது இடத்திற்கு கொண்டு வந்தது. ஆனாலும் மாணாக்கர்கள் தளரவில்லை. "கேப்டன் சார். அடுத்த போட்டிக்கு இப்போதே பயிற்சி தாருங்கள். நாங்கள் முதலிடம் பெற்று காட்டுகிறோம்" என்றனர். நிருபமாவும் திருப்தி அடைந்தார். தாளாளரிடம் கமல்ராஜை கல்லூரியில் நியமிக்கப்படலாம் என்று கூறிவிட்டார்.

கமல்ராஜ் கல்லூரி முதல்வரின் கடுமையான உழைப்பைப் பற்றி கேள்விப்பட்டிருந்தார். ஆனால் இங்கு வந்தபிறகுதான் அவர் நேரம் காலம் செல்வதைப் பாராமல் கல்லூரி நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டு விளையாட்டுத் துறைக்கும் நேரத்தை ஒதுக்குவதைக் கண்டு வியப்புற்றார். அவருக்கே அது 'டானிக்' மாதிரி இருந்தது. தம்முடைய துறையின் மீது முதல்வர் நேரடி கவனம் செலுத்துகிறார் என்பதால் தலைக்குள் இன்னும் கொஞ்சம் கனம் ஏறியது. முதல்வரிடம் அலட்டல், தற்பெருமை எல்லாம் காட்டிக்கொள்வதில்லை என்றாலும் கல்லூரியில் மற்றவரிடம் எல்லாம் இவரது அலட்டலும் தற்பெருமையும் சிலரிடம் சலிப்பையும் வெறுப்பையும் சம்பாதிக்கச் செய்தது. கமல்ராஜ் மற்றவர்களிடம் நன்றாகப் பழகினார். ஆனால் தம்மை மிஞ்ச எவருமில்லை என்ற மனப்போக்கு. முதல்வரிடம் பெட்டி பாம்பாக அடங்கிக் கிடப்பார். அவர் ஏதாவது சொன்னால் முதல்வரின் ஒரு பார்வையே அவரது சப்த நாடிகளையும் ஒடிக்க போதுமானதாக இருந்தது. ஆனால் அவருக்கு என்று ஏற்பட்ட ஒரு வட்டத்தைத் தவிர மற்றவருக்கெல்லாம் அவரைப் பிடிக்கவேயில்லை. முதல்வர் மட்டும் அவரை 'மிஸ்டர் கமல்ராஜ்' என்று அழைத்தார். மற்றவர்கள் தம்மை கேப்டன் ராஜ் என்றுதான் அழைக்கும்படி அவர் செய்துவிட்டார்.

கமல்ராஜின் கடுமையான முயற்சி, மாணாக்கர்களின் ஒத்துழைப்பு, விளையாட்டுத் துறையில் மற்றவர்களின் ஆதரவு எல்லாவற்றிற்கும் மேலாக முதல்வரின் ஊக்கம் கல்லூரியின் விளையாட்டு அணிகள் எல்லாப் போட்டிகளிலும் முதன்மை வகிக்கத் துவங்கின. group, single என்று எந்தப் போட்டியானாலும் சரி, நிருபமாவின் கல்லூரிதான் என்றாகி விட்டது.

நிருபமா மற்றவர்களிடம் நன்றாக பழகினாலும் ஒரு இடைவெளி வைத்துத்தான் பழகுவார். அதிலும் கமல்ராஜிடம் அந்த இடைவெளி கொஞ்சம் அதிகமாகவே வைத்துக் கொண்டார். காரணம் கமல்ராஜின் தற்பெருமைதான். முதல்வரிடம். அவர் தற்பெருமை பட்டுக் கொள்ளவில்லை என்றாலும் இந்த மனப்போக்கு உள்ளவரிடம் நிருபமாவிற்கு பிடித்தம் ஏற்படவில்லை. தம்முடைய சாதனைகளுக்கே நிருபமா என்றும் தற்பெருமை அடைந்ததில்லை. அந்த குணம் அவரிடம் என்றுமே இருந்ததில்லை. கமல்ராஜிடம் தேவைக்கு மேலே அவர் பேசுவது கிடையாது. மாணாக்கர்களுக்கு உற்சாகம் அளிக்கத்தான் அவர் பயிற்சியின்போதும் சரி, போட்டியின்போதும் சரி அங்கு சென்று வந்தார். ஒருசில சமயம் வெளியூருக்கும் தாளாளரையும் அழைத்துச் சென்று வந்தார். மற்றவர்களிடம் இருக்கும் நெருக்கத்தை அவர் என்றும் கமல்ராஜிடம் கொண்டதில்லை. இருப்பினும் தம் திறமை மீது முதல்வருக்கு தனி ஆர்வம் உண்டு என்று கமல்ராஜ் எண்ணுகிறார் என்றும் நிருபமா அறிவார். அதைப்பற்றி நிருபமா அதிக கவனம் செலுத்துவதில்லை.

கமல்ராஜை சகித்துக்கொள்ள முடியாத சிலர், அவருடைய வளர்ச்சியில் பொறாமைக் கொண்ட சிலர் தமக்கு வேண்டிய அறக்கட்டளையின் உறுப்பினர் ஒருவரிடம் ஏதோ ஒன்று சொல்லிவிட அவரும் அது உண்மை என்று நம்பி உடனே விசாரணை நடத்த வேண்டும் அது இது என்று குதிக்க தாளாளரும் அதற்கு இணங்கினார். இருப்பினும் முதல்வரை ஒரு வார்த்தை கேட்கலாம் என்று சொன்னபோது அந்த உறுப்பினரோ தமக்கு இருந்த வேகத்தில் இந்த விசாரணைக்கு முதல்வரின் அனுமதி எதற்கு? அறக்கட்டளையே செய்யலாம் என்று கூறிவிட்டார். ஆனால் தாளாளர் சம்மதிக்கவில்லை.

முதல்வரை அழைத்து விஷயத்தைச் சொன்னார். நிருபமாவும் அமைதியாகக் கேட்டுக்கொண்டு "விசாரணை நடத்துவதா இல்லையா என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். கல்லூரியில் பணியாற்றுபவர் ஒருவரைப் பற்றி ஒரு புகார் வருகிறது என்றால் முதலில் முதல்வரிடம்தான் அதைப்பற்றி விசாரிக்க வேண்டும். இது போன்ற சம்பவம் நடந்ததா என்று கேட்க வேண்டும். நான் என்னைப்பற்றி தற்பெருமைபட்டுக் கொள்கிறேன் என்று எண்ண வேண்டாம், இக்கல்லூரியிலும் இதைச் சேர்ந்த விடுதிகளிலும் ஒரு எறும்பு ஊரினாலும் அது எனக்குத் தெரியாமல் ஊராது என்று தன்னம்பிக்கையோடு கூறுவேன். நான் வெளியூர் சென்றாலும் இங்கு நடப்பவை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் இருப்பேன். அத்துணை நம்பிக்கையான ஊழியர்கள் இங்கு பணியாற்றுகிறார்கள். எனக்குத் தெரியாமல் நீங்கள் சொல்கிற சம்பவம் நடந்தது என்று நிரூபியுங்கள். நான் அடுத்த நிமிடமே இக்கல்லூரியிலிருந்து விலகிக் கொள்கிறேன். இனி எந்த ஒரு பதவியும் நான் ஏற்கத் தகுதியற்றவள் என்றும் முடிவுசெய்து வீட்டை மட்டும் கவனித்துக் கொள்கிறேன்" என்றார்.

"இச்சம்பவம் கல்லூரியில் நடந்தது அல்ல" என்றார் உறுப்பினர்.

"கல்லூரியில் நடக்கவில்லை என்றால் கேம்ப் போன இடத்தில் நடந்ததா?"

"இல்லை."

"கல்லூரிக்குச் சம்பந்தமே இல்லாத ஒன்றைப் பற்றி நிர்வாகம் ஏன் தம்மை வருத்திக் கொள்ள வேண்டும்? நான் அறிந்தவரை மிஸ்டர் கமல்ராஜ் மிகவும் கண்ணியமானவர். அவர் மாணாக்கர்களிடமும் சக ஊழியர்களிடமும் பழகுவதை நான் நேரில் கண்டுள்ளேன். கல்லூரி நேரத்தில் நான் கல்லூரியில் 'ரவுண்ட்ஸ்' வருவது உங்களுக்குத் தெரியும். எந்த நேரத்திலும் எந்த ஓர் ஆட்சேபிக்கக்கூடிய நிலையிலும் நான் அவரைக் கண்டதில்லை. அவரும் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரைத்தேடி வருபவர்களில் இக்கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளார்கள். ஆகவே அவர் இதுபோன்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அவர் அலட்டல் பேர்வழியாக இருக்கலாம். தற்பெருமை பட்டுக் கொள்ளலாம். அது அவரது தனிப்பட்ட குணம். அவ்வளவுதான். மற்றபடி இழிவானச் செயல்களை அவர் செய்யக்கூடியவர் இல்லை. எவர் அந்தப் புகாரைக் கொடுத்தார்களோ அவர்களை சம்பவத்தின் முழு விவரத்தையும் தந்து நிரூபிக்கச் சொல்லுங்கள். நிரூபணமான பிறகு கல்லூரியின் முதல்வராகிய நான் விசாரணை நடத்தி அறிக்கைத் தருகிறேன். பிறகு அறக்கட்டளையின் உறுப்பினர் குழு என்ன நடவடிக்கை எடுக்கணும் என்று தீர்மானிக்கட்டும்" என்று உறுதியுடன் கூறியவுடன் தாளாளரும் "ஆமாம். புகார் கொடுத்தவர்கள் சந்தர்ப்ப சாட்சியங்கள் கொண்டு வரட்டும். எழுத்து மூலமாகவும் புகார் தரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டார். அத்துடன் அந்த விஷயம் முடிவுற்றது.

.....தொடரும்


# ஆள் பாதி ஆடை பாதி!

ஆள்பாதி, ஆடைபாதி என்று எந்த அர்த்தத்தில் அன்று கூறினார்களோ, இன்று பலர்- குறிப்பாக பெண்கள் இப்படித்தான் காட்சியளிக்கிறார்கள், தற்போதைய இளம் பெண்கள் அங்க அசைவுகளை வெளிப்படுத்தும் வகையில் T. Shirt, ஜீன்ஸ், கிழித்து விடப்பட்ட மிடி. உடம்பை பிடிக்கும் உடைகளை வெளியில் செல்லும்போது, பெண்களே அருவெறுப்புடன் திரும்பி பார்க்கும் வகையில் அணிகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் பெற்றோர்கள். தங்கள் குழந்தைகளை சுதந்திரமாக வளர்க்கிறேன் என்று அதிக உரிமை கொடுத்து விடுகிறார்கள். அந்த உரிமையை உடை விஷயத்தில் தாராளமாக எடுத்துக் கொள்வதால் பார்ப்பவர்களை வெறுப்படைய வைக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு டி.வி.யில் ஒளிபரப்பிய இளைஞர்கள் பேட்டியில், 'பெண்கள் அணியும் உடைகள்தான் எங்களை கிண்டலும், கேலியும் செய்ய வைக்கிறது' என்கிறார்கள். அத்தோடு கற்பழிப்புகள் பெருகுவதற்கு இதுதான் முதல் காரணம் என்று காவல் அதிகாரி கூறுகிறார். இளம் பெண்கள் முடியையும் ஆண்களை போல் வெட்டிக் கொள்வதால் ஆணா, 'பெண்ணா என நம் மனதில் பட்டிமன்றமே நடக்கிறது. நம் நடை, உடை, பாவனைகளை வைத்து கையெடுத்துக் கும்பிடத் தோன்றாவிட்டாலும், கையசைத்து கண்ணடிக்காதபடி நம் உடைகளில் கவனம் செலுத்தினால் மற்றவர்கள் நம்மை மதிப்பதை நாமே உணர முடியும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை 'சுதந்திரம்' என்ற பெயரில் தவறான பாதைக்கு வழிகாட்டுகிறார்களோ என்ற அச்சம் தோன்றுகிறது.

இந்த ஆடை விஷயத்தில் திருமணமான பெண்கள்கூட விதி விலக்கல்ல. தங்கள் முதுகில், கைகளில் ஒரு ஜன்னலையே கட்டி விடுகிறார்கள்... ஸாரி தைத்து விடுகிறார்கள். அதோடு முடிச்சுகள், திலகம், வட்டம், சதுரம், என கணித வடிவங்களை கைகளிலும், முதுகிலும் தைத்துப் போட்டுக் கொண்டு கணவருடன் சென்றால் கூட பக்கத்தில் செல்பவர்களுக்கு இடிக்கத்தான் தோன்றுகிறது. சிலர் முதுகுப் பக்க கழுத்து இறக்கத்தை இடுப்பளவுக்கு கொண்டு வந்து இரண்டு விரல் அளவே வைத்து தைத்திருக்கிறார்கள். இதை பார்க்கும் போது முதுகு இ'நக்கிறது. ஜாக்கெட் இல்லை என்ற புதுக்கவிதைதான் பாடத் தோன்றுகிறது. எம்.எஸ். சுப்புலட்சுமியையோ, இந்திரா காந்தியையோ, சோனியா காந்தியையோ ஏன் நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. மேலை நாட்டு கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்த சோனியா உடம்பு தெரியாமல் சேலை உடுத்தும் அழகைப் பார்த்து வியக்கிறோம். அப்படியிருக்க இந்திய கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்த நாம் ஏன் பெண்ணுக்குரிய குணங்களை மறக்க வேண்டும், பெண்மையின் நளினம் எங்கே போயிற்று என மனதில் ஐயம் தோன்றுகிறது. பெண்களே சிந்தியுங்கள். எத்தனையோ மாற்றங்கள் வரலாம். அழகை வெளிப்படுத்த எத்தனையோ வழிகள் உள்ளது. உடம்பு தெரிய உடை உடுத்துவதுதான் அழகு என்றால் நாட்டில் வன்முறைகள் அதிகரிக்க நாமே காரணமாகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ✦



- திருமதி பத்மாமணி




**வா**ருங்கள் வாசகர்களே! இலக்கணப் பாடத்தை தொடர்ந்து வருவது ஒரு உரையாடலாகத்தான் இருக்கும் என ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? உங்களுடைய ஊகம் சரிதான். ஆனால் இந்த முறை உரையாடல் சற்று வித்தியாசமாக இருக்கும்.

இதுவரை, ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்ற உரையாடலில், அறிமுகப்படுத்துவது (Introductions), விவரம் கேட்டறிவது (Asking for information) போன்ற ஏதாவது குறிப்பிட்ட ஒன்றை பற்றி அறிந்து கொண்டீர்கள். ஆனால், இந்த இதழில், பொது இடங்களில் (குறிப்பாக வங்கிகளில்) பல சந்தர்ப்பங்களில் எப்படி உரையாடுவது என்பதைப் பார்க்கலாம்.

இந்த இதழில், சேமிப்பு வங்கி கணக்கு ஆரம்பிப்பது பற்றியும், லாக்கர் வாடகைக்கு எடுப்பது பற்றியும் பார்க்கலாம்.

Mrs. Rekha Roy wants to open a savings bank account *(சேமிப்பு வங்கி கணக்கு)* in State Bank of India. She goes to the bank with her neighbour *(நெய்பர் - அக்கம் பக்கத்தில் வசிப்பவர்)* Mrs. Suma Ramnath who already has an account in that Bank.

They approach *(அப்ரோச் - அணுகுதல்)* a Clerk.

**Suma :** Excuse me, sir. Iam Mrs. Suma Ramnath. I have an account in this bank. (Introduces Rekha). She is my friend Mrs. Rekha Roy. She * 1 too wants to open an account here. Will you please help us?

**Clerk :** * 2 By all means. Please be seated. (They sit)

**Clerk :** (He * 3 hands them a form). Please fill up all the particulars in this form, madam - your name, address, your husband's name and occupation. *(ஆக்யுபேஷன் - உத்தியோகம்).*

**Rekha :** (Fills up the form) * 4 Here it is, Sir.

**Clerk (to Suma) :** Madam, please fill up the second section of the form. (*5 Mrs. Suma does so)

**Clerk (to Rekha) :** Madam, do you want the cheque facility?

**Rekha :** yes, of course.

**Clerk :** *6 In that case, you should deposit *7 Rs 1000/-. That is the minimum balance to have the cheque facility. (She gives him the money)

**Clerk :** Please come tomorrow and collect your pass book and cheque book, madam.

**Rekha :** *8 I will do so. sir.

Mrs. Rekha wants to * 9 hire a locker in the bank. She goes to the bank and talks to the manager.

**Rekha (to the manager) :** good morning, Sir. I have an account in your bank. I would like to hire a lacker to keep my jewels and valuables. *(வேல்யுபில்ஸ் - விலை உயர்ந்த பொருட்கள்).*

**Manager :** Please meet Mr. Kumar, our Senior Accountant. * 10 He will do the needful.

(She meets Mr. kumar and talks about the locker).

**Mr. Kumar :** Madam, please fill up this form. Do you have a deposit of Rs. 10,000/- in your account.

**Rekha :** yes, I have Rs. 12,000/- in my account.

**Mr. Kumar :** That's good. The locker rent * 11 is Rs 200/- per year. (She pays the money in the cash counter and comes back to Mr. kumar).

**Mr. Kumar :** The locker number is 126. It has two keys. One will be with you and we will retain *(ரிடெய்ன் - வைத்துக் கொள்ளுதல்)* the other one. you can only open the locker with both the keys, but you can close it with your key alone. Please come and * 12 have a look at the locker.

(Mr. Kumar opens the locker and gives one key to Mrs. Rekha).

**Mr. kumar :** you can lock it and take the key. Please remember to keep the key safely.

**Rekha :** Thank you.

**Mr. Kumar :** you are most welcome.

இந்த உரையாடலில் இடம் பெற்றுள்ள சில இயல்புகளைப் பற்றி அடுதத இதழில் பார்ப்போம்?

இனி, குறுக்கெழுத்துப் போட்டி. இந்த முறை வங்கியில் உரையாடுவது பற்றி பார்த்திர்கள் அல்லவா? அதனால் குறுக்கெழுத்துப் போட்டியும் அதைப் பற்றியே இருக்கும்.

கீழே உள்ள கட்டங்களில் வங்கியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் வங்கி சம்பந்தப்பட்ட சொற்கள் ஒளிந்துள்ளன. மொத்தம் 10 சொற்கள். அவற்றைக் கண்டு பிடித்து வட்டமிடுங்கள்.

**க்விஸ் 13**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | A | C | D | A | C | C | O | U | N | T | B |
| N | B | P | A | S | S | B | O | O | K | G | A |
| T | E | I | F | L | O | C | K | E | R | H | L |
| E | D | I | N | I | N | B | R | B | S | T | A |
| R | J | E | K | T | L | N | O | E | P | Q | N |
| E | L | M | B | R | E | O | S | T | D | U | C |
| S | V | W | A | I | B | R | A | C | D | I | E |
| T | Z | J | I | H | T | G | E | N | E | F | T |
| X | C | A | S | H | C | O | U | N | T | E | R |
| Y | K | L | M | N | D | E | P | O | S | I | T |

வழக்கம் போல் பரிசுகள். இநத பயிற்சியை உங்களுக்கு தொடர்ந்து அளிப்பவர்கள்.

*பென்டகன் எஜ்யுகேஷன் லிமிடெட்*

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்: குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகளை போஸ்ட் கார்டில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

இதுவரை, நீங்கள் படித்த உரையாடல் பென்டகன் சூப்பர் இங்கிலீஷ் ஃப்ளூயன்ஸி கோர்ஸ்'-ல் இருந்து எடுக்கப்பட்ட ஒரு துணுக்கு.

# புத்தம்புதிய உயர்தரமான சமையல் எண்ணெ




சரக்கு உள்ள வரை மட்டும்

கோடிக்கணக்காண இல்லத்தரசிகளின் எதிர்பார்ப்பின் நிறைவேறுதல் !

சமையலின் தரத்தையும், உடல் நலத்தையும், குடும்ப ஆரோக்கியத்தையும் விரும்புகின்ற கோடிக்கணக்கான இல்லத்தரசிகளின் இரகசியம் KKR சூரியகாந்தி எண்ணெய் தான்.

KKR சூரியகாந்தி எண்ணெய் ! ஆம். சுவையை அதிகமாக்கி அசல் ருசியை தருகிறது. கொழுப்புச்சத்து இல்லாமல், புரத சத்துக்கள் அதிகமாக இருப்பதால் உடலில் ஆரோக்கியத்தை ஏற்படுத்துகிறது. உங்கள் எதிர்பார்ப்பு புதிய KKR சூரியகாந்தி எண்ணெய் தான்.

KKR SUNFLOWER OIL

உயர்தரமான சமையல் எண்ணெய்
உயர்ந்த தரத்தை விரும்புவோர்க்கு !


KKR ஆயில் & எடிபிள்ஸ்
(டிவிசன் ஆப் SBW லிட்.)
126, Dr. இராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600 004.
Ph : 8548393, 8548394, 8548395





அண்ணாமலை சினி கம்பைன்ஸ்
சூப்பர் ஸ்டார்
ரஜினிகாந்த் நடிக்கும்

# அருணாசலம்



**கெ**ட்டியான ரப்பர் ஷீட்டினால் ஆன அந்தச் சிறுபடகு, காற்றை உண்டு, உப்பி, ஊதி மிதந்து கொண்டிருந்தது.

மஞ்சரியை அதில் ஏற்றிவிட முனைந்தான் சுதாகரன். ஆவலும் ஏக்கமும், அச்சமுமாய் அவளது பார்வையைச் சந்தித்ததும் தன்னை மறந்தான்.

எலும்பு நொறுங்கிவிடும் போல அவளை இறுக அணைத்தவன், உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "சீக்கிரமாக இங்கிருந்து கிளம்பி விட வேண்டும், மஞ்சு. கனகலிங்கத்திடம் என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றனவோ, தெரியாது. அவரிடம் துப்பாக்கி லைசன்ஸ் இருப்பதாகத் தாத்தா சொல்லியிருக்கிறார். எதற்கும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. ஏறு." என்று அவளைப் படகில் ஏற்றிவிட்டு, சகுந்தலாவுக்கு உதவக் கைநீட்டியபோதுதான் அவள் தண்ணீரில் இறங்கவே இல்லை என்பது தெரிந்தது.

மனைவியிடமிருந்து கவனத்தை முழுமையாக மீட்டுத் திரும்பி, "வாருங்கள் சித்தி. சீக்கிரம்!" என்று

# பொங்கட்டும் இன்ப உறவு

அவளை அழைத்தான்.

ஆனால், கரையிலேயே நின்றபடி, "இது....இந்தப் படகைத் துடுப்பினால்தான் தள்ள வேண்டுமா? மோட்டார் இல்லையே! வேகம் போகாதே!" என்று சகுந்தலா கவலைப்பட்டாள்.

"பரவாயில்லை வாருங்கள். முடிந்த அளவு வேகமாய்ப் போய் விடலாம்." என்று அவளைத் துரிதப்படுத்தினான், சுதாகரன்.

"இப்படி இருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தினால் அந்தப் படகின் சாவியை அவர் தூங்கியதும் எடுத்து வந்தேன். இந்தா சுதாகர். இதை விட்டுவிட்டு, மஞ்சு மாமாவுடைய படகை எடுத்துப்போ." என்று சாவியை நீட்டினாள் அவள்.

அப்போதுதான் அவளுடைய அத்தையின் எண்ணம் புரிய, "போ' என்றால் என்ன அர்த்தம்? மாமா

## ரமணிசந்திரன்

வின் கொடுமைகளுக்கு உங்களை இரையாகவிட்டு நாங்கள் மட்டுமாய்ப் போவோம் என்றா நினைத்தீர்கள்? நன்றாகத்தான் இருக்கிறது. வாருங்கள். மரியாதையாக வந்து படகில் ஏறுங்கள்!" என்று மஞ்சரி அவளை அதட்டினாள்.

"ஆமாம். வாருங்கள், சித்தி. இதிலேயே போவோம். மோட்டார்ப் படகை எடுத்தால் சத்தம் கேட்கும். எனக்குப் பெரிய படகு ஓட்டிப் பழக்கமும் இல்லை. இந்தப் பாறைகளின் நடுவே அதை ஓட்டுவதை விட, இதைச் சமாளிப்பது எனக்கு எளிது. வாருங்கள்" என்றான் சுதாகரன்.

தானின்றி, அவர்களை மட்டுமாக அனுப்பிவிட, சகுந்தலா முயன்றாள்.

"எங்களை ஒரேயடியாக நன்றி கெட்டவர்களாக எண்ணிவிட்டீர்களா, அத்தை? மாமா உங்களை என்னென்ன கொடுமை செய்திருக்கிறார் என்று தெரிந்த பிறகும், அவர் தயவில் உங்களை இங்கே தனியே விட்டுப் போக எங்களால் முடியாது!" என்று அறிவித்தபடி, மது மஞ்சரியும் படகிலிருந்து இறங்கி வந்துவிட்டாள்.

"ஆமாம். எங்களோடு வந்துவிடுங்கள், சித்தி. தயவு செய்து நேரத்தை வீணாக்காதீர்கள்." என்று சுதாகரனும் வேண்டியபோதும், சகுந்தலா ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

சிறு வாக்குவாதத்தின் பின், கடைசியாக, "மஞ்சரி, சுதாகர்" இருவரையும் அழுத்தமான குரலில் அழைத்து சகுந்தலா பேசினாள். "அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் என் கணவர். அவர், பெரும் அநியாயம் செய்துவிடாமல் தடுப்பதற்காகவே உன்னைத் தப்புவிக்க முயல்கிறேன், மஞ்சரி. அதற்காக, நானும், அவரைப் பிரிந்து வந்து விடுவேன் என்று எண்ணாதே. நீ தப்பிப் போய் விட்டாய் என்பதை அறிந்ததும் முதலில் அவர் குதிப்பார்தான். ஆனால், அதில் பயனில்லை என்று அறிந்ததும் அடங்கி விடுவார். அதன்பிறகு, அவரோடு இருந்து, அவரது போக்கு தவறு என்று அவருக்கு உணர்த்தித் திருத்துவது என் கடமை. நீ என்ன சொன்னாலும் அந்தக் கடமையிலிருந்து நான் வழுவுவதாக இல்லை. இந்தப் பயனற்ற வாதாடலில் நேரத்தை வீணாக்குவது, சுதாகர் சொன்னதுபோல அனாவசியமாக ஆபத்தை இழுத்துக் கொள்வதாகவே, முடியலாம். உன் மாமாவின் துப்பாக்கியும் இங்குதான் இருக்கிறது, மஞ்சு. எனவே, வீணாகக் கால தாமதம் செய்யாமல் உடனே கிளம்புங்கள்!" என்று உறுதியான குரலில், பெரியவளாய் உத்திரவிட்டாள்.

அவளது குரலின் தீவிரம் உணர்ந்து மற்ற இருவருமே சற்று மலைத்தனர். உடனே சமாளித்து சுதாகர் சொன்னான். "சித்தி சொல்வது சரிதான், மஞ்சரி. வேறு வழியில்லை என்று ஆகிவிட்டால், உன் மாமாவும்கூட நடப்பை ஒப்புக் கொண்டு விடலாம்.... ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும்? அத்தோடு, நம்முடையதின் கிளைத்தொழிலாக அவருக்கு ஏதாவது ஏற்படுத்தித் தருவதாக இருக்கிறோம் என்றும் அவரிடம் சொல்லுங்கள், சித்தி. அதிலேயே அவர் சமாதானமாகி விடக்கூடும். நீ கிளம்பு மஞ்சு." என்று மனைவியை அழைத்தான்.

"ஆனால் சுதா, முன்பு மாமா அத்தையை......" என்று மஞ்சரி அப்போதும் தொடங்க, குறுக்கிட்டு, "அதை எல்லாம் ஏன் செய்தார் என்பதையும் சேர்த்து எண்ணிப் பார்க்க வேண்டும், மஞ்சம்மா. உன் மாமா மோசமானவர் என்றாலும் என் மீது ஆசையும் உள்ளவரே. அதனால், எனக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. கிளம்பு.



சீக்கிரம்!" என்று மருமகளை விரட்டினாள் சகுந்தலா.

"நாம் ஒன்றும் சித்தியை 'அம்போ' என்று அனாதை போல விட்டுவிட மாட்டோம் என்று உன் மாமாவுக்குத் தெரியாதா, மஞ்சரி. அப்படி அவர் கைநீட்ட முயன்றால், ஆட்களோடு சுதாகர் வரப்போவதாகச் சொன்னான் என்று சொல்லுங்கள், சித்தி. மெய்யும் அதுதான். நான் மீண்டும் வருவேன் - தகுந்த பாதுகாப்போடு. வா மஞ்சு." என்று ஒருவாறு மஞ்சரியை மீண்டும் வள்ளத்துக்குச் சுதாகர் அழைத்துச் சென்றபோது, "ஏய்....என்ன அங்கே?!" என்று கனகலிங்கத்தின் கூப்பாடு கேட்டது.

கடல் காற்றுதான் இவர்களது பேச்சைக் கனகலிங்கத்தின் காதுவரை எடுத்துச் சென்றதோ அல்லது மனைவியை எண்ணிக் கிளர்ச்சியுற்றிருந்ததால் அவரால்தான் நன்றாகத் தூங்க முடியவில்லையோ - கனகலிங்கம் அன்று விரைவிலேயே எழுந்து விட்டார்.

காற்றுவாக்கில் கேட்ட பேச்சுக் குரல் அதுவரை கண்ட கனவின் தொடர் அல்ல என்று புரியவும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்.






பெண்கள் இருவரையும் சுதாகரோடு வெளியே பார்க்கவும் அவருக்குச் சற்று நேரம் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அந்த ராஸ்கல் சுதாகர்தான்! மீண்டும் அவரது வழியில் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறான். கையெட்டும் தூரம் வந்த அறுபது கோடி மீண்டும் கைவிட்டுப் போகிறது! அவசரமாகத் தலையணையைத் தூக்கி எறிந்து விட்டுப் பார்த்தால் மோட்டார் சாவி அங்கில்லை. பாவி சுதாகர்! பாதகி சகுந்தலா!

கண்மண் தெரியாத கோபத்தோடு கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கடற்கரைக்கு ஓடிவந்தார்.

"சீக்கிரம் போங்கள்!" என்று சகுந்தலா விரட்ட, "ஜாக்கிரதை, சித்தீ!" என்ற எச்சரிக்கையோடு சுதாகர் பாய்ந்து சென்று படகில் ஏறிக்கொண்டு, முடிந்த அளவு வேகமாகப் படகைச் செலுத்தலானான்.

தென்னிந்தியாவின் கிழக்குக் கடலோரம் ஆழமற்றது. மணற்பாங்காகவும் இருக்கும். ஆனால் மேற்குக் கரை அப்படிப்பட்டது அல்ல. ஆங்காங்கே பாறைகள் உண்டு. மலை முகடுகளையும் அவற்றை ஒட்டிய பள்ளத் தாக்குகளையும் போல, இந்தப் பெரும் பாறைகளை அடுத்துக் கடல் மிக ஆழமாகவும் இருக்கும்.

கனகலிங்கத்துக்கு அந்த இடம் மனப்பாடம். கண்ணைக் கட்டி விட்டால்கூட அதில் படகு ஓட்டக் கூடியவர். எனவே, "நில்லுடா, டேய்...." என்று ஓடி வந்தவர், கிளம்பிச் சில பல வினாடிகளே ஆகியிருந்த போதும், படகு செல்லுமிடம் நிலை கொள்ளாத ஆழம் என்பதை அறிந்திருந்தார்.

இனி, நீரில் இறங்கி ஓடி, தப்பிச் செல்கிறவர்களைப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து, "சாவி எங்கேடி?" என்று கத்தியபடி மனைவியிடம் திரும்பினார்.

கணவரின் உத்தேசத்தைச் சகுந்தலா சரியாகவே ஊகித்தாள்.

இந்த மோட்டார்ப் படகில் சென்று துரத்தினால், சுதாகர், மஞ்சரியின் கதி என்ன ஆகும்?

வினாடியில் யோசித்து, கனகலிங்கம் நெருங்கி வருமுன், பலம் கொண்ட மட்டும் சாவியைக் கடலுக்குள் வீசி எறிந்தாள்.

'க்ளக்' என்ற சத்தத்துடன் கடலில் சாவி விழுந்து மறையவும் கனகலிங்கம் சில வினாடி நேரம் செயலற்றுத் திகைத்து நின்றார்.

உடனேயே, ஆவேசத்துடன், "பாவீ! ராட்சசீ! கூடவே இருந்து குழிபறித்தாயா? கட்டிலில், பக்கத்தில் உட்கார்ந்து, என் கையைப் பிடித்து ஏமாற்றினாயா? பாதகீ! பாதகீ!" என்று அலறினார்.

அசையாமல் நின்று, "ஏமாறுகிறவர் இருக்கிற வரைக்கும், ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றிக் கொண்டே தான் இருப்பார்கள்!" என்றாள் மனைவி

"என் வார்த்தைகளையே திருப்பிப் படிக்கிறாயா? பிசாசு! உன்னை.....உன்னை....!" என்று கை ஓங்கியவரை அலட்சியம் செய்து, கடல்புறமாய் இரண்டு எட்டு எடுத்து வைத்து, "மஞ்சுக் கண்ணு, இனி, சுதாகரன்தான் உனக்கு எல்லாம். நினைவு வைத்துக்கொள். அன்று காத்த உன் அத்தான், அவன், எப்போதுமே உன்னைக் காப்பான். அத்தானை விடாமல் பிடித்துக் கொள், கண்ணு" என்று இயன்ற மட்டும் உரக்க மொழிந்தாள்.

அத்தையின் வார்த்தைகள், அவளுக்கு எதையோ நினைவூட்ட முயல்வது மஞ்சரிக்குப் புரிந்தது.

## நாய் விற்ற காசு குரைக்குமா?

'பெண்மணி' இதழில் 'இந்த பூக்களும் அர்ச்சனைக்குரியவை' கட்டுரை படித்தேன். பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகளில் இதைவிட தலையாயது, பெண்களே தம் வர்க்கத்தை கொடுமைப்படுத்துவதுதான். ஆம், பெற்ற தாயைத்தவிர உடன்பிறந்த சகோதரி முதல் புகுந்த வீட்டு நாத்தனார், மாமியார் வரையிலும்; ஏன் சமுதாயத்திலும்கூடத் தான்.

அவள் கண் 'கொள்ளிக்கண்' பிள்ளை குட்டி இல்லாதவள்; கண் பட்டால் நம்மால் எழ முடியாது என எந்த ஆணாவது கூறுகிறானா? ஒரு பெண்ணுக்கு குழந்தை இல்லை என்றால் திருமணமான நாளில் இருந்து பார்க்கும் போதெல்லாம் ரொம்பவே அக்கறைப் படுவதுபோல், இன்னமும் குளிச்சுண்டு தான் இருக்கியா? எங்கள் வம்சத்தில் யாருமே இப்படி இல்லை; பகவான் கண்ணைத் திறக்கலியா? சஷ்டி விரதம், சோமவாரம் இருந்தியா? எத்தனை கிண்டல் பேச்சுகள்? கேள்விக்கணைகள்? சக்கர வியூகத்தில் மாட்டிக் கொண்ட அபிமன்யூகூட இதுபோல் தவித்திருக்க மாட்டானே!

இதெல்லாம் போகட்டும் ஒரு கல்யாணம் காட்சி என்று போனால் என்ன மரியாதை தெரியுமா? பெண்ணை கரையேற்ற, குழந்தை இல்லாதவர்களிடம் ஆயிரக்கணக்கில் உதவி, பிச்சை பெற்றாலும் சபை நடுவே கல்யாண அமர்க்களத்தில் கவனிக்கவே இல்லை! ஊஞ்சலில் வைத்து மணமக்களை பச்சைப்பிடி சுற்றும்போது எங்கு போனாய்? என்று கேள்வி வேறு. மற்ற நேரங்களில் 'மலடி' என்று வசைபாடும் பெண்ணரசிகள், குழந்தை இல்லாதவர்கள் பக்கத்திலேயே



நின்றிருந்தால்கூட கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தி விட்டு அதை மறைக்க இப்படி ஒரு பசப்பல் வார்த்தைகள், தாராளமாய் அள்ளித்தரும் மொய்ப் பணத்தில் அந்த தோஷம் இருக்காதா? நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும் என்ற தைரியம்தானே!

இவ்வாறு பெண்ணை (குழந்தையில்லாதவர்களை) குறைகூறி புண்படுத்தி, மனதை ரத்தம் கசிய செய்பவர்கள் எந்த ஆணுமில்லை. பெண்கள்தான் இந்த வேலையை மிகச் சரியாக செய்கிறார்கள். தயவுசெய்து நமது சகோதரிகளுக்கு ஒன்று சொல்கிறேன். பிறப்போ, இறப்போ எதுவுமே நம் கையில் இல்லை. நாம் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் உள்ளிழுக்கும் மூச்சை வெளியே விடுவதற்கும் அவன் 'அருள்' அன்றி ஆகாது. எனவே தயவுசெய்து இனியாவது 'மலடி' என்ற சொல்லை எக்காரணம் கொண்டும் கூறாமல் இருப்போம் என சபதம் பூண்டாலென்ன? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று கூறிய பாரதி இன்று இருந்தால் 'மலடி என்று பெண்ணை கூறும் மடயரை கொளுத்துவோம்' என்று எழுதி இருப்பார் என்றால் மிகையே இல்லை. • ✦

- சந்திரா ஜானகிராமன்

ஆனால் அதை யோசிக்கும் அவகாசம் கொடாமல், 'பிடித்து கொள்'ளா? கழுதையை உயிரோடு விட்டால் தான பிடித்துக் கொள்வதும் பிழைப்பதும்? சொத்தை எழுதி வாங்கிய பாவி, 'மனைவியைக் கொன்று தீர்த்து விட்டதாக ஆகட்டும்!'' என்று கூறிக் குறிபார்த்துக் கனகலிங்கம் மருமகளை நோக்கிச் சுட்டார்.

அனிச்சைச் செயல்போல மின்னல் விரைவுடன் குறுக்கே பாய்ந்து, மஞ்சரியின்மீது பாய இருந்த குண்டை சுதாகர் தன் உடலில் ஏற்றான்.

ஒரு கோணமாய் நீட்டிக் கொண்டிருந்த, நெடிய பாறையொன்றைப் படகு கடந்து கொண்டிருந்த நேரம் அது.

சுதாகர் பாய்ந்ததும் குண்டு பாய்ந்த வேகமும் சேர்ந்துகொள்ள, அந்தச் சிறுபடகு ஒரு பேயாட்டம் ஆடிக் கவிழ்ந்து, பாறையின் பின்னே மறைந்தது.

மஞ்சரி, சுதாகர் இருவருமே, படகுடன் சேர்ந்து முழுக, அந்த இடத்தில் மட்டும் நீரில் செந்நிறம் பரவலாயிற்று.

"ஹாஹ்ஹா!'' என்று உரக்க நகைத்தார் கனகலிங்கம். "பெண்டாட்டியைக் காப்பாற்ற வந்தாயாடா? அவளுக்கு நீந்தத் தெரியாது! உனக்கோ குண்டுக் காயம்! கடல் மீன்களுக்கு நல்லவேட்டைதான். போங்கள்; செத்து ஒழியுங்கள்!'' என்று உறுமியவர், திடுமென நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சியால் மலைத்து நின்ற மனைவியிடம் திரும்பினார்.

"பாவீ! பாதகீ! என் கனவையெல்லாம் பாழாக்கி விட்டாயே, பிசாசே!'' என்று கையாலும் காலாலும் துப்பாக்கிக் கட்டையாலும் அவளை அடித்து உதைத்து, நொறுக்கியவர், கடைசியில் அவராகவே ஓய்ந்து, உட்கார்ந்து, கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினார்.

மடமடவென்று நடந்துவிட்ட நிகழ்ச்சிகளால் மஞ்சரியும் மலைத்துத்தான் போயிருந்தாள்.

கணவன் தன்னைத் தேடி வந்துவிட்டான்; அவன் ஒன்றும், 'விட்டது சனி' என்று ஊர் சுற்றப் போய்விடவில்லை என்பதே அவளுக்குப் பெரும் ஆறுதலை ஏற்படுத்தியிருந்தது. அடுத்து, அவனது சில வினாடி அணைப்பு, அவளது அச்சங்கள் அனைத்தையுமே போக்கி விட்டிருந்தது.

சகுந்தலாவோடு நடந்த வாக்குவாதமும், தொடர்ந்து அவளை விட்டுவிட்டுக் கிளம்ப நேர்ந்ததும் அந்த இனிய மனநிலையைச் சற்று கலைத்தபோதும், அடித்தளத்தில் அமைதியும் ஆனந்தமும் அப்படியேதான் இருந்தன.

கனகலிங்கம் ஓடிவந்தபோதுகூட, திகில் படம் பார்க்கிற மாதிரி ஒரு பரபரப்பு இருந்ததே தவிர, அவள் அப்படி ஒன்றும் பயந்து நடுங்கி விடவில்லை; மாமன் தன்னை மெய்யாகவே சுடுவார் என்று அவள் எதிர்பார்க்கவும் இல்லை.

ஆனால், சகுந்தலாவின் கடைசி வார்த்தைகள், அவள் உள்ளே எதையோ தொட்டுவிட, என்னவென்று அவள் சிந்திக்குமுன், நம்ப இயலாப் பயங்கரம் கண் முன்னே நடந்தேறி விட்டது.

குருதி பெருக, சுதாகரன் கடலில் விழ, அவன் தண்ணீரில் விழுந்து விடாமல், தடுப்பதாக எண்ணி, மஞ்சரியும் அவன் புறமே சரிந்து அவனைப் பிடிக்க முயல, கனமற்ற அந்தப் படகும் கவிழ்ந்து போயிற்று; மஞ்சரியும் தண்ணீருக்குள் செல்லலானாள்.

திக்குமுக்காடிக் கையைக் காலை அடித்து, ஒருவாறு மேலே வந்து பார்த்தால்; பாறைப்பகுதி அவளது முதுகுப் பக்கம் மறைந்துவிடக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல்நீர், பரந்து விரிந்திருக்கக் கண்டாள்.

எவ்வளவு தண்ணீர்! கோடி கோடி கனலிட்டர் உப்புநீர்! சிறு காற்றினால் அலைப்புண்டு கோணல் மாணலான அலைகளுடன் அன்று போலவே..... 'அத்தானை விடாமல் பிடித்துக் கொள், கண்ணூ.....' என்று அம்மா - அவளுடைய அன்னை கதறினாளே, அன்று போல.....ஐயோ, அம்மா சொன்னது சுதாகரைத்தான். அவளுடைய அன்புக் கணவனையேதான்! அவன்தான் அன்று அத்தான்!

ரத்த பந்தம் இல்லை என்றாலும் அன்பின் சொந்தத்தினால் அத்தையும் மாமாவுமாய் ஏற்ற உறவு. அவர்களுடைய மகனாய் 'அத்தான்' என்று அவள் முறை வைத்து அழைத்தது சுதாகரைத்தான்.

அன்று தாத்தா சொன்னபோது ஏற்கவில்லையே! இப்போது அத்தை, அவளுடைய அன்னை அன்று உரைத்த அதே வார்த்தைகளைக் கொண்டு நினைவூட்ட முயன்றபோதுகூட உடனே புரியவில்லையே!

என்ன மோசம்! மோகன்தான் அத்தான்; அவன்தான் காத்தான் என்று மாமா கனகலிங்கம் புளுகியதை நம்பி என்ன மடத்தனம் செய்து விட்டாள்! சே!

நீர்ப்பரப்பில் தத்தளித்தவாறே, "அத்தான்!'' என்று மதுமஞ்சரி வீறிட்டாள். "நீங்கள்தான் அத்தான். நீங்களேதான், அன்று காத்......'' என்று கத்தியவள் நிலை தடுமாறி நீரினுள் சென்று ஒரு மடக்கு உப்புத் தண்ணீரைக் குடித்தாள். கையைக் காலை அடித்து, முயன்று மீண்டும் மேல் மட்டத்துக்கு வந்தாள்.

ஆனால் அவன் எங்கே? அன்று ஒரே லைஃப் பெல்டில் அவளோடு இணைந்து மிதந்தபடி அவளுக்குத் தெம்பூட்டிய அவளுடைய அத்தான் சுதாகர் இப்போது எங்கே போய்விட்டான்?

சுரீலென்றது மஞ்சரிக்கு.

அவனுக்கு – சுதாகருக்குக் குண்டடி பட்டதே! இப்போது அவன்......!;

கண்மூடித்திறக்குமுன் பலநூறு காத வழி சென்று திரும்பியும் வந்துவிடும் வல்லமை படைத்தது மனம் என்பார்கள்.

உள்ளே இழுத்த உப்புநீரோடு, தோன்றிய விதமெல்லாம் போராடி, தண்ணீருக்கு வெளியே இருக்க முயன்ற மஞ்சரியின் மனம், அதன் முழு சக்தியையும் பயன்படுத்தி, சற்றுமுன் நடந்தது, தொடர்ந்து நிகழ்ந்திருக்கக் கூடியது அத்தனையும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

அவளைக் காக்கவென்று குண்டை ஏற்ற சுதாகரன், இப்போது தண்ணீருக்கு அடியில் சமாதியாகி விட்டான்!

இவ்வளவு காலம் கழித்து அவள் அறிந்து கொண்ட உண்மை காலம் கடந்து அல்லவோ தெரிய வந்திருக்கிறது! அவளுடைய அன்புக் கணவன் உயிரிழந்த பிறகு!

அன்று அவன் அழைத்தபோதே மனநல மருத்துவரிடம் சென்றிருந்தால்.....சிகிச்சையை ஏற்றிருந்தால் அப்போதே இது தெரிய வந்திருக்குமே!

இன்று, இந்தத் தகுதியற்றவளுக்காக நெஞ்சிலோ, கழுத்திலோ துப்பாக்கிக் குண்டை ஏற்றுக் கடலின் அடியில் சமாதியாகியிருக்க மாட்டானே! பலி வாங்கி விட்டாளே, பாவி!



**சேமிப்பு...**

...ம் எறும்பும்
சேமிக்கும்போது,
...ம் நாமும்
சேமித்தால், என்ன...

...சேமிப்பு பேரன்பு;
ஆசையின் சேமிப்பு பேராசை;
இன்பத்தின் சேமிப்பு பேரின்பம்.
பேரன்பு பெருமிதம் தரும்,
பேராசை பெருநட்டம் தரும்,
பேரின்பம் ...!

அருகே கடலில் பரவியிருந்த சிவப்பு அவளது ஊகத்தை உறுதிப்படுத்தியது.

அவன் இல்லாத உலகில், அவளுக்கு மட்டும் என்ன வேலை?

உயிர்வாழும் ஆவல், அவளுக்கு அடியோடு விட்டுப் போயிற்று. நீரில் மூழ்காதிருக்கச் செய்து வந்த முயற்சியும் நின்றுவிட, மஞ்சரி மெல்ல நீரினுள் அமிழலானாள்.

விரைவிலேயே அவளது வாய், மூக்கு வழியே உப்பு நீர் உள்ளே சென்று வயிற்றையும் நுரையீரலையும் நிரப்ப, அவள் சுய உணர்வை இழந்தாள்.

மஞ்சரி நினைத்ததுபோல, சுதாகரனுக்கு மார்பிலோ, கழுத்திலோ துப்பாக்கி குண்டு பாய்ந்து விடவில்லை. மனைவியை முழுக்க மறைத்து, குண்டை ஏற்கத்தான் அவன் பாய்ந்தான் என்றாலும், அவன் பாய்ந்த வேகத்தில் படகும் அசைந்ததால், குண்டு அவனது கையைத் தோலும் கொஞ்சம் சதையுமாகச் சிராய்த்ததோடு, அதன் வேக வழியே சென்று விட்டது.

ஆனால், அப்படிச் சென்ற குண்டு, அந்தப் படகையும் துளைத்துச் சென்றதுதான் அநியாயமாகிப் போயிற்று.

மனைவியைக் காப்பதற்காக சுதாகர் இடம் மாறியபோதே தள்ளாட்டம் போட்ட படகு, அதை மிதக்கச் செய்த காற்றும் வேகமாக வெளியேறத் தொடங்கவே, முதலில் விழுந்த சுதாகரின் மேலேயே கவிழ்ந்து சுருண்டு விட்டது.

அவனை மூடினாற்போலக் கிடந்த படகின் ரப்பர் ஷீட்டை ஒருவாறு விலக்கிக் கொண்டு சுதாகர் வெளிப்பட்டபோது, கணவன் மாண்டே போனான் என்று முடிவு செய்து, ஓய்ந்து மஞ்சரி முழுகி விட்டிருந்தாள்.

மதுமஞ்சரியை. சுதாகர் உடனேயே நீருக்கு வெளியே கொண்டு வந்துவிட்டான்.

ஆனால் படகு இல்லாமல், ரத்தம் ஒழுகும் ஒரு கையுடன், உணர்விழந்த மஞ்சரியையும் தாங்கிக் கொண்டு நீந்திக் கரை சேர்வது முடியாத காரியம் என்பது அவனுக்குப் புரிந்தது.

அதேசமயம், கனகலிங்கத்தின் துப்பாக்கியில் இன்னமும் எத்தனை குண்டுகள் இருக்கின்றன என்பது தெரியாமல், அவரது கண்ணில் படுவது மிகவும் அபாயகரமான ஒன்று.

எனவே, கனகலிங்கத்தின் பார்வைக்குத் தப்பி, அந்த நெடிய பாறையின் இப்புறமாகவே, மனைவியை ஒரு கையால் பற்றியபடியே சுதாகரன் தொற்றிக் கொண்டிருந்தான்.

அலைமேல் அலை அடித்து மொழுமொழுவென்றாகிவிட்டிருந்த அந்தப் பாறையில் அப்போது தொற்றிக் கொண்டிருப்பதே அவனுக்குப் பிரம்ம பிரயத்தனமாக இருந்தது.

அப்போதும் இது தாற்காலிகமான உறைவிடமே! இன்று இரவு ஓதம் பெருகி, நீர் மட்டமும் அலை யும் பெருகும்போது இந்த இடமும் மிகுந்த ஆபத்தானதே என்பதை அறிந்திருந்ததால், சுதாகரன் பெரும் கவலையோடு இருந்தான்.

இந்த இடத்தில்தான் கடவுள் முதல் முதலாகத் தான் இருப்பதைச் சுதாகரனுக்குக் காட்டிக் கொண்டார்.

பொதுவாக எந்தவிதப் படகுப் போக்குவரத்தும் அந்தப் பகுதியில் கிடையாது. ஆங்காங்கே பாறைகள் கிடந்தது அதற்கு ஒரு காரணம்.

ஆனால், அன்று ஒரு கடத்தல் படகை விரட்டிச் சென்று, ஆட்கள், பொருளோடு படகைப் பிடித்துக் கொண்டு, அரசு அதிகாரிகள் வெற்றியோடு திரும்பிக் கொண்டு இருந்தனர்.

சமயத்தில், கனகலிங்கம் சுட்ட குண்டு சத்தத்தைக் கடல்காற்று அவர்களிடம் எடுத்துச் செல்ல, என்னவென்று ஆராய, அவர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.

வந்தவர்கள் சுதாகர், மஞ்சரியை கண்டதும் அவசரமாக அவர்களது பெரிய படகில் ஏற்றி முதல் உதவியளிக்கத் தொடங்கினார்கள்.

துப்பாக்கிச் சத்தம் பற்றி விசாரித்து, கனகலிங்கத்தைப் பிடித்து வந்ததோடு, அங்கே அடிபட்டு மயங்கி விழுந்திருந்த சகுந்தலாவையும் தூக்கி வந்தார்கள்.

கொச்சியை அடைந்ததும், கனகலிங்கம் சிறையில் அடைக்கப்பட, மற்ற மூவருக்கும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

சிகிச்சையின்போதும் மஞ்சரி எல்லோரையும் மிரட்டி விட்டாள். எவ்வளவோ முயன்றும் அவளுக்குச் சுய உணர்வே வர மறுத்தது.

'மஞ்சரி, மஞ்சரி' என்று அழைத்துப் பார்த்தார்கள்; விழித்துக் கொள்' என்று அதட்டினார்கள்; பலமாகக் கன்னத்தில் தட்டினார்கள். உள் காயம், வெளிக்காயம் ஒன்றும் இல்லை; அதிக நீரும் குடிக்கவில்லை. சிறுவயது; ஆரோக்கியமாகவும்தானே தெரிகிறாள்? பிறகு என்ன? என்று குழம்பினார்கள்.

"அவளும் சேர்ந்து போராடினால்தானே? இந்த வயதில், உயிர் வாழும் ஆசையே இல்லாது போகும்படி என்ன நேர்ந்தது?'' என்று சுதாகரனைக் குடைந்தார்கள்.

என்னவென்று பதில் கூறுவான், அவன்? மஞ்சரியின் சோர்வின் காரணம் அவனும்தான் என்ன கண்டான்?.

கடைசியில் அலுப்புற்று, "எதற்கும் நீங்கள் பேசிப் பாருங்கள், மிஸ்டர் சுதாகர். உங்கள் குரலாவது உங்கள் மனைவியை எட்டுகிறதா, பார்க்கலாம்.'' என்றார்கள் மருத்துவர்கள்.

பலவாறு முயன்று, கடைசியாக சுதாகரின் குரல் ஒருவழியாக மஞ்சரியின் கருத்தை எட்டிவிட, அவள் மெள்ள இகலோகத்துக்கு மீண்டு வந்தாள்.

அப்போதும், மெள்ளக் கண் திறந்தவள், கணவனைக் கண்டதும், "நீங்களா? எப்படி?!'' என்று வியந்தாள்.

அடைத்திருந்த தொண்டையைச் செறுமிக் கொண்டு அவன் பேசுமுன், அவளாகவே யோசித்துக் கண்டுபிடித்து, "ஓகோ! இதுதான் சொர்க்கமா?'' என்றுரைத்து மீண்டும் விழிமூடிக் கொள்ளவும், சுதாகரன் கதிகலங்கிப் போனான்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

# பெண்களும் சந்யாச மோகமும்...

இதுபற்றி எழுதுவதா வேண்டாமா என்று நான் யோசித்து முடிப்பதற்குள்ளாகவே - இதை எழுதியே தீர வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டு விட்டது.

இந்த கம்ப்யூட்டர் யுகத்திலும் பெண்களுக்கு சந்யாசிகளிடமும் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு 'மந்திரத்தில் மாங்காய் வரவழைக்கிறேன்' என்று கயிறு திரிக்கிறவர்களிடமும் அலாதி பற்று இருக்கத்தான் செய்கிறது.

நிறைய பார்த்து விட்டேன்.. எங்கோ ஒரு சந்து வீட்டில், மூன்றாவது மாடியில் அல்லது ஜன சஞ்சாரமே அற்ற, பஸ் போக்குவரத்துகூட இல்லாத வனாந்திரத்தில் ஸ்ரீ..ஸ்ரீ...ஸ்வாமிகள் எழுந்தருளியிருக்கிறார் என்றும், அவரைப் பார்த்த மாத்திரத்தில் பண்ணிய பாவமெல்லாம் போய்விடும் என்றும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பிறக்கும் என்றும், முதிர் கன்னிகளுக்கும் திருமணமாகும் என்றும், தீராத நோய் எல்லாம் தீரும் என்றும், நம்மில் எத்தனைப் பேர் பின்னங்கால் பிடரியில்பட ஓடவில்லை?

இந்த தவ சிரேஷ்டர்கள் அனைவரையுமே ஒட்டுமொத்தமாக நான் குறை கூறவில்லை. இதில் அசலை விடவும் போலிகளுக்குத் தான் ஆர்பாட்டம் அதிகம். வைரத்தை விடவும் கண்ணாடிக் கல்லுக்கு பளபளப்பு அதிகம் என்பார்களே.....அதுபோல..

எண்பது வயது காவியுடைதாரி ஒருவர் - மிகச் சிறந்த - கண்ணியமானக் குடும்பத்தில் அடிக்கடி வந்து தங்குவதும் அங்கே அந்த நாட்களில் எல்லாம் பூஜை அமர்க்களமாக நடப்பதும் சகஜம். அந்தப் பெரியவர் காசியிலிருந்து வருவார்...அவர் சென்னையில் தங்கும்போதெல்லாம் அவருக்கு காரைக் கொடுத்து, பல இடங்களுக்கும் அழைத்துப்போக பெரிய மனிதர்கள் காத்திருப்பார்கள்..

இவர் பணக்காரர்களைக் கண்டால் விடமாட்டார். பூஜை, ஹோமம், அன்னதானம் என்று ஆயிரக்கணக்கில் கறந்து விடுவார். கல்யாணத்துக்குப் பெண்கள் இருக்கும் தாய்மார்கள் இவரிடம் ஓடி வருவதும் - இவர், தனக்குத் தெரிந்த - (பல சமயங்களில் பெரிய இடத்து படிக்காத பிள்ளைகள், போதை மருந்துக்கு அடிமையான இளைஞர்கள், யாருமே பெண்ணைக் கொடுக்க யோசிக்கும் இடங்கள்) வரன்களைச் சொல்லி - 'இவளுக்கு இவன்தான் - நீ வந்து கேட்பாய் என்றும், உன் பெண்ணுக்கு புருஷன் இவன்தான் என்றும் நேற்றிரவே அம்பாள் என் கனவில் தோன்றி சொல்லி விட்டாள்,' என்றும் நம்பும்படியாகச் சொல்லுவார். அப்பாவிய பெற்றோர் - இவரது வாக்கை தெய்வ வாக்காக எடுத்துக் கொண்டு, வேறு நல்ல வரன்கள் வந்தாலும், 'ஸ்வாமிகள் சொல்லி விட்டாரே என்று அவர் சொன்ன வரனுக்கே கொடுத்து - பின்னர் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மறுபடியும் இவரிடமே ஓடி வருவதுண்டு.

"என்ன பண்றது...உன் பெண்ணுக்கு இவன்தான்னு அம்பாள் அடிச்சு சொல்லிட்டா. ஆனாலும் என்கிட்ட வந்த யாரும் கஷ்டப் பட்டதில்லே.. எதுக்கும் அவளை தினமும் விடிகாலம்பற எழுந்து, இந்த சுலோகத்தை சொல்லிட்டு நெய் விளக்கு ஏத்தச் சொல்லு. இந்த தடவை யாகத்துக்கு போட அரக்குல ஒம்பது கஜப் பட்டுப் புடவை... ஜரிகைய குறைக்கவே குறைக்காதே... நாம அம்பாள்கிட்ட கணக்குப் பார்த்தா, அவ, நம்மகிட்ட கணக்கு பார்ப்பா.. ஆமா சொல்லிட்டேன்..."

- இப்படி அவர் பேசும்போது பெண்ணைப் பெற்றவர்கள் கண்ணீர் தாரை தாரையாக வழிய, விதிர் விதிர்த்து நிற்பதை - நானே பார்த்திருக்கிறேன்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம்பெண் மட்டும் - இவர் காட்டிய வரனை, தனக்குப் பிடிக்கவில்லை என்று நிர்தாட்சண்யமாக மறுத்து விட்டாள். இது அவரே எதிர்பாராத ஒன்று...பிள்ளை வீட்டாரிடம் என்ன சொல்வது என்று புரியாத திகைப்பு. காரணம் - அவர்களிடமும் 'இந்தப் பெண்தான் உம்ம பையனுக்கு... அம்பாளின் உத்தரவு' என்று அடித்து சொல்லி இருந்தார்.

பையன் - பெண்ணை விடவும் ஆறு அங்குலம் குட்டை.....நல்ல பருமன் வேறு...படிப்பு சரியில்லை... பணம் இருப்பதால் 'சொந்த பிசினஸ்' என்று பெயர் பண்ணிக் கொண்டிருந்தான்.

ஆனாலும் எந்தப் பெண்ணும் இவனை மணக்க முன்வராத நிலையில் தான் நன்கு படித்த - மாநிறமே ஆனாலும் களையான முகத்துடன் கூடிய நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தப் பெண் கிடைத்தாள்.

'விஷயம் முடிந்தது' என்று கிழ சந்யாசி நினைத்திருந்த சமயத்தில் பெண், 'எனக்கு இவனைப் பிடிக்கவில்லை' என்றால்....

உடனே இவர் அப்படியே தோசையை திருப்பிப் போடுவதைப் போல - கதையைத் திருப்பிப் போட்டு விட்டார்.

"அடேய் அந்தப் பொண்ணு உனக்கு வேணாமடா. நேத்து நாம அவா வீட்டுக்குப் போனப்பவே எனக்கு ஒரு மாதிரியா இருந்தது... அம்பாள்கிட்ட ராத்திரி முழுக்க கதறினேன்...அப்பத்தான் எனக்கு ரொம்பவும் வேண்டப்பட்டவர் மூலமா அம்பாள் அந்த செய்திய அனுப்பினா...அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே ஒரு பையன்கூட தொடர்பாம்..வயித்துல மூணு மாசம். உண்டாகி அபார்ஷன்கூட நடந்தாம்..அழகா - சாட்சியோட சொல்றார் அந்த மனுஷன்..அப்படியே ஆடிப்போயிட்டேன் நான்... 'என்னம்மா இப்படி உன் பக்தனை சோதிக்கலாமா நீ' - யின்னு கதறிட்டேன்...அம்பாளும் நம்மகிட்ட விளையாடறா..."

பாருங்கள்..இவரது ஒரு பொய்யை மறைப்பதற்காக - எத்தனை அபாயகரமானப் பழியை அந்தப் பெண் மீது சுமத்தியிருக்கிறார் இவர்?

இந்த விஷயத்தை - பிள்ளை வீட்டார், தனக்கு வேண்டிய ஒருவரிடம் சொல்ல....செய்தி காற்றில் பரவி - கடைசியில் பெண்ணைப் பெற்றவர்களின் காதுக்கே வந்து சேர...துடித்துப் போய் விட்டார்கள்.

இது மட்டுமில்லை; தம்பதி சமேதராக வந்திருந்தால் - இருவரையும் தனித்தனியே அழைத்து ஆழம் பார்ப்பதும், 'உன் புருஷனிடம் சொல்லாதே' - என்று மனைவியிடமும், 'பெண்டாட்டியிடம் கண்டு கொள்ளாதே' - இப்படி கணவனிடமும் இவர் தனியாக எதையாவது சொல்லி வளைத்துப் போட்டு வைப்பார்.

"உன் புருஷனுக்கு ஸ்திரீ மோகம் அதிகமோ..."

"அய்யய்யோ....அப்படி எதுவும் இல்லையே...அவர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மாதிரி.."

"இத்தனை நாள் சரிம்மா.. இனிமே ஏற்படலாம் இல்லே?"

"........"

"பயந்துடாதே....இதுபத்தி எதுவுமே அவன்கிட்ட பேசாதே..நான் ஒரு ஹோமம் பண்ணி, தாயத்து மந்திரிச்சு தர்றேன். என்ன, கொஞ்சம் செலவாகும்....புருஷனை விட பணமா முக்கியம்?"

- இப்படி அந்தப் பெண்ணிடமும்...

"உன் பெண்டாட்டிக்கு நேரம் சரியில்லே..உன் மேல் எதுக்கெடுத்தாலும் சந்தேகப்படுவாளே...."

"இல்லையே சுவாமி....அவ என்னை பரிபூரணமா நம்பறவ..."

"ஹஹ்ஹா....அதுதாம்பா உனக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம்... அம்பாள் பிரத்யட்சம் எனக்கு.... ஒரு நாள் இல்லையின்னா ஒரு நாள்.... ஹிஸ்டீரியா வந்து கத்துவா பாரு..."

"சுவாமி.."

"கவலையேபடாதே....அதான் என்கிட்ட வந்துட்டியே...."



எப்படி....இந்த மனிதர் இப்படியே கதை பண்ணிக் கொண்டிருக்கிறார்...

ஒரு ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு இப்படித்தான்.... வெளியூரிலிருந்து ஒரு துறவி (துறவி என்றால் முற்றும் துறந்தவர் என்று பொருள். ஆனால் இவர் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட கார், குளுகுளு அறை, தோட்டம் துரவு என்று வசதியாக இருக்கிறார்) அடிக்கடி சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். அவர் தொட்ட எதுவும் பொன்னாய் மாறுகிறது என்று வசதி மிகுந்த வீட்டுப் பெண்மணிகளிலிருந்து - சாதாரண நடுத்தர குடும்பத்து பெண்கள் வரையில் அத்தனைப் பேரும் படையெடுத்தார்கள்.

வெள்ளை வெளேரென்ற ஜிப்பா, வேஷ்டி, கழுத்தில் உத்திராட்சம், நெற்றியில் திலக வடிவில் குங்குமம்.....எப்பொழுதுமே புன்னகை படர்ந்த முகம்..

இவர் விரலசைத்தால் போதும்... பெரிய ஐ.ஏ.எஸ் அதிகாரியின் மனைவியிலிருந்து அத்தனை பேரும் அவருக்குத் தேவையானதை உடனே செய்து முடிப்பார்கள். இவரது பிரசங்கம் முடிந்தவுடன் எத்தனையோ பெண்கள், கண்ணீர் வழிய கழுத்தில், கையில் உள்ள நகைகளை எல்லாம் (இவைகளை வாங்கிப் போட, பெற்றவர்கள் எத்தனை சிரமப்பட்டார்களோ.....அல்லது கணவர் தான், தனது மனசாட்சியை அடமானம் வைத்து எத்தனைப் பேரிடம் கையூட்டாக வாங்கி, இந்த நகைகளை செய்து போட்டாரோ) மனசை உருக்கும் பேச்சில் மயங்கியோ அல்லது அடுத்தவளைக் காட்டிலும் தான்தான் சுவாமிஜிக்கு மிகவும் வேண்டியவள் என்று காட்டிக் கொள்வதற்காகவோ இவர்கள் கொஞ்சம்கூட யோசியாமல் கழற்றிக் கொடுத்ததை என் கண்ணாலேயே பார்த்தேன்.

இதில் இன்னும்கூட பக்தி முற்றிப் போய், அவர் சாப்பிட்டு எழுந்த எச்சில் இலையில் மீதியிருந்ததை அவசரமாய் எடுத்து சாப்பிட்ட கண்ணியமானக் குடும்பத்துப் பெண்மணியின் செய்கையைக் கண்டு நான் அதிர்ந்தே போனேன்.

"என்னங்க இது.."

"பிரசாதம்க..இதை சாப்பிடக் கொடுத்து வைக்கணும்.."

அந்தப் பெண்ணின் வார்த்தையைக் கேட்டு அழுவதா. சிரிப்பதா என்றே புரியாத நிலை எனக்கு.

இந்த காலத்தில் இப்படியொரு அசட்டுத்தனமான பக்தியா..தாலி கட்டின புருஷன் சாப்பிட்ட எச்சில் தட்டில்கூட சாப்பிடுவதே சுகாதாரக் கேடு என்றும், பெண்ணை இழிவு படுத்தும் செயல் என்றும் ஒரு பக்கம் பெண்ணுரிமை பேசும் மாதர்கள் குதித்துக் கொண்டிருக்க - எவரோ ஒரு அயல் மனிதரின் எச்சில் - (இங்கே அவரை ராமபிரானாகவும், இவளை சபரியாகவும்.... இல்லை யில்லை.... அது கூட சபரி கடித்து சுவை பார்த்ததைத்தான் ராமன் உண்டதாக வழக்கு...இது எந்த வழக்கில் சேர்த்தி என்று எனக்குத் தெரியவில்லை.) இந்தப் பெண்ணுக்கு பிரசாதமானது எப்படி என்றுதான் எனக்கு இன்னும் தெரியவில்லை. மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டதுதான் மிச்சம்...என் அறிவு சார்ந்த சகோதரிகள் எப்படி இத்தனை புலகீனர்களாக ஆனார்கள்?

இங்கே இப்படியென்றால் - இன்னொரு இடம்...இன்னொரு விதம்....

திடீரென்று ஒரு இளைஞன் - 'என் கனவில் சத்யசாயிபாபா வந்தார்.. இனிமேல் என் மூலமாக பக்தர்களுக்கு அருள் பாலிக்கப் போவதாகச் சொல்லி விட்டு மறைந்தார்' என்று கூற.....

அன்றிலிருந்து எலிப்பொறி போன்ற அந்த சிறிய ஃபிளாட் வெடித்து சிதறி விடுவது போன்றதொரு கூட்டம்... இருக்கிற சமையலறையில் ஒரு பக்கமாய் பாபாவின் திருவுருவப் படம். எதிரே வாழையிலை போட்டு வடை, பாயசம், சித்ரான்னங்களோடு கூடிய விருந்து....

மனைப்பலகையில் பாபா கேட்டதற்கிணங்க (எங்கே அவர் கேட்டார்? அவர் கேட்டதாக இந்த இளைஞர்தான் கேட்டிருக்கிறார்) ஒரு சாண் அளவுக்கு சரிகை போட்ட பட்டு வேட்டி....அங்கவஸ்திரம்...தவிர கையில் மாட்டிக் கொள்ளும் தங்கச் சங்கிலி..

இளைஞர் தான் மட்டும் உள்ளே போய் சமையலறைக் கதவைத் தாழிட்டுக் கொள்கிறார். பக்தர்கள் இட நெருக்கடியில் மூச்சுத் திணற, முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள். சுமார் அரை மணி நேரம் கழித்து சமையலறைக் கதவு திறக்கிறது...

பட்டு வேஷ்டி, அங்கவஸ்திரம், கைச்சங்கிலி சகிதம், ஜானவாசத்துக்குப் புறப்பட்ட மாப்பிள்ளை மாதிரி அந்த இளைஞர் கதவைத் திறந்து கொண்டு காட்சியளிக்கிறார். பரிமாறப்பட்டிருந்த இலையில் பதார்த்தங்கள் கலைந்து கிடக்க - இளைஞரின் கையில் ஒரு வெள்ளை கைக்குட்டை...

"பாபா வந்தார்...சாப்பிட்டார். இந்த வேஷ்டி அங்கவஸ்திரத்தை எல்லாம் தானே கட்டிண்டு, அப்புறம் எனக்கு கொடுத்தார். (தங்க சங்கிலி கூட) இதோ பாருங்கோ....இந்த வெள்ளைத் துணியில பாபா தன் பாதங்களை பதிச்சு, தன் ஆசீர்வாதமா கமலா மாமிக்கு தரச் சொல்லிட்டுப் போனார்.."

கமலா மாமி என்பவர் உணர்ச்சிப் பெருக்கில் 'ஓ'வென அழுதார். அந்த வெள்ளைத்துணியில் மஞ்சளில் தோய்ந்த பாதச்சுவடுகள்...நம் கண்கள், நம்மையும் அறியாமல் அந்த இளைஞரின் பாதங்களைப் பார்க்க - அவரது பாதம் முழுக்க நலுங்குக்குப் பூசினாற்போல மஞ்சள்....

ஆனால் பக்தி பரவசத்தில் ஆழ்ந்திருந்த யாருக்குமே இதைப் பற்றி எல்லாம் ஆராயத் தோன்றவில்லை..... தோன்றவில்லையா - விருப்பமில்லையா என்பது புரியவில்லை..

கமலா மாமி, உடனே அந்தத் துணியை வாங்கி, கண்களில் ஒற்றிக் கொண்டார். கணவரை அழைத்து, அப்பொழுதே, அந்தக் கணமே, இந்தப் பாதச்சுவடு படிந்த துணியை கண்ணாடி பிரேம் போட்டுக் கொண்டு வரச் சொல்ல - அவருமே தர்மபத்னியின் கட்டளையை சிரமேற் கொண்டு உடனே ஃபிரேம் போட்டு கொண்டு வந்து விட்டார்.

"எல்லாரும் சாப்பிட்டுட்டுத் தான் போகணும்..பாபா சொல்லியிருக்கார்.."

வீட்டிலுள்ளோர் வரிந்து வரிந்து உபசரிக்கின்றனர். ஒரு பக்கம் பாபாவின் படத்திலிருந்து குங்குமமாய் கொட்டியிருப்பதைப் பார்த்து மெய் சிலிர்க்கிறது பெண்கள் கூட்டம்...

அரிசி, பருப்பு, தங்கம், பட்டாடைகள், பூஜைக்கான வெள்ளிப் பாத்திரங்கள்.....கரன்சி.....கொண்டு வந்து கொட்ட பக்த ஜனங்கள் காத்திருக்கின்றனர்.

அது மட்டுமில்லை...பெண்கள். தங்களது கணவர், குழந்தைகளுக்கு கூட ஏனோதானோவென்று



சமைத்து வைத்து விட்டு, கேரட் அல்வாவும், திரட்டுப் பாலுமாய் செய்து எடுத்துக் கொண்டு, பல சமயங்களில் குக்கர், வெங்கலப் பானையுடனேயே இந்த வீட்டுக்கு ஓடி வருவதைப் பார்க்கும்போது - 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்கிற பாரதியின் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகிறது...

இதையெல்லாம் தூக்கி சாப்பிடும்படியாக சில சந்யாசிகள் நடந்து கொள்கிறார்கள்... பெண்களை ஒரு பக்கம் ஏமாற்றி, தங்களது இச்சைக்கு இணங்க வைத்து - இன்னொரு பக்கம் அம்பிகைக்கு அர்ச்சனை செய்து கற்பூர ஆரத்தி காட்டுகிறபோது எரிகிறது கற்பூரம் மட்டுமில்லை...முழு விவரமும் தெரிந்த என் வயிறும்தான்!

இதுபற்றி வெளியே சொன்னால் கொன்று போட்டு விடுவதாக ரவுடிகள் பாணியில் மிரட்டலும் உண்டு...

உண்மையிலேயே துறவிகள் இப்படி ஒன்றும் தெரியாத அப்பாவிகளை ஆட்டுவிக்க மாட்டார்கள்.

'இது வேணும்; அது வேணும்' என்று கேட்கிறவர்களிடம் மனம் திறந்து சொல்வார்கள்.

"அம்மா...உனக்கு எது உண்டோ. அது நிச்சயம் கிடைக்கும். நான் ஒன்றும் மந்திரவாதி இல்லை.. என்னால் உன் ஆன்மாவை மாத்திரமே நல்வழிப்படுத்த முடியும். நான் சாதாரணன். கடவுளால் - கடவுளைப் பற்றிச் சொல்வதற்காகப் படைக்கப்பட்டவன். எனக்கு வேறெந்த சக்தியும் கிடையாது.."

இப்படி மனம் திறந்து பேசும் உண்மையானப் பெரியவர்களை - பெண்மணிகள் லட்சியமே செய்வதில்லை. கல்லைக் கனியாக்கவும், மணலைக் கயிறாக்கவும தெரிந்தவனுக்குத்தான் இவர்களது மரியாதை...

இந்த ஒரு கணத்தில் - கொஞ்சம் நிதானித்து, யோசித்துப் பாருங்களேன்.

எதற்காக இந்த போலி வேஷதாரிகளை நம்பி ஓடுகிறீர்கள்? நம்மிடம் என்ன இல்லை - இவர்கள் தருவதற்கு? அப்படி நம்மிடம் அந்த ஒன்று இல்லா விட்டால் தொலைகிறது! மீதி எத்தனையோ இருக்கிறதே...அதைக் கொண்டு திருப்தி அடையப் பாருங்களேன்.

ஆன்மாவுக்குத் தேவை ஞானம். அதைத் தருகிற யோகிகள் ஏங்கோ ஓர் மூலையில் ஆரவாரமில்லாமல் தன்னைத் தேடி வருகிறவர்களுக்கு ஞானத்தை அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.


அவர்களிடம் சாதி பேதம் கிடையாது...பெரியவன், சின்னவன், ஏழை - பணக்காரன் வித்தியாசமெல்லாம் கிடையாது. அவர்கள் யாருமே நம்மை, பொறுப்புகளை உதறி விட்டு தங்களிடம் ஓடி வரச் சொல்லவில்லை. கடன் வாங்கி குபேர பூஜை செய்யச் சொல்லவில்லை. புருஷனுக்கும், குழந்தைகளுக்கும் வேளைக்கு சோறு போடாமல் சுமங்கலி பூஜை செய்யச் சொல்லி உத்தரவு போடவில்லை..

அமைதியாய் பேசி, ஆழமாய் சிந்தித்து, நமக்கு செய்வதற்கு எளிய பிரார்த்தனைகளைச் செய்ய எவர் வழி காட்டுகிறாரோ அவரே உண்மையான குருநாதர்.

அறிந்து கொள்ளுங்கள். பெண்களுக்கு சந்யாச மோகம் தேவையில்லை. பராசக்தி இவர்களிடம் இல்லை. நமக்குள் இருக்கிறாள். உள்ளிருக்கும் கடவுளை மறந்து - வெளியே தேடிப் போய் அநாவசிய சங்கடத்துக்கு ஆளாகாதீர்கள். அவ்வளவுதான் நான் சொல்வேன்! ✦


## தவணை முறையில் அனைத்து ரக சேலைகள் பெறலாம்

சூரத், பெங்கால் காட்டன் சேலைகள், காஞ்சிபுரம் பட்டு, மைசூர் சில்க், பிரிண்டட் சில்க், கோரா காட்டன், சுங்குடி சேலைகள், பாலி காட்டன், கோரா பை கோரா மற்றும், ரெடிமேட் ப்ளவுஸ் / ஷர்ட்ஸ், சுடிதார்.



**இதைத் தவிர**

**WE ACCEPT FIXED DEPOSITS**

| DEPOSIT | PERIOD | MATURITY VALUE |
|---|---|---|
| RS. 1000 | 46 Months | Rs. 2000 |

உங்களுடைய Deposit தொகை முதிர்வு பெறும் வரை நீங்கள் Deposit செய்த தொகைக்கு நிகராக எங்கள் Show Room லிருந்து புடைவைகளை விற்பனை செய்ய எடுத்துச் செல்லலாம். Door Delivery வசதியும் உண்டு.

தவணை முறையில் புடவைகள் விற்பனைக்கு உடன் பணம் செலுத்துபவர்களுக்கு 20 சதவீதம் தள்ளுபடி

**மீரா டெக்ஸ் டைல்ஸ்**

26/1, மோதிலால் தெரு, (ரெங்கநாதன் தெருவின் முதல் எதிர் தெரு, பாலு ஜுவல்லரியின் பக்கத்து தெரு) தி.நகர், சென்னை - 600 17

போன் : 4342696, 4331267.

AUTHORISED DEALERS : WIMCO FABRICS - SURAT

ADVT.

# வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ள..

**துளி கோபம், துளி பதற்றம், துளி அலட்சியம் என்பவை சமயத்தில் வாழ்க்கைக்கே உலை வைத்து விடும். 'துளி அலட்சியம்' இருக்கிறதே.. இதில்தான் நாம் வெகு கவனத்துடன் இருக்க வேண்டும். இந்த 'துளி அலட்சியத்தை' முன் ஜாக்கிரதையோடு கையாண்டால் "சேமிப்பு" இயல்பாகவே வந்துவிடும். இல்லையெனில் முதியோர் இல்லம், கைவிடப்பட்டோர் விடுதி... என கடைசி கால வாழ்க்கை நரகத்துக்கு தள்ளப்பட்டு விடும். சரி, இந்த விஷயத்தை எதிர்காலத்தில் கையாளப் போகிறவர்கள், முன் ஜாக்கிரதையை கருத்தில் கொண்டு கையாண்டவர்கள், அலட்சியமாய் கையாண்டவர்கள்... இவர்கள் சொல்வதை பார்ப்போமா?**

**வாசுகியம்மாள், வயது 45**
**(வீட்டுவேலை செய்பவர்)**

சேர்த்து வைக்கிறதா? அப்படின்னா? இப்படித்தான் என்னால கேக்க முடியும். நானும் என் புருஷனும் சேர்த்து வைக்கிறதுல அக்கறை காட்டினதே இல்லை. எனக்கு மூணு பொண்ணு, ஒரு பையன். புருஷன் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய எல்லாத்தையும் செஞ்சார். சீர்செனத்தியை அதிகமா செஞ்சு ஒரு பொண்ணுக்கு கல்யாணம் பண்ணோம். ஆனா... மருமகன் கொஞ்ச நாளிலே இறந்துட்டார். மக திரும்பவும் என் வீட்டுக்கே.. இப்ப அவளுக்கும் சேர்த்து நானே உழைக்கிறேன். அப்புறம் என் புருஷனும் மூணு வருஷத்துக்கு முன்னமே இறந்துபோக... இன்னொரு பொண்ணுக்கு நானே கடன் பட்டு கல்யாணம் செஞ்சு வைச்சேன். அதுவும் உருப்படலை, காரணம அந்த மருமவப்பிள்ளை குடிக்கிறான்.



இப்ப எந்த ஆதாரவும் இல்லாம என் கைய நம்பி, என்னையும், என பிள்ளைங்களையும் காப்பாத்துகிறேன் படிப்பறிவு இல்லாததால் சேர்த்து வைக்கிறதைப பத்தி அப்ப யோசிக்கலை. என் புருஷன் எனக்குன்னு ஏதாவது சேர்த்து வைச்சிருந்தாருன்னா நான் ஏன் வீட்டு வேலைக்கு வர்றேன்? இப்படி கஷ்டப்படறேன்!

**மதி பெரியண்ணன் வயது 39**
**(இல்லத்தரசி)**

குழந்தை வருமானம் என்கிற போது பிள்ளைகளை வளர்க்கவும், படிக்க வைக்கவும் பணம் செல வழிந்து விடுகிறது. ஆனால் பத்து சதவிகிதம் கண்டிப்பாக வரும் வருமானத்தில் சேர்த்தால் பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்கலாம். பிள்ளைகள் வளர்ந்து பெற்றோர்களை கவனிக்க வேண்டும் என்கிற எண்ணத்தை முதலிலிருந்தே அகற்ற வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சேமிக்கும்போது தங்களுக்கும் ஒரு பகுதியை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும. பிள்ளைகள்




வருங்காலத்தில் நன்றாக இருந்தால் அதைப் பார்த்து பெற்றோர் பெருமை பட வேண்டும். குறைசொல்லக் கூடாது. நமமுடைய கடமை கல்வி, உடை, உணவு இவை குறைவில்லாமல் கொடுப்பது மற்றும் வாழ்க்கையில முன்னேற என்ன வழிகளோ அதை கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் நன்றாக இருந்தால அதுவே நிறைவை தரும. ஒவ்வொரு பெற்றோரும திருமணம ஆன மாதத்திலிருந்தே ஒரு சிறு பகுதியை தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் தனித்தனியாக சேர்க்க வேண்டும்.

**கண்ணன் வயது 25**
**(கம்ப்யூட்டர் ஆபரேட்டர்)**

எதிர்காலத்திற்கு சேமிப்பு நிச்சயமாக தேவை. என்னை பொறுத்தவரை பிள்ளைகள் வேலை செய்ய [illegible] பணத்தை சேர்க்க [illegible] குறிப்பாக திருமணத்திற்கு முன்னமே சேர்த்து கொடுத்து விட்டு திருமணம் செய்துக் கொள்ள வேண்டும். இன்றைய நடைமுறை வாழ்க்கையில் நான் பார்த்த பல குடும்பங்களில் வந்த மருமகள்





மாமியாரை நடத்தும விதம், மகன் எந்த பக்கம பேசுவது என்று குழம்புவது எல்லாம ஒரு எச்சரிக்கைதான். ஐந்து வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய வருமானம் சேமிப்பாகவே இருக்கறது. இதில் ஒரு பகுதியை என் பெற்றோருக்கு ஒதுக்குவேன்

**பிலோமினா செல்லையா வயது 43**
**(லயோலா பள்ளி துணை தலைமை ஆசிரியர்)**

திருமணமானவுடனே எங்களுக்கு ஒரு சேமிப்பு, பிறக்கப் போகும் பிள்ளைகளுக்கு ஒரு சேமிப்பு எனப் பிரித்து வாழ்க்கையை ஒரு வரையறைக்கு உட்பட்ட திட்டத்துக்கு உட்படுத்தினோம். அதன் பலன் இன்று தெரிகிறது! அது மட்டுமின்றி பிள்ளைகளுக்கும் சேமிப்பின்



அவசியத்தை புரிய வைத்தோம். இன்று என் கையை அவர்களும் எதிர்பார்ப்பதில்லை. நானும் அவர்களை எதிர்பார்ப்பதில்லை.

நிச்சயமாக பிள்ளைகளை எதிர்பார்த்து எந்த ஒரு பெற்றோரும வாழக் கூடாது.

சேமிப்பு என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவை. எதிர்காலத்தில் சேமிப்பு இருந்தால் மிகவும் நல்லது. ✦

**- எஸ். பிரமிளா பிரிட்டோ**



# மென்கரங்களைக் கொண்டு..

இந்தியாவில் 'முதல் மகளிர் காவல் நிலையம்' திறக்கப்பட்டது எங்கு தெரியுமா? சென்னையில்தான்!

ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஆறு தலைமை போலீஸ்காரர்கள் மற்றும் 24 கான்ஸ்டபிள்களுடன் நான்கு வருடங்களுக்கு முன் துவக்கப் பட்டது.

இந்த காவல் நிலையங்கள் மக்களுடைய நம்பிக்கையை பெறமுடியுமா என காவல்துறை உயர்மட்டத்திலேயே வெளியே சொல்லாத சந்தேகங்கள் இருந்தன.

ஆனால் அதைப் போக்கும் விதத்திலே முதல் ஆண்டிலேயே 3000 வழக்குகள் பதிவாயின.

பெரும்பாலானவை பெண்கள், தங்கள் குடும்பப் பிரச்னைகள் குறித்து செய்த புகார்களின் அடிப்படையில் பதிவானவை!

1992-க்கு பிறகு இதுபோல நான்கு காவல் நிலையங்களும் மாவட்டம் தோறும் பிரதிநிதி அலுவலகங்களும் திறக்கப் பட்டன.

"கற்பழிப்பு தவிர மற்ற வழக்குகள் இங்கு பதிவு செய்யப்படுகின்றன. வரதட்சணை கொடுமை, தற்கொலை முயற்சிகள், பெற்றோர் மாமியார் கொடுமைகள், காதல் திருமணத்தில் ஏற்படும் குடும்பப் பிரச்னைகள், கணவன் மனைவி தகராறுகள், இவற்றை 'தாமதிக்கும் நீதிமன்ற' நடைமுறைகளை தவிர்த்து இங்கேயே சுமுகமாக தீர்த்து வைக்கிறோம்" என்கிறார் தலைமை கான்ஸ்டபிள் ஜெயராணி.

இந்த காவல் நிலைய வளாகத்துக்குள்ளேயே, மக்கள் சமூக நலத் துறையை சேர்ந்த ஒரு ஆலோசனை நிலையமும் இயங்கி வருகிறது. மனநலம் சம்பந்தப் பட்ட பிரச்னைகளை கையாள இந்த நிலையம் உதவுகிறது.

இதுவரை 300 வழக்குகளுக்கு மேல் (பெரும்பாலானவை குடும்ப வழக்குகள்) தீர்த்து வைக்கப்பட்டுள்ளன!

"இரண்டு லட்சம் ரூபாய் டௌரி, 25 பவுன் நகைகள் என மணந்து கொண்ட கணவன் திடீரென இறந்துவிட அவனது மனைவியை விரட்டியடித்த மாமியாரை கையோடு சுறுசுறுப்புடன் பிடித்து அந்த இளம் விதவைக்கு உதவி செய்தது எங்கள் சமீபத்திய சாதனைகளில் ஒன்று" என கூறுகின்றனர் மகளிர் காவல் நிலைய காவலர்கள்.

காவல் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படும் மகளிர் விளையாட்டு வீராங்கனைகளாக இருப்பதால் போதிய உடல் உறுதியும் மன திடமும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

கலவரங்களின்போது பெண் கலவரவாதிகளை கையாள அழைக்கப்பட்டாலும் மொத்த கூட்டத்தையும் கையாளுகின்றனர் என்ற சான்றிதழ் பெற்றிருக்கிறார்கள் இவர்கள்.

ஆனாலும், ஆண் போலீஸார் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

போலீஸ் கண்ட்ரோல் அறையில் பணிபுரியும் ஒரு ஆண் போலீஸ் கூறுகிறார்-

"இந்த மகளிர் காவல் நிலையங்கள் எங்களுக்கு பெரிய தலைவலியாக உள்ளது.

24 மணிநேரமும் அவர்கள் தங்கள் கடமையை செய்ய நாங்கள் கூடுதல் பாதுகாப்பு தர வேண்டியிருக்கிறது.

அலங்காரத்துக்குத்தான் மகளிர் காவல் நிலையங்கள் பயன்படுகின்றனவே தவிர, வேறு உண்மையான பலன் ஏதும் இல்லை."

'கடும் குற்றங்களுக்கு, மென்மையான கரங்களால் நடவடிக்கை!'

**- பார்கவி**

# உங்கள் உணர்ச்சிகளைப் புரிந்துக் கொள்வது எப்படி?



ஸ்.வி.ரம்மணன்

**நா**னும், நீங்களும் உணர்வுகளாலேதான் ஆளப்படுகிறோம். இதயத்திற்கும், அறிவிற்கும் போராட்டம் வந்தால் இதயமே வெல்லும். மனிதன் உணர்வுபூர்வமானவன். உணர்வுகளே இன்பத்தையும், துன்பத்தையும் விளைவிக்கின்றன. இந்த உணர்வுகளே நண்பர்களையும், பகைவர்களையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. வீட்டிலும், அலுவலகத்திலும், சமூகத்திலும் உணர்வுகளுக்கிடையே பரிமாற்றம் ஏற்படுகின்றது. எனவே, உணர்வுகளைப் புரிந்துகொள்வது மிகவும் இன்றியமையாதது.

உணர்வுகளை வழிப்படுத்துவது வாழ்விற்கு அவசியம். வழிப்படுத்தலுக்கு முன் உணர்வுகளை அறிந்து கொள்ளுதல் மிகவும் அடிப்படையானது. உணர்வுகளை அறிந்து கொள்ள சில எளிய வழிகளைப் பார்ப்போம்.

1. நீங்கள் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர் களிடம்கூட ஒரே மனப்பாங்கை உணர்வை எப்போதும்



கொண்டிருக்க மாட்டீர்கள் என்பதை உணர வேண்டும். கணவன் மனைவி இருவருக்குள் வாக்குவாதங்கள் வருவது சகஜம். ஒருவர் மற்றொருவரை திட்டுவது, கண்டிப்பது தினம் நடக்கக்கூடியது. இதனால் கணவனோ அல்லது மனைவியோ ஒருவரை ஒருவர் வெறுப்பதாக ஆகிவிடாது. அடுத்த கணமோ/நாளையோ அன்புடன் அணைத்துக் கொள்ளுவர். எனவே ஒரு சூழ் நிலையில் வெளிப்படுத்திய மனப்பாங்கு நிரந்தரமான தல்ல என்பதையும், உங்களது உணர்வுகள் சூழ்நிலை களாலும், சந்தர்ப்பங்களாலும் உருவாக்கப்படுகிறது என் பதை அறிந்து கொள்ளுங்கள். சில பெற்றோர்கள் குழந்தை தவறு செய்யும்போது அடிக்கலாம். பின்பு வருந்துவார்கள். சில நேரங்களில் இந்த உணர்வே, பெற்றோர்களின் மனதில் குற்ற உணர்வை (Guilt complex) ஏற்படுத்தி பல மன வியாதிகளுக்கு அடிகோலக் கூடும். குழந்தையை அடிப்பது வெறுப்பினாலோ, பகை உணர்வினாலோ அல்ல; அதனிடம் கொண்ட அன்பால் தான். இதனை உணர்ந்தால் குற்ற உணர்வு ஏற்படுவதை தவிர்க்கலாம். இந்த உதாரணங்கள் வாழ்க்கையில் நீங்கள் தொடர்பு கொள்ளுவர் எவருக்கும் பொருந்தும்.

2. உங்கள் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுங்கள். என்னிடம் ஆலோசனை கேட்க வருபவர்களில் 90 சத விகிதம் என்னை என் கணவர் புரிந்து கொள்ளவில்லை, குழந்தைகள், மாமனார், மாமியார், ஆபீஸ் நண்பர்கள் புரிந்து கொள்ளுவதில்லை என்றேதான் தொடங்குகிறார் கள்.

உலகில் மிகவும் கடினமானது எது தெரியுமா? தன்னை, தன் உணர்வுகளைப் புரிந்து கொள்வதுதான் இதனைத் தத்துவ ரீதியாக 'உன்னையே நீயறிவாய்' (Know Thyself) என்று சாக்ரடீஸும், அஹம்பிரம்மாஸ்மி, தத்தத்வமஸி, ஸோஹமஸ்மி என உபநிடதங்களும் கூறுகின்றன.

நம்மில் எத்தனை பேருக்கு வாழ்க்கையில் குறிக் கோள் இருக்கிறது? நாம் எப்படி அதை நிறைவேற்றப் போகிறோம் என்ற திட்டம் உள்ளது? நாம் அடுத்த வருடம், அடுத்த மாதம், அடுத்த நாள், அடுத்த நிமிடம் என்ன செய்வோம் என்று கூற முடியுமா? எனவே, நம் உணர்வுகளை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடி யாத நிலையில் அடுத்தவரின் உணர்வுகளை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

சில குறிப்புகளின் மூலம் நாம் நமது உணர்வுகளை இனம் கண்டுகொள்ள முடியும். இக்குறிப்புகள் இரண்டு வகைப்படும். 1. வாய் மொழி (Verbal) 2. செய்கைகள் (Non Verbal).

**வாய்மொழி (Verbal):** இது புரிந்துகொள்ள சுலப மானது. உதாரணமாக நாம் மகிழ்ச்சியாக இருந்தால் வீட் டில் குழந்தைகள் கொட்டமடித்தாலும், மனைவி/ கணவன் சிறு தவறு செய்தாலும் நாம் கண்டுகொள்ள மாட்டோம். ஆனால், சோர்ந்திருக்கும் பொழுதிலோ. உடல் நலக் குறைவாகவோ அல்லது கோபமாகவோ இருந்தால் கண்டதெற்கெல்லாம் எரிந்து விழுவோம். 'பிடிக்காத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' நிலை ஏற்படுகிறது. இம்மாதிரி சந்தர்பபங்களில், மேற்கண்ட உதாரணங்களில் கூறியபடி உங்கள் நடத்தை இருப்பின், நீங்கள் மகிழ்ச்சியாகவோ, கோபமாகவோ இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**செய்கைகள் (Non Verbal):** முகம் என்பது உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி. மகிழ்ச்சியுடன் உள்ளம் இருந்தால், முகம் மலர்ந்து காணப்படும், நடை யில் ஒரு துள்ளல் இருக்கும். தன்னம்பிக்கை பீரிடும். சோகமாக இருந்தால், முகம் வாடியிருக்கும். பசியிருக் காது. எதிலும் நாட்டமிருக்காது. தளர் நடை, பீதி காணப் படும். கோபமாக இருந்தால், காது மடல்கள் சிவக்கும், கண்கள் விரியும், கை முஷ்டி மடங்கும்; உடல் பதறும்; குரல் உயரும்; அடுத்தவர் கூறுவது நம் காதுகளில் ஏறாது. நகம் கடித்தல், கைகள் ஒரே நிலையில் (Position) இல்லாமை, பதட்ட நிலையின் அறிகுறிகள்.

இது சப்தத்திற்கும் தூக்கிவாரிப்போடுதல், எதைக் கண்டாலும் பயம் ஏற்படுவது, தூக்கமின்மை இவை பயத் தின் அறிகுறிகள்.

3. உங்கள் உணர்ச்சிகளுக்கு எப்போதும் உடனே செயல் வடிவம் கொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில், சில சமயங்களில் அந்த செயல் வடிவம், நமக்குத் தீங்காக வந்து முடியலாம். ஒரு நிமிட சிந்தனை பல மணி துயரத்தைத் தவிர்க்கும்.

4. நான் எதற்கும் பயப்படுவதில்லை என்ற ஒரு குறிக்கோளை மனதில் வைத்துக் கொள்வது தவறு: 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' எதற்கும் பயப்படாத மனிதன் உலகில் கிடையாது. எதற்கு இல்லாவிட்டாலும், மனிதன் மரணத் திற்குப் பயப்பட்டே ஆக வேண்டும். ஆகவே, பயப்படக் கூடியவற்றிற்கு பயப்படுவது அவமானப்படக்கூடிய விஷயமல்ல. பயப்படக்கூடியவற்றிற்கு பயப்படுவது புத்தி சாலிகளின் லட்சணம். எனவே, பயப்படுவதற்குறியதற்கு பயப்படுவது என்பது அவமானமல்ல என்பதை உணருங் கள்.

5. முடிவுகளை, நடத்தையின் காரணமாக நியாய மாக்க முயலாதீர்கள்.

நீங்கள் எடுக்கும் முடிவுகளை, உங்கள் நடத்தையின் காரணமாக நியாயப்படுத்தாதீர்கள். ஏனெனில், நீங்கள் எடுத்த முடிவு, ஒன்று, சரியாக இருக்கலாம். அல்லது, தவறாக இருக்கலாம். இதனை உங்கள் நடத்தையினால் தான்/ அடுத்தவரது நடத்தையினால்தான் நிகழ்ந்தது என எண்ணாதீர்கள்.

நீங்கள் அலுவலகத்தில் மேலதிகாரிகளிடம் திட்டு வாங்கி இருக்கலாம். அதன் காரணமாக நீங்கள் வேலையைக்கூட விட்டுவிடலாம். ஆனால் எக் காரணம் கொண்டும், நீங்கள் வேலையை விட்ட நடத்தையைக் காரணம் காட்டி, உங்கள் முடிவை நியாயப்படுத்த வேண்டாம். எடுத்த முடிவு சரியாக இருந் தால் பாதிப்பு இல்லை. தவறாக இருந்தால், எடுத்த முடிவை மாற்ற முடியாது. தவிர்க்கக்கூடிய மன உளைச் சலை இப்படித் தவிர்க்கலாம்.

6. உங்களால் காரணம் கண்டுபிடிக்க இயலாத உணர்வுகளை அலட்சியம் செய்யாதீர்கள். எல்லா உணர்வுகளுக்கும் காரணங்களைக் கண்டுபிடிப்பது கடினம். சில சமயங்களில் நமது மனது காரணமில்லாமல்

சஞ்சலப்படும். சில நாட்களில் நமக்கு வேண்டியவர் இறக்கலாம் அல்லது எதிர்பாரா பிரச்னைகள் ஏற்படலாம். Universal Consciousness ஒன்றுதான்.

Space மற்றும் Time காரணமாக தனித்தனி உணர்வுகளாக ஒவ்வொருவரிடமும் வெளிப்படுகிறது. இதனை 'Elan Vital' என்று Henn Bergson கூறுகிறார். இந்த உள்ளுணர்வு, பொதுவாக, ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகம். ஆண்கள் அறிவுபூர்வமாக அணுகுவதாக எண்ணிக் கொண்டு, சில செயல்களைச் செய்வார்கள். ஆரம்பத்தில் மனைவி சொல்லுவாள், 'இது சரியாக இருக்காது' என. முடிவில் மனைவி சொல்வதே சரியாக இருக்கும். (எல்லா சமயங்களிலும் அல்ல.)

பெண்கள் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பவர்கள். உணர்ச்சிகளை மறைத்துக் கொள்வது ஆண்மைத்தனம் என்ற தவறான எண்ணம் பலருக்கு உள்ளது. நமக்குப் பிரியமானவர்கள் இறந்தால், தாங்க முடியாத இழப்பு ஏற்பட்டால், அழ வேண்டும். அடக்குவது மன வியாதிகளில் கொண்டு முடிக்கும்.

7. உங்கள் உணர்வுகளை, நீங்கள் முழுமையாக நம்புபவர்களிடம் மட்டுமே பரிமாறிக் கொள்ளுங்கள். சிலர் நான் மிகவும் வெளிப்படையானவன்/ள் எனக் கருதிக் கொண்டு, எல்லோரிடமும் தனது மன உணர்வுகளைக் கொட்டி விடுகின்றனர். இது ஒருவர்க்கொருவர் பரஸ்பர தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தக் கூடும் (Inter personal misunderstanding).

நமது உணர்வுகளை நாம் முழுவதும் நம்பக் கூடியவர்களிடமே வெளிப்படுத்த வேண்டும். அவர்/ள் கணவனாகவோ/மனைவியாகவோ/நண்பராகவோ இருக்கலாம்.

8. நீங்கள் கோபமாக இருக்கும்போது, உங்களுக்கு இயல்பாகவே விசால மனது இல்லை என்றால், விசாலமான மனம் இருப்பதுபோல நடிக்காதீர்கள். இதனை அடுத்தவர்கள் மிக எளிதில் புரிந்து கொண்டு விடுவார்கள். உங்கள் கோபத்தை வெளிப்படுத்துங்கள். (இதனை வெளிப்படுத்துவது என்பது பற்றி தனியாக விளக்குகிறேன்)

9. உங்கள் ஆச்சரியங்களையும், ஏமாற்றங்களையும் உங்களுக்கு நீங்களே விளக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு எதிர்பாராத சமயங்களில் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகளோ/ஏமாற்றம் தரும் நிகழ்ச்சிகளோ ஏற்படக் கூடும். அவை எப்படி ஏற்பட்டது என்பதனை அலசுங்கள். இதன் மூலம், உங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும்.

தேவையானால் கட்டுப்படுத்திக் கொள்ளவும் உதவும். ஏமாற்றங்களை எதிர்நோக்கும் மனவுறுதியையும் அளிக்கும். சில சமயங்களில், இந்நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாமல் போகலாம். அச்சமயங்களில், காரணம் காண முயலாதீர்கள். அப்படியே விட்டு விடுங்கள்.

10. அடுத்தவரது உணர்வுகளை எதிர்பாருங்கள். புரிந்து கொள்ளுங்கள்.

இந்தப் பத்து குறிப்புகள் உங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ள உதவும். மன உளைச்சலைத் தவிர்க்க உதவும். பிறரிடம் பழகுவதை எளிதாக்கும். ✦


# RAMACHANDRA SAREES




(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

H.O. No.37-B Arya Gowder Road. Postal Colony
Bus Stop West Mambalam, Madras-33.
Ph. 4896532

***B:O.No:2, R.K. Mutt Road, Picnic Plaza (Basement shop)***
***Luz corner, Mylapore, Madras - 600 004.***

எங்களிடம் பெங்கால் காட்டன், வெங்கடகிரி Bathik கோரா, காட்டன் புடவைகளும் கிடைக்கும்.
வழங்குவோர்: ராமசந்திர சாரீஸ். 20 B [illegible] மதுரை - 9.

**Working Hours 10.A.M. to 9 P.M.**

**நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஓர் அரிய வாய்ப்பு**


## ஆஹா வந்திருச்சி...!

"சிறப்புத் தள்ளுபடி விற்பனை"
6.4.97 முதல் 12.4.97. வரை ஏழுதினங்கள் மட்டுமே:
நா வாங்கிட்டேன்பா..! நீ போய்
வாங்கலே.. இச்சலுகை மேற்கு மாம்பலத்தில் மட்டும் தானே!
நிறைய டிசைன் வந்திருக்கு ஆனா பார்க்க முடியலே! தேவைக்கு அள்ளிட்டு
வந்திட்டேன் லாபம் தானே!

**உயர் ரக மதுரை சுங்குடி புடவைகள் விற்பனையாளர்கள்.**



# அதிகபட்ச ஆதாயத்திற்கு
# உத்திரவாதம் அளிக்கிறோம்




Rating upgraded to
HIGH SAFETY
MAA-

**உங்கள் பணத்தை எமது புத்திசாலித்தனமான வியாபாரத்தில் முதலீடு செய்து உங்களுக்குப் பாதுகாப்புடன் அதிக வட்டி ஈட்டித்தர நாங்கள் ஒரு முனைப்புடன் செயல்படுகிறோம்.**

- 25.9.96 தேதியிட்ட பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் எல்ஜி பைனான்ஸ் லிமிடெட்டின் சட்டபூர்வ விளம்பரங்களைத் தொடர்ந்து இவ்விளம்பரம் செய்யப்படுகிறது. நிறுவனத்தின் எல்லா விண்ணப்பப்படிவங்களிலும் அச்சிடப்பட்டுள்ள சட்டபூர்வ விளம்பர விஷயம் முழுவதையும் படித்துவிட்டு நமது நிறுவன டெபாசிட் திட்டங்களில் முதலீடு செய்யலாம்.
- எல்ஜி குழும நிறுவனங்களது ஊழியர்கள், எல்ஜி பைனான்ஸ் லிமிடெட்டின் பங்குதாரர்கள் ஆகியோருக்கு 0.5% கூடுதல் வட்டி அளிக்கப்படும் (நேரிடை விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)

***எல்ஜி பைனான்ஸின் சேவை, 75 வருட அனுபவமும், ரூ.700 கோடி மதிப்பும் கொண்ட எல்ஜி குழுமத்தின் பாரம்பரியத்துடன் இணைந்து வருகிறது.***

***இணைந்திடுவீர் எம்மோடு, வளர்ந்திடுவோம் வளமோடு.***

FIXED DEPOSIT SCHEME

| Period (In months) | Rate of Interest % P.A. at monthly rests | Quarterly interest rate (% p.a.) |
|---|---|---|
| 12 + 1 Day | 17.00 | 17.24 |
| 24 + 1 Day | 18.00 | 18.27 |
| 36 | 18.50 | 18.79 |
| 48 | 18.50 | 18.79 |
| 60 | 18.50 | 18.79 |

(Minimum of Rs. 10000/- for monthly scheme & Rs. 5000/- for quarterly scheme and in multiples of Rs. 1000/-)

CUMULATIVE SCHEME

| Period (In months) | Maturity Value For Rs. 1000/- (Rs.) | Rate P.A. at monthly Rests (%) | Annual yield (%) |
|---|---|---|---|
| 12+1Day | 1184/- | 17.00 | 18.40 |
| 24+1Day | 1430/- | 18.00 | 21.50 |
| 36 | 1735/- | 18.50 | 24.50 |
| 48 | 2084/- | 18.50 | 27.10 |
| 60 | 2504/- | 18.50 | 30.08 |

(Minimum of Rs. 1000/- and in multiples of Rs. 1000/-)

ELGI
FINANCE

**எல்ஜி பைனான்ஸ் லிமிடெட்**

**கார்பொரேட் அலுவலகம்**
4-வது மாடி, JVL பிளாஸா, 501, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
போன் : (044) 4345445, 4348896, 4348897.

உங்கள் நம்பிக்கையே எங்கள் நற்பெயர்

தலைமை அலுவலகம்: எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர் 641 045 ✆ (0422) 316132, 314571
கிளைகள் :தமிழ்நாடு : • திருச்சி: காவேரி காம்ப்ளக்ஸ், 107A சாலை ரோடு, உறையூர் - 620003. ✆ 760775 • சேலம் : 4/ 21, முதல் மாடி, பிபிசல் பில்டிங்ஸ், ஓமலூர் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி 636 004, ✆ 449558 • மதுரை : 164, முதல் மாடி வடக்கு வெளி வீதி - 625 001. ✆ 543784 • கரூர் : டோர்நம்பர் 1000 ஜி. அருண் காம்ப்ளெக்ஸ், கோயமுத்தூர் ரோடு - 639 002. ✆ 21661 • திருப்பூர் : கிரீன் ஹவுஸ், LRG காம்பவுண்ட், 2/7.கொங்கு நகர் மெயின் ரோடு -638 607. ✆ 720191 • ஈரோடு : KCP காம்ப்ளெக்ஸ், 153, மேட்டூர் ரோடு- 638 011. ✆ 75602. • வேலூர் : கமல் காம்ப்ளெக்ஸ்,114/1D இண்டஸ்ட்ரி ரோடு, வெங்கடேஸ்வரா உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில் - 632 001 ✆ 20539 • ஆந்திரா : • ஹைதராபாத் : 9-1-95/6 சரோஜினி தேவி ரோடு -500 003. ✆ 7703335 • விசாகப்பட்டினம் : எண் 47-9-29 III லைன், துவாரகா நகர் - 530016 ✆ 548073 • விஜயவாடா : முதல்மாடி, டோர் நம்பர்:39-10-1/லப்பி பேட், காங்தடை மருத்துவ ஆஸ்பத்திரி ரோடு - 520 010. • கேரளா : • திருச்சூர்: ரீஜன்ஸி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், குருப்பம் ரோடு -680 001 ✆ 26774 • கர்நாடகா : • பெங்களூர் : 205 இரண்டாவது மாடி, ராயல் கார்னர் லால் பாக் ரோடு - 560 027. ✆ 2270271 2234278 2215265 • மங்களூர் - முதல்மாடி, டோர் நம்பர் 14-4-408/S வித்தல் தர்ஷன், பல்லீர் ரோடு - 575 001. ✆ 426526.
சர்வீஸ் சென்டர் : •171 கிழக்கு பாஷ்யகாரலு ரோடு ,ஆர் எஸ் புரம் கோயமுத்தூர் 641 002. ✆ 440335.

**• FIXED DEPOSITS • HIRE PURCHASE •LEASING • BILL DISCOUNTING • MERCHANT BANKING**

மருத்துவ கேள்வி பதில்!

# எப்போது ஒன்று சேரலாம்?

- டாக்டர் ஞானசௌந்தரி

**பெண்மைப் பிணி இயல் (Gynaecology-Obstetrics) பற்றிய வாசகியர் கேள்விகளுக்கு டாக்டர் எஸ். ஞானசௌந்தரி M.B.B.S., D.G.O. தொடர்ந்து மருத்துவ விளக்கம் தர இருக்கிறார். கேள்விகளை எழுதும்போது, தெளிவாக உங்கள் வயது, சாப்பிடும் மருந்துகள், நோய் அறிகுறிகள், பரிசோதனை விவரங்கள் பற்றி குறிப்பிட்டு அனுப்பினால் ஆலோசனை சொல்வதற்கு எளிதாக இருக்கும்.**

*கேள்விகளை*
*'பெண்மணி' மாதர் இதழ்*
*96, காம்தார் நகர்,*
*மகாலிங்கபுரம்,*
*சென்னை - 600 034.*

**என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டும். தபால் உறையின் இடது மூலையில் 'மருத்துவ விளக்கம்' என்று குறிப்பிடுங்கள்.**



என் தோழிக்கு வயது 32. ஒரு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. தற்பொழுது அவளுக்கு குழந்தை இல்லை. அவள்மேல் அவள் கணவர் திருமணமானதிலிருந்தே சந்தேகப்படுகிறார். காரணம் என்னவெனில் முதலிரவில் அவள் கணவர் தாம்பத்திய உறவில் ஈடுபடும்பொழுது அவள் பிறப்புறுப்பில் கன்னித் திரை எனப்படும் hymen இல்லை எனவும், அவள் திருமணத்திற்கு முன்பே யாருடனும் உடல் உறவு வைத்திருந்ததால்தான் கன்னித் திரை இல்லை என சந்தேகப்படுகிறார். அவளும் நிம்மதியில்லா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை. உடல் உறவின் மூலம்தான் கன்னிப் படலம் நீங்க வாய்ப்புண்டா? அல்லது வயதான நிலையில் (20 வயதிற்கு மேல்) திருமணமாகும்பொழுது கன்னிப் படலம் நீங்கி விடுமா? அல்லது என்னென்ன காரணங்களால் திருமணத்திற்கு முன் கன்னித் திரை நீங்க வாய்ப்பிருக்கிறது?


*என். சாந்தா,*
*திருச்செந்தூர்.*

*உங்கள் தோழியின் கணவரைப் போல பலரும் கன்னித்திரை என்பது யாது என்பதை முழுவதுமாக உணராத நிலையிலேயே தங்கள் மனைவியரை சந்தேகிக்கின்றனர். முதலில் கன்னிப்படலம் எனப்படுவது யாது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். யோனிக்குழாயின் நுழைவாயில் அதாவது யோனிக் குழாயின் வெளிப்புறத் திறப்பு யோனித்துளை (introitus) எனப்படுகிறது. இத்துளை யோனிக்குழாயின் அளவு விரிந்து இருக்காது. ஏனெனில் ஒரு சளிச் சவ்வின் மெல்லிய மடிப்பு இத்துளையின் பெரும் பகுதியை அடைத்துக் கொள்வதால், யோனித் துளையின் திறப்பில் கன்னிப் படலம் ஒரு சிறு துவாரமாகவே காணப்படும். திரை போன்று மூடியிருப்பது அல்ல. எனவே முதன் முதலில் அனைவருமே உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவெனில் கன்னிப் படலம் என்பது யோனித் துளையின் ஒரு சிறு துவாரம் உள்ள வெளித் திறப்பு. இந்த சிறு துவாரமாகிய திறப்பு வளை (annular) வடிவமாகவோ, பிறை (cresoent) வடிவமாகவோ இதழ் விளிம்புகளைப் (fimbrated) போல் அமைந்தோ இருக்கலாம். ஊசிமுனை அளவு சிறுத்தோ அல்லது ஒரு விரல் உட் செல்லும் அளவிலோ இருக்கலாம். ஒரே துளையாகவும் இருக்கலாம். இரு துளையாகவோ, பல துளைகளாகவோ கூடி இருக்கலாம். சில பெண்களுக்கு கன்னிப்படலம் இல்லாமலேகூட யோனியின் வெளிப்புறத் திறப்பு விரிவுபட்டிருக்கலாம்.*

*இவையெல்லாம் இயற்கை அமைப்புகளே. எவ்வித அமைப்பாயினும் இச்சிறு துளை வழியாக முதன்முதலாக தாம்பத்திய உறவு கொள்கின்றபோது இத்துளை தாறுமாறாக கிழிவுபட்டு ஒழுங்கற்ற சிறு துண்டுகளாகி யோனித் துளையைச் சுற்றி சிறு சிறு திரள்களாகக் காணப்படும்.*

*சில பெண்களுக்கு இயற்கையாகவே கன்னிப்படலத்தின் திறப்பு மிகவும் விரிவுபட்டிருக்கலாம். அப்போது தாம்பத்திய உறவும் எளிதாக கன்னிப்படலம் கிழியாத நிலையில் இருக்கலாம். இவர்களையெல்லாம் கன்னித்தன்மையற்றவர் என்று பழிப்பது வீண் அபவாதமாகும். சிறு வயதில் விளையாடும்போது நீட்டிய முளை உள்ள இடங்களில் விழுந்து விடுதல், குதிரை சவாரி செய்து விளையாடுதல் போன்ற பகுத்தறியவொண்ணா பல காரணங்களினால் கன்னிப்படலத் துவாரம் திருமணத்திற்கு முன்பே விரிய வாய்ப்பிருக்கின்றது.*

*ஒரு பெண்ணுக்கு கன்னிப் படலத் துவாரம் கிழிவுபடாமல் இருந்தால் கன்னித் தன்மை உறுதியானது. ஆனால் கன்னிப்படலம் விரிந்து துளை பெரிதாக இருக்குமாயின் கன்னித் தன்மை இல்லை என்று நிர்ணயிப்பது தவறு.*



குழந்தை பிறந்து இரண்டு மாதங்களிலேயே எனக்கு மாதவிலக்கு வந்து விட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக மாதவிலக்கு மாத்திரைகளை உட்கொண்டால் குழந்தைக்கு பால் சுரப்பது குறையலாம் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் குழந்தைக்கு தாய்ப் பாலே கொடுக்க விரும்புவதால் மாத்திரைகளை உட்கொள்ள விரும்பவில்லை.

என் தோழியர் சிலர் Copper - T போட்டுக் கொண்டு அடிவயிற்று வலி, குறுக்குவலி,, அதிக உதிர போக்கு, இடை இடையே உதிர துளிகள் என்று அவதியுறுவதால் எனக்கு Copper - T போட்டுக் கொள்ளவும் அச்சமாக உள்ளது. இப்போது சுலபமாக Injection போட்டு கொண்டால் கருத்தரிக்காமல் இருக்கலாம் என்று கூறுகிறார்களே அதனைப் பற்றி விளக்கமாகக் கூறவும்.

*லில்லி, சீர்காழி.*

*இப்போது டெபோ- புரோவீரா Depo - Provera 150 என்று மூன்று மாதத்திற்கு ஒரு முறை போடுகின்ற ஊசி வந்துள்ளது. மாதவிலக்கு தோன்றிய மூன்றாவது நாளில் இந்த ஊசி போட்டுக் கொண்டால் மூன்று மாதங்களுக்குக் கருத்தரிப்பதில்லை. எனவே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவசியம் எத்தனை ஆண்டுகளுக்கு குழந்தை வேண்டாமென்று நினைக்கிறீர்களோ அத்தனை ஆண்டுகளுக்கு போட்டுக் கொள்ள வேண்டும். இதனால் பால் சுரப்பு குறைவதில்லை. இந்த ஊசி போட்டுக் கொண்ட பின்னர் முதல் ஒருசில மாதங்களுக்கு உதிரப் போக்கு சீராக ஒழுங்கில்லாமல் வெவ்வேறு தேதிகளில் ஏற்படலாம். இரத்தப்போக்கு சற்று அதிகமாகவோ அல்லது மிகவும் குறைந்தோ காணப்படலாம். தொடர்ந்து மூன்று மாதத்திற்கொரு முறை ஊசிபோட்டுக் கொள்ளும் போது ஒரு ஆண்டிற்கு பின் மாதவிலக்கு முழுமையாக நின்று விடலாம். இது குறித்து சற்றும் அஞ்சத் தேவையில்லை. கருத்தடைக்கு மிகவும் பாதுகாப்பான ஒன்றே ஆகும். இந்த ஊசியை போட்டுக் கொள்வதை நிறுத்தியவுடன் மாதவிலக்கு திரும்பவும் தோன்றிவிடும். ஏறத்தாழ ஒரு ஆண்டில் நிலைமை சீர்பட்டு மறுபடியும் கர்ப்பமடைய இயலும்.*

என் வயது 19. எனக்கு திருமணமாகி நான்கு மாதங்கள் ஆகிறது. நானும் என் கணவரும் ஒன்று சேர்ந்து உடல் உறவு கொள்ளும் போது அவர் அனுப்பும் விந்துக்கள் அனைத்தும் முழுவதுமாக அப்படியே வெளியே வந்து விடுகிறது. இதற்குரிய காரணம் என்னவென்று எங்கள் இருவருக்கும் புரியவில்லை. இதைப் பற்றி யாரிடமாவது ஆலோசனை கேட்கவும் எங்களுக்கு வெட்கமாக உள்ளது. எல்லா பெண்களுக்கும் இதுபோல்தான் நிகழுமா? அல்லது எனக்கு மட்டும்தான் ஏதாவது குறை உள்ளதா? இதனால் எங்களுக்கு குழந்தை பிறக்குமா? என்ற ஐயம் எங்கள் இருவருக்கும் ஏற்படுகிறது. எங்கள் குறையை தீர்க்க நீங்கள் தக்க ஆலோசனை தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*கே.ராதிகா, சென்னை - 19.*

*உங்களுக்கு எழுந்துள்ள சந்தேகம் போலவே திருமணமாகி குழந்தையில்லாத பல பெண்களுக்கு சந்தேகம் உள்ளது. கலவிக்கு பின்னர் விந்து ஒழுகி வெளிவந்து விடுவதால் கருத்தரிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பது தவறான ஒன்று. ஏனெனில் ஒரு முறை வெளியாகும் ஆணின் விந்து சுமார் இரண்டு முதல் மூன்று மில்லி லிட்டர் அளவு இருக்கும். ஒரு மில்லி லிட்டர் விந்தணுவிலேயே ஆறிலிருந்து பத்து கோடி விந்தணுக்கள் இருக்கும். ஒரு குழந்தை உருவாக ஒரு துளி விந்துவே போதுமானதாக இருப்பதால் மிஞ்சியவை யோனி குழாயின் வழியே வெளிவந்து விட்டாலும் கருத்தரிக்கும் வாய்ப்பின்*

குறுக்கே நிற்பதில்லை. இது பல பெண்களுக்கு ஏற்படுகின்ற ஓர் இயற்கை நிகழ்வே. இதனை ஒரு குறை என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. விந்து முழுவதும் ஒழுகி விட்டதாக எண்ணுகின்ற போது கலவி முடிந்து இரண்டிலிருந்து நான்கு மணி நேரத்திற்குப் பின்னரும்கூட அப் பெண்ணின் கருப்பைக் கழுத்துக் கோழையை (Cervical Mucous) எடுத்து நுண்ணோக்கி (Microscope) கொண்டு பார்த்தால் ஓடிக் கொண்டிருக்கும் விந்தணுக்களை காண முடியும். எனவே முழுமையாக கலவி இன்பம் துய்த்த பின்னர் விந்துவின் ஒரு பகுதி வெளி ஒழுகுவதால் குழந்தை பெறும் பாக்கியம் தடை படுவதில்லை ஆனால் இயலாமை யினாலோ அல்லது வலியின் காரண மாகவோ பூரணமாக தாம்பத்திய உறவில் ஈடுபடாமல் இருக்கும்போது ஒரு சிலருக்கு விந்து யோனிக் குழாயின் உள்ளே செல்லாது வெளியிலேயே விடப்பட்டு விடலாம். அப்போது பின்கலவி சோதனை செய்தால் விந்தணு கருப்பைக் கழுத்தை சென்றடையவில்லை என்பதை சுட்டிக் காட்டும். தாம்பத்திய உறவில் முழுமையாக ஈடுபடுகின்றபோது சிறிது விந்து வெளியேறுவதில் தவறில்லை.

**தாய்ப்பால் கொடுக்கும் வரை குழந்தை உண்டாகாது என்பது உண்மையா? இது எந்த வகையில் சாத்தியக் கூறாகும்? நான் எனது குழந்தைக்கு இரண்டு வருடங்கள் தாய்ப்பால் கொடுக்கலாம் என்று நினைத்துள்ளேன். எனக்குப் பிறந்த முதல் பெண் குழந்தை சுகப் பிரசவமே. குழந்தை பிறந்த எத்தனாவது மாதத்தில் கணவன் மனைவி ஒன்று சேர்வது நல்லது என்பதையும் தயவு செய்து தெளிவுப்படுத்த வேண்டுகிறேன். தாய்ப்பால் கொடுத்தால் கர்ப்பம் தரிக்காது என்றுதான் கேள்விப்படுகிறேன். தங்களின் அன்பார்ந்த ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.**

*சித்ரா மனோகரன்,*
*கோயம்புத்தூர் - 16.*

இரண்டு வருடங்களுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்ற உங்கள் முடிவு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. குழந்தை பிறந்து பாலூட்டும் பருவத்தில் ஏற்படும் இயக்கு நீர் மாற்றங்களால் கருவணு விடுபடாமல் இருப்பதாலேயே ஒரு பெண் பாலூட்டும் பருவத்தில் கர்ப்பம் அடைவதில்லை. மாதவிலக்கும் தோன்றுவதில்லை. ஆனால் பாலூட்டும் பருவத்தில் குழந்தை பேற்றுக்கு பின்னர் முதல் மாதவிலக்கு எப்போது தோன்றும் என்பது உறுதியாக கூறுவதற்கில்லை. ஏனெனில் பெண்ணுக்கு பெண் இது மாறுபடும். ஒரே பெண்ணிற்கே குழந்தைக்கு குழந்தை மாறுபட்டு மாதவிலக்கு தோன்றலாம். பூப்பெய்துவது எந்தப் பெண்ணுக்கு எந்நாளில் எப்போது ஏற்படும் என அறிய முடியாதோ அதேபோல் குழந்தைப் பேற்றுக்கு பின்னர் எந்த பெண்ணுக்கு எப்போது கருவணு விடுபடும் என அறிய முடியாது. கருவணு விடுபடுவதை அறிய முடியாததால் எந்த எச்சரிக்கையும் எடுக்க முடியாது. அப்போது மாதவிலக்கு தோன்றுவதற்கு முன்னரே அடுத்த கர்ப்பம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும். ஒருமுறையேனும் மாதவிலக்கு தோன்றிவிட்டால் பின்னர் முன்னெச்சரிக்கை எடுப்பது எளிதாகி விடும். எனவேதான் பாலூட்டும் பருவம் முழுவதும் கர்ப்பம் தரிக்காது என்று அசட்டையாக இருக்கக் கூடாது.

ஒரு சுகப்பேறானாலும் ஒரு பெண் தனது உடல் நலனை முழுமையாக திரும்பவும் பெற்று விடாள் என்று கூறுவதற்கில்லை. மாற்றமடைந்த உறுப்புகள் பழைய தன்நிலை நோக்கி முற்றிலுமாக திரும்ப சுமார் ஆறு வார காலம் முதல் எட்டு வார காலமாகிறது. அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மூன்று மாதங்கள் கழித்து தாம்பத்திய உறவு கொள்ளலாம்.


**எனக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மூன்று ஆண்டுகளுக்கேனும் அடுத்த குழந்தை வேண்டாம் என நானும் என் கணவரும் எண்ணியிருந்தோம். ஆனால் எப்படியோ எங்கள் கவனக் குறைவால் கர்ப்பம் தரித்துவிட்டது. அதை கலைத்திட வேண்டும் என்பதற்காக ஒரு ஊசி போட்டுக் கொண்டேன். ஆனால் கரு கலையவில்லை. இப்பொழுது பெற்றுக் கொள்ளலாம் என எண்ணுகின்றோம். இப்பொழுது நான்கு மாதங்கள் ஆகி விட்டன. குழந்தை ஊனமாக பிறந்து விடும் என எல்லோரும் பயம் காட்டுகிறார்கள். இப்பொழுது கலைப்பது கஷ்டமென்றே நினைக்கின்றேன். இப்பொழுது என்ன செய்வது என்று தயவுசெய்து கூறுங்கள். எனக்கு மன நிம்மதியே இல்லை டாக்டர்.**

*- ஜெயா, உசிலம்பட்டி.*

முதலில் கர்ப்பம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளாமலே மருந்துகளை உட்கொண்டுவிட்டு பின்னர் இவ்வாறு கலக்கம் அடைபவர் பலர். இனப்பெருக்க பருவத்தில் உள்ள எந்த ஒரு பெண்ணுக்கும் ஒழுங்காக வந்த மாதவிலக்கு தடைபடுமானால் கர்ப்பம் என்று கொள்வதுதான் நியதி. ஆனால் உடல் நிலை, மனநிலை ஆகியவற்றால் மாதவிலக்கு சுழற்சியில் மாற்றம் ஏற்பட்டு குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ வரலாம். குழந்தை வேண்டுமென ஏங்குகின்றவர்களுக்கும் குழந்தை வந்துவிடுமோ என அஞ்சுகின்றவர்களுக்கும் கூட மாதவிலக்கு வர வேண்டிய நாளில் வராமல் இருந்து விடலாம். எனவே எந்த ஒரு பெண்ணுக்கும் மாதவிலக்கு வரவேண்டிய நாள் தள்ளுமானால் அவசியம் முதலில் சிறுநீர் பரிசோதனை செய்து கர்ப்பத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும். ஏனெனில் கர்ப்பம் தரிக்காமலேயே மனோ, உடல் நிலை மாறுபாட்டினால் மாதவிலக்கு தள்ளுகிறவர்களுக்கு மட்டுமே இயக்கு நீர் மாத்திரைகள், ஊசிகள் ஆகிய வற்றை பயன்படுத்துகின்றபோது மாதவிலக்கு வந்து விடுகிறது. அதனை மாத்திரையாலோ ஊசியாலோ கரு கலைந்து விட்டது என தவறாக எண்ணி விடுகிறார்கள். இவர்கள் சற்று பொறுத்திருந்தாலே மாதவிலக்கு தானாக வந்திருக்கும். இயக்குநீர் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு இம்மாத்திரைகளும் ஊசிகளும் நின்ற மாதவிலக்கை தோற்றுவித்திருக்கும். இதுதான் உண்மை. மாதவிலக்கு நின்று கர்ப்பம் உள்ளது என்பது பரிசோதனையின் மூலம் உறுதிப்படுமாயின் எந்த மாத்திரையாலும், ஊசியாலும் கரு கலைவதில்லை. டி & ஸி என்று சொல்லப்படுகின்ற விசாலித்துச் சுரண்டும் அறுவை சிகிச்சையினால் மட்டுமே கருவை கலைக்க முடியும். எனவே கர்ப்பம் உள்ளது என்று அறிகின்றவர்கள் மாத்திரையும் ஊசியும் கருவை கலைத்துவிடும் எனும் நப்பாசையால் அவைகளை பயன்படுத்துதல் தவறு.

எனவே மாதவிலக்கு நின்ற ஒவ்வொரு பெண்ணும் சிறுநீர் சோதனை, இரத்த சோதனையோ, நுண்ணொலி அலகீட்டுச் (Ultrasound Scanner) சேர்தனையோ செய்து கர்ப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டால் கர்ப்பம் இல்லாதவர்கள் அனாவசியமாக டி & ஸி செய்து கொள்ள வேண்டுவதும் இல்லை. கர்ப்பமுற்றவர்கள் அனாவசியமாக மாத்திரைகளை உட்கொண்டு






பின்னர் கலங்க வேண்டுவதும் இல்லை. நீங்களும் இப்பொழுது மனம் தளர்வதை விட்டு நுண்ணொலி அலகீட்டு பரிசோதனையின் மூலம் கருவின் வளர்ச்சியை கண்காணித்துக் கொண்டே வந்து நிம்மதியோடு இக்கருவை வளர்த்துக் கொள்ளலாம்.

**எனக்கு 20 வயது ஆகிறது. என்னுடைய மார்பகம் வளரவில்லை. 20 வயதிற்குரிய மார்பகம் இல்லை. எனக்கு இன்னும் இரண்டு வருடத்தில் திருமணம் நடக்கவிருக்கிறது. இதனால் என் மனம் மிகவும் கஷ்டப்படுகிறது. இந்த விஷயத்தை நான் யாரிடமும் சொன்னதில்லை. பெண்மணியில் உங்கள் மருத்துவ விளக்கம் விவரமாக இருப்பதால் இதை எழுதுகிறேன். என் உடல் இந்த மாதிரி இருப்பதால் என் எதிர்காலம் பாதிக்கப்படும் என்று என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. தயவு செய்து இதற்கு கண்டிப்பாக விளக்கம் தாருங்கள்.**

*- லக்ஷ்மி, நேரு நகர்.*

உடல் வளர்ச்சியின்போது பெண்கள் உடல் பருத்தும் இருக்கலாம். இல்லையேல் மெலிந்தும் இருக்கலாம். அதேபோன்று மார்பகங்களின் வளர்ச்சி பருத்தும் இருக்கலாம்; சிறுத்தும் இருக்கலாம். ஆனால் இந்த அளவினால் செயல் திறன் மாறுபடாது. திருமணமாகி குழந்தை பிறந்து பால் புகட்டும் போது எல்லா பெண்களுக்குமே மார்பகம் சற்று பெருத்து விடும். அது இயற்கை தரும் மாற்றமாகும். மார்பக வளர்ச்சி பூரித்து வெளித் தோன்றுகின்ற அளவுக்கு இல்லையென்றாலும் குழந்தைப் பேற்றின்போது பால் சுரப்பதற்கு தடையாக இருப்பதில்லை. எனவே நீங்கள் நிச்சயமாக திருமணம் செய்து கொள்ளலாம். உங்களுடைய எதிர்காலம் கண்டிப்பாக பாதிக்கப்படாது.

**எனக்கு வயது 30. என் கணவர் வயது 38. திருமணமாகி 10 வருடங்கள் ஆகிவிட்டது. எனக்கு இரண்டு ஆண் குழந்தை இருக்கின்றன. எனக்கு ஒரு வருட காலமாக முடி வளர்ச்சி அதிகமாக இருக்கின்றது. மார்புகளில், மூக்குக்கு கீழ் மீசையாக உள்ளது. கால்களில் இப்போது நிறைய வருகின்றது. வயிறு பகுதிகளில் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தயவு செய்து விளக்கி கூற வேண்டும்.**

*- புனா, மயிலாப்பூர்.*

உங்கள் கடிதத்தில் கடந்த ஒரு ஆண்டு காலமாகத்தான் ஒரு ஆண்மைத் தோற்ற முடிவளர்ச்சி. உள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளீர்கள். இதனை நீங்கள் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் கால்களிலும், அடிவயிற்று பகுதியிலும் சில பெண்களுக்கு பாரம்பரிய வழிமுறையிலே முடிவளர்ச்சி சற்று அதிகமாகக் காணப்படலாம். மற்றும் சில பெண்களுக்கு கருவணுவகத்திலிருந்து மாதத்திற்கு ஒரு முறை விடுபட வேண்டிய கருவணு விடுபடாமல் கருவணுவகம் பல் நீர்க் கோளங்களை கொண்டதாக காணப்படும். ஒரு பெண்ணுக்கு இப்பல நீர்ப் புடைப்பு கருவணுவகம் (Poly Cystic Ovary) இருக்கின்றபோது குழந்தைப் பேறின்றி ஆண்மைத் தோற்ற முடியமைப்பு இருக்கலாம். இரண்டு குழந்தைகளுக்கு தாயான பின்னர் உங்களுக்கு இக்கோளாறு இருக்கும் வாய்ப்பு இல்லை. கருவணுவகத்தில் அனைத்து செயல் திறனையும் கொண்ட பாலினம் சார்ந்த நுண்ணறைகள் உள்ளன. இந் நுண்ணறைகளின் பெருக்கம் கட்டிகளாகலாம். ஆண்மையூக்கி இயக்கு நீரை சுரக்கக்கூடிய கட்டிகள் கருவணுவகத்திலிருந்து தோன்றுமானால் ஆண்மைத் தோற்ற அமைப்புக்கு ஏற்றவாறு முடி வளர்ச்சி மாறி காணப்படும் அதே போன்று சிறுநீர்பிரித்தி மேவி சுரப்பி எனப்படும் அட்ரீனல் சுரப்பியின் மேல் பகுதியில் உள்ள புறணி (Cortex) யிலிருந்து உற்பத்தியாகின்ற கட்டிகளும்கூட ஆண்மைத் தோற்ற அமைப்பினை தரலாம. எனவே நீங்கள் அவசியம் மருத்துவ ஆலோசனை பெற்று இக்கட்டிகள் உள்ளனவா இல்லையா என்பதை சோதனைகள் மூலம் கண்டறிந்து நிவர்த்தி தேடிக்கொள்ள வேண்டும்.

**என் வயது 48. என் கணவரின் வயது 54. என் கர்ப்பப்பை ஐந்து மாதங்களுக்கு முன் ஆபரேஷன் செய்து நீக்கப்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன் நான் உடலுறவு கொள்ள முற்பட்டபோது என் கணவருக்கும் எனக்கும் வலி அதிகமாக இருந்தது. இனி எப்பொழுதும் இவ்வாறுதான் வலி இருக்குமா? நாங்கள் இனி உடலுறவு கொள்ளலாமா? சாதாரணமாக அறுவை சிகிச்சைக்கு பின்னர் எத்தனை மாதங்களுக்கு பிறகு உடலுறவு கொள்ளலாம் என்பதை தாங்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

*- P.மரகதம், கோவை.*

சாதாரணமாக கருப்பையகற்றறுவை செய்த பின்னர் ஆறு வாரங்களுக்கு பின்னர் தாம்பத்திய உறவு கொள்ளலாம். அறுவை செய்த பல பெண்டிரும் மூன்று மாதங்களுக்கு பின்னரே தங்களுக்கு அறுவை நடந்திருக்கிறது என்று சதா எண்ணுகின்ற மனப்பாங்கிலிருந்து மீளுகிறார்கள். ஆகையால் அப்போது தைரியமாக உடலுறவு கொள்ளலாம். கருப்பையகற்றறுவை செய்திருக்கின்ற ஒரே காரணத்தினால் வலி ஏற்படும் என நீங்கள் அஞ்ச வேண்டுவதில்லை. உங்கள் மனதில் ஏற்படுகின்ற அச்ச உணர்வும் விருப்பமின்மையும் வலியை தோற்றுவிக்கலாம். இவ்வுணர்வுகளை அகற்றிக் கொண்டாலே போதுமானது. கருப்பையோடு கருவணுவகமும் சேர்ந்து அகற்றப்பட்டிருக்குமானால் பெண்மைக் கிளர்வி இயக்கு நீர் (Oestrogene) குறைபாட்டினால் புணருகின்ற போது வலி ஏற்படலாம். அதற்கு பெண்மைக்கிளர்வி இயக்கு நீர் பசையை பயன்படுத்திக் கொண்டால் போதுமானது. ✦

# அம்மா நீ என் குழந்தை

பள்ளிக்கூட அரங்கம்.

ஆயிரக்கணக்கான கைதட்டல்கள் இணைந்து கிளம்பி சூரியனைத் தொடட்டுமா என்றது. விகாஸுக்குப் பெருமை பிடிபடவில்லை. பதினேழாவது வயசில் என்னமாய் ஒரு பெருமை! உங்களுக்கும் எனக்கும் வாய்த்திருக்கிறதா அப்படி?

"இதோ இருக்கானே விகாஸ்.... இவனோட மதர்தான் அது!" சுற்றிலும் இருந்தவர்கள் சுட்டுவிரல் நீட்டிப் பேசுவது அகஸ்மாத்துப் போல் காதில் நுழைந்தது. மனது 'ஹோ' வென்று உற்சாகித்தது. மிஸ்ஸெல்லாமும் இவனை பிரமிப்புப் பார்வை பார்க்கிறார்கள்.

'மை மம்மீ! 'மை மம்மீ!' என்று எல்லோரிடமும் உரக்கச் சொல்லிக் காண்பிக்க ஆசைதான். அவனின் 'பிளஸ் - டூ கௌரவம் இடம் கொடுக்காதே!

ஆனால் 'இது என் மம்மி' எனப் பள்ளிக்கூடம் மொத்தத்துக்கும் தெரிகிற மாதிரி செய்ய முடியும்!

வேண்டுமென்றே மேடையில் இருந்த அம்மாவிடம் போய்ப் பேசுகிறான். வேண்டுமென்றே மெத்தென்ற வழுவழு ஃபாரின் ஸில்க் புடவைத் தலைப்பைத் திருகிச் சிரிக்கிறான். வேண்டுமென்றே அம்மாவின் இடத்தோளின் மீது கை வைத்துக் காதோடு கிசுகிசுவெனப் பேசுகிறான். எல்லோரும் பாருங்கள் - இது என் அம்மா - என்பதுபோல் இன்னும் எத்தனையோ 'வேண்டுமென்றே' கள்!

"என்ன விகாஸ்? நான் கேட்டதுக்குப் பதில் காணோமே! என்ன யோசனை? கேன் யூ கன்ஸல்ட் யுவர் மதர் அண்ட் டெல் மீ?" எதிரில் இருந்த ஹெச்.எம் கேட்டபிறகுதான் இந்த உலகுக்கு மீண்டான் விகாஸ்.

"கேட்டுச் சொல்றேன் மேம். ஷ்யூராய் மம்மி சரி சொல்லுவாங்க.." பணிவுடன் அழகிய ஆங்கிலத்தில் சொன்னான்.

இத்தனை நேரம் கண்டது கற்பனை விழா! எனினும் அது அசாத்தியம் இல்லை! விகாஸின் அம்மா அஜந்தா சாதாரண மனுஷி இல்லை. வகுப்பில் 'எக்ஸ்க்யூஸ்' கேட்டு அமர்ந்த விகாஸுக்கு, மிஸ் நடத்திக் கொண்டிருந்த 'ஜெனிடிக்ஸ்' வழக்கத்துக்கு விரோதமாக மனதில் பதிய மறுத்தது.

அம்மா! அம்மா! அம்மாதான் நெஞ்சம் முழுக்க நிரம்பி வழிந்து கொண்டிருந்தாள்.

"உன் அம்மா போதை ஒழிப்புப் பற்றி, நல்லதொரு அவேர்னஸ் ஏற்படுத்தியிருக்காங்க..அதனால நம் பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்கு அவங்களைத் தலைமை தாங்க அழைக்கணும். இதுபற்றி அவங்க வசதியைக் கலந்தாலோசிச்சுப் பிறகு தேதி வைக்கணும். என்னிக்கு உங்க வீட்டுக்கு வரலாம்னு கேட்டுச் சொல்றியா?" தலைமை ஆசிரியை சொன்னதும் 'கிளைடிங்' போல் உணர்ந்தான்.

அம்மாவுக்கு மேடையும், பாராட்டும், கைதட்டலும் புதிது இல்லைதான். தினம் ஒரு கூட்டம், மாலை, கைதட்டல் என்று ஊறிப் போனவள். விகாஸுக்கு நன்றாகவே தெரியும்தான். இருந்தாலும் தான் மதிக்கும் பள்ளியில், தன் ஆசிரியர்களே அம்மாவைக் கௌரவப்படுத்துவது அற்புதமான சமாச்சாரம் இல்லையா!

அம்மா செய்து கொண்டிருப்பது சாதாரண சோஷியல் சர்வீஸ் ரகத்தோடு சேர்ந்ததில்லை. தவம்; புரட்சி. இளைய சமுதாயத்தின் வாழ்க்கை இருண்டு போகாமல் இருக்க அவள் அகல் விளக்கு ஏற்றவில்லை. ஆயிரம் வாட்ஸ் பல்புகள் ஆயிரக்கணக்காய்ப் போடுதல் போல்....!

வேதா கோபாலன்

இவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகவே அம்மா அதைச் செய்து வருகிறாள். போதை அரக்கனுக்கு எதிரான போர். போதை மருந்தின் ஆதிக்கம் மெல்ல மெல்ல ஓர் அபாயப் போர்வைபோல் இளைஞர்களை மூடி வெளியுலக வெளிச்சமே படாமல் செய்து விடுவதன் பின்னணிக் காரணத்தை..... அதன் பின் விளைவுகளை, அது மனிதனை மெல்ல அரித்து ஒழிக்கும் அவலத்தையெல்லாம் அம்மா ரகம் ரகமாய் வெளிச்சம் போட்டுக் காண்பித்துக் கொண்டிருக்கிறாள்.

அஜந்தாவின் உள்ளங்கைக்குள் அடங்காத கலையே கிடையாது. அதனால் எல்லாத் துறைகள் மூலமாகவும் அழகழகாகப் பிரச்சாரம் செய்து விட முடிகிறது அவளால்!

கதையில் சொல்வாள். கவிதையில் விவரிப்பாள். சினிமாவுக்கு வசனம் எழுதி வெளிப்படுத்துவாள். டி.வி.க்கு நாடகம் எழுதி சாத்தியமாக்குவாள். மீட்டிங்குகள் போட்டு, விழிப்புணர்வுக் கூட்டங்கள் போட்டு, போதையின் தீமைகளை விளக்குவாள்.

அதுபோல, விகாஸ் படிக்கும் பள்ளியிலும் ஒரு டெமான்ஸ்டிரேஷன் நடந்தது. சின்னதாய் ஒரு ஃபிலிம் ஷோ புரொஜக்ஷன். வீடியோவில் மசாலாப் படங்கள் பார்த்துப் பழகிய கண்களுக்கு, இது ஒரு வித்தியாச அனுபவம். கச்சிதமாய்ச் சிமிழ் போல் ஒரு கதை, மனசைத் தூண்டில் போட்டு உலுக்கும் சம்பவங்கள்.

பார்த்தார்கள். கண்ணை மூடாமல் பார்த்தார்கள்.

முதலில் திரை முழுவதுமாய் அந்த அழகிய மெல்லிய ரோஜாப்பூ காண்பிக்கப்பட்டது. இதழ்களில் மெல்லிசாய்ப் பனித்துளி. பிஞ்சுக் குழந்தையின் கன்னம் போன்ற புஷ்பத்தைப் பார்த்தபோதே மணந்த மாதிரி உணர்ந்தார்கள்.

அடுத்த காட்சி.

அந்தப் பணக்காரப் பத்தாம் வகுப்புச் சிறுவன், பெற்றோரால் அலட்சியப்படுத்தப்படும் அவலம்.

அம்மா ஒருபக்கம் கிளப்புக்குப் போக, அப்பா இன்னொரு புறம் இவனுக்குச் சொத்து வைக்கும் பொருட்டு பிசினசை மேம்படுத்த அலைய, இவனை வளர்ப்பதாய்ப் பெயர் பண்ணும் ஆயாக்களும், வேலைக்காரர்களும், டிரைவர்களும் பங்களாவின் சுகங்களை அனுபவிக்க...

- சிறுவன் தனித்து விடப்படுகிறான்.

பள்ளிக்கூடத்தருகில் ஐஸ் வண்டி ஆள், ஐஸைத் தவிரச் சிறு பொட்டலங்களையும் விற்க - துக்கத்தையும் கவலையையும் தீர்க்கும் மருந்து என்று பதில் கிடைக்கிறது.

அவன் மெல்ல போதைப் பழக்கத்துக்கு அடிமையாக -

மீண்டும் ரோஜாவின் குளோஸ் - அப். இப்போது அதன் இதழ்கள் ஒவ்வொன்றாய் உதிர்ந்து - கீழே வைத்திருக்கும் மண்ணெண்ணெய் விளக்கின் ஜோதியில் வீழ்ந்து கருக...

கணகணவென மின்சார உபய மணி. விகாஸுக்கு உலுக்கிப் போட்டது. ஐயோ! இத்தனை நேரம் பாடம் நடப்பதைக் கவனிக்காமலா....சே!

"விக்கி....ஷல் வி கோ?" முதுகுப் பையை மாட்டியவாறு இந்தர்ஜித் கேட்டான். இந்தருக்கு விகாஸிடம் நட்பு மட்டுமல்லாமல் பக்தி விஸ்வாசமே இருந்தது!



காரணம் உண்டு!

திரையில் காண்பிக்கப்பட்ட ரோஜா போல் இந்த இந்தர்ஜித்தும் உதிர இருந்தானே! அவன் நூறு சதம் மீண்டுவர முழுக்காரணம் விகாஸின் அம்மா அஜந்தாதான் - அதுவும் இரண்டாம் பேருக்குத் தெரியாமல்!

டாக்குமென்ட்ரியைப் பார்த்து அசந்துவிட்ட இந்தர்ஜித், அதில் வரும் சிறுவனைப் போல்தான் தானும் சீரழியப் போகிறோம் என்று உணர்ந்து கலங்கினான். தன்னையும் சமுதாயம் மொத்தமும் ஒதுக்கப் போகிறது என்று தெரிந்து அதிர்ந் தான்.

எல்லா இதழ்களும் உதிரக் கடைசிக் கடைசியாப் பற்றி எரிகிறதே ரோஜா.....ஐயோ.....பிஞ்சு உள்ளங்களை எத்தனை நாள் அலைக்கழிக்கும்! சில விதமாய்ச் சொன்னால் சில விஷயங்கள் நெஞ்சை விட்டு அகலாமல் உட்கார்ந்து கொள்ளும்போலும்!

திரையில் கடைசியாய்க் காண்பிக்கப்பட்ட 'இந்த ரோஜா போல் நீங்களும் எரிய வேண்டுமா? சிந்தியுங்கள்! என்ற வாசகம் உள்ளத்தை ஈயுகுண்டாய்க் கனக்கச் செய்தது.

இந்தர்ஜித் அன்றைக்குத்தான் விகாஸிடம் முதல்முதலாய்க் கேட்டான். "விக்கி...ஐ வாண்ட் டு மீட் யுவர் மம். ஐ வாண்ட் டு டாக் டு ஹர்."

விகாஸ் அழைத்துப் போனான். இந்தர் மனம்விட்டுப் பேசினான்.

நல்லவேளை. ஆரம்ப நிலை. அவன் பிரச்னைகளை மெல்ல மெல்லக் களைவதில் அம்மாவுக்குச் சிரமம் இல்லை.

**வி**காஸூம் இந்தர்ஜித்தும் சைக்கிள் மிதித்துக் கிளம்பியபோது மாலை வெயில் அழகாய் இருந்தது.

"விகாஸ்...உன் அம்மாவைப் பார்த்து ஒரு வாரமாச்சு. உன் வீட்டுக்கு வரவா?"

"நீ வர்றது பற்றி நோ அப்ஜக்ஷன். ஆனா இன்னிக்கு மம்மி யார்கிட்டயும் பேச மாட்டா. ரூம் கதவை திறக்கக்கூட மாட்டா. பிகாஸ் இன்னிக்கு அப்பாவோட நினைவு நாள்"

"ஓ..அயம் ஸாரி.." பிறகு இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

விகாஸூக்கு அப்பாவின் நினைவு வந்தது. ஏழைக் குடும்பத்திலிருந்து அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்த அப்பா, ராணி மாதிரி அவளை வைத்துக் கொண்ட அப்பா, இவன் நாலாம் கிளாஸ் படிக்கும்போது செத்துப் போன அப்பா, விமானங்கள் மோதிக்கொண்ட கோர விபத்தில் கரிக்கட்டையாகிப் போன அப்பா!

அம்மா ரொம்பவும் சோர்ந்து வாடிப் போய்க் கொண்டிருந்த போதுதான், சமுதாய விழிப்புணர்வுச் சங்கத்தின் நாடகம் ஒன்றிற்கு, ஸ்கிரிப்ட் எழுதித் தரச் சொன்னார்கள். அதில் பிடித்து, அம்மா முழு மூச்சாக அதிலேயே இறங்கி விட்டாள்.

ஆனாலும் அடிக்கடி தனியானதொரு உலகத்தில் தவிப்பது புரிந்தது. அப்பாவை மறக்க முடியாமல் அவஸ்தைப்படுகிறாள் என்று அவனின் பதினேழு வயது மூளைக்கு நன்றாகவே விளங்கியது.

அதனாலேயே அம்மாவை அடிக்கடி தொந்தரவு செய்வதைத் தவிர்த்தான். பாடங்களைச் சொல்லித்தர அவளை எதிர்பார்க்காமலேயே முதல் மாணவனாய் வருவது அப்படி ஒன்றும் சிரமமாக இல்லை. தன் ரூமில் கதவைச் சாத்திக் கொண்டு படிப்பான். அல்லது நல்ல சிநேகிதர்களுடன் கிரிக்கெட்டோ, லான் டென்னிஸோ, ஷட்டிலோ விளையாடப் போய் விடுவான்.

**கி**றீச்சென்று சப்தித்த 'கிரில்' கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தபோது, அம்மாவின் கான்டெஸா கிளாஸிக் வெள்ளைப் பூனையாய் உட்கார்ந்திருந்தது. அவன் நினைத்த மாதிரியே அம்மா இன்று எங்கேயும் வெளியே போகவில்லை.

சமையல்காரர் தந்த டிபனைச் சாப்பிட்டுவிட்டுத் தன் ரூமுக்குப் போகிறபோக்கில் பார்த்தான். அம்மாவின் ரூம் ஜன்னல்களும் தேக்குமரக் கதவும் சாத்தப்பட்டிருந்தன. கண்ணாடி ஜன்னல் வழியே பால் போல் வெளிச்சம் கசிந்தது.

அந்த அறையில் அப்பாவின் படம் மிகப் பெரிதாக்கப்பட்டு மாட்டியிருக்கும். அம்மா அதனுடன் பேசிக் கொண்டிருப்பாளோ அல்லது மெடிட்டேஷன் பண்ணிக் கொண்டிருக்கிறாளோ. ஆக, இன்று முழுக்க யாரும் அந்த ரூம் பக்கம் போய்விடக் கூடாது.

இன்றைக்கு ஹெச்.எம். சொன்னதை நேராய்ப் போய் அம்மாவிடம் சொல்ல, உடம்பும் மனசும் பரபரத்தன. ஆனாலும் வருஷா வருஷம் போல் நேற்று அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது.

"விகாஸ் டியர். நாளைக்கு எந்தக் காரணம் கொண்டும் அம்மாவைத் தொந்தரவு பண்ணாதேடா ராஜா. உன் அப்பாவின் நினைவுகளோடு என்னை முழு நாளும் வாழ விட்டுடு.

இரண்டு மூன்று முக்கியப்பட்ட விஸிட்டர்கள்' வந்தும், அம்மாவைத் தொந்தரவு பண்ணுவதில்லை என்பதில் மிகத் தீர்மானமாக இருந்தான். அவனுக்குப் பொய் சொல்லவும் மனசு வரவில்லை. மிக நேரடியாய், மிக நாசூக்காய் உண்மையைச் சொல்லி அனுப்பிக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் அவர் வந்தார். திவாகர் அங்கிள். அப்பாவின் மிக நெருங்கிய நண்பர். அந்தக் குடும்பத்தின் மிக முக்கிய, மிக நெருங்கிய நண்பர்.

பம்பாயிலிருந்து வந்தவர், இன்று ராத்திரியே கிளம்பிப் போவதாய்ச் சொன்னார். இதுபற்றிச் சொன்னால், 'என்னைக் கூப்பிடுவது தானே' என்று அம்மா கோபிக்கக் கூடும்.

சாப்பாட்டுக்குக்கூடத் தொந்தரவு செய்யப்படாத அம்மாவை இன்டர்காமில் அழைத்தான்.

"மம்மி.."

"யெஸ்....ஸ்....ஸ்...."அம்மாவின் குரலா இது! ஏன் இத்தனை வித்யாசம்?


"மம்மி...வெரி ஸாரி...தொந்தரவு பண்ணிட்டேன். திவாகர் அங்கிள் வந்திருக்கார். இன்னிக்கே திரும்பிப் போறாராம்..." குரலே மன்னிப்புக் கேட்டது.

"நன்.......நான்தாழ் ....உன்ழை... டிஸ்டார்ழ்ப்....பண்ழ.....வேணாழ்னு....." ஐயோ! அம்மாவா? அவனுக்குள் ஏதோ புரிகிற மாதிரி இருந்தது.

திவாகர் அங்கிளை என்ன சொல்லி அனுப்பினான் என்று அவனுக்கே தெரியாது. மாடிக்குப் புயலாய்த் தாவி ஏறினான். இங்கிதம், நாசூக்கு, நாகரிகம் என்ற வார்த்தைகளின் மறு அர்த்தமாய் வளர்ந்திருந்த விகாஸ், கிரிக்கெட் மட்டையால் ஜன்னல் கண்ணாடியை உடைத்தான். அம்மா இருந்த நிலை.....

கெஞ்சினான். "மம்மீ... ப்ளீஸ்..... கதவைத் திற....தயவுபண்ணிக் கதவைத் திறந்துடு..."





வெட்கமின்றிக் கண்ணீர் பெருகியது.

அம்மா எதையும் கவனிக்கிற நிலையில் இல்லை. அதீதப் பிரயத்தனத்துடன் கண்ணை லேசாய், அரை மில்லி மீட்டர் திறந்தாள். குரலும் உடம்பும் நடுங்கச் சொன்னாள்.

"ஐயோ....விகாஸ். ...போயிடு. .. என்னை.... என்னைப்.....பா...ர்க்.. காதே...போ..." முகம் புதைத்து முதுகு குலுங்க அழுதாள்.

சின்ன மேஜைமீது இருந்த இஞ்செக்ஷன் சிரிஞ்சும் மெழுகு வர்த்தியும் இவனை உடம்பு நடுக்கின. என்ன சொன்னால் கதவு திறப்பாள்?

"அம்மா இன்னும் பத்து எண்றதுக்குள்ள கதவைத் திறக்கலைன்னா....நான்....நான்..." வேறு வழியில்லை. அறுவை சிகிச்சை மூலம் புண்ணை அகற்றுவதுபோல் சொல்லித்தான் ஆகவேண்டும்.

"செத்துப் போயிடுவேன்"

கதவைத் திறந்தவள் அங்கேயே பொத்தென்று விழுந்தாள். ஐயோ! எத்தனை பேருக்கு போதனை பண்ணினாள். எவ்வளவு பேரை நல்வழிப் படுத்தினாள்! அம்மாவா இப்படி! உண்மையைச் சந்தித்த அதிர்ச்சியில் ஆடிப் போயிருந்தான்.

"ஏம்மா...? ஏன் இப்படி....? எல்லாம் தெரிஞ்ச நீயே இப்பிடி..." அழுதான். ஊசி குத்திக் குத்திச் சிவப்புப் புள்ளிகள். "ஐயோ.....ஐயோ... ஏம்மா இப்பிடி?" பூப்போல் அம்மாவின் கரம் தடவி அழுதான். திரையில் பார்த்த ரோஜாப்பூ நினைவுக்கு வந்தது.

"ஐயோ....நீ பார்த்துட்டியேடா....உனக்குத் தெரியக்கூடாதுன்னு நினைச்சேனே..தெரிஞ்சு போச்சே!" இரண்டு கைகளாலும் முகத்தில் அறைந்து அழுதாள்.

"ஊருக்கெல்லாம் சொல்லுவியேம்மா?" கண்ணாடி ஜாடி ஜலம் எடுத்து அம்மாவின் முகத்தில் பளீரென்று அறைந்தான். சற்று தெளிந்தாள். கொஞ்சம்தான். ஆனால் அவள் பேச அது போதுமானதாய் இருந்தது.

"விகாஸ்....விக்கி டியர்...இந்தக் கொடுமையில் நான் சிக்கிக்கிட்டு இருந்ததால்தான் இதுக்கு எதிராய் அவ்வளவும் பண்ணினேன் தெரியுமோ? உன் அப்பா போன துக்கம் தாள முடியாமல்தான்..."

"ஸ்டாப் இட்..." முதல் முறையாய் அம்மாவை எதிர்த்துக் குரல்! "ப்ச....உன் அழகும் பளபளப்பும் காணாமல் போனதுக்குக் காரணம் உன் தனிமைன்னு நினைச்சேன். அப்பா இறந்த துக்கம்னு நினைச்சேன். வயசானதால இருக்கலாம்னு நினைச்சேன்... ஐயோ.... அப்பாவின் நினைவுகளை மறக்க இதுதானா கிடைச்சுது? ஏன் அநாதை ஆசிரமம் நடத்தியிருக்கலாமே? அத்தனை ஏன்....இன்னொரு கல்யாணம்கூட.... உடைந்து அழுதான்.

"எ....என்னை....என்னை வெறுத்து ஒதுக்கிடாதே ராஜா... ப்ளீஸ்..." அம்மா குழந்தையாய்க் கெஞ்சி அழுதாள்

"சத்தியமாய் வெறுக்கவும் மாட்டேன். ஒதுக்கவும் மாட்டேன். இப்போ உன் நிலையில் எத்தனை ஆதரவும் அரவணைப்பும் தேவைன்னு எனக்குத் தெரியும். உன் மூலமாவே தெரியும். இனி என்னை உன் மகன்னு நினைக்காதே. நீ என் குழந்தைன்னு நினைச்சுக்கோ. கமான். வெளிநாட்டு சிஸ்டம் மாதிரி ஆளுக்கொரு ரூம் வேணாம். நம் ரெண்டு பேருக்கும் ஒரே ரூம்தான்.." குரலில் தீர்மானம் இருந்தது.

அம்மா குலுங்கி அழுதவாறு அவனை அணைத்துக் கொண்டாள். விகாஸ் திரும்பிப் பார்த்தான். பிளேனோடு சாம்பலான அப்பா ஃப்ரேமில் சிரித்தார். காலையில் புதிதாய்ப் போடப்பட்ட சந்தன சீவல் மாலை அறைமுழுக்க மணம் பரப்பியது.

"கஷ்டமான வேலைதான்டாடி. இருந்தாலும் சாதிச்சுடுவேன்" முணுமுணுத்தான். இருந்தாலும் பிரமிப்பும் பயமும் மனதை அழுத்தின!

நாளை டைனிங் மேஜையில் காலை உணவின்போதுதான் ஹெச்.எம் சொன்னதைச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அப்போதிருந்த உற்சாகம் முழுவதும் இப்போது வடிந்திருந்தது! என்றைக்கேனும் மீளாமலா போய் விடும்! ✦

# போகிற போக்கில்..



***நீங்கள் சாலையில் போகும்போதோ, தனிமையில் சிந்திக்கும்போதோ நீங்கள் சந்தித்த சில நெருடல்களை, நெருக்கடிகளை எழுதி அனுப்புங்கள். முடிந்தவரை சம்பந்தப்பட்டவர்களுக்கு அவற்றைத் தெரிவித்து, ஆவன செய்ய முயற்சிக்கிறோம்.***

***பொது நலம் கருதி, உங்கள் மனதில் தோன்றும் விஷயங்களை எழுதி, தபாலுறை மீது 'போகிற போக்கில்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம்.***

## ஆலய நிர்வாகம் கவனிக்குமா?


நாத்திக இயக்கங்கள் எவ்வளவோ வகையில் போராட்டங்கள் நடத்தினாலும், இறையுணர்வு அதிகமாகிக் கொண்டு வருவது மகிழக்கூடிய ஒன்றாகும். ஆனால் சில ஆலயங்களில் பணம் தருபவர்களுக்கு மட்டுமே திருநீறு, குங்குமம், மலர் போன்றவைகள் தருகின்றனர். மற்றவர்களை மதிப்பதுகூட இல்லை. இது வருந்தத்தக்கது மட்டுமல்லாது வன்மையாகக் கண்டிக்கக் கூடியதுமாகும்.

மேலும் சில ஆலயங்களில் நான் பார்த்து வேதனை அடைந்த சிலவற்றினுள் ஒன்று, இராம நாமத்தை எழுதி அந்த சீட்டுகளை மாலையாகக் கோர்த்துக் கட்டி ஆஞ்சநேயருக்கு அணிவிக்க அன்பர்கள், தாய்க்குலத்தோர் தருகின்றனர். கட்டணம் வாங்கிக் கொண்டு அந்த மாலையை ஆஞ்சநேயருக்கு அணிவிக்கின்றனர். மறுநாள் அவைகளை கழற்றி குப்பையில் எறிந்து விடுகின்றனர். இது எவ்வளவு கொடுமை; பாபச் செயல். இப்படிப்பட்ட மாலைகளை ஒன்று சேர்த்து காஞ்சி மடத்திற்கோ வேறு மடங்களுக்கோ அனுப்பலாம் என்று ஒருமுறை மடம் சார்பாகக் கூறப்பட்டது. அவர்கள் பெருமாள் ஆலயங்கள் கட்டும்போது சிலைக்கு கீழே பூமியில் அர்ப்பணிப்பதாகக் கேள்விப்பட்டேன். இல்லையேல் யாகத்தில் சேர்த்து விடலாம். ஆனால் குப்பையில் கொட்டுவது எவ்வளவு கேவலம்.

இனியாவது இம்மாதிரி செய்யும் ஆலயத்தார் அவைகளை தவிர்த்து தடுத்து அந்தப் புனித நாமம் கொண்ட மாலைகளை புனிதம் கெடாது ஆவன செய்ய முற்பட வேண்டும்.

ஒரு முறை மகா பெரியவர் கூறினார், "இந்து மதம், இந்து கோயில்கள் சீர்குலைய இந்துக்கள் மட்டுமல்ல; ஆலயம் பணிபுரியும் அர்ச்சகர்களும் காரணம்" என்றார். அது உண்மை. இந்த உண்மை தொடர வேண்டாம்.

**- காமாட்சி நாராயணன்,**
**சத்துவாச்சாரி, வேலூர்.**



## ஏன் இந்த கவனக் குறைவு?

ஒரு பதிப்பகத்திற்கு தையல் கலை கற்றுக் கொள்வதற்கான புத்தகம் இரண்டை V.P.P.ல் பெற கடிதம் எழுதியிருந்தேன். ஒரு வாரத்திற்குள் தபால்காரர் புத்தகக் கட்டு கொண்டு வந்து கொடுத்தார். அதில் ஒரு புத்தகம்தான் இருந்தது.

அடுத்த நாள் மீண்டும் ஒரு புத்தகக்கட்டு வந்தது. பிரித்து பார்த்தேன். முதல் நாள் வந்த அதே புத்தகத்துடன் வேறு ஒரு புத்தகமும் இருந்தது. பிரித்து விட்டதால் வேறு வழி இல்லாமல் ஒரே புத்தகத்தை இருமுறை பணம் கொடுத்து வாங்கி விட்டேன். பதிப்பகத்தார்க்கு ஏன் இந்த கவனக் குறைவு? அந்த ஊழியர்களின் அஜாக்கிரதையால் எனக்கும் பணவிரயம். அவர்கள் பதிப்பகத்திற்கும் கெட்ட பெயர். இனியாவது இம்மாதிரி நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**- திருமதி ஜனனி சரஸ்வதி, செங்கம்,**
**திருவண்ணாமலை.**

## எல்லாம் சரி, ஆனாலும்....!

இறந்தவர்களுக்காக ஈமச் சடங்குகள் செய்யும் இடங்கள் சென்னையில் பலவுண்டு. அதில் ஒன்று, ராயபுரத்திலுள்ள பிரம்ம தீர்த்தம் ஆகும். அங்கு அறைகள் 'பளிச்' சென்று இருக்கிறது. நோயை உருவாக்கும் கொசுக்கள் கூட, அங்கில்லை என்றால் பாராட்டத்தக்க விஷயம்தானே, ஒட்டடைகூட கிடையாது. ஆனால் கழிப்பிடமும், குளிக்குமிடமும் வெகு தொலைவில் இருக்கின்றன. என்னதான் இரவு முழுவதும் விளக்கு வெளிச்சம் இருந்தாலும் 10 மணிக்கு மேல் கழிப்பிடம் செல்ல பயமாக இருக்கிறது. இதை தவிர்க்க சற்று முன்பாகவே 'அட்டாச்டு பாத்ரூமாக' இருந்தால் பரவாயில்லை. சென்ற வெள்ளியன்று என் தாயின் இறுதிச் சடங்கிற்காக பிரம்ம தீர்த்தத்திற்கு சென்றேன். இரவு கழிப்பிடம் செல்ல மிகவும் பயந்து விட்டேன். ஆனால், சுத்தம் என்றால் படுசுத்தம்.





**- பெயர் வெளியிட விரும்பாத வாசகர்.**

## ஏழாவது படிக்கும் மாணவனின் தார்மீக ஏக்கம்!

மயிலாடுதுறை அருகில் உள்ள சிறு கிராமம் ஒன்றில் வசிப்பவன் நான். நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். சமீபத்தில் எங்கள் ஊரில் நடந்த சம்பவம் ஒன்று என் மனதை மிகவும் பாதித்தது. எங்கள் ஊரில் ஒருவர் சம்பாதிக்கும் பணத்தில் முக்கால்வாசி பணத்தை குடியிலும், மீதியை சீட்டு விளையாட்டிலுமாய் காலத்தை போக்குவார். குடும்பச் செலவுக்கு மனைவி பணம் கேட்டால், கோபத்திலும், குடி போதையிலும் அவரை அடித்து நொறுக்குவார். பாவம், காது கொடுத்து கேட்க முடியாத சொற்களால் அவரை திட்டுவார். இதனால் மனம் ஒடிந்த மனைவி - விஷம் குடித்து ஒருநாள் இறந்து விட்டார். அதனால் சிறிதும்




பாதிக்கப்படாத அந்த குடிகாரர், மறுமணம் செய்து கொண்டார். ஆனால் பழையபடியே அந்தப் பெண்ணையும் கொடுமைப்படுத்துகிறார். இதுபோன்ற ஆண்கள் - இனியாவது திருந்துவார்களா? இதுபோன்ற குடிகாரர்கள் பெருகிக் கொண்டே போனால் - நாட்டில் பெண்களே இல்லாமல் போய்விடமாட்டார்களா?

**- வி.அய்யப்பன், நாகங்குடி.**

## விபத்து தடுக்கப்படுமா?

ஒரு சமயம் போக்குவரத்து நெரிசல் உள்ள சாலையில், ரிக்ஷா ஒன்று பள்ளிக்கூடப் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது. அதில் இட நெருக்கடி காரணமாக சில பிள்ளைகள் ரிக்ஷாவினின்று கீழே இறங்கி விளையாட்டாக ரிக்ஷாவை தள்ளிக் கொண்டே பினனால ஓடினார்கள். அதைப் பாாத்த பிற பிள்ளைகளும் நீ, நானென போட்டியிட்டுககொண்டு தாறுமாறாக குதித்தார்கள். ரிக்ஷா ஓட்டுனரோ இவற்றை கண்டும் காணாதவர் போல் வண்டி ஓட்டிச் சென்றார்.

அதைப் பார்த்த நாங்கள் அவரருகே சென்று எடுத்துரைத்த போதும் அவர் அதை பொருட்படுத்தவே இல்லை.



குழந்தைகளின் உயிர்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய இவர்களின் அலட்சியப் போக்கு விபத்துகளுக்கு வழி வகுக்கலாம். இது போன்ற நபர்கள் விஷயத்தில் பெற்றோர்கள் கவனம் செலுத்தி வருவது குழந்தைகளுக்கு நலம்.

**- ஆக்னலா திலக், கோவை.**

## தந்திரமாய் ஓர் அறிக்கை!

சமீபத்தில் பரிசு போட்டிகளுக்கான போஸ்ட்கார்டு விலை இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பரிசு போட்டிக்கான போஸ்ட் கார்டு எனவும் தனியாக அச்சிட்டு வெளியிட்டு உள்ளனர். இது எங்களை போன்ற ஏழைகள் வயிற்றில் அடிக்கும் வழியாகும். பரிசு போட்டியில் அனுப்புபவர்கள் எல்லோருக்கும் பரிசு கிடைத்து விடுகிறதா என்பதை அரசு யோசிக்க வேண்டும். நித்தம் நித்தம் அரசியல்வாதிகளின் ஊழல்களின் மத்தியில் போஸ்ட் கார்டு விலையை ரூபாய் இரண்டாக ஆக உயர்த்தி இருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். கண்டனத்துக்கு உரியதாகும். நாட்டில் உள்ள பெருவாரியான ஊழல்களை தடுத்தாலே நாட்டை முன்னேற்றத்தின பாதைக்கு அழைத்து சென்று விடலாம். மாறாக போஸ்ட் கார்டு விலையை ஏற்றுவதன் மூலமாக அரசின் வருமானத்திற்கு வழிவகுக்காது. நிலைமை இப்படியிருக்க



பத்திரிகை பொறுப்பாசிரியர்கள், மற்றும் பரிசுப் போட்டி நடத்துபவர்கள் ரூபாய் ஒன்று ஸ்டாம்பு ஒட்டிய கவரை உபயோகிக்கலாம் என்று அறிக்கை விடுங்கள் பார்ப்போம். அப்புறம்தான் மத்திய அரசு நிலைமை புரிந்து போஸ்ட் கார்டு விலையை குறைப்பார்கள்.

**- எஸ். வெங்கடேசன், ஸ்ரீரங்கம்-6.**

## மேயர் மனம் வைப்பாரா?

திருச்சிராப்பள்ளி மாநகரில் உறையூர் வழியாக செல்லும் எந்த நகரப் பேருந்தும் (அரசுப் பேருந்துகள் உட்பட) ரயில் நிலைய சந்திப்பிற்கு (ஜங்ஷன்) செல்வதில்லை! இதுபற்றி பலமுறை மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.


மாநகர சாலைகளில் ஆக்கிரமிப்புகள் மிக அதிகம். இவற்றை அகற்ற மாநகராட்சி நிர்வாகம்



கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநகராட்சி பகுதியின் சாலையின் இருபுறங்களிலும் திரு. ஸ்வரண்சிங் அவர்களால் நடப்பட்ட பல மரக்கன்று காய்ந்து சருகுகளாகி விட்டன. மாநகரை பசுமையுடையதாக்க, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மனம் வைப்பாரா?

**- உறந்தை. ஜி. குமார்,**
**திருச்சிராப்பள்ளி-3.**



குதுப் மினார்.

இங்குதான், உங்கள் வருங்கால

ரகசியம் ஒளிந்திருக்கிறது.

இது 12-ம் நூற்றாண்டில் குத்புதீன் ஐபக் கட்டிய வெற்றிச் சின்னம். 238அடி உயர. ஐந்தடுக்கு செங்கோபுரம். இதிலிருந்து பார்த்தால் தெரியும் தில்லியின் விஸ்தாரம். இதைப் போல் இந்தியப் பாரம்பரியத்தின் சான்றாய் விளங்கும் சின்னங்கள் எத்தனையோ! இந்த வரலாற்றுச் சின்னங்கள்தான் உங்கள் வெற்றிச் சின்னங்கள்.

*எப்படி என்றறிய ஆவலாயிருக்கிறதா?*
தமிழ்ப் புத்தாண்டையும். இந்திய நாட்டின் 50ம் விடுதலையாண்டையும் கொண்டாட ஸ்ரீராம் சிட்ஸ் எண்ணியுள்ளது.

இந்த தமிழ்ப் புத்தாண்டில் ஸ்ரீராம் சிட்ஸின் சந்தாதாரர் என்கிற முறையில் உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது. அது தவிர அடையாள பரிசுக் கூப்பன் ஒன்றையும் பெற்றிருப்பீர்கள் உங்கள் உறவினரையோ நண்பரையோ சக அலுவலரையே ஸ்ரீராம் சிட்ஸின் புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தும்போது அந்த அடையாளக் கூப்பனை எடுத்து வாருங்கள். அறிமுகம் செய்த பின். பரிசுக் கூப்பன் அடங்கிய உறை ஒன்றை கிளை மேலாளரிடம் பெற்று கோடிட்ட பகுதியில் கத்தரியுங்கள். தாஜ்மகால். மகாபலிபுர கோயில் போன்ற பாரம்பரியச் சின்னத்தின் பெயர் ஒன்றையோ அல்லது 1000 என்ற எண்ணையோ காண்பீர்கள். அப்பெயருக்கு இணையான அறிமுகப்படுத்துவோர் பரிசினை*. கிளை மேலாளரிடம் பெற்றிடுங்கள். SS பௌல் முதல் தங்க நெக்லஸ் வரை பரவசமூட்டும் பரிசுகளை* பெறவிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல! நீங்கள் அறிமுகப்படுத்தும் நண்பருக்கும் ஓர் அழகான சந்தாதாரர் பரிசு காத்திருக்கிறது.

நேரடியாய் சேரும் சந்தாதாரர்களுக்கும் பரிசு உண்டு. பரிசுகளைப் பெற்று. எதிர்காலம் பற்றிய உறுதியான கனவுகளோடு வெற்றி நடை போடுங்கள்!


ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட் ● ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்.
'சுப்ரமணியன் பில்டிங்', 1. கிளப் ஹவுஸ் ரோடு. சென்னை-600 002. போன் : 8520700. 8522651. 8523932. 8525536. 8520797.


இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீடு.

| | சீட்டு தொகை * | | சந்தாதாரர் பரிசுகள் |
|---|---|---|---|
| 1. | 250 X 40 | 10,000 | SS பைகோலை பாட் |
| 2. | 500 X 30 | 15,000 | SS CB தேக்ஷா |
| 3. | 625 X 40 | 25,000 | கும்பகோணம் SS ஃபான்ஸி கன்டெயினர் |
| 4. | 500 X 60 | 30,000 | செல்லோ ஸ்டோர் ஃப்ரெஷ் (3) |
| 5. | 1,000 X 50 | 50,000 | SS CB மூடியுடன் கூடிய பருப்புச் சட்டி |
| 6. | 2,500 X 30 | 75,000 | ப்ரேஸ்டி SS CB பரை பேன் |
| 7. | 2,500 X 40 | 1,00,000 | காளி SS CB ஸ்கில்லெட்-200ml |
| 8. | 5,000 X 30 | 1,50,000 | ப்ரெஸ்டீஜ ஸாட் பேன் (மூடியில்லாமல்)-200ml |
| 9. | 5,000 X 40 | 2,00,000 | ஹக்கின்ஸ் நான் ஸ்டிக் ஸாட்டிலன் தவா |
| 10. | 10,000 X 30 | 3,00,000 | ஜெமினி கிப்ட்செட் |
| 11. | 20,000 X 25 | 5,00,000 | 4கிராம் தங்க காசு |

அறிமுகப்படுத்துவோர் பரிசு தற்போதைய சந்தாதாரருக்கு மட்டுமே * முன் அனுமதி பெறப்பட்டது * நுழைவுக் கட்டணம் தனி.




DAZZARAM 34997

**பாசம் நிறைந்த சின்னக் குடும்பம் அது. அப்பா வாசு, அம்மா பத்மா, கல்லூரி படிக்கும் மகள் வர்ஷா, ப்ளஸ்-டூ படிக்கும் மகன் வருண். நால்வரும் டைனிங் டேபிளில் சாப்பாட்டோடு சேர்த்து கொறிப்பது!**

# தகவல் சுரங்கம்

- அருண் சரண்யா

**வருண்:** 'தி எக்ஸ்பிரஸ்'னு இங்கிலாந்தில் ஒரு நாளிதழ் வருது. அது 'இளவரசி' டயானாவுக்கு 75,000 பவுண்ட்கள் நஷ்டஈடு தரணும்னு நீதிமன்றம் தீர்ப்பளிச்சிருக்கு.

**வர்ஷா:** ஏன் அவங்களை யாரோடவாவது இணைத்துக் கிசுகிசுத்ததா?

**பத்மா:** அதுதான் அவ சார்லஸை விவாகரத்து செய்தாச்சே. அப்புறமும் என்ன சென்ஸேஷன்?

**வருண்:** ப்ளீஸ். சொல்றதை முழுவதும் கேளுங்க. இது வேறு விஷயம். டயானா தன்னுடைய இருபது அற்புதமான கவுன்களை ஏலம் விட்டு, ஏலத்தொகையை சில சமூக நிறுவனங்களுக்கு நன்கொடை தருவதாக அறிவிச்சிருக்காங்க.

**வாசு:** நல்லதுதானே.

**வருண்:** ஆனா குறிப்பிட்ட நாளிதழ், சுயலாபத்துக்காகத்தான் டயானா இப்படி செய்றாங்கன்னு அச்சிட்டது. விளைவாக, வழக்கு, நஷ்டஈடு. இப்படிக் கிடைக்கப் போகும் நஷ்டஈட்டுத் தொகையையும் சமூகசேவை நிறுவனங்களுக்கே டயானா கொடுத்துடப் போறாங்களாம்.

**பத்மா:** சமூக சேவைன்னதும் எனக்கு நீர்ஜாதான் நினைவுக்கு வரா. பாவம், சரியாப் பத்து வருஷமாச்சு அவ இறந்து.

**வாசு:** ஓ அந்த ஏர்ஹோஸ்டஸா?

**வருண்:** யாரைச் சொல்றீங்க?

**பத்மா:** பிரபல விளம்பர மாடலாகவும் இருந்தவ அந்த நீர்ஜா. பான்-ஆம்-க்ளிப்பர்ங்கிற விமானத்திலே ஒரு முறை ஹைஜாக்கர்கள் ஏறிட்டாங்க. அவர்கள் குறி அமெரிக்கர்கள்தான். அந்த ப்ளைட்டிலே ஏர்ஹோஸ்டஸாக இருந்த நீர்ஜா ரொம்ப சாமர்த்தியமாக நடந்துகிட்டா. பல அமெரிக்கர்களின் பாஸ்போர்டை ஒளித்து வைத்து, அவர்கள் உயிரை காப்பாற்றினாள். ரேடியோ மூலம் அவ்வப்போது விமான நிலையத்துக்கு சங்கேத முறையில் தகவலும் கொடுத்தா. ஆனாலும் இவள் நடவடிக்கையிலே லேசான சந்தேகம் வந்ததும் அந்த விமான கடத்தல் கும்பலின் தலைவன் அவளை சுட்டுட்டான்.

**வாசு:** விமானம் தரையிறங்கினவுடன், பயணிகள் அத்தனை பேரும் வெளியேறியப் பிறகுதான் நீர்ஜா வெளியேறினாள்- தன் உடலில் குண்டு பாய்ந்திருந்தபோதும். அப்போது வழியிலேயே அவள் இறந்துவிட, இந்தியா முழுவதும் அவளைப் பற்றிய பேச்சுதான்.

**வர்ஷா:** பேச்சுன்னதும் எனக்கு நம்ம ஜுனூன் தமிழ்தான் ஞாபகத்துக்கு வருது.

**வருண்:** சுஜாதாகூட அத்தனை தமிழாக்கத் தொடர்களிலும் மாறி மாறி நாலைந்து குரல்களே கேட்பதையும், அந்தக் கொல்லும் தமிழ் வசனத்தையும் கிண்டல் செய்திருக்காரே.


**வர்ஷா:** ஜுனூன் தமிழுக்குக் காரணமான மூர்த்தி கம்பராமாயணத்திலே அனுமார் 'கண்டேன் சீதையை'ன்னு மாற்றித்தானே சொல்றார். கம்பன் வார்த்தைகளை 'மாற்றினால் அது இலக்கியம். நான் மாற்றினால் அது தமிழ்க் கொலையான்னு ஒரு போடு போட்டிருக்காரே.

**பத்மா:** அடக்கடவுளே விவஸ்தையில்லாத ஒப்பீடாய் இருக்குதே?

**வருண்** இந்த வருடத்துக்கான சிறந்த நடிகை விருது 'அவ்வை சண்முகி' கமலுக்கு கொடுக்கப்பட்டால் அது விவஸ்தைத்தனமா விவஸ்தை கெட்டதனமா?

**வர்ஷா:** நல்ல ஜோக்.

**வருண்:** ஜோக் இல்லே. இது போன்ற ஒரு கேள்வியை அந்தப் படத்தின் கதாநாயகியாக நடிச்ச மீனாகிட்டே கேட்க, "கொடுத்தாலும் கொடுப்பாங்க. ஆனா இது அநியாயம்னு அவர்கிட்டேயிருந்து அந்தப் பரிசை நான் பிடிங்குக்கு'



வேன்''னு சொல்லியிருக்காங்க.

**பத்மா :** போனமுறை எலிச பெத் டெய்லருக்கு நடைபெறுவதாக இருந்த மூளை அறுவை சிகிச்சை பற்றி நாம பேசினோம் இல்லையா?

**வாசு:** அதுதான் அந்த அறுவை சிகிச்சை முடிஞ்சி அவளை வீட்டுக்கு அனுப்பிட்டாங்களே

**பத்மா :** வீட்டுக்கு வந்த சில நாட்களில் வலிப்பு மாதிரி வந்திருக்கு. மீண்டும் மருத்துவமனைக்கு அழைச்சுட்டு போயிருக்காங்க.

**வருண் :** இந்த ஹாஸ்பிட்டல், சர்ஜரின்னு எல்லாம் கேள்விப் பட்டாலே மனசு திக்திக்குனுங்குது.

**வாசு:** சில்வர்ஸ்டர் ஸ்டாலோனுக்கும் அதே மாதிரிதான்.

**வருண்:** ஹய்யா நானும் அவரும் ஒரே அலைவரிசையிலே இருக்கோம்.

**வர்ஷா:** ரொம்ப அலட்டிக்காதே. அப்பா சொல்வதை முழுசாக கேளு.

**வாசு:** சில்வர்ஸ்டர் ஸ்டாலோனின் மகள் ஸோபியா ரோஸ் பிறந்து சில மாதங்களே ஆன அந்தக் குழந்தைக்கு இதயத்திலே ஏதோ ஓட்டையாம். திரையிலே கட்டுமஸ்தான ஹீரோவாக வரும் அப்பா மகளுக்காக கண்கலங்கிட்டு இருக்கார்.

**பத்மா :** ஆனா அப்பாவுக்கு ஒரு கஷ்டம் வந்தா, மகள் அதைப் பற்றி கவலைப்படுவதாக தெரியல்லையே.

**வர்ஷா :** ஏம்மா இப்படி அநியாயமா சொல்றே? அப்பான்னா எனக்கு ரொம்பப் பிரியம்.

**பத்மா:** உன்னைச் சொல்லலே. ஸ்டெபி கிராப்பின் வருமானத்தை மறைச்சதுக்காக அவளோட அப்பாவை ஜெர்மன் அரசு சிறையிலே தள்ளியிருக்கு. ஸ்டெபி இது பற்றி எதுவும் கண்டுக்கலே.

**வாசு :** உணர்ச்சிகளை வெளிக் காட்டாம இருக்காளோ என்னவோ?

**வர்ஷா :** அதிருக்கட்டும் உணர்ச்சிகளை விதவிதமாக வெளிக் காட்ட வேண்டிய சவாலான சூழ்நிலை நடிகை ஷர்மிளா டாகூருக்கு.

**வருண்:** நடிகைன்னாலே அதைத் தானே செய்யணும்?

**வர்ஷா:** இருந்தாலும் இது ஒரு அசாதாரணமான சந்தர்ப்பம். 'அபராஜிதா'ன்ற வங்காளப் படத்திலே முப்பது வேடங்களை- விதவிதமான மேக்கப் வேறுபாடுகள் இல்லாமல- ஏற்று நடிக்கிறாங்களாம்! ✦

# டியர் பெண்மணி

**'பெண்மணி' இதழை நீங்கள் படித்தவுடனேயே உங்களுக்குத் தோன்றும் எண்ணங்களை உடனேயே ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். பிரசுரிக்கப்படாத கடிதங்களும் படித்து, பரிசீலிக்கப்படுகின்றன எங்கள் Reader Research Desk-ல் என்பதை அறியவும்.**

'நிதி சால சுகமா' என்ற தலைப்பில் நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பற்றிய கட்டுரையில் இருந்த ஒவ்வொரு செய்தியும் உபயோகமானது. குறிப்பாக, "டெபாசிட் செய்பவரின் பணம் எப்படி Compound செய்யப்படுகிறது என்பதை தெரிந்துகொண்டு டெபாசிட் செய்வது நல்லது'' என்று நீங்கள் கூறியுள்ள யோசனைக்கு நன்றி!

**- யமுனாராணி.வி, - ரத்னமாலா.வி. சென்னை - 4.**

கன்யாவின் பொறுமையும் பிறகு கடைசியாக எடுத்த தீர்மானமும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றால் -அது மிகையாகாது. குத்சியா காந்தி ஐ.ஏ.எஸ் - சின் 'கேளடி பெண்மணி' படித்து நாட்டில் இந்த நிலை மாறினால் சரி.

**- ரவிகுலன், சென்னை - 15.**

மார்ச் மாத இதழில் தேவநாதன் எழுதிய 'கூச்ச சுபாவத்திற்கு குட்பை' மிகவும் உபயோகமுள்ள விஷயம். எல்லோரும் தெரிந்துகொண்டு வாழ்க்கையில் முன்னேறலாம். நானும்தான்!

**- வீரவதி**

முகவூர் என்ற ஊரில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை முழுக்க முழுக்க ஒரு நாள் சுதந்திரமாகக் கொண்டாடப்படுவது பற்றி படித்ததும் வியந்தேன்.

**- இந்திரா கோபாலன், பெரம்பலூர்.**

ஊனம் ஒரு குறையல்ல, மனித நேயம் கொண்டு சேவை செய்தால் மனி தரும் தெய்வத்திற்கு சமம்'. என்பதை 'பாரடைஸ் இல்லம்' காப்பாளர் மல்லிகா கோபாலின் சேவையை படிக்கும்போது நாங்கள் தெரிந்து கொண்டோம்.

**- வ.மணிமேகலை, தாராபுரம்.**

மார்ச் மாத பெண்மணியில் சிறு கதைகள் அனைத்தும் அருமையாகவும், இனிமையாகவும் அமைந்துள்ளது.

**- சோமசுந்தரம், கோவை.**

புரியாத புதிர் பகுதியில் விடை நமக்குத் தெரியாது. ஆனால் எந்த விடை ரொம்ப சிறந்ததாக பொருத்தமாக இருக்கிறதோ. அதுதான் சரியான விடை என்கிற உங்களுடைய அணுகுமுறையை நான் வரவேற்கிறேன்.

**- வி.எஸ்.கிருஷ்ணன், சென்னை - 106.**

'பெண்மணி விழிப்புணர்வு இயக்கம்' செயல்படத் திட்டமுள்ள கருத்துகளைப் படித்தேன். வியந்தேன். செயல் வடிவத்தில் திட்டங்கள் வெற்றிபெற என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**- எம்.ராஸ்.சரஸ்வதி, தர்மபுரி - 5.**

ஒளிந்திருக்கும் பயன்கள் உண்மையிலேயே எங்களுக்குப் பெரிய டிப்ஸ்தான் - ஒவ்வொரு மாதமும் விதவிதமான டிப்ஸ்கள் தரும் பெண்மணிக்கு எங்கள் நன்றி.

**- ரா.கஸ்தூரி, சென்னை - 60.**

மார்ச் '97 இதழில் சுவாமி விவேகானந்தரின் பெண்களைப் பற்றிய கருத்துகள் இந்த இதழின் மகுடத்தில் நிச்சயமாக ஒரு மாணிக்கக் கல்லே!

**- ச.தேன்மொழி, சேலம்.**

நானும் கால் ஊனமுற்ற பெண்தான்! ஆனால், மனம் ஊனமுற்ற பெண்ணில்லை. திருமதி மல்லிகா கோபால் அவர்களைப் போன்று நானும் என் கணவருடன் இணைந்து நிச்சயம் பொதுச்சேவையில் ஈடுபடுவேன்.

**துளசி பொன்னுசாமி, சென்னை.**

சென்னையை சேர்ந்த துளசி பொன்னுசாமி எழுதிய கடிதம் சிறந்த விமர்சனமாக தேர்ந்தெடுக்கப்படுகிறது! ரூ.500/- மதிப்புள்ள புடவையை தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகருக்கு அளிப்பவர்கள் ராமச்சந்திரா சாரீஸ் நிறுவனத்தினர்.





## பரிசு மழையில் எழுத்தாளர்கள்...வழங்கியது லலிதா ஜுவல்லரி!


'மெல்லப் புரியுது உன் மனசு' சிறுகதைப் போட்டியில் தேர்வு பெற்ற கதைகளுக்கு முதல் பரிசு ரூ.10000 - க்கான நகையையும் இரண்டு - இரண்டாம் பரிசு ரூ.5000/ + ரூ.5000 - க்கான நகைகளையும் லலிதா ஜுவல்லரி அதிபரும், இலக்கியத்தில் பெரும் ஆர்வம் கொண்டவருமான திரு.கந்தசாமி அவர்கள் தனது ராசி மிகுந்த கரங்களினால் தர - வெற்றி பெற்ற எழுத்தாளர்கள் பெற்றுக் கொள்கின்றனர்...புதிய பெண் எழுத்தாளர்கள் உருவாவதில் 'பெண்மணி'க்குத்தான் எத்தனை சந்தோஷம்!!


INSTACAFE™ COFFEE
READY MIX INSTANT

100% தூய்மையான உடனடி காபி
நல்ல உடனடி காபி வேண்டுமா?

★ காப்பித்தூள் தேவையில்லை
★ பால் தேவையில்லை
★ சர்க்கரை தேவையில்லை

ஒரு சிறிய பாக்கட்
இன்ஸ்டாகேப் காபி யில்
உடனடி தயாரிக்கப்படும்
சிறிது சுடு தண்ணீரும்
கலந்தால் உடனே
கிடைக்கும்.



உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்:
இன்ஸ்டான்ட் புட்ஸ்
17/2 குட்டி தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.
தொ. பே. எண் 8239944



இனிய சருமத்தை காப்பாற்ற
இயற்கை அன்னையின்
ஈடில்லா பராமரிப்பு

சருமம் பல வகையான வெளிப்புற மற்றும் உட்புற தாக்குதல்களுக்கு தினமும் உள்ளாகிறது. முகப்பரு, கரும்புள்ளி, நிறவேறுபாடுகள், உலர்ச்சி, வெடிப்பு, இளமையில் முதிர்ச்சி, சுருக்கம் மற்றும் தொய்வு போன்ற பல தரப்பட்ட சரும நோய்களும் சரும பாதிப்பினால் ஏற்படுபவையே. சருமம் பலவகையான கிருமி பாதிப்புகள், சொறி,சிரங்கு, படை ,தடிப்பு (கெரட்டினைசேஷன்) போன்ற பல்வேறான பாதிப்புகளுக்கு உட்படுகிறது.

உள் வழி மருந்துகளால் மட்டுமே சருமத்திற்கு தேவையான எல்லா மருந்துகளையும், ஊட்டசத்துக்களையும் இரத்த ஓட்டத்தின் மூலம் அளிக்க இயலும். இந்த அடிப்படையில் உருவானதே எமது



மெடிமிக்ஸ்
ஸ்கின்கேர்
கேப்சூல்
ஸ்பைருலினா சேர்ந்தது
ஆண்கள் மற்றும் பெண்களுக்கு

படோலா, பூணிம்பா, மற்றும் பர்படகா போன்ற மூலிகைகளின் பிளவனாய்ட்ஸ் சருமத்தில் சிறந்த ஆன்டிஆக்ஸிடைசன் நாசினிகளாக செயல்பட்டு சருமத்தை பாதுகாக்கிறது. மேலும் பீட்டா கரோட்டின், வைட்டமின்-ஈ மற்றும் செலேனியம் போன்ற உலோக சத்துகளும் உலகப் புகழ்பெற்ற 60% க்கும் கூடுதலாக புரோட்டின் சத்து நிறைந்த 'ஸ்பைருலினா' என்ற கடல் பாசியும் சேர்ந்து சருமத்திற்கு பொலிவும் போஷாக்கும் அளிக்கிறது.

30 கேப்சூல்களுக்கு ரூ.90/- M.O./டிராப்ட் அனுப்பவும். கேரளம், தமிழ் நாட்டில் எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். உங்கள் சரும பிரச்சனைகளுக்காக எங்கள் மருத்துவர்களிடம் இலவச ஆலோசனை பெற எழுதவும்.

எமது நோயாளிகளுக்கிடையில் நடத்திய மருத்துவ பரிசோதனையில் எவ்வித பாதிப்பும், பக்க விளைவுகளும் அறியப்படவில்லை.

அறிமுகம்
உடனடி நிவாரண இருமல் மருந்து
மெடிமிக்ஸ் காப் சிரப்
Medimix Cough Syrup
பாரம்பர்ய மூலிகை கலவை

Sowparnika Herbal Extracts and Pharmaceuticals (P) Ltd.
No 4, M Block, Anna Nagar East, Chennai - 600 102
Ph : 6285327, 6285002

Mktd. by : Dorcas Distributors, Chennai - 600 102.



**ஜி.எஸ்.எஸ்.**
**புதிர்ப் பக்கம்**

# புரியாத புதிரில்லை..



நடைமுறை வாழ்க்கையில் நாம் அறிந்திருக்கக்கூடிய மற்றும் அறிய வேண்டிய சில விஷயங்களைப் பற்றிதான் இந்தக் கேள்விகள். 'பளிச்' சென்றும் சுருக்கமாகவும் பதில்களை அனுப்புங்கள். பரிசை பெறுங்கள்.

உங்கள் விடைகள் எங்களுக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 15.4.97.

*1. சிறுபான்மையினர்தான் என்றாலும் இடது கை பழக்கக்காரர்கள் இந்த உலகத்தில் கணிசமானவர்கள் உண்டு. இந்த இடது கை பழக்கத்துக்குக் காரணம் என்ன?*

*2. "பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துவதை தவிருங்கள். அது சுற்றுப்புற சூழலுக்கு எதிரானது" என்கிறார்கள். ஏன்?*

*3. ஒரே வடிவத்தில், ஒரே நறுமணம் கொண்ட பிஸ்கெட்டுகள். ஒன்றின் நிறம் மஞ்சள். ஒன்றின் நிறம் பிரவுன். ஒன்றின் நிறம் இளம் பச்சை. இவை இருக்குமிடத்தில் ஒரு நாயை விட்டால் அது முதலில் எந்த பிஸ்கெட்டை தின்னும்? ஏன்?*

*4. மேஜை மின்விசிறி, கூரை மின்விசிறி- இரண்டுக்கும் இடையே உள்ள முக்கிய வேற்றுமைகள் என்ன?*

*5. உடலுறவும் கொள்ளாமல், ஊசி மருந்தும் ஏற்றிக் கொள்ளாமல் இருக்கும் ஒருவரை எய்ட்ஸ் பாதிக்கும் வாய்ப்பு உண்டா? எப்படி?*

*6. 'மூன்றாவது கண்' (Third Eye) என்று அழைக்கப்படும் பொருள் ஒன்று உங்கள் வீட்டில் பெரும்பாலும் இருப்பதற்கான வாய்ப்பு உண்டு. இப்படிக் குறிப்பிடப்படும் பொருள் எது?*

## சென்ற இதழ் 'புரியாத புதிரில்லை' பகுதிக்கான விடைகள்

*1. காயத்தை ஆற்ற முக்கியக் காரணமாக இருப்பது நம் உடலின் ரத்த ஓட்டம்தான். காயத்தைத் திறந்து வைத்தால் தூசி பட வாய்ப்புண்டு. சூரிய கதிர்கள் காயத்தை ஆற்ற உதவும் என்பது மிகவும் பலவீனமான காரணம். அதை விட காயத்திற்கு மருந்திட்டு தகுந்த பேன்டேஜ் போட்டு மூடினால் பலன் அதிகம் இருக்கும்.*

*2. இதுதான் பதில் என்பது கிடையாது. வந்த பதில்களில் நடைமுறைப் படுத்தக்கூடிய, தர்க்கரீதியான பதிலே சிறந்தது.*

*3. பால் காயும் போது அதன் மேல் பரப்பில் ஒரு படலம் உருவாகிறது. அதே சமயம் பால் கொதிக்க வைக்கப்படும் போது, அதில் உள்ள நீர் குமிழிகளாக மாறுகின்றன. இவற்றால் மேற்புறம் தோன்றும் படலத்தை உடைத்துக் கொண்டு வெளியே வர முடிவதில்லை. எனவே படலம் மேலெழும்புகிறது. (அதாவது பால் பொங்குகிறது) பாலில் கரண்டியைப் போட்டுவிட்டால், படலத்தில் ஓர் இடைவெளி ஏற்பட, அது வழியாக குமிழிகள் மேல் பரப்புக்கு வந்து உடைந்து ஆவியாகின்றன. எனவே பால் பொங்குவதில்லை.*


*4. நம் உடலில் களைப்படைந்து போகும் பகுதி தசைகள்தான். அசையும் எலும்புகள் இருக்கின்றனவே, அவற்றை ஆட்டிவைப்பது (அவற்றை இறுகப் பற்றியுள்ள) தசைகள்தான். எலும்பை இயக்குவதற்காக தசைகள் சுருங்கும்போது, லாக்டிக் அமிலம் உருவாகிறது. இது ஒரு வித மயக்கம்தரும் நச்சுத் தன்மையைக் கொண்டிருப்பதால் குறிப்பிட்ட தசைகள் களைப்படைகின்றன. இந்த அமிலம், ரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பரவுவதால் முழுவதுமாகக் களைத்து போகிறோம்.*

*5. குளிர் காலத்தில் கொசுவின் முட்டைகள் பொரிவதில்லை. அதனால் தான் அந்தக் காலகட்டத்தில் கொசுக்கள் குறைந்த எண்ணிக்கையில் காணப் படுகின்றன. குளிர்காலம் மறைந்ததும், இந்த முட்டைகள் பொரிந்து கொசுக்கள் பட்டாளம் ஏகமாக அதிகரிக்கின்றன.*

*6. தக்காளியை சூப், கெச்சப், ரசம் இப்படி பல விதங்களில் பயன்படுத்துவதால் அதை நாம் ஒரு காய்கறியாகவே கருதுகிறோம் என்றாலும் தாவரவியலின் படி தக்காளி ஒரு பழம்தான்.*

*7. பெரியம்மை நோய்க்கு பிறகு உலகிலிருந்தே ஒழிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் முழுமூச்சுடன் இறங்கியிருக்கும் நோய் போலியோ.*

*8. பென்சிலில் எழுத உபயோகப் படும் கருப்புப்பகுதி கிராபைட் என்ற பொருளால் ஆனது. (சிலர் நினைப்பது போல் Lead அல்ல).*









**பெண்கள் கேள்வி கேட்பதில் வல்லவர்கள். எதைப்பற்றி கேட்கலாம்? எதைப்பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். கலை, இலக்கியம், சமுதாயப் பிரச்னைகள், சினிமா, டி.வி, விளையாட்டு ஏன் காதல், திருமணம் எதுவாக உங்கள் கேள்வி இருந்தாலும் போஸ்ட் கார்டில்**

***கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :***

*'அனுவிடம் கேட்கலாமே!'*
'பெண்மணி' மாதர் இதழ்
96, காம்தார் நகர்,
சென்னை - 34.

# அனுவிடம் கேட்கலாமே..

**உண்மையுள்ள வாசகி,**
**அரும்பாக்கம்.**

வாழ்வா, சாவா என்று வாழத் துணிவில்லாமல் கலங்கி நிற்கும் நான் உங்களை சந்திக்க விரும்புகிறேன். முடியுமா?

*8277992. பெண்மணியின் தொலைபேசி எண்...காலை 11.00 மணி முதல் மாலை 7.30 வரை இங்குதான் இருப்பேன். ஒரு போன் செய்துவிட்டு, தாமதிக்காமல் புறப்பட்டு வந்து சேரவும்..மற்றவை நேரில்!*

**ஊர் பெயர் இல்லை.**

(ஜொ) லொள்ளுத்தனமா கேள்வி கேட்டா உங்களுக்குப் புரியுமா....பதில் சொல்லத் தெரியுமா..

*(ஜொ) லொள்ளலாமே... தாராளமா...ஆனா ஆளு யாரு என்னன்னு தெரியாம (ஜொ) லொள்ளறது நம்ம வழக்கமில்லே..*

**சித்திஜா,**
**பரமக்குடி.**

ஓர் அழகான தேவதை என்னை அழைத்துச் சென்று உலகம் முழுக்க சுற்றிக் காண்பித்தாள். நான் சொல்வதை நம்புவீர்களா அனு ஆன்ட்டி?

*ஓ...அது நீதானா...என் கூட வந்து உலகம் முழுக்க சுற்றிப் பார்த்த - அந்த அழகான சின்னப் பெண் - கடைசியில் பெயர் சொல்லாமலேயே போய் விட்டாளே என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை...இப்பொழுதாவது சொன்னாயே!*

**எஸ்.தனலெக்ஷ்மி,**
**திருச்சி.**

அனு அத்தை, அழுகின்ற பெண்ணுக்கு ஆயுசு குறைந்து விடும் என்கிறார்களே, உண்மையா?

*ஆயுசு குறையுமோ இல்லையோ....அழகு குறையும்; மதிப்பு குறையும்; அவளிடம் மற்றவர் வைக்கும் அன்பு குறையும்; நட்பு குறையும்.*

**என்.ஜெயந்தி,**
**ஆத்தூர்.**

வாழ்க்கையில் விருப்பமில்லாமல் இருந்த எனக்கு தங்களின் பதில்கள் தன்னம்பிக்கையை ஊட்டி விட்டன..இந்த தன்னம்பிக்கை தொடர தங்களின் ஆலோசனை கிடைக்குமா?

*ஏற்கெனவே மூக்கு முட்ட ஜல தோஷம் ஜெயந்தி...இந்த நேரத்தில் இப்படியொரு ஐஸ்ஸா....தாங்க முடியல்லையேம்மா...அச்சூ!!*

**பாலா சிவராமன்,**
**அனகாபுத்தூர்.**

எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

*எல்லார் கண்களிலும் படும் படியாக - கையில் எப்பொழுதும் 'பெண்மணி' பத்திரிகையை வைத்திருங்கள். போதும்.*

**தேவந்தி துரைராஜ்,**
**திருப்பத்தூர்.**

தாய்க்குப் பின் தாரம்; தாரத்திற்குப் பின்...?


*மகள், மருமகள், பேத்தி....இது எதுவும் இல்லாவிட்டால் ஏதாவது ஒரு உடுப்பி ஹோட்டல்...அது, அந்தந்த மனிதன், தனது வாழ்நாளில் சேர்த்து வைத்திருக்கும் நட்பையும், அன்பையும் பொறுத்த விஷயம்.. கையில் ஒரு காசு இருக்காது..ஆனால் அந்த மனிதர் வந்தால் குடும்பமே அவரைச் சுற்றி நிற்கும்..அண்ணா வந்திருக்கார்..அடேய் பெரியப் பாடா...இப்படி சந்தோஷக் கூக்குரல் எழுப்பும்..அடை பிடிக்குமே..அவியல் பிடிக்குமே என்று பார்த்துப் பார்த்து செய்யும்...இன்னும் சிலர் இருக்கிறார்கள்..அவர்கள் ஊரிலிருந்து வரப் போவதாக கடிதம் வந்தாலே போதும்....'கிழம்....ஜடாயு...இப்ப இங்கே என்ன வெட்டி முறிக்கற வேலை இருக்குன்னு புறப்பட்டு வர்றது...இப்பவே சொல்லிட்டேன்...நான், என் பிறந்த வீட்டுக்கு ஒரு மாசம் போயிடறேன்..' - இப்படிப்பட்ட முகச் சுழிப்புகள்தான் இவர்கள் வாங்கி வந்த வரமாக இருக்கும்... தாய்க்கும், தாரத்துக்கும் பின்னால் - ஒரு மனிதனின் குண விசேஷப் படியே அவனது எதிர்காலம்.*

**எம்.சாவித்திரி,**
**டி.எம்.கோட்டை (தபால்)**

குழந்தைகளின் பெயருக்கு முன்னால் ஏன் தகப்பனின் பெயரை இனிஷியலாகப் போடுகிறோம்?

*அதுவா...என்றைக்குமே குழந்தையைப் பெற்ற தாய் இவள் தான் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி மாதிரி - நிறைய ஆதாரங்கள் உண்டு. ஆனால் குழந்தையைப் பெற்ற தகப்பன் யார் என்பதை பெற்றவள் மட்டுமே சொல்ல முடியும்...'இதோ பாருடா அப்பா' - என்று தாய் சுட்டிக் காட்டினால் மட்டுமே*





– அந்த மனிதனுக்கு தகப்பன் ஸ்தானம் கிடைக்கிறது. அதனால் தான் குழந்தைக்கு தாயின் இனிஷியல் தரப்படவில்லை... தந்தையின் இனிஷியல் தேவைப்படுகிறது.


**மீனா பாஸ்கர்,**
**திருச்சி.**

உங்களுக்குத் தெரியாத சப்ஜெக்ட்டைப் பற்றி கேள்வி கேட்டால் தெரியாது என்று ஒப்புக் கொள்வீர்களா? இல்லை (பூசி மழுப்பி) தெரிந்ததாகக் காட்டிக் கொள்வீர்களா?

*தெரியாத சப்ஜெக்ட்டை தெரிந்து கொள்ள – மீனா உதவியதற்காக நன்றி சொல்லியபடி – அந்த சப்ஜெக்ட்டைப் பற்றி – ஆதியோடு அந்தமாக தெரிந்துகொள்ளத் தொடங்குவேன்...அப்புறம் கேள்வியை எடுத்து வைத்துக் கொண்டு – பதில் சொல்ல ஆரம்பிப்பேன்..*

**ஷாலினி,**
**கோடம்பாக்கம் – சென்னை.**

நெருங்கிய உறவினர் இறந்த சமயங்களில் கூட எனக்கு அழுகை வரவில்லை. மற்றவர்கள் விமரிசனத்திற்கு ஆளாகிறேன். ஆனால் தனிமையில் நினைத்து, நினைத்து அழுகிறேன். இது தவறா?



*தவறே இல்லை. நாலு பேர் எதிரில் நமது உணர்ச்சிகளைக் கொட்டினால்தான், நமது பாசத்துக்கு மதிப்பு என்றில்லை..மேலும் அழுவதைத் தனிமையிலும், சிரிப்பதை நாலு பேருடன் இருக்கும்போதும் வைத்துக் கொள்வதே நல்லது. தனிமையில் சிரித்தால்தான் பைத்தியம் என்பார்கள். சுற்றி இருப்பவர்களின் விமரிசனத்தைப் பற்றி கவலையே படாதீர்கள்.*

**இந்திரா கோபாலன்,**
**பெங்களூர்.**

'வைஜயந்தி மாலாவிலிருந்து ஸ்ரீதேவி வரை பல தென்னாட்டு நடிகைகள் நல்ல திறமை, புகழ், பெற்றிருந்தும் கல்யாணம் ஆனவர்களையே தங்கள் துணையாகத் தேடிக் கொள்வது வேதனையாக உள்ளது' என்று போனி கபூரின் மனைவி மோனா ஒரு பேட்டியில் கூறியிருப்பது பற்றி?

*இதில் தென் நாடு – வட நாடு என்றெல்லாம் பேதம் கிடையாது. பொதுவாகவே ஒரு நடிகைக்கு பணமும், புகழும் சேரும்போது – மகளை மேலும் மேலும் நடிக்க வைத்து சம்பாதிக்க வேண்டும் என்கிற வெறி பிடித்த பெற்றோர், சகோதரியின் செல்வாக்கிலே சிகரெட்டும், கஞ்சாவும், கூடா நட்புமாய் அலையும் சகோதர சிகாமணிகள், இந்த நடிகையின் வாவு செலவுகளையும், அந்தரங்கப் பிரச்னைகளையும் கவனித்துக் கொண்டு – சமயம் கிடைக்கும்போது பிளாக் மெயில் செய்யும் அந்தரங்கக் காரியதரிசிகள்.....இத்தனையும் போதாதென்று சொந்தப் பணத்தைப் போட்டு படம் எடுத்தால், எங்கோ போய் விடலாம் என்று வேப்பிலை அடித்து, இருக்கிற சொத்தையெல்லாம் ஈட்டிக்காரனிடம் மாட்டி விடும் நடிகையின் நலம் விரும்பிகள்......இத்தனையையும் மீறி அவள் புத்தம் புதுசாக ஒரு மாப்பிள்ளையைத் தேடுவது என்பது எளிதல்ல...நடிகைகளின் திருமணங்கள் கூட ஒருவிதமான வியாபார ஒப்பந்தம்தான்....தன்னைச் சுற்றியுள்ள பிரச்னைகளிலிருந்தெல்லாம் அவள் விடுபட வேண்டுமானால் – பணமும், செல்வாக்கும் அதிகமுள்ள நபருக்கு இரண்டாவது மனைவியாகப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறாள் – இதுதான் உண்மை...*

**பால.ராஜலெட்சுமி,**
**திருவாரூர்.**


எப்படி நடந்து கொண்டாலும் மாமியாரிடம் நல்ல பெயர் கிடைக்கவில்லை. மாமியாரை அசத்த ஒரு ஐடியா ப்ளீஸ்!

*ஒண்ணு செய்யுங்களேன்..இந்த தடவை சிறந்த கேள்விக்கானப் புடவை பரிசை உங்களுக்குக் கொடுத்திடறோம்..அதை வாங்கி, அப்படியே கொண்டு போய், உங்க மாமியார் கையில கொடுத்து, 'அத்தை, பாருங்க....உங்களை திருப்திப் படுத்தறது எப்படியின்னு கவலைப்பட்டு பெண் மணிக்கு கடிதமெழுதியிருந்தேன்.. அந்தக் கேள்விக்கு பரிசா – இந்தப் புடவையக் கொடுத்திருக்காங்க..இதை நான் கட்டிட்டா என்ன, நீங்க கட்டிட்டா என்ன.... உங்க நல்ல மனசு எனக்குத் தெரியும்..சித்த கிழக்கே பார்த்து நில்லுங்க – நமஸ்காரம் பண்ணிட்டு, புடவைய உங்க கையிலே இருந்து வாங்கிக்கறேன் (!) னு ஒரு டயலாக் அடிச்சிட்டு, 'தடால்'னு ஜெ.ஆட்சி அமைச்சர்கள் செஞ்ச மாதிரி விழுந்து கும்பிட்டுடுங்க...ஆனா, மறக்காம புடவைய திரும்ப வாங்கிக்குங்க. மறந்துடப் போறீங்க! உங்க மாமியார் நிச்சயமா அசந்துடுவாங்க!*



**புடவைகள் பரிசு!**

'அனுவிடம் கேட்கலாமே! பகுதியில் இம்மாத சிறந்த கேள்வியாக, பால.ராஜலெட்சுமி கேட்ட கேள்வி சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படுகிறது! ரூ.500 மதிப்புள்ள புடவையை பரிசாக






'ராமசந்திரா சாரீஸ்' உரிமையாளர்கள் சுப்பிரமணியன், ஜெயராமன்

அளிப்பவர்கள் ராமசந்திரா சாரீஸ், (மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்) B.O. No.2, R K Mutt Road, Picnic Plaza (Basement shop) Luz Corner, Mylapore Chennai -4 மற்றும் No.37 B- Arya Gowder Road, Postal Colony Bus stop, WestMambalam Chennai-33. Ph:4896532.




# பயமா? எனக்கா? NEVER!



"டெலிபோன் மணியடித்தால் பயம்.
அவரோட 'ஆபீஸ் ப்ரண்ட்ஸ்' யாராவது டின்னருக்கு வராங்க என்றால் பயம்.
பார்ட்டிக்குப் போகணும் ரெடியாக இரு என்றால் பயம்.
என்னோட குழந்தைகள் படிக்கும் கான்வென்டிற்குச் சென்று டீச்சர்களிடம் பேச பயம்."
இப்படி எதற்கெடுத்தாலும் நான் பயந்து நடுங்கியதற்கு காரணம் இங்கிலீஷ் தெரியாததுதான். ஆனால் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ் என் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. எந்த சூழ்நிலையாக இருந்தாலும் இப்போது என்னால் துளிக்கூட பயமில்லாமல் சர்வ சாதாரணமாக இங்கிலீஷ் பேசமுடிகிறது. நீங்களும் ட்ரை பண்ணிப்பாருங்க. நான் சொல்றது உண்மைதான்னு உங்களுக்கே தெரியும் !!"

**Mrs. Nirmala**

**விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ் அடிப்படை – இலக்கணம் – உரையாடல் என மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உங்களுக்குத் தேவையான நிலையைத் தேர்ந்தெடுத்து, வீட்டிலிருந்தபடியே, ஓய்வுநேரத்தில் தபால் மூலம் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக் கொள்ளுங்கள். தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமின்றி சரளமாகப் பேசத் தொடங்குங்கள்.**

## விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ்

**LEVEL - 1** (அடிப்படை ஆங்கிலம்) ABCD யிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 150/- மட்டுமே.

**LEVEL - 2** (இலக்கணம் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.175/- மட்டுமே.

**LEVEL - 3** (ஸ்போக்கன் இங்கிலீஷ்) தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம், பயிற்சிக் கட்டணம் ரூ. 200/- மட்டுமே.

**LEVEL - 2&3** இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 325/- மட்டும் செலுத்தினால் போதும்.

**LEVEL - 1,2&3** மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 450/- மட்டும் செலுத்தினால் போதும்.

**முன்பணம் அனுப்பவேண்டியதில்லை!**
**பாடங்களை V.P.P.யில் அனுப்புகிறோம்.**

– – – இக்கூப்பனைப் பூர்த்தி செய்து 15 நாட்களுக்குள் அனுப்பவும். – – –

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேரவிரும்புகிறேன். எனக்கு பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன். (தேவையான கட்டத்திற்குள் ✓ குறியிடவும்)

LEVEL - 1 ☐
LEVEL - 2 ☐
LEVEL - 3 ☐
LEVEL - 2&3 ☐
LEVEL - 1,2&3 ☐

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
........................................
பின்கோடு : ........................................

VIVEKANANDA INSTITUTE

PNM

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை – 600 017.

Tam | 3 | 97, Naga

நேர்முகப்பயிற்சி மையங்கள் | சென்னை | 9, [illegible] ரோடு, தி. நகர், சென்னை - 17 ★ 18, ராமசாமி தெரு, மேற்கு தாம்பரம், (பஸ் நிலையம் அருகில்) சென்னை - 45 ★ 30, மேடவாக்கம் டாங்க் ரோடு, (E.S.I. ஆஸ்பத்திரி அருகில்) கீழ்பாக்கம், சென்னை - 10 | திருநெல்வேலி | 16 A, திருச்செந்தூர் ரோடு, (கனரா பாங்க் மாடியில்) முருகன் குறிச்சி, திருநெல்வேலி - 2 | திருச்சி | சோழா டவர்ஸ், 23C/5, திருவெறும்பூர், (E.R. ஸ்கூல் எதிரில்) திருச்சி - 2 | சேலம் | சென்ட்ரல் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ் (மேம்பாலம் அருகில்) 77, ஓமலூர் மெயின் ரோடு, சேலம் - 1 | வேலூர் | 9, நீலிகடங்கு தெரு, மம்மி ஆஸ்பத்திரி அருகில், வேலூர்-1 | தஞ்சாவூர் | 1263/1, தெற்கு வீதி, (பாரதமாதா புக்டெப்போ மாடியில்) தஞ்சாவூர்-9 | ஈரோடு | 811, பிரப் ரோடு (டெலிபோன் பவன் அருகில்) ஈரோடு - 1 | கோயம்புத்தூர் | ஸ்ரீ கிருஷ்ணா டவர்ஸ், 515, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 18. | பாண்டிச்சேரி | 326, அம்பலத்தாடையார் மடத்து வீதி (அண்ணா சாலை அருகில்) பாண்டிச்சேரி - 1 | மதுரை | 26 A, சுண்ணாம்புக் காரத் தெரு, (கூடலழகர் பெருமாள் கோவில் அருகில்), மதுரை-1 | திருப்பூர் | K.P.N. காலனி முதல் தெரு, சாந்தா தியேட்டர் மெயின் ரோடு, திருப்பூர் - 1 | ஹைதராபாத் | 5A ஹைலைன் எஸ்டேட் அப்ட்ஸ், ஹைதராபாத் - 2.




பிலிமாலயா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர், நிர்வாக ஆசிரியர் : நா. மனோகரன், ஆசிரியர் : அனுராதா ரமணன்.
முகவரி : 96, காம்தார் நகர், மகாலிங்கபுரம், சென்னை - 600 034.
தபால் பெட்டி எண்: 1251 தொலைபேசி: 8277992, 8231923, 8232343. Fax : 91- 044 - 8257683.